
இலவசம்: சென்னை ஸ்கேன் சென்னை வாசகர்களுக்கு மட்டும்

கல்கி

KALKI 14.11.2004
ரூ.6.00



தனுஷ் குடும்பம் குதூகலம்!


“ஐஷ்வர்யம் வந்தாச்சு!”



ஜாலி குவிஸ்!

பக்கத்தைப் புரட்டும் முன்பே
யார் என்ன சொல்லியிருப்பாங்கன்னு
கெஸ் பண்ணுங்க!

8



தமிழறிஞர்களால்
இணைந்தோம்!

* கஸ்தூரிராஜா

48



என்னை மட்டும் ஏன்
குறை சொல்கிறீர்கள்?

* ரேவதி

57



பெரியவங்களால்
நிச்சயிக்கப்பட்டது!

* ஏவி.எம்.சரவணன்

90



பனிப்புயல்ல
சிக்கிக்கிட்டோம்!

* திருமாவளவன்

92



தாழ்ப்பாளைத் திறந்து
விட்டுட்டு வேகமாக
ஓடுவேன்!

* செல்வராகவன்

கல்கி 14.11.2004

பங்குச் சந்தை டிப்ஸ்



டி.சி.எஸ்; என்.டி.பி.ஸி!

வெளிநாட்டு நிறுவனங்கள் இந்தியப் பங்கு மார்க்கெட்டில் ஏன் பணம் போட வேண்டும் என்றொரு கேள்வி எழுகிறது இல்லையா...?

முக்கியக் காரணம், அமெரிக்கா, இங்கிலாந்து மற்றும் அனேகம் ஐரோப்பிய நாடுகளில் முதலீடுகளுக்கான வட்டி விகிதம் மிகவும் குறைவு. பங்குகளின் மதிப்பும் அந்நாடுகளில் ஸ்திரமான நிலையில் இருப்பதால், கூடுதல் மதிப்புக்கு அவற்றை விற்கும் வாய்ப்புகளும் குறைவு.

அதனால்தான் அயல்நாட்டு முதலீட்டாளர்கள் இந்தியப் பங்கு மார்க்கெட்டை நாடி வருகிறார்கள்.

உள்நாட்டு முதலீட்டாளர்களுள் தனிநபர்கள் நிறைய உண்டு. இவர்கள் இரு வகையினர்.

பங்கு மார்க்கெட்டில் முதலீடு செய்யும்போது, ஒரு நிரந்தர வருமானத்திற்கு வழி உண்டா என்று பார்ப்பவர்கள் ஒரு வகை. காலப்போக்கில் பங்குகளின் மதிப்பு ஏறுமா என்று நோக்குபவர்கள் மற்றொரு வகை.

முதல் வகை முதலீட்டாளர்களை எடுத்துக்கொண்டால், சிறிது ஏமாற்றம்தான் அவர்களுக்கு ஏற்படும். ஏனென்றால் பங்குகளில் முதலீடு செய்யும்போது, அதிலிருந்து கிடைக்கும் டிவிடெண்ட் தொகை, முதலீட்டில் இரண்டு அல்லது மூன்று சதவிகிதம்தான்.

பங்குகளை விற்று லாபம் காண்பது என்பது தனியொரு சாகசமான வித்தை.

பங்கு மார்க்கெட்டில் ஏன் விலைகள் ஏறுமுகமாகவும் இறங்குமுகமாகவும் இருக்கின்றன என்று பார்ப்போம்.

நன்றாக நிர்வகிக்கப்பட்டு, பங்குச் சந்தைக்கு வரும் சில கம்பெனிகளின் பங்குகளை, உள்நாட்டு, வெளிநாட்டு முதலீட்டு நிறுவனங்கள் வாங்குகின்றன. அப்போது இந்தப் பங்குகளின் விலை ஏறுகிறது. சிறிது காலத்துக்குப் பிறகு இந்த முதலீட்டு நிறுவனங்கள், கூடுதல் விலையினால் லாபம் பெற இந்தப் பங்குகளை விற்று விடுகின்றன. அப்போது விலை சற்றுச் சரிகிறது. இதற்கு Profit Booking என்று பெயர்

இந்தச் சூழ்நிலையில் தனிப்பட்ட முதலீட்டாளர்களின் நிலைமை என்ன?

நல்ல கம்பெனிகளின் பங்குகளையே வாங்க வேண்டும். அவர்கள் மார்க்கெட் நிலவரத்தை தினமும் கவனிக்க வேண்டும். பங்குகளின் மதிப்பு அதிகமாகிறபோது கணக்குப் போட்டுப் பார்த்து, கணிசமான லாபம் வந்தால் விற்றுவிட வேண்டும்.


நவம்பர் முதல் வாரத்தில் நல்ல நிலைக்கு வந்த பங்குகள், டாடா கன்ஸல்டன்ஸி சர்வீஸஸ் (டி.சி.எஸ்), நேஷனல் தெர்மல் பவர் கார்ப்பரேஷன் (என்.டி.பி.ஸி) ஆகிய நிறுவனங்களுடையவை. இவற்றுள் என்.டி.பி.ஸி. மத்திய அரசு நிறுவனம் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த நிறுவனத்தைப் பகுதியளவில் தனியார்மயமாக்குவதற்காக, அதன் பங்குகளை பொதுமக்களுக்கு விற்பனை செய்தது அரசு. என்.டி.பி.ஸி. நன்றாக இயங்கி லாபம் கண்டு வருவதால், அதன் பங்குகளுக்கு நல்ல டிமாண்ட். பொது விற்பனைக்கு அந்தப் பங்குகளைக் காட்டிலும் வாங்குவதற்குச் செய்யப்பட்ட விண்ணப்பங்கள் பன்மடங்கு அதிகம்!

நவம்பர் முதல் வாரத்தில், பங்குச் சந்தையில் என்.டி.பி.ஸி. பங்கின் விலை 72 ரூபாய். அதாவது ஒரிஜினல் விலையைக் காட்டிலும் பத்து ரூபாய் அதிகம்.

சரி, அமெரிக்கத் தேர்தல் முடிவுகள் இந்தியப் பங்கு மார்க்கெட்டை ஏன் பாதிக்க வேண்டும்...?

(அடுத்த வாரம் பார்ப்போம்)

- வி. கோபாலன்



பப்பாய்ங்... பப்பாய்ங்! மீண்டும் வந்துட்டேன் சின்னான். ஓ.கே. மீட்டர் போட்டாச்சு. என்னோட 'நியூஸ்' ஆட்டோவுல ஏறுங்க!

இன்ஜி. காலேஜ் நடத்தறவங்க மூஞ்சியெல்லாம் ஜிஞ்சர் தின்ன மாதிரி இருக்கு. 'கட்-ஆஃப்' மார்க் எல்லாம் 'டெட்' ஆகிப் போச்சு, இன்னும் கிட்டத்தட்ட 37,000 சீட் காலியா இருக்காம். அதுக்காக 'தற்காலிக - பணியாளர்கள்' மாதிரி 'தற்காலிக மாணவர்கள்' போட முடியுமா! முடிஞ்சா என்னோட ஐடியாவை செயல்படுத்துங்க. காலியா இருக்கிற காலேஜ் கிரவுண்ட்களில் 'பொதுக் கூட்டம்' நடத்த அனுமதிங்கோ! ஆடிட்டோரியத்தை கல்யாண மண்டபங்களாக்குங்கோ! கிளாஸ் ரூம்களை, அபார்ட்மெண்ட்ஸ் (அ) ஷாப்பிங் காம்ப்ளெக்ஸ் ஆக்கலாமுங்கோ! எப்படி நம்ம ஐடியாஸ்!?

உடம்பு குண்டா இருக்கறவங்க லண்டன்ல 'பெருத்துட்டாங்களாம்'. இந்த நேரத்துல ஜானட் ஸ்மைலின்னு ஒரு (பெருத்த) அம்மா 'சின்ன புள்ளத்தனமா' ஒரு ஸ்டேட்மெண்ட் விட்டுருக்காங்க. அதாவது, "எனக்கு வயசு 29. 'நொறுக்குத்தீனி தின்பது கொடிய பாவம். நரகத்துக்குப் போயிடுவ'ன்னு கடவுள் ஒரு நாள் என்னை எச்சரிச்சாரு. (மெய்யாலுமா!) அதான் நான் நொறுக்குத் தீனி சாப்பிடாம கடவுளை நாலு நாளா கும்பிட்டேன். கடவுள் என்னை நாலு கிலோ குறைச்சுட்டாரு"ன்னு சொல்லியிருக்காங்க. (அம்மணி இதைத்தான் எங்க ஊர்ல 'விரதம்'னு சொல்றோம்)

ஓ.கே. - மீட்டரைக் கட் பண்றேன். இறங்கிக் கோங்க! (மீட்டருக்கு மேல தீபாவளிக்கு ஏதாவது போட்டுக் குடுப்பா!)

கல்கி

பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டிற்காக பரதன் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடுபவர் : கி.ராஜேந்திரன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

ஆசிரியர் :
சீதா ரவி

ஆசிரியர் குழு :
அனுராதா சேகர்
ஆர்.சி. ஜெயந்தன்

வடிவமைப்பு :
எஸ். ஸ்டீஃபன்
பி.ஆர். ராஜன்

தொலைபேசி :
22345622, 23, 24
தொலைநகல் :
044 - 22345621

மின்னஞ்சல் :
ஆசிரியர் குழு :
kalki@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com
கல்கி இன்டர்நெட் முகவரி :
www.kalkionline.com

சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.330/-
ஆறு மாதம் : ரூ.165/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 62 யு.எஸ். டாலர்
இலங்கை : ரூ.2000/-

Bharathan Publications
Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 032.

ஒவ்வொரு இதழும் உங்கள் மேன்மைக்கு

நெஞ்சு பொறுக்குதில்லையே...

பாரதியாரின் வாழ்வில் இடம் பெற்ற முக்கியமான நிலப் பரப்புகளான எட்டயபுரம், கடையம், திருநெல்வேலி, காசி, சென்னை, புதுச்சேரி முதலியவற்றில் புதுச்சேரிக்கு முதலிடம் உண்டு. புதுச் சேரியில் வாழ்ந்த பத்து ஆண்டுகள்தான் பாரதிக்கு வாய்த்த தேவ பொழுதுகள். அந்த நாட்களில்தான் பாரதிக்கு நீடித்தப் புகழை வாங்கித் தந்து கொண்டிருக்கும் முப்பெரும் பாடல்களான குயில் பாட்டு, பாஞ்சாலி சபதம், கண்ணன் பாட்டு ஆகியவை முதற்பதிப்பாக வெளிவந்தன.

பாரதி தமது குயில் பாட்டில், புதுச்சேரி குயில் தோப்பை எவ்வளவு அழகாக வர்ணிக்கிறார் தெரியுமா? 'வேகத் திரைகளில் வேதப் பொருள் பாடும் வளஞ்சார் கரையை உடைய புதுவைத் திருநகரின் மேற்கே சிறு தொலைவில் ஒரு மாஞ்சோலை இருக் கிறது. அது நான்கு திசைகளிலிருந்தும் வேடர்கள் வந்து பறவை சுடும் படியாக அமைந்ததொரு பெருஞ்சோலை' என உருகி உருகி வர்ணிக்கிறார் பாரதியார்.



• இப்படி இருந்திருக்குமோ...



பேராசிரியர் க. பஞ்சாங்கம்,
காஞ்சி மாமுனிவர் பட்ட மேற்படிப்பு மையம், புதுச்சேரி.

"புதுவையில் பாரதி சில நினைவுகள்" என்று கட்டுரை எழுதியுள்ள வ.சுப் பையா அந்தத் தோப்பை வர்ணிக்கும் விதமும் அலாதியானது.

இசை மீட்டும் இனிமையான இயற்கை எழில் நிறைந்ததோர் இடம்.

பாரதி அடிக்கடி இத்தோப்புக்குச் செல்வார், "காணி நிலம் வேண்டும்" என்ற பாட்டை அங்கிருந்துதான் பாடினார் என்று சொல்லப்படுகிறது" என்கிறார்.

(தாமரை, பாரதி நூற்றாண்டுச் சிறப் பிதழ் *(1982)., ப.120.)*

"**ச**ரி! இப்பொழுது அந்தத் தோப் பிற்கு என்ன" என்று தானே கேட்கிறீர் கள்? அந்தத் தோப்பு இப்பொழுது புதுச்சேரி நிலப்பரப்பில் இருந்தே அகற்றப்பட்டுவிட்டது.

77ம் வருடம் நான் பணி மாற்ற லாகிப் புதுவைக்கு வந்தவுடன், குயில் தோப்பை பார்த்தேன். கருவடிக் குப் பத்தில் சித்தானந்த சுவாமி கோயிலுக்குப் பின்னால் புதரும் செடிகளுமாகச் செழித் துக் கிடந்த மாந்தோப்பைக் காட்டி, இதுதான் 'அந்த குயில் தோப்பு' என்றார் கள் நண்பர்கள்.

ஆக, 77ம் வருடம் வரையிலும் அது தோப்பாகவே இருந்தது. ஆனால் கொஞ்ச

நாள் கழித்து தோப்பைச் சுற்றி இருந்த வேலிகள் காணாமல் போயின; மாமரங்கள் சாயத் தொடங்கின; தென்னை மரங்கள் விழத் தொடங்கின.

அந்தத் தோப்புக்குரிய நிலத்தை ரியல் எஸ்டேட் காரர்கள் கைப்பற்றிவிட்டார்கள் என்ற செய்தி கசியத் தொடங்கியது.

--இந்தத் 'தோப்பு'?





படம் : புதுவை இளவேனில்

உடனே புதுச்சேரியின் மூத்த பத்திரிகையாளர், தணிகைத் தம்பி, ஒரு வார இதழில் படங்களோடு கட்டுரை எழுதினார். கி.ரா., நான், மற்றும் சில அரசியல்வாதிகள் அதில் பேட்டி அளித்திருந்தோம். அப்போதைய முதல்வர் திரு. வைத்தியலிங்கத்தை தணிகைத் தம்பி பார்த்துப் பேசினார். பாரதி அன்பர்கள் அறக்கட்டளை என்ற எங்கள் அமைப்பும் குயில் தோப்பைக் காக்க வேண்டும் என்று கோரிக்கை மனுக்களை அனுப்பியது.

ஆனால் ஒன்றும் நடக்கவில்லை. பாரதியின் குயில் தோப்பை ரியல் எஸ்டேட்காரர்கள் பிளாட் போட்டு விற்று விட்டார்கள்; வீடுகள் கிளம்பி விட்டன. பத்து ஆண்டுக்கு முன்பு வரை இப்படியொரு 'தோப்பு' இருந்தது என்பது இனி வருகிறவர்களுக்குத் தெரியாமலே போய்விடும்.

இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்ச் சமூகத்தின் ஆன்மாவாகத் துடித்தவர் பாரதியார். தனி மனிதத் துயரங்களை விடத் தமிழ்ச் சமூகத்தின் துயரம் இப்படி இருக்கிறதே என்று நெஞ்சு பொறுக்காமல் துடிதுடித்தவர் பாரதியார்; அத்தகைய ஒரு மகாகவிஞன் நேசித்த ஒரு "துண்டு நிலத்தினை" அதன் 'அழகு கெடாமல் இந்த மனிதர்கள் நினைத்திருந்தால் காப்பாற்றியிருக்க முடியாதா?

புதுச்சேரியில் பாரதிக்கு கவர்னர் பங்களாவிற்கு எதிரே உள்ள பூங்காவில் 'சிலை' வைத்துள்ளார்கள். ஆனால் உண்மையில் குயில் தோப்பைப் பேணி, தோப்பில் அல்லவா அவருக்கு ஒரு நினைவு மண்டபத்தை அமைத்திருக்க வேண்டும்? இந்தத் தமிழர்களின் கற்பனை வளம்தான் எவ்வளவு வறுமையுற்றுக் கிடக்கிறது!

புதுச்சேரி விடுதலை அடைந்து ஐம்பது ஆண்டுகள் ஆகி விட்டன, என்று பொன்விழாக் கொண்டாட்டங்கள் கோலாகலமாக நடந்து கொண்டிருக்கின்றன. குயில் தோப்பை அழிய விட்டு விட்ட புதுச்சேரிக்கு எத்தனை விழா எடுத்தாலுமென்ன? அதன் பழைய அழகு திரும்பவா போகிறது? குயிலோசை கேட்கவா போகிறது?



"துப்பாக்கி வேணும்... துப்பாக்கி வேணும்..." என்று தீபாவளி சமயத்தில் குழந்தைகள் அடம்பிடித்துக் கொண்டிருக்க, பெற்றோர்கள் பட்டாசுக் கடைகளில் துப்பாக்கிகளை விலைபேசும் நேரமிது.

இந்தச் சமயத்தில் நிஜத்

ஹாண்ட்ஸ் அப்!

துப்பாக்கி பற்றி கொஞ்சம் தெரிந்து கொள்ளலாமே என்ற எண்ணத்தில் சென்னை அண்ணாசாலையில் உள்ள நிஜத் துப்பாக்கிக் கடைக்குச் சென்றோம். கடை உரிமையாளர் சம்பந்தம்.

துப்பாக்கிக் கடை வைக்க வேண்டும் என்றால், என்னென்ன தகுதிகள் இருக்க வேண்டும்?

கல்வித் தகுதி ஏதும் தேவையில்லை. தமிழக வருவாய்த் துறையிடமிருந்தும், காவல் துறையினரிடமிருந்தும் லைசென்ஸ் பெற வேண்டும். லைசென்ஸை வருடத்துக்கொருமுறை புதுப்பிக்க வேண்டும்.

அதோடு துப்பாக்கிக் கடை வைக்க விரும்பும் நபருக்கு, துப்பாக்கியைக் கையாளும் விதம் தெரிந்திருக்க வேண்டும். தவிர, நமது நடத்தையின்மேல் காவல் துறைக்குப் பூரண திருப்தியிருந்தால் மட்டுமே லைசென்ஸ் கிடைக்கும்."

ஒருவருக்கு துப்பாக்கி அவசியம் என்றால், எந்த அடிப்படையின் பேரில் அதை வாங்கலாம்? இதற்கு ஏதும் சான்றிதழ்கள் இருக்க வேண்டுமா?

Self protection, Crops protection என்று இரண்டு முறைகளில் லைசென்ஸ் பெற வேண்டும். Self protection என்றால் தற்காப்புக்காக, Crops production என்றால் விளை பயிர்களை நாசப்படுத்தும் மிருகங்களை விரட்டப் பயன்படுத்துவதற்காக. இந்த லைசென்ஸும், துப்பாக்கிப் பயிற்சி, நன்னடத்தை ஆகியவையும் இருந்தால் மட்டுமே லைசென்ஸ் கிடைக்கும்.

மொத்த ஆர்டர்கள் யாரிடமிருந்து வரும்?

மொத்த ஆர்டர்களா? நாங்கள் அப்படியெல்லாம் விற்கவே கூடாது. ஒரு லைசென்ஸை வைத்திருப்பவருக்கு ஒரு துப்பாக்கிதான் விற்கலாம்!

இந்தத் துப்பாக்கி தப்பித் தவறி தீவிரவாதிகள் கைக்குப் போக வாய்ப்புள்ளதா?

போலீஸார் தீவிர ஆய்வு செய்த பிறகுதான் ஒருவருக்குத் துப்பாக்கி லைசென்ஸ் வழங்குகிறார்கள். ஆகவே தீவிரவாதிகளுக்குப் போக வாய்ப்பில்லை.

வாங்கும் துப்பாக்கிகள் பழுதடைந்தால் எப்படிச் சரிபார்ப்பது?

கடை வைப்பவர்களுக்கே அந்த தகுதியும் இருக்க வேண்டும். அதனால் நாங்களேதான் எங்கள் வாடிக்கையாளர்களுக்கு சர்வீஸ் செய்து தருகிறோம்.

துப்பாக்கிகளின் பெயர்களை வரிசைப்படுத்த முடியுமா?

ரிவால்வர், பிஸ்டல், ரைஃபிள், கன் என்று கிட்டத்தட்ட எண்பது வகை உள்ளன.

அதெல்லாம் சரி - துப்பாக்கிகளின் விலை?

சாதாரண, நடுத்தர அல்லது கீழ்த்தட்டு மக்கள் வாங்கும்படியான விலைகளில் துப்பாக்கிகள் இல்லையென்பதே நிஜம்.

- குயில்



* கஸ்தூரிராஜா, விஜயலக்ஷ்மி



* கார்த்திகா தேவி

"ஐஷ்வர்யம்

தமிழ்நாடே எதிர்பார்க்கும் விஷயங்களில் லேட்டஸ்ட்டாகச் சேர்ந்திருக்கிறது தனுஷ் - ஐஸ்வர்யா திருமணம். எப்படி, எங்கே, எப்போது, யாரால் நிகழ்ந்தது இந்த அதிசயம் என்று, எல்லோரிடமும் எதிர்பார்ப்பு மேலோங்கி இருக்கும் சூழலில், நாம் மாப்பிள்ளையாகப் போகும் தனுஷ் குடும்பத்தின் குதூகலத்தைப் பதிவு செய்ய விரும்ப, உடனடியாக ஒப்புக் கொண்டார் கஸ்தூரிராஜா. நம்மோடு அவர்கள் பேசியதிலிருந்து...

விஜயலக்ஷ்மி கஸ்தூரிராஜா : எங்க குடும்பத்தின் சந்தோஷத்தை எப்படி விவரிக்கிறதுன்னே தெரியலீங்க... ரொம்ப எக்சைட்டடா இருக்கு. ஐஸ்வர்யா மாதிரி ஒரு பொண்ணு, எங்களுக்கு மருமகளா வர நாங்க கொடுத்து வச்சிருக்கணும்.

கஸ்தூரிராஜா : தனுஷுக்கு இப்பவே ஏன் கல்யாணம் பேசணும்னு சில பேர் கிட்ட கருத்து இருக்கு. அது ரொம்பத் தவறானது. அவன் ஒரு ஆர்ட்டிஸ்ட். அவனுக்குன்னு ஒரு பாதுகாப்பு தேவை. அதுக்குத் திருமணம்தான் சரியான வழி. அதுவும் ஐஸ்வர்யாதான் சரியான சாய்ஸ்.

விஜயலக்ஷ்மி கஸ்தூரிராஜா : இது காதல் திருமணம்னு பல பேரு நினைச்சுட்டிருக்காங்க. ஆனா உண்மையில இது ரெண்டு குடும்பத்தாலும் பேசி நிச்சயிக்கப்பட்டு, ஏற்பாடு செய்யப்பட்ட திருமணம்தான். தொடர்ந்து தனுஷ், ஐஸ்வர்யா பத்தி மீடியாவுல தப்புத் தப்பா செய்தி

'ஐஸ்வர்யா-தனுஷ் திருமணம் காதல் திருமணம் அல்ல. நிச்சயிக்கப்பட்ட திருமணம்தான்' என்கின்றன இரண்டு குடும்பங்களும். ஐஸுவைப் பற்றி, அவரது ஆசைகள், கனவுகள் பற்றி தனுஷ் தெரிந்து கொள்ள வேண்டாமா? இதோ ஐஸ்வர்யாவின் மனம் திறந்த பேட்டி.



அப்பா சொல்வதுதான் வேதவாக்கு!

''ஐஸ்வர்யா தவிர, என் அப்பா எனக்கு 'ஜீஜாபாய்' என்று ஆசையா பெயர் சூட்டினார். சத்ரபதி சிவாஜியின் தாய். இன்றும் வீட்டில் செல்லமாக 'ஜீஜீ' என்று கூப்பிடுவார் அப்பா.

அம்மாவிடம் பிடித்தது. அவருடைய பொறுமை.

அப்பா அட்வைஸே பண்ண மாட்டார். ஃப்ரெண்ட்ஸ் மாதிரியான உறவு. கண்டிஷ்னே போட மாட்டார். அப்பாவின் 'ஆன்மிகப் பற்று' பற்றி உலகமறியும். நானும் அப்படித்தான். காலை

–தனுஷ் குடும்பம் குதூகலம்!

வந்துட்டிருந்தது. இதை எப்படித் தடுத்து நிறுத்தறதுன்னு இரண்டு குடும்பமும் கூடிப் பேசினப்போ, 'ஏன் இவங்க ரெண்டு பேருக்குமே கல்யாணம் பண்ணி வைக்கக் கூடாது'ன்னு எங்களுக்குத் தோணுச்சு. உடனே முடிவு பண்ணி, தனுஷ் மூலமா அறிவிச்சுட்டோம்.

கஸ்தூரிராஜா : 'இந்தக் கல்யாணத்துல ரஜினி சாருக்கு



வந்தாச்சு!''

• தனுஷ் குடும்பத்தினருடன்

விருப்பம் இல்ல. அதனாலதான் தனுஷ் தனியா தன்னோட திருமணம் பற்றி அறிவிச்சாரு'ன்னு இன்னமும் பேச்சிருக்கு. மொதல்ல எங்க ரெண்டு குடும்பமும் மட்டும் பேசி முடிச்சிடலாம்னுதான் முடிவு பண்ணினோம். ஆனா தனுஷ் இதுக்கு ஒப்புக்கல. 'பிரஸ் மீட்டுல சொல்லிட்டுத்தான் என் திருமணம் நடக்கணும்'னு விருப்பப்பட்டார். 'சரி, அப்படியே செய்'னு கேஷுவலாத்தான் சொன்னோம். மத்தபடி அவருக்கு விருப்பமில்ல, இவருக்கு விருப்பமில்லன்னு சொல்றதெல்லாம் கட்டுக்கதை. ஐஸ்வர்யாவும் சினிமா இண்டஸ்ட்ரியைச் சேர்ந்தவரா இருந்திருந்தா, நிச்சயம் அவரும் தனுஷோட சேர்ந்து தன்னோட திருமணத்தை அறிவிச்சிருப்பார். ரஜினி சாரே தனுஷ்கிட்ட, 'நீங்களே பண்ணிடுங்க'ன்னு சொன்னப்புறம்தான் தனுஷ் சொன்னார். கல்யாண விஷயத்துல பொண்ணு வீட்டுக்காரங்க ஒப்புதல் இல்லாம, பிரஸ்கிட்ட பேச முடியுமா என்ன?

விஜயலக்ஷ்மி கஸ்தூரிராஜா : தனுஷுக்கு ஐஸ்வர்யாவைவிடப் பொருத்தமான ஜோடி கிடைக்காது. அவனைப்

யில் குளித்து பூஜையறைக்குப் போய் கண்டிப்பாக ஸ்லோகம் சொல்வேன். ஒவ்வொரு சனிக்கிழமையும் விரதம் இருப்பேன். மார்கழி மாதம் பூரா நோன்பிருந்து திருப்பாவை சொல்வேன். எங்கள் வீட்டில் எல்லா மதக் கடவுள்களுக்கும் பூஜை செய்வோம். கிறிஸ்துமஸையும் தடபுடலா கொண்டாடுவோம், தீபாவளி போலவே.

ஆழ்வார்பேட்டை ஆஞ்சநேயர் பக்தை நான். சிரத்தையாக 'ஹனுமான் சாலீஸா' சொல்லுவேன்.

என்கிட்ட புடைவைதான் அதிகம். அப்பா - அம்மாக்கும் அது தான் பிடிக்கும். 'மந்மந்திர்'ல வாங்குவேன். கொஞ்சம் விலை அதிகம். ஆனால் அழகா இருக்கும். தீபாவளின்னா 'நல்லி'யிலிருந்து தான் புடைவை வாங்குவோம். சென்டிமெண்டாக வைத்திருக்கிறோம். பயங்கரக் கூட்டம் அலைமோதும். நள்ளிரவில் கடை மூடிய பிறகு, பின் பக்கக் கதவு வழியே போய் வாங்குவோம்.''



நார்த் இண்டியன் சவுத் இண்டியன் சமையல்னு சும்மா வெளுத்து வாங்கிடுவேன். வெஜிடபிள் பிரியாணி பண்ணுவதில் கில்லாடி

பாத்துக்கறதுக்கும், பாதுகாக்கறதுக்கும் நூறு சதவிகிதம் அவங்க பொருத்தமான வங்க. தனுஷைவிட ஒரு வயசுதான் அவங்க மூத்தவங்க. இது ஒண்ணும் எங்களுக்குப் பெரிய விஷயமா தெரியல. மனப்பொருத்தம் இருக்கணும். அது ரெண்டு பேர் கிட்டயும் நிறையவே இருக்கு.

கார்த்திகாதேவி *(கஸ்தூரிராஜாவின் மகள்)* : அம்மா சொல்றது ரொம்ப கரெக்ட். ஐஸு என் சிநேகிதிதான். அவங்களை என் தம்பி கட்டிக்கப் போறான்னு நெனக்கறப்போ, ஐ ஃபீல் ஸோ ஹேப்பி. எங்க குடும்பத்துக்கு மருமகளா வர அவங்களுக்கு ரொம்ப விருப்பம். அதே மாதிரிதான் நாங்களும். ஐஸு கொஞ்சம்கூட ஈகோன்னா என்னன்னே தெரியாத ஒரு கேரக்டர். விட்டுக் கொடுக்கறதில அவங்கள மாதிரி யாரும் இருக்க முடியாது.

விஜயலக்ஷ்மி கஸ்தூரிராஜா : தனுஷோட இந்தக் கல்யாண சந்தோஷத்துக்கிடையில செல்வராகவன் பத்தியும் பேச்சு கிளம்பியிருக்கு. அண்ணன் இருக்கும்போது, எப்படி தம்பிக்குக் கல்யாணம் பண்ணலாம்னு கேக்கறாங்க. செல்வராகவன்கிட்ட நாங்க திருமணம் செஞ்சுக்க வற்புறுத்தாத நாளே இல்ல. அவன்தான் ஒப்புக்க மாட்டேங்கறான். 'இன்னும் நிறைய சாதிக்கணும். அடுத்த ரெண்டு படம் ஹிட் கொடுக்கணும். இந்திக்குப் போகணும். கல்யாணம் பத்தியெல்லாம் யோசிக்கவே நேரமில்ல'ன்னு சொல்றான். ஆனா நாங்க விடறதா இல்ல. எனக்காக வாவது அவன் சீக்கிரமா திருமணத்துக்குச் சம்மதிப்பான்னு நெனைக்கிறேன். தனுஷ் கல்யாணம் பத்தி சொன்னப்போ, 'தம்பி தாராளமா பண்ணிக்கட்டும். எனக்கென்ன இப்ப அவசரம்'ங்கறான். அவன் யாரை லவ் பண்ணாலும், எங்களுக்கு அப்ஜெக்ஷன் இல்லை. கல்யாணத்துக்கு ஒப்புக்கிட்டா போதும்.

கார்த்திகா தேவி : செல்வராகவனை மட்டுமா அப்படி கேட்கறாங்க. என்னையும்தான் 'அக்கா இருக்கும்போது தம்பிக்கு எப்படிக் கல்யாணம் பண்ணலாம்'னு கேக்கறாங்க. அதுக்கென்ன பண்றது? எனக்கு மாப்பிள்ளை பார்த்துக்கிட்டிருக்காங்க. இன்னும் செட்டாகலை. தனுஷுக்கு முடிவாச்சு, பண்ணிக்கறான். இதுல பொறாமைக்கோ, வருத்தத்துக்கோ எங்க இடமிருக்கு?

கஸ்தூரிராஜா : ரஜினி சாரோட பணத்துக்கு ஆசைப்பட்டுத்தான் நாங்க அவர்கூட சம்பந்தம் வச்சுக்கிட்டோம்னு சொல்லப்படறதை நினைச்சா ரொம்ப வருத்தமாயிருக்கு.

விஜயலக்ஷ்மி கஸ்தூரிராஜா : எங்க குடும்பத்துல யாரும் பணத்துக்கு ஆசைப் பட்டவங்க கிடையாது. என் வீட்டுக் காரர் என்னை 'கட்டின புடைவையோடு வந்தா போதும்'னு சொல்லித்தான் கட்டிக்கிட்டார். அதேபோலத்தான் இப்பவும் நினைக்கிறோம். எங்க பசங்களுக்கு வரப்போற பொண்ணுங்க, கட்டின புடைவையோடு வந்தா போதும். பணம், காசு எதுவும் வேணாம். என்

நான். அப்பாக்கு மாத்திரம் என்றேனும் சிக்கன் செஞ்சு தருவேன். நாங்க மூணு பேரும் சாப்பிடமாட்டோம்.


ஜிம்முக்கு ரெகுலரா போவேன். ஏரோபிக்ஸ் பண்ணுவேன். ஒரு நாளைக்கு நாலு லிட்டர் தண்ணீர் குடிப்பேன்.

பரதநாட்டியம் ஆடுவேன். முறையா கர்நாடக சங்கீதம் கத்துக்கறேன். ஜாஸ், சால்ஸா போன்ற வெஸ்டர்ன் டான்ஸ்களும் அத்துப்படி.

பாப், டிஸ்கோ இன்று வரை போனதில்லை. அவசியமுமில்லை. தேவையானால் அப்பாவே அழைச்சிட்டுப் போவார்.

சினி உலகில் ப்ரீத்தா, காயத்ரி ரகுராம் என்னுடைய தோழிகள். ஈஷாவும் (ஹேமமாலினியின் மகள்) நானும் ரொம்ப தோஸ்த். சத்ருகன் சின்ஹா அங்கிளின் மகன்களான லவ் - குஷ் (இரட்டையர்கள்) கூடவும் நட்புண்டு. மும்பை போகும்போது அவங்க வீட்டு விருந்துக்கு கண்டிப்பா போவோம்.

வீட்டுக்கு எல்லா பத்திரிகைகளும் வரும். படிப்போம். நான் விரும்பிப் படிப்பது 'காஸ்மோபாலிடன்'! ஸ்கூப் நியூஸ்ங்கற பெயர்ல ஒருவரின் பர்ஸனல் விஷயங்களைப் பத்திரிகையில் அலசுவது, ஒரு



பசங்க, என் வீட்டுக்காரர் சம்பாதிச்ச பணமே எங்களுக்குப் போதும்.

கஸ்தூரிராஜா : திருமணத்துக்கப்புறம் தனுஷ் எங்களோட கூட்டுக் குடித்தனம்தான் நடத்தப் போறார். தனிக் குடித்தனம்ங்கற பேச்சுக்கே இடமில்லை. ஐஸ்வர்யாவே 'நீங்க சொன்னாலும் நாங்க தனிக்குடித்தனம்லாம் போகமாட்டோம்'னு சொல்லிட்டாங்க. தனுஷோட எண்ணமும் அதுதான்.

விஜயலக்ஷ்மி கஸ்தூரிராஜா : ஐஸ்வர்யாவுக்கும் தனுஷுக்கும் ஜாதகம் பார்த்தோம். ரொம்ப அருமையா பொருந்தியிருக்கு. எல்லோருக்கும் அதுல ரொம்ப சந்தோஷம்.

கார்த்திகா தேவி : இந்தக் கல்யாணத்துல தனுஷுக்கு ரொம்ப விருப்பம். திடீர்னு முடிவானதால கொஞ்சம் நெர்வஸா இருக்கான். அவனை எப்பவும் கிண்டல் பண்ணுவேன். அவன் ரொம்ப இன்னொசென்ட் டைப். ஆனா அதுக்காக மெச்சூரிட்டி இல்லைன்னு சொல்லிட முடியாது. நேத்து வரைக்கும் குழந்தை மாதிரி இருந்தான். திடீர்னு இப்ப கல்யாணம் முடிவாயிருக்கு. நம்ப முடியாத உண்மை இது.

விஜயலக்ஷ்மி கஸ்தூரிராஜா : திருமணம் தடபுடலா எல்லாம் நடக்காது. ரொம்ப சிம்பிளா, ரஜினி சார் வீட்லயே கல்யாணம் நடக்கும். எங்க ரெண்டு குடும்பத்துக்கும் ஒத்துப் போன விஷயமே எளிமைதான்.

கஸ்தூரிராஜா : என்னோட ஒவ்வொரு வளர்ச்சியும் என் குடும்பத்தைச் சார்ந்துதான் இதுவரை இருந்திருக்கு. என் நாலு பசங்கதான் எனக்கு உலகம். இனி ஐந்தாவதா ஒரு குழந்தை எங்க வீட்டுக்கு வரப் போகுது...

விஜயலக்ஷ்மி கஸ்தூரிராஜா : எனக்கு ரெண்டு பொண்ணுங்க. ஐஸ்வர்யா எனக்கு மூணாவது மக. நான் அவங்களை அப்படித்தான் பார்க்கறேன். அவங்களும் எங்களை அப்பா, அம்மான்னுதான் கூப்பிடுவாங்க. மொத்தத்துல எங்க வீட்டுக்கு ஐஸ்வர்யமே வந்தாச்சுன்னுதான் சொல்லணும்!"

கார்த்திகா தேவி : என்ன தனுஷ்... எதுவுமே பேச மாட்ற?

தனுஷ் : நான் என்ன பேசறது? அதான் எல்லாத்தையும் நீங்களே பேசிட்டீங்களே... நான் என் கல்யாணத்துக்கு அப்புறம் பேசறேன். இப்போதைக்கு ஆளை விடுங்க, ஜூட்.

- **மு.மாறன்**

படங்கள் : **ஸ்ரீஹரி**

வரை நோகடிக்கறாப்போல் செய்தி போடுவது... இதை வெறுக்கிறேன்.

எதிர்காலத் திட்டம்னா...? சட்டம் படித்திருக்கிறேன். கார்பரேட் லா படிக்கணும். அப்படியே திரைக்கதை கோர்ஸும் படிக்கலாம்னு இருக்கேன். கைவசம் ஒரு திரைக்கதை தயாரா வச்சிருக்கேன். இருந்தாலும் நுணுக்கங்களைத் தெரிஞ்சுக்கணும். ஒரு சினிமாவில் ஸ்டோரி லைன் வீக்காக இருக்கலாம். ஆனா திரைக்கதை வலுவா இருந்தா, சினிமா வெற்றி நடைபோடும். என்னை வெகுவாகக் கவர்ந்த படம் 'தூள்'. திரைக்கதை ரொம்ப ஸ்ட்ராங்க்.

நிறைவேறா ஆசை எதுவுமே இல்லீங்க. அப்பா அம்மா பாத்துப் பாத்து எல்லாமே செய்யும் போது எனக்கென்னங்க குறை?

திருமணம்... அதுக்கென்னங்க அவசரம்? படிக்கணும். நாலு வருஷம் கழித்து யோசிக்கணும். நான் என்னிக்குமே அப்பா பொண்ணுதான். அவர் சொல்லுவதுதான் எனக்கு வேத வாக்கு."

பேட்டி : **லதாசேகர்**

(29.06.2003- கல்கி இதழில் வெளியானது!)



தீபாவளிக் கொண்டாட்டம் தொடர்கிறது



எல்லோருக்கும் தீபாவளி 11-ம் தேதிதான். ஆனால் மங்கையர் மலர் வாசகிகளுக்கு, 13-ம், 14-ம் கூட தீபாவளிதான். என்ன, ஆச்சர்யமாக இருக்கிறதா? ஆம், அன்று வாசகிகள் விழா இல்லையா? ஆசிரியர் **ரேவதி சங்கரனின்** அன்பு மழையில் வாசகிகள் கங்கா ஸ்நானம் செய்து கொண்டு, அவர்களின் திறமைகளெல்லாம் பட்டாசு, மத்தாப்புப்போல் பூச்சொரிய, தீபாவளி இனிப்பாக பரிசு மழையில் நனையப் போகிறார்கள்! இந்தக் காட்சியெல்லாம் எங்கு அரங்கேற்றம் ஆகப் போகின்றன? சந்தேகமேயில்லை, நாகர்கோவிலிலும், திருநெல்வேலியிலும்தான். வாருங்களேன், நீங்களும் கண்டுகளிக்க -

தேதி : 13.11.2004
இடம் : கிருஷ்ண மஹால்,
செட்டிகுளம் ஜங்ஷன்,
கே.பி.ரோடு,
நாகர்கோயில் - 2
நேரம் : மாலை : 4.00 மணி

தேதி : 14.11.2004
இடம் : ஸ்ரீ லக்ஷ்மி நாராயணன் மஹால்,
6, பெருமாள் மேற்கு
தேரடி தெரு,
திருநெல்வேலி ஜங்ஷன்
627 001
(கணேஷ் காம்ப்ளெக்ஸ் உள்புறம்)
(அருள்மிகு சாலைகுமரன் கோயில் எதிர்ப்புறம்)
நேரம் : காலை 10.30 மணி





கல்கி




2004 நவம்பர் 14
தாரண ஐப்பசி 29
மலர் : 63
இதழ் : 16

தார்மீக பலமிழந்த மத்திய அரசு!

அயோத்தி வழக்கில் இறுதி விசாரணைக்கு ஆஜராகும்படி, அத்வானி, தாக்கரே முதலானோருக்கு அலகாபாத் உயர்நீதிமன்றம் நோட்டீஸ் கொடுத்திருக்கிறது. கடந்த சில ஆண்டுகளாக கவனிக்கப்படாமலே கிடந்தது இந்த வழக்கு. 2001ல் சி.பி.ஐ. சமர்ப்பித்த மேல்முறையீட்டு விண்ணப்பத்துக்கு இப்போதுதான் வேளை வந்திருக்கிறது. அத்வானி முதலானோரை ராமஜென்ம பூமி வழக்கில் விடுவித்து தனி நீதிமன்றம் தீர்ப்பளித்தது. ஆனால் தனி நீதிமன்றம் அமைக்கப்பட்ட விதமே தவறு என்று, அதனை அலகாபாத் உயர்நீதிமன்றம் கலைத்துவிட்டது. எனவே தனி நீதிமன்றம் அளித்த தீர்ப்பும் செல்லுபடியாகாது என சி.பி.ஐ. மேல்முறையீடு செய்தது. அந்த வழக்கில்தான் தற்போது ஆஜராகும்படி அத்வானி முதலானோருக்கு உயர்நீதிமன்றம் நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

இது ஒருபுறமிருக்க, பெட்ரோல் பங்க் உரிமங்களை முறைகேடாக வழங்கிய முன்னாள் காங்கிரஸ் அமைச்சர் சதீஷ் ஷர்மா பேரில் வழக்குத் தொடர, சி.பி.ஐ.க்கு அனுமதி மறுத்துள்ளது மத்திய அரசு! இந்த வழக்கு தொடர்வதற்கான கோரிக்கை கிட்டத்தட்ட ஐந்தாண்டுக் காலமாக மத்திய அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது. இன்று காங்கிரஸ் ஆட்சிக்கு வந்த சில மாதங்களிலேயே அனுமதி மறுப்பு



அறிவிக்கப்பட்டுவிட்டது!


இந்த நிகழ்வுகளிலிருந்து நாம் தெளிவாகப் புரிந்து கொள்வது என்னவென்றால், சி.பி.ஐ. என்பது, நாம் நம்புவது போல் - எதிர்பார்ப்பது போல் - விருப்பு வெறுப்பின்றிச் செயல்படக் கூடிய சுயாட்சி உரிமை பெற்ற அமைப்பு அல்ல. அதன் இயக்கமும் செயல்பாடுகளும் மத்திய அரசின் அரசியல் கோட்பாடுகளுக்கும் விருப்பு வெறுப்புகளுக்கும் உட்பட்டதுதான்.

சதீஷ் ஷர்மா பேரில் வழக்கு பதிவு செய்து நடத்த அனுமதி மறுக்கப்பட்டிருக்கிறதேயொழிய, அதற்கான காரணத்தையோ, விளக்கத்தையோ சி.பி.ஐ.க்கு மத்திய அரசு தரவில்லை. சட்ட அமைச்சகத்துடன் கலந்தாலோசித்து, உள்துறை அமைச்சகம் முடிவெடுத்துள்ளது என்று மட்டும்தான் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. காங்கிரஸ் ஆட்சியின்போது, பெட்ரோலியத் துறை அமைச்சராக இருந்த ஷர்மா, சோனியா - ராஜீவ் குடும்பத்துக்கு நெருங்கிய நண்பர் என்பது ரகசியமே அல்ல.

1996ல் சி.பி.ஐ. விசாரணையை ஆமோதித்து, உச்சநீதிமன்றம் ஷர்மாவைக் கடுமையாகக் கண்டனம் செய்தது. 'தான்தோன்றித்தனமாக, துர்நோக்கத்துடன் அரசியல் சாசனத்துக்கு விரோதமாக ஷர்மா செயல்பட்டார்' என்று கண்டித்து, ஐம்பது லட்சம் ரூபாய் அபராதமும் விதித்தது.

இன்று...? அதே சதீஷ் ஷர்மா மீது வழக்குத் தொடர சி.பி.ஐ.க்கு அனுமதி மறுத்துள்ளது மத்திய அரசு!

பெட்ரோல், சமையல் காஸ் விற்பனை உரிமங்களை வழங்குவதில் எல்லா ஆட்சிக் காலத்திலும் ஊழல் நடந்து வந்துள்ளது. என்.டி.ஏ. ஆட்சியில் ராம்நாயக் பெட்ரோலியம் அமைச்சராக இருந்த சமயம், அவ்வுரிமங்கள் வழங்கலில் ஏராள ஊழல்கள் நடந்ததாக ஊர்ஜிதமாகி, நியாயமான முறையில் வழங்கப்படாத உரிமங்களை ரத்து செய்யும்படி உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது.



வோட்டுப் போட்ட மக்களை முட்டாளாக்கிவிட்டு, கட்சி பேதமின்றி அரசியல்வாதிகள் லஞ்ச - ஊழலில் ஈடுபட்டுச் சம்பாதிக்கிறார்கள். சட்டத்தின் பிடியிலிருந்து அரசே அவர்களைப் பாதுகாக்கிறது.

இதில் வேதனைக்குரிய வேடிக்கை என்னவென்றால், சி.பி.ஐ. மத்திய அரசின் கீழ் இயங்கினால், அதன் இயக்கம் கட்டுப்படுத்தப்படுகிறது என்று காரணம் காட்டி, அதனை தேசிய விஜிலன்ஸ் கமிஷனின் கீழ் இயங்கும்படி மாற்றி அமைத்தது உச்சநீதி மன்றம்.

ஆனால், எந்தக் கெடுபிடியும் லஞ்ச - ஊழலுக்குத் தடைபோட முடியாது என்பதே திரும்பத் திரும்ப நிரூபணமாகி வருகிறது.

அடிப்படையில் நேர்மையும் நாணயமும் இல்லாத அரசியல்வாதிகளை, சட்டமும் நீதியும் நெறிப்படுத்த முடியாது! அவற்றின் பிடியிலிருந்து தப்புவதற்குத் திட்டமிட்டே அவர்கள் இயங்குகிறார்கள். போதும் போதாததற்கு அவர்களுடைய கட்சித் தலைமை அத்தனை லஞ்ச - ஊழலுக்கும் பாதுகாப்பு வேறு தருகிறது.

சோனியா காந்தியின் குடும்ப நண்பர் என்பதற்காக சதீஷ் ஷர்மா, வழக்கின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்டால், மன்மோகன் சிங் அரசுக்கு என்ன தார்மிக பலம் இருக்கும்? பிரதமரால் யாரைத் தட்டிக் கேட்க முடியும்? இந்த ஆட்சியில் பெட்ரோலிய அமைச்சகமும், உள்துறை அமைச்சகமும் நேர்மையாகச் செயல்படும் என, இனி நாம் எவ்வாறு நம்புவது? எந்த அமைச்சகம்தான் நேர்மையாக நடக்கும் என்று எதிர்பார்ப்பது? அரசிடமும் காங்கிரசிடமும் ஒருங்கே நம்பிக்கை இழக்க வைத்துள்ளது இந்த அக்கிரமம்.

பெட்ரோலிய இறக்குமதிக்கு அரசு ஏகமாக விலை கொடுப்பதை நாம் அறிவோம். ஆனால், சதீஷ் ஷர்மாவைக் காப்பாற்றுவதற்காகத் தரப்பட்டுள்ள விலையைப் பார்க்க, பெட்ரோலிய இறக்குமதி கடன் தொகை ஒன்றுமில்லை! வாய்மையை விலையாகத் தந்துவிட்டு, தார்மிக பலமிழந்து நிற்கிறது காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு.

அடிமுடிகாணா அனற் பிழம்பாய் எம்பெருமான் அண்ட சராசரம் முழுவதும் அடியெடுத்து நின்ற மாதம் - கார்த்திகையே!

ஜோதி வடிவான திருஅண்ணாமலையில்
கார்த்திகை தீபத்திருநாளில்
(26-11-04) தீபமேற்றி அன்னதானம் செய்ய அழைக்கிறோம்!

பேரன்புடையீர்! வணக்கம். அருள்மிகு ஸ்ரீ அருணாச்சலேஸ்வரர் தங்களுக்கு தீபத்திருநாளில் அனைத்து நலன்களையும் தந்தருளப் பிரார்த்திக்கிறோம்.

ஆன்மீக அன்னதான அறக்கட்டளை சிவமடத்தில் நடத்தும் 7 ம் ஆண்டு அன்னதான சேவையில் கலந்து கொள்ள அன்புடன் அழைக்கிறோம்!

உலக சிருஷ்டியின் பேறு முதல் முதலில் உருவான நகரம் [illegible]. திருவண்ணாமலை மகிமை பொருந்திய தெய்வ அம்பிகையின் அமைவான ஸ்ரீ ஆதிசக்தி முதலில் ஏற்றுக்கொண்டாள். அதை [illegible] உலக அனைத்து ஜீவராசிகளும் உண்ணும் உணவாக மாற்ற தெய்வ [illegible] புரிந்தார். திரு அண்ணாமலையார் ஆலயத்தில் அம்பிகை நமக் புரிந்து [illegible] திருவுருவம் [illegible] அந்த அம்பி [illegible] திரு அண்ணாமலையில் அருள் பாலிக்கிறாள். அம்பிகையே அண்ணாமலையாரை அன்னையாய் [illegible] செய்து திருநாளாம் கார்த்திகை பௌர்ணமியில் அனைத்து தெய்வங்களுமே அண்ணாமலையாரை [illegible]. தீபத்திருநாள் பௌர்ணமியில் [illegible] அண்ணாமலையில் [illegible] நடத்தப்படும் ஆன்மீக அன்னதான அறக்கட்டளை [illegible] கார்த்திகை தீபமேற்றி அருளிய அன்னதானம் செய்தால் அன்னதான பலன் மேலும் பலமடங்கு பெருகும். இப் புனிதமான தீபத் திருநாளன்று நடைபெறும் அன்னதான திருப்பணியில் கலந்து கொண்டு [illegible] தங்களால் இயன்ற அளவு நன்கொடையை அனுப்பி அண்ணாமலையின் [illegible] அன்புடன் அழைக்கின்றோம்.

● பிறந்தநாள் ● திருமணநாள் ● வாழ்க்கையில் உயர்வு ● தொழில் முன்னேற்றம் பெற ● நிரந்தர வேலை பெற ● கல்யாண பாக்கியம் பெற ● நல்ல வரன் அமைய ● புத்திர - பிள்ளை பாக்கியம் பெற ● கணவன் மனைவியிடையே ஒற்றுமை நிலவ ● கஷ்டங்களும், கடன்களும், எதிர்ப்பு இடையூறுகளும் நீங்க ● புதிய முயற்சிகளில் முன்னேற்றமும் வெற்றியும் உண்டாக ● புதிதாக தொழில் தொடங்க ● புதிதாக வீடு, மனை பெற ● வாகன யோகம் பெற ● நல்ல சிந்தனை பெற சிந்தனை வளம் பெருக ● உடல் ஆரோக்கியம் பெற ● நீண்ட ஆயுள்பெற ● தெய்வ சக்தியுடன் திகழ ● குடும்ப ஒற்றுமை பெற உலக ஒற்றுமை பெற ● சமுதாய ஒற்றுமை பெற ● தேச ஒற்றுமை பெற ● எல்லா உயிர்களும் இன்புற்று வாழவும்... தங்களின் வேண்டுதலுக்கேற்ப சித்ரா பௌர்ணமி திருநாளன்று அன்னதானம் செய்து பிரசாதத்துடன் ஸ்ரீ அருணாசலேஸ்வரர், ஸ்ரீ உண்ணாமலையம்மன் படத்தையும் தங்களுக்கு அனுப்பி வைக்கிறோம்.

தாங்கள் அளிக்கும் நன்கொடை எவ்வளவு சிறியதாக இருந்தாலும் அன்புடன் ஏற்றுக்கொள்ளப்படும்.


- ரூ. 500 - அனுப்பும் அன்பர்களுக்கு, ஆன்மீகம் மாத இதழ் மூன்று மாதத்திற்கு அனுப்பி வைக்கப்படும்.
- ரூ. 1000 - அனுப்பும் அன்பர்களுக்கு, ஆன்மீகம் மாத இதழ் ஆறு மாதத்திற்கு அனுப்பி வைக்கப்படும்.
- ரூ. 2000 - அனுப்பும் அன்பர்களுக்கு, ஆன்மீகம் மாத இதழ் ஒரு வருடத்திற்கு அனுப்பி வைக்கப்படும்.
- ரூ. 5000 - அனுப்பும் அன்பர்களுக்கு, ஆன்மீகம் மாத இதழ் ஐந்து வருடத்திற்கு அனுப்பி வைக்கப்படும்.

அன்னதானத்திற்கு நன்கொடையாக ரூ.1000, ரூ.2000, ரூ.5000 அனுப்பும் அன்பர்களுக்கு அருள்மிகு ஸ்ரீ அருணாசலேஸ்வரர் திருக்கோயிலில் பூஜிக்கப்பட்ட வலம்புரி சங்கும், ஸ்ரீ அன்னபூரணி அன்னையின் விக்கிரகமும், ஸ்ரீ அருணாசலேஸ்வரரின் வண்ணப்படமும், சிறிய அளவில் சிவபுராண புத்தகமும் அனுப்பி வைக்கப்படும்.

ரூ. 5000 - அனுப்பும் அன்பர்கள் சார்பாக, தீபத்திருநாளன்று அடிஅண்ணாமலையில் அமைந்துள்ள சிவ மடத்தில் அன்னதானம் செய்து ஐந்து ஆண்டுகளுக்கு ஆன்மீகம் மாத இதழ் தங்களுக்கு அனுப்பி வைக்கப்படும். அன்பர்கள் ஒவ்வொருவரின் பூஜை அறையும் மங்களம் பெற வேண்டும் என்ற இறை சிந்தனையோடு ரூ. 5000 - செலுத்து பவர்களுக்கு 1024 பக்கங்களுடன் கூடிய பெரிய அளவில் உள்ள ஸ்ரீ மத் பகவத்கீதை புத்தகத்தை (தமிழில்) அனுப்பி வைக்கிறோம்.

இந்த அன்னதானத்திருப்பணி (திருக்கோயிலுக்கு உட்பட்டது அல்ல) ஆன்மீகம் இதழ் வாசகர்களுக்காகவும், அன்னதான சேவையில் கைங்கர்யத் தொண்டு புரிந்து வரும் அனைத்து அன்பர்களுக்காகவுமே நடத்தப்படுகிறது.

சிவனடியார்கள் தங்கள் நன்கொடையை **Aanmeeka Annadhana Charitable Trust, Chennai - 4** என்ற பெயரில் **Cheque / D.D/ M.O.** மூலம் கீழ்கண்ட முகவரிக்கு அனுப்பி வைக்கவும். அன்னதான திருப்பணிகளை நலம் தரும் இறை பணி சேவைகளாக ஆன்மீக அன்னதான அறக்கட்டளை ஆற்றிவர தங்களது ஒத்துழைப்பை என்றும் பேரன்புடன் வேண்டுகிறோம்.



ஸ்ரீ அருணாசலேஸ்வரர்

நன்கொடைகளுக்கு 80G பிரிவின் படி வரி விலக்கு உண்டு.

Cheque / D. D/ M. O. அனுப்ப வேண்டிய முகவரி

ஆன்மீக அன்னதான அறக்கட்டளை

AANMEEKA ANNADHANA CHARITABLE TRUST (Regd.)
68, Nadu Street,(Opp. Sri Kapaleeswarar Temple) Mylapore, Chennai - 600 004.
Tel : 2495 9302, 2461 7378 Fax : 044 - 5206 6525 E-mail : sivasiva @vsnl.net



ஸ்ரீ உண்ணாமலையம்மன்

"கார்த்திகை தீப பௌர்ணமியில் அன்னதானம் செய்தால் நம் உடற்பிணி உடனே விலகும்"



அறுகம்புல் மட்டும் என்ன ஸ்பெஷல்?

வாக்குண்டாம் நல்ல
மனமுண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனி நுடங்காது -
பூக்கொண்டு
துப்பார் திருமேனித் தும்பிக்கையான்
பாதம்
தப்பாமற் சார்வார் தமக்கு

- ஔவையார் (மூதுரை)

ரோஜா, முல்லை, சம்பங்கி போன்ற நறுமணம் கமழும் மலர்கள் எத்தனையோ இருக்க, அறுகம் புல்லைக் கொண்டு பிள்ளையாரை அர்ச்சிப்பது ஏன்? அதற்கும் ஒரு கதை இருக்கிறது.

முன்னொரு காலத்தில் ஒரு விழா நாளில் யம தர்மராஜன், தனது சபையில் அலங்காரத்தோடு அமர்ந்திருந்தான்.

அப்போது, ரம்பை, திலோத்தமை போன்ற தேவகன்னியரின் ஆடல் பாடல்கள் நிகழ்ந்தன. நடன வேகத்தில் திலோத்தமையின் மேலாடை நழுவ, அவள் நாணி அவ்விடத்தை விட்டு அகன்றாள்.

ஆடை நழுவியபோது, திலோத்தமையைக் காமத்துடன் எமன் உற்று நோக்கினான். அந்தக் கணத்தில் அனலாசுரன் என்ற கொடிய அரக்கன் பிறந்தான். கலப்பை போன்ற பெரிய பற்களும், கரிய உருவமும், அனல் கொழுந்துகளைப் போன்ற புறமயிர்களும் கொண்ட அவனைக் கண்டு அனைவரும் பயந்து ஓடினர்.

எமன், தன்னுடைய தந்தை என்பதால் அவனுக்கு இடர் செய்யாமல் விட்டுவிட்டு, அனலாசுரன் பூலோகத்துக்குப் பாய்ந்து சென்றான். அங்கிருந்த உயிரினங்கள் அனைத்தையும் விழுங்கினான். இந்திரன் முதலான தேவாதி தேவர்களையும் பிடித்துத் தின்ன எண்ணி, தேவலோகம் நோக்கிப் பாய்ந்தான். அதை அறிந்ததும் தேவர்கள் அனைவரும் பயந்தோடி, திருமாலிடம் சரணடைந்தனர்.

"அனலாசுரனை அழிக்க கணேசப் பெருமானால் மட்டுமே முடியும். நீங்கள் விநாயகரிடம் முறையிடுங்கள்" என்று சொல்லி விட்டார் திருமால்.

அவர்களும் அவ்வாறே செய்ய, கணேசப் பெருமான் மனமுவந்து கருணை புரிந்தார்.

அகத்தியர் ஆழ்கடலை விழுங்கியது போல, பரமசிவன் ஆலகால விஷத்தை அள்ளி உண்டது போல, விநாயகர், அனலாசுரனை அள்ளி புன்சிரிப்போடு விழுங்கியே விட்டார். அந்த அற்புதத்தைக் கண்ட தேவர்கள் அனைவரும் அதிசயித்தார்கள் என்றாலும், பிள்ளையாரின் வயிற்றில் அனலாசுரன் சென்றதும், அவர்கள் வயிற்றிலும் அதீத வெப்ப உணர்ச்சி ஏற்பட்டு வாட்டியது. 'கணபதியின் வயிறு குளிர்ந்தால்தான் அனைவருடைய வயிறும் குளிரும்' என்று தீர்மானித்தார்கள்.

இந்திரனின் கட்டளைப்படி, சந்திரன் விநாயகர் திருமுடி மீது, அமுத கிரணங்களைப் பொழிந்தான். திருமால் ஏராளமான தாமரை மலர்களைக் கொண்டு வந்து ஏற்றினார். வருணதேவன் குளிர் நீர் எடுத்து அபிஷேகம் செய்தான். சிவபெருமான் தாம் அணிந்திருந்த ஆதிசேஷன் முதலிய பாம்புகளைக் கொணர்ந்து அணிவித்தார். பலரும், பலவகை உபசாரம் செய்தும் விநாயகருடைய வெப்பம் தணியவில்லை.


கடைசியில், எண்பதாயிரம் முனிவர்கள் அங்கு வந்து, மிகவும் குளிர்ச்சியைத் தருகின்ற அறுகுகளை ஆளுக்கு இருபத்தொன்று வீதம் முடி முதல் அடி வரை சொரிந்தார்கள். உடனே விநாயகரைப் பற்றியிருந்த அனல் வெக்கை விலகியது. உயிர்களின் வெப்பங்களும் இறங்கின.

கணேசப் பெருமான் முனிவர்களை நோக்கி, "தவசீலர்களே! எமது வயிற்றில் இருந்த அனல் வெக்கையானது, அறுகு அர்ச்சனையால் நீங்கியது. ஆகையால், என்னை வழிபடும்போது நறுமணப் பூக்கள் போன்ற பலவித உபசாரங்கள் செய்தும் அதில் அறுகு இல்லாவிட்டால் அப்பூஜை பலன் தராது. அறுகு ஒன்று மட்டுமே இருந்தாலும் நான் வெகு சுலபத்தில் பலன் கொடுப்பேன்" என்று அருள் புரிந்தார்.

இதனால் அறுகு, விநாயகருக்கு உகந்ததாயிற்று.

108 விநாயகர்!

கோவையில் புலியகுளம் விநாயகர் கோயிலும், ஈச்சனாரி விநாயகர் கோயிலும் பிரசித்தி பெற்றவை. 108 விநாயகர் கோயில் ஒன்று இங்கிருப்பது பலருக்குத் தெரியாது. கோவை ரேஸ்கோர்ஸ் ரோடில், தாமஸ் பார்க் நிறுத்தத்தில் சாலையிலேயே இந்து சமய அறநிலையத் துறையைச் சார்ந்த 108 விநாயகர் ஆலயம் உள்ளது. 108 பிள்ளையார்களை ஒரே இடத்தில் பார்க்கலாம். 108



• வினை தீர்க்கும் விநாயகர்



• நூற்றியெட்டு பிள்ளையார்

பிள்ளையாருக்கும் வஸ்திரம், எருக்க மாலை, பூமாலை, அறுகம்புல் சார்த்தி, வெற்றிலை பாக்கு, தேங்காய் பழம் நைவேத்தியம் செய்து வைத்திருப்பது கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும். இக்கோவிலில் செல்வ விநாயகர், முருகன், ஆஞ்சநேயர், அம்பிகை, நவக்கிரகங்கள் ஆகிய மூர்த்திகளுக்கும் தனித் தனியே சன்னதிகள் உண்டு. டவுன் ஹாலில் ஏழாம் எண் பேருந்தில் ஏறி தாமஸ் பார்க் நிறுத்தத்தில் இறங்கினால் இந்த கோயிலுக்குச் செல்லலாம்.

- ம. சங்கரி, கோவை

மூசாபாய் போட்ட பிள்ளையார் சுழி!

திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப் பூண்டி அருகிலுள்ள கோட்டைக்கரையில் அரசு மருத்துவமனை உள்ளது. சில ஆண்டுகளுக்கு முன்பு, அங்கு வரும் நோயாளிகள், மருத்துவ சிகிச்சை பெறுவதற்கு முன்பும், பின்பும் வழிபட, ஒரு சிறு கோவில் இல்லையே என்று வாய் விட்டுச் சொன்னதை, அங்கு பணிபுரிந்த சில பணியாளர்கள் கேட்க நேர்ந்தது. இவ்வாறு கேட்டவர்களுள் நானும் ஒருவன். நாங்கள் நான்கைந்து பேர் அன்றிரவு மருத்துவமனைக்குப் பக்கத்தில் இது பற்றிப் பேசிக் கொண்டிருந்தோம்.

நான், "சாமியார்கள் ஒன்று கூடி மண்டபம் கட்ட நினைத்த கதையாகத்தான் இது போகப் போகிறது" என்று உசுப்பேற்றிவிட்டேன். அவ்வளவுதான் நண்பர்களுக்கு ஓர் உத்வேகம் பிறந்தது. எல்லாரும் மறுநாள், காஞ்சி மகா பெரியவரை நேரில் வணங்கி விஷயத்தைச் சொன்னோம். அவர் எங்களுக்கு நல்லாசி கூறி, "அடுத்த முப்பதாவது நாளில், நீங்கள் நேற்று பேசிய இடத்திலேயே கோயில் கட்டி கும்பாபிஷேகம் நடக்கும்" என்றார். நாங்கள் வெலவெலத்துவிட்டோம். கோட்டைக்கரைக்கு திரும்பி வந்ததும், மூசா பாய் என்ற முஸ்லீம் அன்பர் நூற்று ஒரு ரூபாய் நன்கொடை தந்தார். இருதயராஜ் என்ற கிருஸ்துவர் கோயிலுக்கு இரும்பு 'கேட்டு' தந்தார். இறையடியார்கள் சாதி, மதம், இனம், மொழி வேறுபாடின்றி 'கை' கொடுத்து உதவினார்கள். காஞ்சிப் பெரியவர் சொன்ன அதே முப்பதாவது நாளில் கும்பாபிஷேகம் நடைபெற்றது. அவர் அன்று ஆசி தந்து கொடுத்த முழு கொப்பரைத் தேங்காயை பூரண ஆகுதியில் சேர்த்தோம். எல்லாமே வியப்பாக இருந்தன.

இதைவிட வியப்பான விஷயம் என்னவென்றால், இங்குள்ள விநாயகர் பெயருக்கேற்றபடி வினைதீர்க்கும் விநாயகராகவே விளங்குவதுதான்.

- மு. முரளீதரன், சோழவரம்

நீங்கள் கேட்டவை - தராசு

● தெ.ச. சேகர், மோரகனியனூர்

? வாழ்க்கைத் தரம் வசதியால் அமைவதா? பண்பால் வருவதா...?

! உங்கள் தேவைகளைக் குறைத்துக் கொள்ளும் பண்பால் வருவது.

● க.வேடியப்பன், கும்மிடிப்பூண்டி ★

? மருதுபாண்டியர்கள் தபால்தலை வெளியிடுவதில் தமிழக அரசியல் தலைவர்கள் உரிமை கொண்டாடுவது எதைக் காட்டுகிறது?

! மருதுபாண்டியர் புகழைவிட தங்கள் புகழைத்தான் தமிழக மக்கள் கொண்டாட வேண்டும் என்று அரசியல்வாதிகள் நினைப்பதை.

● டி.கே. சுப்பிரமணியன், திருப்பரங்குன்றம்

? சீக்கிரம் பிடிபட்டால் திருடன் கொள்ளைக்காரன், சிறிது தாமதமாகப் பிடிபட்டால் தாதா, நீண்ட நெடுங்காலம் கழித்துப் பிடிபட்டால் தியாகியா?

! வீரப்பன் சுட்டுக் கொல்லப்பட்ட போது ஏற்பட்ட அனுதாபம், அவர் செய்த அட்டூழியங்களைத் தற்காலிகமாக மறக்கச் செய்துள்ளது. தியாகி என்ற அபத்தப் பட்டம் நிலைக்காது. அரசியலில் புக அவர் மனைவி எடுக்கக் கூடிய முயற்சியும் பலிக்காது. தமிழக மக்கள் அவ்வளவு முட்டாள்கள் அல்ல.

● ரேவதிப்ரியன், ஈரோடு

? சமீபகாலமாக பத்திரிகைகளில் கிசுகிசுக்கப்பட்ட தனுஷ் - ஐஸ்வர்யா விஷயம் திருமணம் வரை வந்து விட்டதே...?

! இந்த விவகாரத்தில் கிளர்ந்த கிசுகிசுக்களையொட்டி, எழுகின்ற பல கேள்விகளுக்குச் சரியான விடைகள் இல்லை. என்றாலும் "எனது பூரண சம்மதத்துடன் தான் நடக்கிறது" என்று ரஜினியின் ஒப்புதலும், ஆசியும் கிடைத்து விட்டது. நாமும் மணமக்கள் வளமுடன் வாழவும், திருமணம் தீர்க்காயுசுடன் நீடிக்கவும் வாழ்த்துவதுதான் பண்பாடு.

● ஜி. ஜெயராமன், கூந்தலூர்

? பெருந்தலைவர் காமராஜரின் உருவம் பொறித்த நாணயம் வெளியிடுவது மகிழ்ச்சிதானே?

! மெத்த மகிழ்ச்சிதான்! ஆனால், நாணயத்தின் மதிப்பு நூறு ரூபாய்! செலவழிக்காமல் வைத்திருப்பது மெத்தக் கஷ்டம்!

● ஆர். வானுமாமலைப் பெருமாள் தனக்கர்குளம்

? ஒரு நல்ல தலைவனுக்கு இருக்க வேண்டிய தகுதிகள்...?

! நிறைய எம்.பி., எம்.எல்.ஏ.க்கள் 'துப்பாக்கி வேணும்' என விண்ணப்பித்துள்ளார்களாம்! அதுதான் முதல் தகுதி என்று முடிவுகட்டி விட்டார்கள் போலிருக்கு!

● வே.முருகேசன், சென்னை

? சந்திரமுகி படத்தில் நடிக்க ரஜினிக்கு எத்தனை கோடி சம்பளம் இருக்கும் என்று நினைக்கிறீர்கள்?

! சிவாஜி "பிலிம்ஸ்"க்கு நஷ்டம்

சந்திரமுகியில் ரஜினிக்கு எத்தனை கோடி...?

• காஸ்ட்லி காயின்!



• ... அநீதி அறிவுரை!



ஏற்படாத அளவு.

● லெ.நா. சிவகுமார், சென்னை - 33

? பழநி ரோப் கார் திட்டம் குறித்து...?

! வாழ்த்துவோம். நகர சுகாதாரமும் தங்கும் விடுதிகளின் தரமும், அதல பாதாளத்திலிருந்து உயர ஒரு ஸ்பெஷல் உந்து சக்தி வந்தால் தேவலாம்.

● த. சத்தியநாராயணன், அயன்புரம்





• நீடிக்க வாழ்த்து!

? ரகசிய காப்புப் பிரமாணத்தை ஜெ. மீறியதாகக் கூறும் பிரச்னை குறித்து...?

! ராம்மோகன்ராவைக் கிளப்ப எடுத்த முயற்சி, பர்னாலாவைக் கொண்டுவர எடுத்த முயற்சி - எல்லாமே ஊரறிந்த ரகசியம்தானே? இதிலென்ன ரகசியம் வேண்டிக் கிடக்கு? ஒரு பக்கம் ஒளிவு மறைவு கூடாது (transparency in government) என்று வாய் கிழியப் பேச வேண்டியது; மறுபக்கம் 'ஐயோ! ரகசிய காப்புப் பிரமாணம் கைவிடப்பட்டதே' என்று அலற வேண்டியது... என்ன, ராணுவ ரகசியங்களா அம்பலமாகிவிட்டன?

● எஸ்.ஏ. கேசவன், குருமலை

? வீட்டிலும் நாட்டிலும் குழப்பங்களுக்குக் காரணம் பெண்களாகவே இருப்பது ஏன்...?

இதென்ன அநியாயமான கேள்வி? உங்க மனைவியோட டூ விட்டுட்டீங்களா...?

● என். பாலகிருஷ்ணன், மதுரை - 1

? பெட்ரோல் டீசல் விலையை நிர்ணயிப்பது அரசியலா? பொருளாதாரமா?

! அமெரிக்கா!

● எஸ். அசாதி, பெருமாள்தேவன் பட்டி ❐



• ஆசைப்பட்டால்...

? முரண்பாடுகளின் மொத்த உருவமாக இந்திய கிரிக்கெட் மேலாண்மை திகழ்வதால்தான், இந்திய அணியின் ஆட்டத்திறன் நிலையற்று இருக்கிறதா..?

! எந்த விளையாட்டிலும் எப்போதும் ஜெயித்துக் கொண்டேயிருக்க முடியாது. மேலும், ஆண்டு முழுவதும் முதல்தர கிரிக்கெட் ஆடிக்கொண்டே இருக்க வேண்டும் என்ற கொள்கை, அந்த முதல்தர ஆட்டக்காரர்களை பாதிக்கவே செய்யும். ஓய்வுக்கும் பயிற்சிக்கும், எதிர்த் தரப்பினரின் ஆட்டத் திறமைகளை ஆராயவும் அவர்களுக்கு நேரம் ஒதுக்கப்பட வேண்டும். நீங்கள் குறிப்பிடுவதும் ஒரு காரணம் தான். மேலாண்மையின் சீரிய செயல்பாடும், விருப்பு வெறுப்பற்ற போக்கும் ரொம்ப முக்கியம்.

● கே.விஸ்வநாத், பெங்களூர் - 38

? கல்கியின் முகவரி 97ஆ? 32ஆ...

! சென்னை 32 என்பதுதான் அஞ்சல் அலுவலகப் பெட்டி உள்ள முகவரி. எனவே அதையே அஞ்சலில் குறிப்பிடுங்கள்.

● ஸ்ரீவித்யா காளிதாஸ், சிதம்பரம்

? லோக்பால் மசோதா குறித்து முடிவு எடுப்பது ஒத்திவைக்கப்பட்டுள்ளதே?

! ஒத்திவைக்கப்படாவிட்டால்தான் ஆச்சர்யம்.

● ஜோ. பன்னீர்செல்வம், சென்னை

? ராகுல் காந்தி இந்தியப் பெண்ணைத்தான் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்று சிவசேனா தலைவர் பால் தாக்கரே சொல்வது...?

! ராகுல் காந்தி தமக்கு ஏற்கெனவே



* நிலையால் புகழ்!

* ஜீரோ ஹீரோ!

அறிமுகமான ஓர் அயல்நாட்டுப் பெண்ணை மணக்க விரும்புகிறார் என்றே வைத்துக் கொள்வோம்... அரசியல் காரணங்களுக்காக வலுக்கட்டாயமாக ஓர் இந்தியப் பெண்ணை மணக்க வேண்டும் என்று வற்புறுத்துவது, நமது பெண் குலத்துக்கு இழைக்கப்படும் அநீதியாகத் தான முடியும் என்று சிவசேனா தலைவருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

● மு. வணங்காமுடி, சென்னை - 41

? இலவசமாய் ஒரு பொருள் தருவதால், ஓர் இதழின் தரம் தாழ்ந்தது என்பது ஏற்புடையதாக இல்லையே தராசு..?

! அப்படி நான் சொல்லவே இல்லையே... தரமான இதழ் அதன் உள்ளடக்கத்துக்காக மட்டுமே மக்களின் அபிமானத்தைப் பெற்று விற்க வேண்டும்; அதுதான் தமிழனுக்குப் பெருமை என்று நானே கூறியிருக்கிறேன். முரசொலி கூட இதைத்தானே சுட்டிக் காட்டியது!

● ஆர்.மாதவராமன், கிருஷ்ணகிரி

? முத்துக்கருப்பன் ஏழு நாள் சிறைத்தண்டனை பெற்றுள்ளாரே?

! மேல்முறையீடு செய்வதற்கான அவகாசத்தையும் தீர்ப்போடு சேர்த்து நீதிமன்றம் வழங்கியுள்ளது என்ற போதிலும், இந்தத் தீர்ப்பு முத்துக் கருப்பனுக்குச் சிறைத் தண்டனையைவிடப் பெரிய அவமானம்; இதர காவல் துறையினருக்கு எச்சரிக்கை; காவல் சீருடையின் கௌரவம் அதலபாதாளத்துக்குச் சரிந்து கொண்டிருக்கிறது. ஒரே ஒரு வீரப்பன் என்கௌண்டர் அதைத் தூக்கி நிறுத்திவிட முடியாது.

● அ. அப்துல் காதர், தூத்துக்குடி

? 'பா.ஜ.க. தலைவரை மாற்றினால் போதாது. அதன் கொள்கையை மாற்ற வேண்டும்' என வி.எச்.பி. தலைவர்கள் கருத்து குறித்து...?

! அதற்கும் ஒரு படி மேல் போய், மாற்றாவிட்டால் ஹிந்து மதத்தினர் வேறொரு அரசியல் கட்சியே ஆரம்பித்து விடுவார்கள் என்று மிரட்டல் வேறு! பிளவுபடுத்தும் பாலிடிக்ஸின் உச்சம்.

● கே. மஹாமூதா ராணி, மேலப்பாளையம்

? 'என் மனைவி மட்டும் இல்லாவிட்டால் நான் வெறும் ஜீரோ' என்கிறாரே லாலு?

! பின்னே! பீஹாரின் பினாமி முதல்வராக லாலு இருந்து வருவது, அவர் மனைவி உபயம்தானே!

❑ ரூ.100 பரிசு பெறுபவர் :
எஸ்.அசாதி,
பெருமாள்தேவன்பட்டி,
பிள்ளையார் குப்பம் (அஞ்சல்),
ஸ்ரீவில்லிபுத்தூர் (வழி),
விருது நகர் மாவட்டம் - 626 137

* ரூ.50 பரிசு பெறுபவர் :
க. வேடியப்பன்,
12, வி.எம். இரண்டாம் தெரு,
சாந்தி ஸ்டோர் பின்புறம்,
கும்மிடிப்பூண்டி - 601 201



எஸ்.வி.சேகர் பதில்கள்
- S.Ve. சேகர்

சிந்தனையும் ரசனையும் சேர்ந்த வருக்கே வருவது, மற்றவரை கவலை மறந்து சிரிக்க வைக்கும் கலை. கலைவாணர் போன்றோர் உடன் சிந்திக்கவும் வைத்தார்கள். இவரும் அதில் வெற்றி கண்டவர்தான். தமிழ் நாடகக் கலைக்கு ஆபரணம் அணிவிக்கும் சுவையான 'நகை'ச்சுவையை அளிப்பவரது சிரிப்பும் சிந்தனையுமான பதில்களின் தொகுப்பு. உள்ளே இருக்கும் ரசனையைக் காட்டும் குறுங்கவிதைகளும் சேர்ந்த பதிப்பு.

- அல்லயன்ஸ், 244, ராமகிருஷ்ணா மடம் சாலை, மயிலாப்பூர், சென்னை - 4 விலை: ரூ. 45/-

புராதன இந்தியா என்னும் பழைய 56 தேசங்கள் - பி.வி.ஜகதீச அய்யர்

'ஐம்பத்தியாறு தேசத்து ராஜாக்களும் சுயம்வரத்துக்கு வந்தார்களாம்' என்று புராணந் தோறும் கேட்டவருக்கு, 'அதென்ன, 56 தேசங்கள்? எங்கே இருந்திருக்கும், யார் யாரெல்லாம் ராஜாக்கள் என்று ஆராயப்போய், பழம் பாரதத்தின் நகரங்கள், பண்பாடு, மடிந்து போன மலைகள், மறைந்து போன நதிகள் என்று தோண்டத் தோண்ட கிடைத்த புராதனப் புதையல்.

- சந்தியா பதிப்பகம் A-நியூடெக் வைபவ் பிளாட்ஸ், 77, 53-வது தெரு, அசோக் நகர், சென்னை - 83 விலை ரூ.60/-

இந்து மதம் பற்றி ஆன்றோர்
- கட்டபொம்மன்

இந்துமதம் ஆழமாக வேர்களும், பரந்த விழுதுகளும் விட்ட பெரும் ஆல மரம். அதன் கிளைகளும் கனிகளும் எத்தனையெத்தனையோ. அழிவேயில்லையென்றாலும் அதில் அவ்வப்போது தொய்வு ஏற்பட்டு, இந்துக்கள் திசை தெரியாமல் தவித்த போதெல்லாம் தோன்றி, மதத்தையும் மனிதர்களையும் வாழ வைத்த மகான்களின் வரலாற்றுத் தொகுப்பு.

- மணிமேகலை பிரசுரம், 7, தணிகாசலம் சாலை, தி.நகர், சென்னை-17, விலை ரூ. 50/-

+2 டிப்ஸ் - ஆலயதீபன்

அமெரிக்க ஈராக் யுத்தம் நடக்கிற பாக்தாத்தை விடக் களேபரமான இடம் ஒன்று இருக்குமென்றால், அது +2 தேர்வின்போது மாணவமணிகளின் மனம்தான். அந்தக் கலவர பூமியை, தேர்வு நடக்குமிடத்தை, தென்றல் வீசும் சோலையாக மாற்ற, படிப்புடன் தேவை மனப்பயிற்சி. அதை எப்படிப் பெறுவதென்ற வழிகளைக் கூறி மாணவர்க்கு வழிகாட்டும் உளவியல் நூல்.

- ஏகம் பதிப்பகம், 3, பிள்ளையார் கோயில், 2-ம் சந்து, முதல்மாடி, திருவல்லிக்கேணி, சென்னை - 5. விலை ரூ. 40/-

- விஷ்வக்



பாலிடிக்ஸ் பண்ணுவாரா பர்னாலா?

எந்த காங்கிரஸ் கட்சியின் தூண்டுதலால் சுர்ஜித் சிங் பர்னாலா ஆளுனர் பதவியை இழக்க நேரிட்டதோ, இன்று அதே காங்கிரஸ், தங்கத் தட்டில் தமிழ்நாடு ஆளுனர் பொறுப்பை மீண்டும் அவருக்கு வழங்கியிருக்கிறது!

"என்னுடைய ஆட்சியைக் கவிழ்ப்பதற்காகவே கருணாநிதியின் தூண்டுதலால் ஆளுனர் மாற்றம் நடைபெறுகிறது" என்று நேரடியாகக் குற்றம் சாட்டினார் ஜெ. அவரது குற்றச் சாட்டில் அர்த்தம் இருக்கிறதா? இனி போயஸ் தோட்டம் Vs ராஜ்பவன் ஒன் டே, டெஸ்ட் மாட்ச் பார்க்கும் வாய்ப்பு தமிழர்களுக்குக் கிட்டுமா? பத்திரிகைகளுக்கு செம தீனியா? என்றெல்லாம் கேள்விகள் எழுகின்றன.



ஜனநாயக மரபுகளுக்கு மதிப்புக் கொடுப்பவர் பர்னாலா. அரசியலைச் சாப்பிட்டே வாழ்ந்தவர். காங்கிரஸ் எதிர்ப்பு என்பது அவரது ரத்தத்தில் ஊறியது. எண்பது வயதை நெருங்கும் பர்னாலா, பாராளுமன்ற உறுப்பினர், மத்திய அமைச்சர், முதலமைச்சர், ஆளுனர் என்று பல பெரிய பதவிகளைப் பார்த்து விட்டவர். ஆனால் ஆசைப்பட்ட ஜனாதிபதி பதவி கிட்டவில்லை. 1997ல் போட்டியிட்டுத் தோற்று விட்டார். "ஆட்டுக்குத் தாடி எதற்கு? நாட்டுக்கு கவர்னர் எதற்கு?" என்று கேட்ட அண்ணாவின் தம்பி கலைஞரால் இப்போது தமிழகத்துக்கு மீண்டும் வந்திருக்கிறார்!

ஜெ.வின் பொறுமையைச் சோதிக்கும் பல காட்சிகள் அரங்கேறவிருக்கின்றன. "நீங்கள் நினைப்பது போலல்ல. ஆளுனர்

கள் பாத்திமா பீவியும், ராம் மோகன் ராவும், தி.மு.கவின் ஒப்புதலைப் பெற்றே தமிழகத்துக்கு வந்தார்கள். ஆனால் ஒரு கால கட்டத்திற்குப் பிறகு, அம்மாவுடன் நல்லுறவு வைத்துக் கொள்ளவில்லையா? இறுதியில் தி.மு.கவே வெறுத்துப் போனதே! அதேபோல் "பர்னாலாவுக்கு நாங்கள் 'வெள்ளைக் கொடி' காண்பிப்போம். அதை ஏற்றுக் கொண்டு தொடர்ந்தால் உறவு சரிப்பட்டு வரும். நம்பிக்கை வந்து விடும்" என்கிறார் அ.இ.அ.தி.மு.க மூத்த பிரமுகர் ஒருவர்.

இப்போதைய சூழலில், மத்தியில் கூட்டணி ஆட்சி நடக்கும் நிலையில், 356ஐப் பயன்படுத்துவது என்பது முடியாத காரியம். காரணம், பாராளுமன்ற ஒப்புதல் அதற்குக் கிடைக்காது. ஆட்சிக்குத் தூணாக இருக்கும் இடது சாரிகள் எந்த ஆட்சிக் கலைப்புக்கும் ஒப்புக் கொள்ளமாட்டார்கள். மிகவும் கனிந்துள்ள நிலையில் பர்னாலாவே கூட இது போன்ற தடாலடியில் இறங்க மாட்டார் என்று சொல்கிறார்கள். 1991ல் தி.மு.க. ஆட்சியைக் கலைக்கவே அறிக்கை கொடுக்காதவர் அவர். எனவே ஆட்சிக் கலைப்பு பயம் அவசிய மற்றது. 'சட்டமன்ற முடக்கம்' என்ற வாய்ப்பிருக்கிறது. ஆனால், இதுபோன்ற முயற்சிகள் அரை வேக்காட்டுத்தனமாகவே முடியும். மேலும் அரசியலில் இதுபோன்ற செயல்கள் ஜெ.வுக்கு வலிமையைத் தான் சேர்க்கும்.

ஆகவே, ஆளுனர் மாற்றம்தான் அதிரடியே தவிர, தொடர்ந்து அதிரடிகள் நடைபெறாது என்று கருதவே இடமிருக்கிறது.

• பாத்திமா பீவி



• ராம் மோகன் ராவ்



ஆட்டுத்தாடி அல்ல!

ஆளுனர் நியமனம், அதிகாரம், செயல்பாடு ஆகியவை பற்றி அரசியல் சட்டம் என்ன சொல்கிறது?



இங்கே விளக்குகிறார் மூத்த வழக்கறிஞர் கே.எம்.விஜயன்.

"ஆளுனர் என்பவர் அரசியலமைப்புச் சட்டத்தின் 155வது பிரிவின்படி, குடியரசுத் தலைவரால், அவரது நம்பிக்கைக்குப் பாத்திரமாக இருக்கும் வரை நியமிக்கப்படுகிறார். ஆளுனரின் பதவிக்காலம் ஐந்தாண்டுகள் என்றாலும், அவர் முழுப் பதவிக் காலமும் நீடித்திருக்க வேண்டும் என்பது வரையறுக்கப்பட்ட ஒன்றல்ல. குடியரசுத் தலைவரின் நம்பிக்கையை இழப்பாரேயானால், பதவியை விட்டு விலக வேண்டியதுதான். இல்லையென்றால் 'விடுவிக்கப்பட்டு விடுவார்'. குடியரசுத் தலைவரின் "நம்பிக்கை" என்பது, மத்தியில் ஆளும் கட்சி / கூட்டணியின் விருப்பமாகப் போய் விடுகிறது. எனவே அரசியலில் கவர்னர் பதவி என்பது, ஆட்டுத்தாடி அல்ல. மனித தாடிதான். வேண்டாமென்றால் எடுத்து விடலாம்.

ஆளுனர் பதவிக்குத் தகுதிகள் என்னவென்று பார்க்கலாம். ஒருவர் நாடாளுமன்றத்திலோ, சட்டமன்றத்திலோ உறுப்பினராக இருக்கக் கூடாது. மேலும் ஆதாயம் உள்ள வேலை அல்லது தொழில் செய்யக் கூடாது. (மத்தியில் ஆளும் கட்சி / அல்லது ஆளும் கூட்டணியின் ஆதரவாளராக இருக்க வேண்டும் என்பது எழுதப்படாத விதி!)

நமது அரசியல் சட்டம் மாநில அரசைவிட, மத்திய அரசுக்கு அதிக அதிகாரங்களை வழங்கியிருக்கிறது. மத்திய - மாநில அரசுகளிடையே நிர்வாக ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் மோதல்கள் ஏற்படும்போது, நமது ஆளுனர்களின் நிலை பரிதாபமாகப் போய்விடுகிறது. அந்தச் சமயத்தில் மாநிலத்துக்கு அதிக அதிகாரம், சுயாட்சி, போன்றவை சர்க்காரியா கமிஷனால் பரிந்துரைக்கப்பட்டாலும், அவை சட்டமாக்கப்படவில்லை.

அரசியல் சட்டத்தில் ஆளுனருடைய அதிகாரங்கள் 154, 160, 161 மற்றும் 162ம் பிரிவுகளில் சொல்லப்பட்டிருக்கின்றன. மத்திய-மாநில உறவுகளைப் பற்றி ஆராய்ந்த நீதிபதி சர்க்காரியா, ஆளுனர் பதவி தொடர்பாக பல கருத்துகளைச் சொல்லியிருக்கிறார்:

''மத்தியிலுள்ள ஆளும் கட்சியைச் சேர்ந்தவர், மாற்றுக் கட்சியைச் சேர்ந்தவர்கள் ஆளும் மாநிலங்களுக்கு அந்த முதல்வரைக் கலந்தாலோசித்து (தகவல் சொன்னால் போதாது) ஆளுனரை நியமிக்க வேண்டும். இதற்காக 155வது பிரிவைத் திருத்த வேண்டும். ஆளுனர் பதவியில் நியமிக்கப்படுபவர்கள், ஐந்து ஆண்டுகள் முழுப் பொறுப்பு வகிக்க அனுமதிக்க வேண்டும்'' என்பது முக்கியமான பரிந்துரை.

இந்தப் பரிந்துரைகள் சட்டமாக இன்னும் நிறைவேற்றப்படவில்லை. அரசியல் சூழலுக்கு ஏற்ப செயல்பட நினைக்கும் மத்திய ஆளும் கட்சிகள், தாங்கள் நினைத்தபடி செயல்படத் தடைபோடும் இந்த சிபாரிசுகளை அமல்படுத்தாததில் ஆச்சர்யமில்லை.

ஆளுனர் நீக்கம் - மாற்றம் ஆகியவை, நீதிமன்றப் பரிசீலனைக்கு உட்பட்டவை அல்ல. ஆளுனர் மாற்றத்துக்கான காரணத்தை குடியரசுத் தலைவர் நீதிமன்றத்தில் சொல்லத் தேவையில்லை!

சில குறிப்பிட்ட பிரிவுகளின் படி மத்திய அரசின் - அதாவது குடியரசுத் தலைவரின் கண்காணிப்பாளராகவும் ஆளுனர் செயல்படுகிறார். இது தவிர, மாநில அரசின் பல முக்கியமான செயல்பாடுகளை மத்திய அரசுக்கு அவ்வப்போது தெரிவிப்பதும் ஆளுனரின் பணியாகும்.

சட்டமன்றம் முடக்கப் படும்போது, ஆளுனர், மாநிலத்தின் நிர்வாகியாக மாறுகிறார். அப்படிப்பட்ட மாநில நிர்வாகத்தில் ஆதிக்கம் செலுத்தும் வாய்ப்பு அவருக்கு இருப்பதையும் மறுப்பதற்கில்லை.

- ப்ரியன்

படம் : ராஜன்



''அந்த டாக்டர் ரத்தினச் சுருக்கமாத்தான் பேசுவார்.''

''இருக்கலாம். ஆனா அதுக்காக, நான் 'பெட்'ல படுத்து எனக்கு 'பைல்ஸ் பிராப்ளம்'னு சொன்னவுடன், P.T.ன்னு சொல்லணுமா?''

- ஆர். மாலதி



ஸ்ரீ குபேரலக்ஷ்மி பூஜா மந்திரங்கள்

(ஸம்ஸ்கிருதத்தில்)

அஷ்ட ஐஸ்வர்யத்தையும் அள்ளிக் கொடுப்பவள் ஸ்ரீ லக்ஷ்மி என்பது அனைவரும் அறிந்ததே. அதே போல், தனாதிபதியாக கருதப்படும் குபேரனிடம், ஸ்ரீனிவாஸப் பெருமாள் கடன் வாங்கி, இன்று வரை அதற்கு வட்டி கட்டிக் கொண்டிருப்பதாகச் சொல்லுவதும் அறிந்ததே. ஸ்ரீராமருடைய வம்சத்தின் முதல் மன்னனான ரகு, ஸ்ரீகுபேரனை பூஜை செய்து செல்வத்தை அடைந்தான் என்று இதிகாஸம் கூறுகிறது.

அப்படிப்பட்ட ஸ்ரீலக்ஷ்மி, மற்றும் குபேரனை பூஜை செய்வதற்கு உதவியாக, லக்ஷ்மி பூஜை செய்யவும், தீபாவளி பண்டிகையை முன்னிட்டு சூப்பர் ஆடியோ (சென்னை) பிரைவேட் லிமிடெட் ஸ்ரீ லக்ஷ்மி குபேர பூஜா மந்திரங்கள் ஒலித்தட்டை வெளியிடுகிறது.

இதில் **ஸ்ரீ லக்ஷ்மி காயத்ரி மற்றும் மந்திரம், பூர்வாங்க விக்னேஸ்வர பூஜை, கலச பூஜை, கண்ட பூஜை, பீட பூஜை, மாத்ருங்க பூஜை நவக்ரஹ தேவதைகள் பூஜை, லோகபால பூஜை, தனாகர்ஷண லக்ஷ்மி குபேர பூஜை ஆகியவை உள்ளன.**

பழைய ஸம்பிரதாய பத்ததியில் இசையமைப்பாளர், மாணிக்க விநாயகம் இசையில், பேராசிரியர் டாக்டர். ஆர். தியாகராஜன் குழுவினரால் இசைக்கப்பட்டுள்ளது.

அனைவருக்கும் ஆன்மீக பரவசம் அளிக்க சூப்பர் ஆடியோ (சென்னை) பிரைவேட் லிமிடெட் இந்த ஒலித்தட்டை வெளியிடுகிறது.

ரூ. 200/- மட்டுமே!

Geethanjali

SUPERAUDIO (MADRAS) Pvt. LTD.,
713, Anna Salai, Carex Centre, II Floor, Chennai - 600 006.
INDIA. ☎ 52140068
www.musicandchants.com supertape@yahoo.com.
CDWORLD-#505, Galle Road, Colombo-6 Ph : 2554481

For Trade Enquiry Contact : 52140067
For Audio Caseettes contact : Varshene Associates 24662244

மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



அப்பிபட்டி
அமரர் **R.K. ராமலிங்கம் பிள்ளை**
50, மாரியம்மன் கோவில் தெரு, கம்பம்

"நற்பண்புகளைப் போதித்து,
எம்மை நல்வழிப்படுத்தி
இறுதி வரை கண்ணியத்துடன் வாழ்ந்து
மறைந்த எம் தந்தைக்கு
கண்ணீர் அஞ்சலி"

-குடும்பத்தினர்

Board of Directors & Staff Members of

BLB Estates (P) Ltd.
Behind Apollo Speciality Hospital, Teynampet,
Chennai-18. Ph : 2435 7721 / 31 / 61 / 98400 44018
E-mail : blbestmail@vsnl.net www.blbestates.com

சத்தியப்பிரியன் 28

வலம்புரி முத்து

தாமரை கதிரேசனைப் பார்த்த வண்ணம் நின்றாள். அவளுடைய மனதில் இருந்த பிம்பத்தின் அடையாளததில் ஒன்றைக் கூடப் பெற்றிராமல் கறுத்து, மெலிந்து, கதிரேசன் என்ற பெயரை மட்டும் வைத்திருக்கும் அவனைப் பார்த்த வண்ணம் நின்றாள். குழந்தை தோளில் தூங்கிக் கொண்டிருந்தான். இருவரும் பார்வையைப் பிடித்தபடி நின்றிருந்தனர்.

"நீங்க இங்கயா கதிர் இருக்கீங்க?" என்றாள்.

"ஆமாம்" கதிரேசனின் குரல் இறுகிப் போயிருந்தது.

"நான் இந்த ஏரியாதான் கதிர். இந்தக் கடையும், நீங்களும் என் கண்ணிலிருந்து எப்படித் தப்பினீங்க?"

"பிள்ளைக்கு வயித்துப் போக்கு இருக்கா?" என மருந்துகளைத் தேடியபடி கதிரேசன் கேட்டான்.

"எப்படி இருக்கீங்க கதிர்? எனக்கு இன்னும் நம்பவே முடியலை நீங்க தானான்னு. சென்னைக்கு ஏன் வந்தீங்க? இது என்ன, பதினொரு மணி வரைக்கும் கடையைத் தொறந்து வெச்சுக்கிட்டு? ஏதாவது சொல்லுங்க கதிரேசன்"

மருந்துகளை அவள் கையில் கொடுத்தபடி "திருஞானம் சௌக்யமா?" என்றான்.

"ரெண்டு வருஷமா என்ன நடக்குதுன்னு தெரியுமா?" என்றாள் தாமரை.

"கடைய அடைச்சிட்டு மேன்ஷனுக்குக் கிளம் போணும் தாமரை. பனிரெண்டு மணிக்குக் கதவைத் தட்டினா வாச்சுமேன் எரிஞ்சு விழுவான். நீ திருஞானத்தின் மனைவி தாமரை."

"இல்லை. திருஞானத்தின் விதவை" என்றாள்.

"என்ன சொல்லுற?"

"உனக்கு மேன்ஷனுக்குப் போகணும் என்னும் நிர்பந்தம் இல்லைன்னா, என்கூட என் வீட்டுக்கு வாங்க" என்றாள்.

கதிரேசன் கடையைப் பூட்டிவிட்டு, அருகில் நீள சந்து ஒன்றில் நுழைந்து வெளியில் வந்தான்.

"ஓனர் கிட்ட சாவி கொடுத்துட்டு வந்தேன்"

ஆட்டோவில் இருவரும் அவளுடைய குடியிருப்புக்குச் சென்றனர். "வாங்க வாங்க" என உற்சாகமாக உள்ளே அழைத்துக் கொண்டு போனாள். பக்கத்துக் குடியிருப்புப் பெண், வலுவில் வந்து மதுராவின் நலம் விசாரித்தாள். கதிரேசனை ஒரு



முறை ஏற, இறங்கப் பார்த்துவிட்டுப் போனாள்.

"புள்ள நல்லா இருக்குன்னா விசாரிக்க வந்திருப்பான்னு நினைக்கிறே? இவன் யாருடா இதுவரையில் பார்ககாத புது ஆம்பிளன்னு பார்த்திருப்பா."

"தப்பு கிடையாது தாமரை. சமூகத்துக்குன்னு ஒரு அக்கறை இருக்கே"

"பொல்லாத அக்கறை. பந்தத்துக்குட் பட்டது எல்லாம் ஒழுக்கமா இருக்குன்னு சொல்லவும் முடியாது. பந்தமில்லாம இருக்கிறதெல்லாம் கெட்டு அலையுதுன்னும் சொல்ல முடியாது."

கதிரேசன் பதில் சொல்லாமல் சிரித்தான்.

மதுராவை எழுப்பி தாமரை மருந்து கொடுத்தாள். இந்த முறை பிள்ளை வாந்தி எடுக்கவில்லை.

தாமரை ஒரு தட்டு நிறைய சுருள் சேமியா உப்புமா கொண்டு வந்து கொடுத்தாள். பசி காதை அடைத்துக் கொண்டிருந்த அவனுக்கு, அந்த உப்புமா தேவாமிருதமாக இருந்தது.



"எப்படி ஆனது தாமரை?" என்றான்.

"ஓர் இரவு முழுவதும் விழித்திருக்க உன்னால் முடியுமா?" என்றாள் தாமரை.

"தூக்கம் என்பது உடல் தொடர்புடையது இல்லை என நினைக்கிறேன். உனக்குச் சொல்ல சலிக்காதுன்னா எனக்குக் கேட்கச் சலிக்காது"

தாமரை தனக்கு நேர்ந்தவற்றைக் கூறினாள்.

"கதையில் வர்றாப்பில இருக்கே தாமரை?"

"நெஜத்தில நடக்கும் நிறைய விஷயங்களைப் பார்த்தா கதையெல்லாம் ஒண்ணுமே இல்லைன்னு தோணும்" என தன் நெற்றியில் விழுந்த கூந்தலை ஒதுக்கி விட்டபடியே பேசினான்.

"நீ திருஞானத்தை விட்டுட்டு வந்திருக்கலாமே தாமரை? ஒரு கணவன் போதை மருந்து உட்கொள்பவனா இருந்தா, அதுவே மணவிலக்குக்குப் போதுமான காரணமாயிடுமே"

"என் கல்யாணம் நெஜமாவே கலியாணம்னு நெனைக்கறியா? அது ஒரு வியாபார ஒப்பந்தம். உன் தங்கச்சியை எனக்குக் கட்டிக் கொடுத்தா, நான் உனக்கு பல மல்டிநேஷனல் கம்பெனிகளின் ஏஜன்ஸியைப் பெற்றுத்தரேன்னு என் புருஷனும், அருணாசலமும் போட்டுக்கிட்ட ஒப்பந்தம். நான் மணவிலக்கு மூலம் அதை மீறுவது, வியாபார தர்மம் இல்லை. காம்பன்சேஷன் கேட்டா காரு. வீட்டோட வாழும் எங்கண்ணன் என்ன ஆவான்?... நீங்க, வாங்கன்னு கூப்பிட்டுட்டு உன்னை நீ, வான்னு கூப்பிடுவதில் உனக்கு ஆட்சேபனை இல்லியே?" என்றான் அவனைப் பார்த்து.

"மதுராவைப் பார்த்து, இவ கதிரேசன் சாடையா இருக்கான்னு சொல்லிட்டுப் போன அன்னைக்குத்தான் சாலை விபத்தில் செத்துப் போனாரு. இப்ப நீயும், நானும் ஒரே கூரையின் கீழ் நடு ராத்திரி ஒரு மணிக்கு ஒக்காந்து பேசுவதைப் பார்த்தா எப்படி இருக்கும் அவருக்கு? ப்ச்! அதுக்குள்ளார செத்துப் போயிட்டாரே" என்றான்.

"உன்னைப் பார்க்காமலே இருந்திருக்கலாமே தாமரை! உன்னைப் பற்றி செய்தி எதுவும் என் காதில் விழாமல், நீ திருஞானத்தின் மனைவியாகவே இருந்திருக்கலாமே! ஆத்தி! இது என்ன

கொடுமை அப்பு'' என முகத்தில் அறைந்து கொண்டு அவன் அழுத பொழுது, மணி இரண்டைத் தாண்டி விட்டது.

தனக்காக அழுவதற்கு இன்னொரு ஜீவன் இருப்பதை அறிய நேரிட்ட பொழுது, புலன்களின் உணர்ச்சி வற்றிய நிலையிலும் அவள் உயிர்த்தெழுந்தாள்.

"ஒன் மடியில் படுத்துக்கலாமா கதிர்? என்ற அவளது கேள்விக்கு, அவன் தரையில் கால்களை நீட்டி அமர்ந்தான். அவள் தன்னைச் சுருட்டிக் கொண்டு அவன் மடியில் படுத்துக் கிடந்தாள்.

"எது கதிர் நம்மைச் சேரவிடாமல் தடுத்தது?" எனறாள் அவள் ஒரு சமயம்.

"என் குடிப்பிறப்புன்னு சொல்லலாம். தெய்வானை ஆச்சியின் பிழையான முடிவுன்னும் சொல்லலாம். இந்த பூமிக்கு சில நியதிகள் உண்டு. இந்த மண்ணுக்குச் சில நியதிகள் உண்டு. அது மாதிரி, குடிப் பிறப்பு கவனமாய்க் காப்பாற்றப்பட்டு வருகிறது.

"நான் இல்லாத நேரங்களில் என்ன பண்ணிக்கிட்டிருந்த?'' என்றாள் ஒரு சமயம்.

"நாணயமானவர்கள் குறைவான ஊரு இது. அடுத்தவனுக்கு எப்படிடா குழி பறிக்கிறது என்னும் சிந்தனையுடனே மக்கள் அலைகிறார்கள். பட்டாணா திசயம்னு நெனச்சுக்கிட்டேன். பழைய நண்பர் மூலமா இந்த மருந்துக் கடை வேலை கிடைச்சது. நான் கல்லாவில் உட்கார்ந்துகினு கடைப்பசங்களை விரட்டினதுக்கும், நானே இங்கே விரட்டப்பட்டதுக்கும் பேதம் புரிஞ்சது. என்ன செய்ய முடியும்? அந்தக் கடைப் பையன்கள் பற்றி வேறுவிதமா சிந்திச் சிருக்கோணும்னு இப்ப தோணுது. ஒரு வேளை அப்படி யோசிச்சிருந்தா, அந்தப் பய என் மேல பொய்சாட்சி கூட சொல்லி இருக்க மாட்டான்."

"உனக்கு ஊருக்கு போகோணும்னு தோணலையா?" என்றாள் ஒரு சமயம்.

''இண்டல்தானஞ்ச?'' என அவள் தலையில் குட்டினாள்.

''மெட்ராஸ் புடிக்கலை; இதன் ஜனக்கூட்டம் பிடிக்கலை; இவங்க வேகம் புடிக்கலை; செத்துப் போகவும் புடிக் கலை. நாலு நாளில் பழகிப்போயிடுச்சு. பழக்கம்தான் வாழ்க்கைன்னு ஆனது. ஆனா இந்தப் பழக்கம் என்பது எனக்கு ஒரு மாதிரியும், உனக்கு ஒரு மாதிரியும் இருக்கக் கூடாது இல்லியா? இதுல எங்கிட்டு சொந்த ஊருக்குப் போறது? சொந்த ஊரே அன்னிய ஊரானதுக்குப் பின்பு"

காலையில் பால்காரர் பால் கொண்டு வந்தபொழுது கூட கதிரேசன் தூங்காமல் சுவரில் சாய்ந்து கிடந்தான். அவன் மடியில் தாமரை மயங்கிக் கிடந்தாள். அவளை அசைக்காமல் கீழே கிடத்தி விட்டு, ஒரு ஏனத்தில் பால் வாங்கி வந்தான். பாலை அடுப்பின் மேடை மேல் வைத்து விட்டு வருவதற்குள் அவள் எழுந்து கொண்டு விட்டாள். மதுரா நோய் உபாதை இன்றி நிம்மதியாகத் தூங்கிக் கொண்டிருந்தாள். வெளி வீட்டு வாசலைப் பெருக்கி எந்திரத்தனமாய் ஒரு கோலம் போட்டபொழுது, பக்கத்து

''ஊழியர்கள்கிட்ட ரொம்பக் கரிசனமா நடந்துக்கறாங்களா! எப்படி?"

''டேப் ரிகார்டர்ல தாலாட்டுப் பாட்டு போடுறாங்களே...!"

- ஜே. தனலக்ஷ்மி







திருட்டு வி.சி.டி. இனி இல்லை!

பட ரிலீஸ் அன்று ''பொட்டி வந்தாச்சு... பொட்டி வந்தாச்சு...' என்ற குரல் இனி தியேட்டரில் ஒலிக்காது. டிஜிட்டல் சினிமா வந்துவிட்டது. கைக் கடக்கமாக இருக்கும் இந்த 'டிஜிட்டல் சினிமா ப்ராஜக்ட்' மூலம், படத்தைத் திரையிடுவதில் முக்கியமான பயன் - திருட்டு வி.சி.டி. எடுக்க முடியாதாம்.

பொதுவாக திரைப்படத்தின் ஒரு பிரிண்டுக்கு அறுபதாயிரம் ரூபாய் வரை செலவு ஆகும். டிஜிட்டல் சினிமாவில் வெறும் இருபத்தைந்தாயிரம் தான். திரையில் படமும் தெளிவாகத் தெரியும். ஆனால் இந்த டிஜிட்டல் சினிமா ப்ராஜக்டை ஸ்கிரீனில் இயக்குவதற்கான கருவியை தியேட்டரில் பொருத்த, பதினெட்டு லட்ச ரூபாய் ஆகுமாம்.

டிஜிட்டல் சினிமாத் தயாரிப்பு நிறுவனமான 'கலசா'வே அந்த வசதியைச் செய்து தருகிறது. பிறகு தியேட்டர்காரர்களிடமிருந்து தவணை முறையில் பணத்தை வசூலிக்க திட்டமிட்டிருக்கிறார்களாம்.

எப்படியோ திருட்டு வி.சி.டி. ஒழிந்து, சினிமா தழைத்தால் மகிழ்ச்சி. அதோடு தரமான படங்களும் வந்தால் கூடுதல் மகிழ்ச்சி அடைவார்கள் ரசிகர்கள்.

- குயில்

வீட்டுப் பெண்மணி அவசரமாய்க் கதவு திறந்து ''ஒங்க அண்ணன் வந்திருக்காரா ஊரிலிருந்து?'' என்றாள்.

''நேராக் கேளுங்கோளேன், வந்திருக்கறது யாருன்னு? என் கல்யாணத்துக்கு முன்னால் என்னைக் காதலிச்ச என் காதலன். போதுமா?'' என தாமரை சொன்னாள்.

''என்ன கன்றாவியோ'' என அந்த மாது கதவை மூடிக் கொண்டு போய்விட்டாள்.

''பழைய காதலன்னு சொன்னதுக்குப் பதில் கள்ளக் காதலன்னு சொல்லி இருந்தா, இன்னம் சந்தோசப்பட்டிருப்பாக. நம் இருவர் இடையில் நிகழாத ஒன்று அந்தம்மாளின் கற்பனையில நடந்துக்கிட்டிருக்கும்''

அவன் அவள் போட்டுக் கொடுத்த காபியை வாங்கிக் கொண்டான்.

''நீ மாறவே இல்லை கதிர்'' என்றாள்.

''மாறாமல் இருந்தா மக்கிப் போயிருவோம் தாமரை'' என்றான்.

அவன் போவதையே பார்த்துக் கொண்டிருந்துவிட்டு அவசரமாய்க் குளித்து, அவசரமாய்ச் சமைத்து, மதுராவைக் காப்பகத்தில் விட்டுவிட்டு அலுவலகம் போனதும் நிர்மலா கேட்டாள்.


''தாமரை! நீ இன்னிக்குப் புத்துணர்ச்சியோட இருக்க. என்ன காரணம்?'' என்றாள்.

''நேற்றைய இரவு முழுவதும் நான் தூங்கவில்லை அதான்'' என்று தாமரை சத்தம் போட்டுக்கூவினாள்.

(தொடரும்)



வந்து விட்டது !
உஜாலா
வாஷிங் பவுடர்
JYOTHY LABORATORIES LTD
UJALA
WASHING POWDER
BRIGHTEST BRIGHT.
WHITEST WHITE
JYOTHY LABORATORIES LTD
Rs 18/-
500 கிராம்
உங்கள் துணிகளைப்
பிரகாசிக்கச் செய்வதோடு அவற்றின்
வண்ணங்களையும் பாதுகாக்கிறது
இப்பொழுது தமிழகம் முழுவதும் கிடைக்கிறது



▲ ''சிங்கராஜாவே! உங்கள் நுரையீரல் ரொம்ப பாதிச்சிருக்கு! இனிமே சிகரெட் பிடிக்கறவங்களை சாப்பிடாதீங்க!''

''டாக்டர்! போனவாரமே உங்களை வந்து பார்க்கணும்னு நெனைச்சேன்! திடீர்னு உடம்பு சரியில்லாம போச்சு.'' ▼





▲ ''உணவுக்கட்டுப்பாடு அவசியம்னு சொன்னது வாஸ்தவம்தான்! அதற்காக இப்படியா?''

''ரொம்ப கஷ்டப்பட்டு உங்க கணவரோட காலை மட்டும் காப்பாத்திட்டோம்!'' ▼




சிரிப்ப வலை



''பச்சை காய்கறி, பழங்களை நிறைய சாப்பிடலாம். தப்பில்லை. ஆனா விதைகளை நல்லா கடிச்சு முழுங்கி இருக்கலாமே!''

''இருபத்திநாலு மணி நேரமும் ஆபீசே கதின்னு இருப்பீங்களா? இதயத்துக்கு லப்புக்கு பதிலா ஃபேக்ஸ் மிஷின் சத்தம் கேட்குதே!''





''டாக்டர்! பேஷண்டுக்கு கொடுத்த மயக்க மருந்து பத்தலை போல இருக்கு!''



''ஆஸ்பத்திரியில இட நெருக்கடியாம்! படுக்கை இல்லையாம்!''

பாயுதே!

www.4allfree.com-லிருந்து
மௌஸ்லி

மகுட வைரம்

16. விஷ்ணு சித்தர் விசாரணை

விஷ்வக்ஸேனன்

பளீரென்ற மின்னல் தாழை மடலையும், நிலவின் குளிர்ந்த கிரணங்கள் அல்லிமலரையும் மலர வைத்து விடுவது போல, அரண்மனையையும், அரசியலையும் தவிர வேறொன்றையும் அறியாதிருந்த இளவரசியின் மனமும் மலர்ந்து கிடந்தது. அதுவரை மூடிக்கிடந்த பகுதியொன்று திறந்து நிலவொளியும், தென்றலும் புதிய இசையொன்றை இசைக்கத் தொடங்கியிருந்தது. கற்பனைகளும், கனவுகளும் நிறைந்து, ஏதேதோ மாற்றங்களை ஏற்படுத்திக் கொண்டிருந்தன.

மன்னனும் படைத்தலைவர்களும் திரும்பிய பின் நடந்தவற்றைக் கேட்டவள் மனதில் ராஜசிம்மனைக் குறித்து வருத்தமும், வியப்பும் ஒன்றாகத் தோன்றின. அடுத்து பராந்தகன் ஏற்றுச் சென்றிருக்கும் அபாயப்பணியை அறிந்தது முதல், அவள் மனம் அதிகமாக அவனைக் குறித்து நினைக்கத் தொடங்கி, தன்னிடம் ஏற்பட்டிருந்த மாற்றங்களை ரசிக்கத் தொடங்கியது. இரண்டே வீரர்கள் சென்று ராகுலனையும், அவன் வீரர்களையும் அழிப்பதென்பது இயலுமா? கொங்குச் சிற்றரசன் வேறு இதில் ராகுலனுக்கு உதவியாக இருக்கிறான். 'எந்த அபாயம் எங்கு காத்துக் கிடக்கிறதோ' என எண்ணியவளது தவிப்பு இன்னும் உயர்ந்தது.

உப்பரிகைச் சாளரத்தினருகே நின்று ராஜ வீதியை வெறித்துக் கொண்டிருந்தவளது புலன்கள் செயலிழந்து கிடந்தன. வீதியில் சஞ்சரித்த மக்களும், வணிகரும், ரதங்களும், புரவிகளும் எழுப்பிய ஒலிகள் அவளது செவிகளை எட்டவோ, காட்சிகள் பார்வையில் படவோ இல்லை. வானில் உயரத் தொடங்கிய நிலவும் அவள் கவனத்தைக் கவரவில்லை. தன்னிடம் ஏற்பட்டுக் கொண்டிருக்கும் மாற்றங்களுக்குக் காரணம் அந்த வீரனின் நினைவும், தன் மனம் அவனிடம் லயிப்பதும்தான் என்பதை உணர்ந்தாள் இளவரசி. நாணமும், தாபமும், இன்பமும் கலந்த உணர்வுகள் சித்தத்தை நிறைத்து விட்டதால், பின்னாலிருந்து அழைத்துச் சலித்து, திரும்பச் சென்றுவிட்ட பணிப் பெண்ணின் குரலோ, சற்றுக் கழித்து வந்து அழைத்த கார்குழலியின் குரலோ, அவள் செவிகளை எட்டவில்லை.

நெருங்கி வந்து இளவரசியின் தோளைத் தொட்ட கார்குழலி, "இளவரசியார் எந்தக் கோட்டையைப் பிடிக்க இத்தனை சிந்தனையிலிருக்கிறார்?" என்றாள்.

சட்டென்று திரும்பினாள் குமுதவல்லி.

அவள் எதிரே பெயருக்கேற்றபடி கறுத்துச் சுருண்ட கார் குழலில் அல்லி மலர்களைச் சூடி, அந்த அல்லியைவிட மலர்ந்து நோக்கிய விழிகளுடன் நின்ற கார்குழலியை ஒருமுறை ஏற இறங்க நோக்கினாள் குமுதவல்லி.

மதுரை அரண்மனை வாசம் அவள் தேகத்தில் ஊட்டியிருந்த செழுமை, சிவந்து கிடந்த கன்னங்களில் பூரித்திருந்தது. சோழநாட்டு விஷமம் விழிகளில் மீண்டும் குடியேறிக் கிடந்தது. அவளது அகன்ற நெற்றியும், நீண்ட நாசியும் பராந்தகனை நினைவுபடுத்தின. தான் அரண்மனைச் சித்திர மண்டபத்தில் பார்த்து தந்தையிடம் உறுதி செய்து கொண்டதை

நினைத்துக் கொண்டாள் குமுதவல்லி.

"என்ன இளவரசி, அப்படிப் பார்க்கிறீர்கள்?'' கார் குழலியின் குரலில் ஆவல் தெரிந்தது.

''கார்குழலி, எனக்கொரு உதவி செய்வாயா?"

"என்ன கேள்வியிது இளவரசி? உத்தரவிடுங்கள்."

"இந்த இளவரசிப் பட்டத்தை இதோ இந்தச் சாளரத்தின் வழியே விசியெறிந்து விட்டு, என்னைப் பெயரிட்டே அழைத்தால் போதும்."

கார்குழலி சற்றுத் திகைத்தாள்.

''இளவரசி, நான் பணிப்பெண்... எப்படி...?"

''உன் மனதைத் தொட்டுச் சொல். பணிப்பெண்ணாகவா நான் உன்னை நினைத்துப் பழகுகிறேன்? என்னை இனி பெயரிட்டுத்தான் அழைக்க வேண்டும். இது என் உத்தரவு என்று வேண்டுமானாலும் வைத்துக் கொள்."



''இருந்தாலும் இளவரசி... இல்லையில்லை... குமுதவல்லி... நீங்கள் மன்னரின் ஒரே மகள். நான் ஏழை விவசாயக் குடும்பத்தின்...''

"நிறுத்து", குமுதவல்லியின் குரல் வெட்டியது. "சோழ நாட்டவர்களுக்கு பொய் கூறுவதும், களவு செய்வதும் இயற்கையாகவே வரும்போலிருக்கிறது. காட்டும் மரியாதையும் அன்பும் கூடப் பொய்தான் போலிருக்கிறது'' படபடவென்றாள் குமுதவல்லி.

கார்குழலி திக்பிரமை பிடித்து நின்றாள். 'தன் செவிகளில் விழுந்தவை இளவரசி கூறியதுதானா' என்ற திகைப்பு அவளை அதிர்ச்சியில் உறைய வைத்தது.

மலர்ந்து கிடந்த விழிகளில் கொற்கையின் முத்துக்களைவிடப் பளீரிடும் இரு முத்துக்கள் தோன்றி மின்னின.

"இளவரசி, நான் பொய் கூறினேனா? களவு செய்தேனா?'' என்றாள் கார்குழலி பலவீனமான தொனியில்.

''ஆம். நீ கூறியது பொய். உன் தமையன் செய்தது களவு."

கார்குழலியின் விழிகளில் மின்னிய முத்துக்கள்

உருண்டு கீழே விழுந்தன. தொடர்ந்து அவள் முகத்தில் ஒரு கம்பீரமும் சினமும் படர்ந்தன.

''இளவரசி, எந்த அவசியத்தை முன்னிட்டும் கூட நான் இதுவரை பொய் கூறியதில்லை. கூறவும் மாட்டேன். உண்மையையும், உழைப்பையுமே கற்றுத் தந்தார் என் தந்தை. பொய்களையும், களவையும் காஞ்சி அரண்மனையில் தான் கண்டேன். இந்த அரண்மனையும் உண்மையை நம்ப மறுப்பவர் இட மென்று அறிந்து கொண்டேன். என்னைத் திரும்பவும் வண்டாழஞ்சேரிக்கு இப்போதே அனுப்பி வையுங்கள். எங்கள் ஊர் மக்கள் சொந்த மகளாகவே என்னைக் காப்பாற்றுவார்கள். என் தமையன் திரும்பியதும் அவரையும் அனுப்பி வைத்து விடுங்கள்''- பொரிந்து தள்ளிய கார்குழலி, திரும்பி வாயிலை நோக்கி நடந்தாள்.

"நில் கார்குழலி, நில்."

திரும்பினாள் கார்குழலி.

''வண்டாழஞ்சேரிதானே உனது ஊர்?''

"ஆம். இப்போதே அனுப்பி வைத்து விடுங்கள்."

"உன் தந்தையின் பெயர்?"

"கருணாகரர்."

"சரி, உங்கள் இல்லத்தில் வெகுகால மாக நீண்ட பேழையொன்றில் பெரும் வாளொன்று இருந்ததுண்டா?"

கார்குழலியின் முகத்தில் வியப்பு படர்ந்தது. "ஆம். இருந்தது. ஆனால்... அது உங்களுக்கு எப்படித் தெரிந்தது? அதைத்தான் என் தமையன் இப்போது பயன்படுத்துகிறார். அதைப்பற்றி என்ன?"

''அந்த வாளைப்பற்றி உன் தந்தை ஏதும் கூறியிருக்கிறாரா?''

"கூறியிருக்கிறார். என் பாட்டனாரின் அன்னை, யாரோ ஒரு பெரும் வீரரின் வாளுக்கு மாலையிட்டு மணந்து கொண்டதாகவும், அந்த வீரரின் வாள் அது என்றும் கூறியிருக்கிறார்."

"அப்படிச் சொல்லடி பெண்ணே, அப்படிச் சொல். என் சந்தேகம் உண்மை யாயிற்று. உன் பாட்டனாரின் அன்னை யாருடைய வாளுக்கு மாலையிட்டார் என்பது தெரியுமா உனக்கு?"

''தெரியாது.''

''நான் சொல்கிறேன் கேள். பல்லவச் சக்கரவர்த்தி மகேந்திர வர்மர் குடந்தையில் ஆராவமுதர் ஆலயத்தைக் கட்டும்போது, போர் ஏற்பட்டு பணிகள் பாதியில் நின்றன. அதைப் பிற்பாடு பூர்த்தி செய்தவர் அவர் மகன் நரசிம்ம பல்லவர். மாமல்லரின் வீரத்தில் மயங்கிய சோழ நாட்டுப் பெண்ணொருத்தி, அவர் வாளுக்கு மாலையிட்டாள். அவரும் ஏற்றுக் கொண்டு குடந்தையிலேயே அவளுடன் வெகுகாலம் வாழ்ந்தார். தம் வாளுக்கு மாலையிட்ட மங்கையை ஆலயத்து மணிமண்டபத்தில்

அமெரிக்க ஆவிகள்!

ஏதோ நம் நாட்டில்தான் ஆவி, பில்லி சூனியம் என்றெல்லாம் பயப்படுகிறோம் என்று நினைக்க வேண்டாம். முன்னேறிய நாடான அமெரிக்காவிலும் இதே நிலைதான். அங்கு அக்டோபர் 31ம் தேதி, 'ஆவிகள் தினமாக' கொண்டாடப்படுகிறது. இதனை 'ஹலோவீன் (Halloween) தினம் என்று குறிப்பிடுகிறார்கள்.



அன்று - பல வீடுகளின் படிக்கட்டுகளிலும், நம்ம ஊர் திருஷ்டி பறங்கிக்காய் போலவே வைத்திருப்பார்கள்.

வாசலில் பயமுறுத்தும் கறுப்புப்பூனை, கறுப்பு வௌவால் உருவங்கள், எலும்புக் கூடுகள், வெள்ளை நிறப் பேய், கறுப்பு நிறப் பேய் போன்ற உருவங்கள், எட்டுக் கால்பூச்சி, பாழடைந்த பங்களாவில் காணப்படும் பெரிய சிலந்தி வலைகள் எல்லாம் கூட வைத்திருப்பார்கள்.

- நேரில் கண்டவர்

கமலநாதன்

"சிற்பமாகவும் வடித்தார். இன்னும் அந்தச் சிற்பம் அங்கேதானிருக்கிறது. போய்ப் பார்."

மாமல்லர் வடிக்காத மற்றொரு சிற்பமாகவே நின்றிருந்தாள் கார்குழலி.

"அந்த வம்சத்தில் வந்தவளடி பெண்ணே நீ. சோழ நாட்டு ரத்தத்துடன் பல்லவ ராஜவம்சத்துக் குருதியும் கலந்துதான் உன் உடலில் ஓடுகிறது. இப்போது சொல். நீ ஏழை விவசாயக் குடும்பத்துப் பெண்ணா? நீ கூறியது பொய்தானே?"

பிரமிப்பில் உறைந்து விட்ட கார்குழலியின் குரல், சற்றுக் கழித்து பலவீனமாக ஒலித்தது. "என் தமையன் எதைக் களவு செய்தார்?... உக்ரோதயத்தையா?"

"இல்லை. அது சோழர் மணி மகுடத்தை அலங்கரித்தது. அதை மீட்டு வந்தது களவல்ல."

"வேறு எதைக் களவாடினார் என் தமையன்?"

"இந்தக் களவு பாண்டிய நாட்டில் நடந்தது. எனக்குச் சொந்தமாயிருந்ததைக் களவாடிவிட்டார் உன் தமையன். அது மட்டுமல்ல."

"வேறென்ன?"

"களவாடியதைத் தன்னுடன் கடத்திச் செல்ல, என் தந்தையும் தம் பட்டத்துப் புரவியைக் கொடுத்து உதவியிருக்கிறார். அறியாமலேயே, ஏமாற்றப்பட்டுச் செய்திருந்தாலும் இருவருமே குற்றவாளிகள்தாம்."

"பாண்டிய மன்னருமா?"

"ஆம். மன்னரானாலும் களவாடியவர் தப்பிக்க உதவுவது குற்றம்தானே?"

"விளங்கவில்லை. என் தமையன் எதைக் களவாடிச் சென்றார்?" - கார்குழலியின் குரல் உயர்ந்து ஒலித்தது.

குமுதவல்லியின் முகம் சிவந்து குமுதமானது. விழிகள் தாழ்ந்து தரையை நோக்கின. பின் மெல்ல கடைக்கண்ணால் கார்குழலியை நோக்கியவள், "என் இதயத்தை" என்றாள் மிக மெதுவாக, தெளிவாக.

மீண்டும் திகைப்பில் உறைந்தாள் கார்குழலி.

"யார் எதைக் களவாடினார்கள்? யார் உதவி செய்தார்கள்?"- கேட்டபடியே உள்ளே நுழைந்தான் பாண்டிய வரகுணன்.

கார்குழலி முறையிட்டாள். "மன்னவா, என் தமையன் பராந்தகன் இளவரசிக்குச் சொந்தமாயிருந்ததைக் களவாடி விட்டானாம்."

"ஓகோ, என்ன துணிச்சல் அவனுக்கு. விசாரணை நடத்த வேண்டியதுதான்."


"அதுமட்டுமல்ல மன்னவா, அவன் தப்பிச் செல்ல தாங்கள் பட்டத்துப் புரவியைக் கொடுத்து உதவியிருக்கிறீர்களாம்."

"ஆகா, அப்போது நானும் குற்றவாளிதானா?"

"அறிந்து செய்தாலும், அறியாமல் செய்தாலும் குற்றம் குற்றம்தானே மன்னவா?"

"ஆம். உண்மைதான். எனில் நானும் குற்றவாளிதான்?"

வாலியின் 'பஞ்ச்'!



திரைப்படப் பாடலாசிரியர் வாலி, ஒரு சமயம் நண்பர் ஒருவருடன் பேசிக்கொண்டிருந்தார். அப்போது "வாலி என்று பெயர் வைத்துக் கொண்டது ஏன்?" என்று நண்பர் கேட்டார்.

அதற்கு வாலி, "ராமாயணத்தில் வரும் வாலி, எதிராளியின் பலத்தில் பாதியைப் பெற்று விடுபவன். அதேபோல் நான் பார்ப்பவர்களின் அறிவில் பாதியைப் பெறவே இந்தப் பெயரை வைத்துக் கொண்டேன்" என்றார்.

வாலியை மட்டம் தட்ட எண்ணிய நண்பர், "உங்களைப் பார்த்தால் அப்படி அறிவைப் பெற்றவர்போல் தெரியவில்லையே?" என்று கேலியாகக் கூறினார். அதற்கு வாலி, "நான் இன்னமும் எந்த அறிவாளியையும் சந்திக்கவே இல்லையே" என்று மடக்கினார். நண்பர் முகத்தில் ஈயாடவில்லை.

- செவல்குளம் 'ஆச்சா'

ஆதாரம்: 'சான்றோர் வாழ்வில் சிரிப்புச் சம்பவங்கள்" நூல்

"ஆம் மன்னவா, இளவரசி அப்படித் தான் கூறினார்."

"அப்படியானால் இதை யார் விசாரிப்பது? எதற்கும் களவு போனது என்னவென்று தெரிந்தால், நானும் என் புரவியும் தப்பிக்க வழியேதுமிருக்கிறதா என்று பார்க்கலாம். எப்படியும் பராந்தகன் சிக்கிக் கொண்டு விழிக்கப் போகிறான்"- மன்னன் முகத்தில் மகிழ்ச்சி தெரிந்தது.

"சொல்லுங்கள் இளவரசி" என்றாள் கார்குழலி.

குமுதவல்லியிடமிருந்து வார்த்தைகள் வெளிவர மறுத்தன. செக்கச் செவேலென்று ஜொலித்த முகம் நிமிர்ந்து தந்தையைப் பார்க்க மறுத்தது. கால் விரல்கள் தரையில் கிழித்த கோலங்கள் கூடின.

மன்னன் தெளிவாகப் புரிந்து கொண்டதால் "ஓகோ, அப்படியா சேதி?" என்றான்.

"ஆம் மன்னவா. இதை யார் விசாரிப்பது மன்னா? பாவம், என் தமையனுக்கு என்ன தண்டனை கிடைக்கும்? அவனைக் காப்பாற்ற வழியேதும் சொல்லுங்கள் மன்னவா" - கார்குழலியின் குரலில் கவலை ஒலித்தது.

"என்ன நடக்கிறது இங்கே? என்ன விசாரணை? யாரைக் காப்பாற்ற வேண்டும்?" - கேட்டபடியே உள்ளே நுழைந்தார் விஷ்ணுசித்தர்.

"வாருங்கள் விஷ்ணுசித்தரே, ஒரு குற்றம் நிகழ்ந்திருப்பது நிரூபணமாகிவிட்டது. ஆனால் யார் விசாரிப்பது என்பதுதான் புரியவில்லை" என்றான் மன்னன்.

"இதென்ன கேள்வி மன்னா? நீதான் விசாரித்து தீர்ப்புக் கூற வேண்டும்."

"அது முடியாது விஷ்ணுசித்தரே. ஏனெனில் இந்த வழக்கில் நானும் கூட ஒரு குற்றவாளி."

"ஆகா, இது ஏதோ சுவாரஸ்யமான அரண்மனை விவகாரமாகத் தெரிகிறது. சரி, நானே இதை விசாரிக்கிறேன்."

"வாய்ப்பே இல்லை விஷ்ணுசித்தரே, உம்மால் இதை விசாரிக்க முடியாது." திட்டவட்டமாக மறுத்தான் மன்னன்.

"ஏன் முடியாது?"

"தங்களால் இது முடியவே முடியாது."

"அதைத்தான் ஏன் என்கிறேன்?"

"தாங்கள் துறவி. இந்த விவகாரங்கள் தங்களுக்குப் புரியாது. தவிர..."

"இன்னும் என்ன?"


"இதில் நானும் பராந்தகனும் குற்றவாளிகள். எங்களை விசாரித்து விடலாம். மூன்றாவது குற்றவாளியை விசாரிக்க முடியாது."

"இதென்ன அக்கிரமம்! கேட்பார் யாருமில்லையா? மன்னனான உன்னையே விசாரிக்கலாமென்கிறாய். அப்படி விசாரிக்க முடியாத மூன்றாவது குற்றவாளி யார்?" - ஆவலுடன் கேட்டார் விஷ்ணுசித்தர்.

"என் பட்டத்துப் புரவி. அதை எப்படி விசாரிக்கப் போகிறீர் விஷ்ணுசித்தரே?"

விஷ்ணுசித்தர் திருதிருவென விழித்தார்.

(தொடரும்)



'அட்டகாச' ட்வின்ஸ்!

'அட்டகாசம்' படத்தில் சின்ன வயது அஜீத்தாக அட்டகாசம் செய்திருப்பவர்கள் ராம், லக்ஷ்மண் என்ற இரட்டையர்கள்.

இருவருமே கீழ்ப்பாக்கம் கார்டனில் உள்ள ருக்மணி வித்யாலயாவில் மூன்றாம் வகுப்பு படிக்கிறார்கள்.

"விஜயகாந்த் அங்கிள் (பிழைக்கத் தெரிந்த பசங்க!) நடிக்கும் 'நெறஞ்ச மனசு' அவரோட அக்கா பிள்ளைகளா நடிக்கிறோம்" என்கிற இவர்கள் படிப்பிலும் சுட்டியாம்!

"நடிக்கறதோட நல்லா படிச்சு கலெக்டரா ஆகணும் என்பதுதான் எங்க லட்சியம்!" என்கிறார்கள் கோரஸாக!

- பாலா



• ஏ. சேஷாத்ரி

இனிப்பான வெற்றி!



• சீதாராமன்

பெங்களூரிலிருந்து பத்துக் கிலோ மீட்டர் தொலைவில் மெரனாஹள்ளியில் இருக்கிறது சீதாராமனின் மூலிகைப் பண்ணை. பெங்களூருக்கு கல்விச் சுற்றுலா வரும் பிறமாநில விவசாயப் பல்கலைக் கழக மாணவர்கள் முதலில் விசிட் செய்வது இந்தப் பண்ணைக்குத்தான். அதுமட்டுமல்ல, இலங்கை, மொரீஷியஸ், மியான்மர், பாகிஸ்தான், பங்களாதேஷ், நேபாளம் (சீனா நீங்கலாக) இருபத்து இரண்டு ஆசிய நாடுகள், மதுபத்ரா மூலிகையைப் பயிரிடும் தொழில்நுட்பத்தை தரமுடியுமா என்று கேட்க, எதையும் எதிர்பார்க்காமல் இலவசமாகவே (கன்றுகள் உட்பட) கொடுத்திருக்கிறார் சீதாராமன்.

கொஞ்சம் தாமதமாக இவரை அடையாளம் கண்டு கொண்ட மத்திய அரசு, தனது அகில இந்திய பயோடெக் கழகத்தில் இவரை உறுப்பினராக்கி கௌரவித்திருக்கிறது. இன்னொரு பக்கம் அஸ்பெர்டேம், சாக்ரீம் போன்ற கொடிய நச்சுத் தன்மை கொண்ட செயற்கை இனிப்புக்களை இந்தியச் சந்தையில் விற்று, கோடிக் கணக்கில் வருவாய் ஈட்டும் பல 'புளூஷிப்' கம்பெனிகள் இவரைக் கலவரத்தோடு பார்க்கின்றன. யார் இந்த சீதாராமன்? இவர் பயிர் செய்து வரும் 'மதுபத்ரா' என்ன சஞ்சீவி மூலிகையா?

சீதா ராமனுக்குச் சொந்த ஊர் திருவண்ணாமலை. இவரது தந்தை ஏ. சேஷாத்ரி ஐயர், துடிப்பான மூலிகை ஆராய்ச்சியாளர். இந்தியாவில் தலைசிறந்த மூலிகைப் பண்ணை அமைக்க வேண்டும் என்ற உறுதியோடு இருந்த இவர், அதற்கேற்ற இதமான தட்பவெட்ப நிலையைத்தேடி பெங்களூரை அடுத்த ஹாரோஹள்ளி கிராமத்தில் குடியேறியிருக்கிறார். திசு வளர்ப்பு ஆராய்ச்சியின் முன்னேற்றங்களை அறிந்து வர பல்வேறு நாடுகளுக்குப்

பறந்து கொண்டிருந்த இவரை பராகுவே நாட்டில் பயிரிடப்பட்டிருந்த ஒரு மூலிகை பட்டென்று ஈர்த்தது. அதுதான் ஸ்டீவியா. (ஸ்டீவியா ரிபொடியானா)

இந்தியாவிற்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்பே இந்த மூலிகை அறிமுகமாகி இருந்ததால், சமஸ்கிருதத்தில் இதற்கு மதுபத்ரா என்ற பெயர் வழக்கில் இருந் திருக்கிறது. தமிழில் சீனித்துளசி. ஆங்கிலத்தில் Honey leaf. ஒரு சதவிகிதம் கூட, கலோரி அற்ற சக்தியைத் தரக் கூடிய இந்த அதிசய மூலிகை, சர்க்கரையை விட இருபது மடங்கு இனிப்பானது. நூற்று என்பது டிகிரி செல்சியஸ் வெப்பத்தை தாங்கக் கூடியது என்பதையெல்லாம் அறிந்து கொண்ட சேஷாத்ரி ஐயருக்கு, மூளையில் ஒரு திடீர் ஃப்ளாஷ்! இந்த மூலிகையை பொடி செய்து, சர்க்கரை நோயாளிகளுக்கு மாற்றுச் சர்க்கரையாக ஏன் கொடுக்கக் கூடாது!! உடனே அமெரிக்காவின் டார்வேர்டு (Dharwad) பல்கலைக் கழகத்தில் பிளாண்ட் பயோ டெக்னாலஜியில் ஆராய்ச்சிப் படிப்புப் படித்துக் கொண்டிருந்த தமது மகன் சீதாராமனைத் தொடர்பு கொண்டு, ஸ்டீவியா மூலிகை பற்றிச் சொல்லியிருக்கிறார். அடுத்த நிமிஷமே இன்டர்நெட்டில் 'ஸ்டீவியா' என்ற வார்த்தையை உள்ளீடு செய்து பார்த்த சீதாராமனுக்குத் திகைப்பு! ஸ்டீவியா பற்றி இரண்டு லட்சத்து நாற்பதாயிரம் தகவல்கள் வந்து விழுந் திருக்கின்றன. கடந்த நாற்பது வருடங்களாக, சீனர்களிடமிருந்து காய்ந்த மூலிகைகளாக டன் கணக்கில் இறக்குமதி செய்து, உணவுப் பொருள்கள், தேநீர், பற்பசை, அழகுச் சாதனம் என்று ஸ்டீவியாவை பெருமளவில் பயன்படுத்தி வருவதை அறிந்து துள்ளிக் குதித்த சீதாராமன், படிப்பு முடிந்து நாடு திரும்பிய கையோடு, பராகுவே நாட்டிலிருந்து அப்பா கொண்டு வந்த ஸ்டீவியாச் செடிகளை திசு வளர்ப்பு முறையில் பெருக்கி, ஆராய்ச்சியில் குதித்திருக்கிறார்.



"எதிர்வீட்டு ஏகாம்பரம் வார்த்தைக்கு வார்த்தை 'நான் சத்தியத்துக்குக் கட்டுப் பட்டவன்'னு சொல்லிக்கிறாரே?"

"அவரோட மனைவி பேரு, சத்தியவதி. சுருக்கமா 'சத்தியம்... சத்தியம்'னு கூப்பிடுவாரு!"

- சீர்காழி வி. ரேவதி

அதிக கன்றுகள் உற்பத்தியான் பிறகு ஐந்து ஏக்கரில் நடவு செய்து, ஏக்கருக்கு நான்கு டன் காய்ந்த செடிகள் விளைச்சல் பெற்ற சீதாராமன், தமது மூலிகையை ஏற்றுமதி செய்ய முடியாமல், அரசின் உதவியும் இல்லாமல், எல்லாவற்றையும் குப்பையில் கொட்ட வேண்டிய பரிதாபம். ஆனால் மனம் தளர்ந்து விடவில்லை. உலர வைத்த ஸ்டீவியா மூலிகையிலிருந்து 'ஸ்டீவியா' பவுடரை உருவாக்கியவர், அதைக் கொண்டு டீ, காபி, ஐஸ்கிரீம், மில்க்ஷேக், பிரட், ஜூஸ் போன்ற அனைத்து வகை இனிப்புகளைச் செய்யும் ஆராய்ச்சியில் ஐந்தாண்டுகள் செலவிட்டு வெற்றியை எட்டியிருக்கிறார். திரவமாகவும், பொடியாகவும் ஸ்டீவியா மூலிகையைத் தயாரித்து வெற்றி கண்டிருக்கும் இவர், "உலகின் சர்க்கரை நோய் தலை நகரம்' என்ற அவச் சொல்லில் இருந்து, இந்தியர்களைக் காப்பாற்றக் கூடிய வல்லமை ஸ்டீவியாவுக்கு இருக்கிறது. இப்போதைய தேவை, ஸ்டீவியா பற்றி விழிப்புணர்வு" என்கிறார். செம்மண் பூமியில் மட்டுமே வளரும் தன்மை கொண்ட ஸ்டீவியாவை மாற்றுப் பயிராக நடவு செய்து பவுடராக்கி, உங்கள் பகுதி மக்களிடம் நீங்களே விற்றுப் பொருளீட்ட, இலவசக் கன்றுகள், தொழில் நுட்ப ஆலோசனை அனைத்தையும் தரத் தயார் என்கிறார், தன்னம்பிக்கையோடு ஜெயித்திருக்கும் சீனித் துளசி சீதாராமன்.

- ஸ்ரீ

முஸ்லிம் ஜமாத் கமிட்டிக்கு, இந்தியாவிலேயே முதன் முறையாக ஒரு பெண்மணி தேர்வு செய்யப்பட்டிருக்கிறார். அதுவும் தமிழ்நாட்டில்! மதுரை கே.கே.நகரில் உள்ளது வக்பு வாரிய கல்லூரி ஜமாத் பள்ளிவாசல். இங்கு ஜமாத் நிர்வாகக் கமிட்டி உறுப்பினர்களாக ஏழு நபர்கள் சமீபத்தில் தேர்வு செய்யப்பட்டனர். அவர்களில் ஒருவர் நாஸ்னீன் பர்க்கத் என்ற ஐம்பத்தியொன்பது வயது பெண்மணி.

மதுரை பி.பி. குளம் பகுதியில் வசித்து வரும் நாஸ்னீன், ராமநாதபுரம் அரசு பெண்கள் கல்லூரி முதல்வராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர்.

பெண்கள் துயர் துடைப்பு மற்றும் பாதுகாப்புச் சங்கத்தின் தலைவியாகச் செயல்பட்டு வரும் இவர், கடந்த இருபது ஆண்டுகளாக முஸ்லிம் பெண்களின் மேம்பாட்டிற்காகப் போராடி வருகிறார். "முஸ்லிம் பெண்களுக்கான உரிமைகள் எதுவும் அவர்களுக்குப் போய்ச் சேருவதில்லை" என வருத்தத்துடன் குறிப்பிடுகிறார் நாஸ்னீன்.

அதற்கு முன்பாக ஜமாத் கமிட்டி என்றால் என்னவென்று பார்த்து விடலாம். குறிப்பிட்ட ஒரு பள்ளிவாசலைச் சுற்றி வசித்து வருகின்ற முஸ்லிம் குடும்பங்களுக்கு, ஒரு கட்டுப்பாட்டு மையமாக இயங்கி வருவதே ஜமாத் கமிட்டி. பள்ளிவாசலின் நடைமுறைகளைக் கவனித்துக் கொள்வதுடன், அப்பகுதி வாழ் முஸ்லிம்களின் குடும்பப் பிரச்னைகளைத் தீர ஆராய்ந்து, அவற்றைத் தீர்த்து வைப்பதும் ஜமாத் கமிட்டியின் முக்கியப் பணிகளில் ஒன்றாகும். ஜமாத் கமிட்டிகளில் பெண்களும் இடம் பெற்று இருந்தால்தான், பெண்களுக்கான பிரச்னைகளுக்கு நியாயமான தீர்வு காண இயலும் என்கிற ஒரு கருத்து, சமுத்திர அலைகளாக அவ்வப்போது சீறியெழுவதும், அடங்கிப் போவதுமாக இருந்து வந்தது.

அதுமட்டுமல்ல, சவுதி அரேபியா, மலேசியா, சிங்கப்பூர், இந்தோனேஷியா, அமெரிக்கா, இங்கிலாந்து, வளைகுடா நாடுகள் பலவற்றிலும், பள்ளிவாசல்களில் பெண்கள் தங்கள் குடும்பத்தினருடன் சென்று தொழுகை நடத்தி வர அனுமதிக்கப்படுகின்றனர். ஆனால் இந்தியாவில் லக்னோ, டெல்லி, பெங்களூர் போன்ற நகரங்களில், ஒரு சில பள்ளிவாசல்களில் மட்டுமே தொழுகையின் போது, அனுமதிக்கப்பட்டு வருகின்றனர். அதுவும் கடந்த பன்னிரண்டு ஆண்டுகளாகத்தான். தமிழ்நாட்டில், மதுரையில் அண்ணா நகர் பள்ளிவாசலிலும், சேலம் கோட்டை பள்ளிவாசலிலும்தான் பெண்கள் தொழுகை நடத்தி வருகின்றனர்.

"நபிகள் நாயகம் காலத்தில் பள்ளிவாசல்களில் பெண்கள் தொழுகை நடத்தி வந்துள்ளனர். ஆகவே அனைத்து பள்ளிவாசல்களிலும் தொழுகையின்போது, பெண்களுக்கென இடம் அமைத்துத் தர வேண்டும்'' என்று கூறும் நாஸ்னீன் "ஆண்களை எதிர்க்க வேண்டும் என்பது என் எண்ணமில்லை. ஜமாத் கமிட்டிகளில் பெண்களும் இருந்தால்தான், பெண்களின் பிரச்னைகளைப் புரிந்து தீர்வு சொல்ல முடியும்" என்கிறார் தீர்க்கமாக.

கட்டுரை, படங்கள் :

ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு





வெட்டி, கட்டிய சூரியக்கோயில்!

சிவசங்கரி

நான்காயிரம் வருஷங்களுக்கு முன் இரண்டாவது ராம்ஸெஸ் அரசரால் கட்டப்பட்ட சூரியக்கோவில், காலத்தின் சுழற்சியில் பாலைவன மண்ணால் அடியோடு மூடப்பட்டுவிட, அதை முதன்முதலில் 1813ல் ஸ்விட்சர்லாந்தைச் சேர்ந்த புர்கார்ட் (Burkardt) என்ற ஆய்வாளர் கண்டுபிடித்தார். என்றாலும், அக்கோவிலின் பிரும்மாண்டம் முழுமையாக 1817ல் வெளிப்பட்டது இத்தாலியப் புதைபொருள் ஆராய்ச்சியாளரான பெல்லோனியின் (Belzoni) முயற்சியினால்தான். "நாஸர் ஏரி உருவாகி பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலம் நீரில் மூழ்கியபோது, சூரியக்கோவில் மட்டுமல்லாது, கிட்டத்தட்ட இருபது புராதனக் கோவில்களும் மூழ்கிப்போகும் அபாயம் எழுந்தது. அத்தனையையும் மீட்பது சாத்தியமில்லை என்றபோதும், சுமார் பதிமூன்று கோவில்களை எங்கள் அரசு காப்பாற்றியது. ஒவ்வொரு எகிப்தியரும் பெருமை கொள்ளும் சேதி" என்றார் பாப், அந்தப் பெருமிதம் குரலில் வழிந்தோட!

அபு ஸிம்பலில் நாங்கள் பார்த்த சூரியக் கோவில், பிலே (Philae) யில் பார்த்த ஐஸிஸ் கோவில் - இரண்டுமே ஏரி நீரில் மூழ்கவிருந்து, யுனெஸ்கோ அமைப்பின் உதவியுடன் புனருத்தாரணம் செய்யப்பட்டவை. மீட்கப்பட்டன என்றால், எப்படி என்கிறீர்கள்? அந்த ராட்சதக் கட்டடங்களை சதுரம் சதுரமாய் வெட்டி, அலுங்காமல் நலுங்காமல், நீர் எட்ட முடியாத உயரத்தில், பழையபடியே மீண்டும் நிர்மாணித்தார்கள் என்பதை உங்களால் கற்பனை பண்ண முடிகிறதா? 1963ல் துவங்கி, அபு ஸிம்பல் 'மீட்புப்பணி' 1968ல் முடிந்திருக்கிறது. முதலில் கற்களை வெட்டும்போது விரிசல் கண்டுவிடக் கூடாது என்ற முன்னெச்சரிக்கையுடன், கோவிலை மணல் கொண்டு முழுமையாய் மூடி, இத்தாலி நாட்டுக் கல் வெட்டும் நிபுணர்களைக் கொண்டு ஏழிலிருந்து முப்பது டன் வரை எடை கொண்ட 1,106 துண்டங்களாக வெட்டியிருக்கிறார்கள். பின்னர், செயற்கையாக ஒரு மலையைக் கட்டி, வெட்டிய துண்டங்களை இருநூறு அடி உயரத்திற்குக் கொண்டு சென்று, முதலில் எத்திசையை நோக்கி எந்தக் கோணத்தில் இருந்ததோ, அதே வகையில் அச்சு அசலாக மீண்டும் சூரியக் கோவிலை உருவாக்கியுள்ளதை உலக அதிசயங்களில் ஒன்றாகத்தான் கருதவேண்டும்.

ஒரிஜினல் கோவிலில், ராம்ஸெஸின் பிறந்த நாளான ஃபிப்ரவரி 21ம் தேதியும், முடி சூட்டிய நாளான அக்டோபர் 21ம் தேதியும், முதல் நான்கு கூடங்களையும் தாண்டிக் கொண்டு, கர்ப்பக்கிரகத்தில் உள்ள சிலைகள் மீது சூரியனின் கிரணங்கள் விழுகிற மாதிரி கட்டியிருந்தது.


புனருத்தாரணத்தில் இலேசாகக் கணக்குப் பிசகி, ஒரு நாள் கூடிப் போனதில் தற் சமயம் பிப்ரவரி, 22, அக்டோபர் 22 தேதிகளில் சூரியக் கதிர்கள் சிலைகளைத் தொடுகின்றன.

அபு ஸிம்பலில் இரண்டு கோவில்கள் பிரதானமாய் உள்ளன. ஒன்று சூரியக் கோவில், அடுத்தது ஹாதோர் பெண் தெய்வத்தின் கோவில். கடவுள் பெயரில் அமைவதாக இருந்தபோதும் இரண்டிலும் ராம்ஸெஸ்ஸும் அவரது மனைவி நெஃபர்டாரியுமே தெய்வங்களுக்குச் சமமாய் பிரதானமாய் இருக்கிறார்கள்.

சூரியக் கோவிலின் நுழைவாயிலின் இரண்டு பக்கங்களிலும் அறுபது அடி உயரம் கொண்ட நான்கு ராம்ஸெஸின் சிலைகள் சிம்மாசனத்தில் உட்கார்ந்த நிலையில் காணப்படுகின்றன. அச்சிலைகளின் காலடியில் சிறிய அளவில் மனைவி, குழந்தைகளின் சிலைகள். நுழைவாயிலை பதினான்கு பபூன் குரங்குகள் அலங்கரிக்க, நடுநாயகமாய் தலையில் சூரிய வட்டத்தைத் தாங்கிய 'ரா'வின் உருவம் செதுக்கப்பட்டுள்ளது. இதைத் தாண்டிச் சென்றதும், வரும் முதல் கூடத்தில், இருபத்தியிரண்டு அடி உயரத்தில் இரண்டு கைகளையும் மார்புக்குக் குறுக்காக மடித்துக்கட்டி, சடல நிலையில் நிற்கும் ராம்ஸெஸின் எட்டு சிலைகளைப் பார்க்கலாம். உள்ளே இருக்கும் இதர கூடங்கள், அறைகளின் சுவர்கள், மேல்விட்டத்தில் ராம்ஸெஸ் ஆப்ரிக்க, ஆசிய போர்க் கைதிகளை இழுத்து வருவது, அடிப்பது போன்ற காட்சிகள் சிற்ப, ஓவியங்களாகத் தென்படுகின்றன.

"பல அலுவல்களில் ராணி நெஃபர்டாரியும் உடனிருப்பது மாதிரியான காட்சிகளை, வேறு எந்த அரசபரம்பரைச் சித்திரிப்புகளிலும் காண முடியாது; தன் ராணிக்கு ராம்ஸெஸ் கொடுத்திருந்த முக்கியத்துவத்தை இவை தெரிவிக்கின்றன" என்று பாப் விளக்கினார்.

சன்னதி என்று அழைக்கப்பட்ட அறையில் பிடா, அமோன்ரா, ராம்ஸெஸ், ரா-ஹிரக்தே (Ptah, Amun-Re, Ramses,Re-Herakhte) யின் பெரிய அளவுச் சிலைகள் வரிசையாய் உட்கார்ந்திருக்கின்றன. ஆதிநாட்களில் ஒவ்வொரு வருஷமும் குறிப்பிட்ட தினங்களில், உதயசூரியனின் கிரணங்கள் கோவிலினுள் புகுந்து நூற்றியறுபது அடி உட்கூடங்களைத் தாண்டிக் கொண்டு ராம்ஸெஸின் முகத்தில் ஒளி வீசியது, இன்றைக்கும் ஒரு நாள் தள்ளி விழுவது, இச்சிலைகளின் மேல்தான் என்ற விவரத்தை நினைவு கொள்ளும்போது, நான்காயிரம் வருஷத்திற்கு முன்னரே எகிப்தியர்கள் கட்டடக்கலையில் தேர்ந்திருந்ததை எண்ணி வியக்காமல் இருக்க முடியவில்லை.





அபு ஸிம்பலில் விமானம் ஏறி, அஸ்வானுக்குத் திரும்பியவர்கள், தயாராக இருந்த குழுவின் இதர நபர்களுடன் சேர்ந்துகொண்டு, ஒரு குட்டிப்படகில் பயணித்து 'பிலே' என்ற இடத்தில், அக்லிகா தீவில் (Aglika Island) இருந்த

• வெட்டிக் கட்டப்படும் சூரியக் கோயில்

ஐஸிஸ் கோவிலைக் காணச் சென்றோம். நான் ஏற்கெனவே குறிப்பிட்ட விதத்தில் இந்தக் கோவிலும் யுனெஸ்கோ அமைப்பின் உதவியுடன் முதலில் கட்டப்பட்ட இடத்திலிருந்து பெயர்க்கப்பட்டு, அக்லிகா தீவில் மீண்டும் நிர்மாணிக்கப்பட்டதுதான்! சின்ன குடிசையைத் தூக்கி இன்னொரு இடத்தில் கட்டுவது போல, அத்தனாம் பெரிய்ய்ய புராதனக் கட்டடங்களை எகிப்தியர்கள் அலேக்காய்த் தூக்கி புனருத்தாரணம் செய்திருப்பதைப் பல முறைகள் நெஞ்சாரப் பாராட்டினாலும் தகும். இந்த ரீதியில் பதிமூன்று கோவில்களை இடம் மாற்றியிருக்கிறார்கள் என்கிற விவரம் தந்த திகைப்பு, அன்று முழுவதும் எங்களைத் துரத்திக் கொண்டே இருந்தது நிஜம்.

மதியம் மூன்று மணியளவில் கப்பலுக்கு வந்தவர்களின் அகோரப்பசி புரிந்த மாதிரி, அருமையான சைவ உணவை நிர்வாகிகள் பரிமாறினார்கள். பெரிய கத்தரிக்காயை மெல்லிய வட்டங்களாய் வெட்டி, தக்காளிச் சட்னி, மசாலா தடவி வதக்கியதோடு, சீஸ் தக்காளி பாஸ்தா (தடிமனான சேமியா), சோறு, தயிர், தால் என்று வாய்க்கு ருசியாய் கொடுத்ததை அத்தனை பேரும் ஒரு வெட்டு வெட்டிவிட்டு, ஒரு மணி நேரம் ஓய்வு எடுக்க அனுமதிக்கப்பட்டோம். ஐந்து மணிக்குக் கப்பலின் மேல்தளத்தில் நைல் நதி உலாவை அனுபவித்தவாறு தேநீர் அருந்திவிட்டு, காம் ஓம்போ (Kom Ombo) என்ற இடத்தை ஒட்டி கப்பல் நங்கூரம் பாய்ச்சி நின்றதும், அங்குள்ள கோவிலைப் பார்க்கச் சென்றோம்.



நாஸர் ஏரி உருவாகும் அந்தப் பாலைவனத்தில் அதுகாறும் வாழ்ந்துவந்த லட்சக்கணக்கான நூபியர் இன மக்களில் பலர், அஸ்வானிலிருந்து நாற்பத்தைந்து கி.மீ. தொலைவில் இருக்கும் காம் ஓம்போவில்தான் குடியேறினார்களாம். பண்டைய எகிப்தில் இப்பகுதியில் நைல்நதிக்கரையை ஒட்டியுள்ள மணல் மேடுகளில், ஏராளமான முதலைகள் வாழ்ந்துவந்தன என்கிறார்கள். இங்குள்ள கோவிலில் கழுகு முகம் கொண்ட ஹரோஸிஸுக்கும் (Haroesis) முதலை வடிவிலான ஸோபெக்கிற்கும் அர்ப்பணிக்கப்பட்டிருக்கிறது. எல்லா கோவில்களிலும் பார்த்தது போல இங்கும் பெரிய அளவு கற்சிலைகள், வெளி, உள், சன்னதி அறைகளில், அந்தந்த அரசர்களின் நடவடிக்கைகளை விளக்கும் கற்சித்திரங்கள் - ஆகியவற்றைக் காண முடிகிறது. ஹரோரிஸ் இங்கு 'மருத்துவக் கடவுளாக' வழிபடப்பட்டுவந்த அந்தக் காலத்தில், வைத்தியர்கள் பயன்படுத்திய கருவிகளையும், வைத்தியக் குறிப்புகளையும் கற்சித்திரங்களில் தெரிந்து கொள்ள முடிவது, இக்கோவிலின் தனிச்சிறப்பு.

நைல் நதியில் ஒவ்வொரு ஆண்டும் எவ்வளவு வெள்ளம் வருகிறது என்பதைப் பொறுத்து, பயிர் விளைச்சலையும், மக்கள் செலுத்த வேண்டிய வரியையும் தீர்மானிப்பது வழக்கம் என்பதால், பண்டைக்காலத்தில் பல இடங்களில்

"அரசருக்கு கண் பார்வை மிகவும் மங்கிவிட்டது போலும்."
"எதை வைத்துச் சொல்கிறாய்?"
"அடிக்கடி 'யாரங்கே... யாரங்கே'னு கேக்கறாரே!"
- அஜித்லால்

"உங்கப்பா அதிமுகவா?"
"எப்படி கண்டுபிடிச்சே?"
"யாரைப் பாத்தாலும் முளைச்சு இரட்டை இலை விடலைனு மிரட்டுறாரே!"

- அம்பை தேவா



கரையை ஒட்டி 'நைலோமீட்டர்' என்ற அளவுக்கருவிகளை வைத்திருந்தார்கள். அவற்றில் ஒன்றை காம் ஓம்போவில் பார்க்க முடிந்தது. ஐயாயிரம் வருஷம் உபயோகிக்கக் கூடிய நாட்காட்டி ஒன்றும் இக்கோவிலுக்குப் பெருமை சேர்க்கிறது. ஆயிரம் வருஷங்களுக்கும் முன் இன்ன தேதி, இன்ன கிழமையில், என்னென்ன விசேஷங்களுடன் (அமாவாசை, பௌர்ணமி, இத்தியாதி) இருந்தது என்பதை பாப் விளக்கியபோது, ஆச்சர்யத்தில் திறந்த வாய்களை நாங்கள் ரொம்ப நேரத்துக்கு மூடவேயில்லை.

மேற்கொண்டு கோவில், சமாதி விஜயங்களை வர்ணிக்கும் முன் சுவாரஸ்யமான சில விஷயங்களைப் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். பொதுவாக எகிப்திய மன்னர்களின் சிலைகள் அனைத்துமே, இடது காலை முன்னால் வைத்த நிலையில்தான் காணப்படுகின்றன. இது ஏன் என்று பாப்-இடம் கேட்டபோது, அவர் பல காரணங்கள் ஊகத்தில் இருப்பதாகக் கூறினார். நம் நாட்டில் 'வலது காலை' வைக்கும் நம்பிக்கை இருப்பது போல, அங்கு இடது காலை முதலில் வைப்பது நல்லது என்று நினைத்திருக்கக் கூடுமாம். இடது காலை முன்னால் வைப்பது வீரத்தின் அடையாளம் என்ற கருத்தோ, அல்லது நாங்கள் போருக்குத் தயார் என்று தெரிவிக்கும் விதமாகவோ இருக்கலாம் என்றார்.

அனைத்து அரசர்களின் உடைகளும் - இது குட்டைப் பாவாடை போல, முட்டிக்கு மேலே நின்றுவிடுகிறது - கஞ்சி போட்ட மாதிரி விறைப்பாய் காணப்படுகின்றன. "அந்தக் காலத்தில் எல்லோரும் லினன் என்ற பஞ்சினாலான துணிகளையே உபயோகித்தனர்; அரசபரம்பரையினர் மட்டும் அவற்றைக் கஞ்சி போட்டு பயன்படுத்தினர்; சாதாரணக் குடிமகனுக்கு இவ்வுரிமை மறுக்கப்பட்டது; இதை எல்லாச் சித்திரங்களிலும் நீங்கள் பார்க்கலாம்" என்று பாப் விளக்கியதைத் தொடர்ந்து, ஊன்றிக் கவனித்தோம்... ஆம், அரசர்களின் உடை விறைப்பாகவும், சிப்பாய், இதர மக்களின் உடை தொய்ந்தும்தான் காணப்பட்டன!

இதே போலப் பண்டைக்கால உயர்குடி ஆண்களின் உடம்பில் முடி இருப்பது அசுத்தமாகக் கருதப்பட்டதில், அரச குடும்பத்து ஆண்களும், குருமார்களும், தலைமுடி, மீசை, தாடி, புருவம், கை கால் முடி - என்று ஒட்டுமொத்தமாய் அத்தனையும் மழித்துவிடுவார்களாம். வயசுக்குவராத ஆண்களின் தலையில் பக்கவாட்டுக் குடுமியை மட்டும் வைத்துவிட்டு, இதர பகுதிகளை மழிப்பதுதான் வழக்கமாம். ஆனால், அரசர்களும் குருமார்களும் கம்பீரமாய்த் தோற்றம் தரவேண்டும் என்கிற நம்பிக்கையில் செயற்கை முடியைக் கற்றையாய் முகவாயில் ஒட்டி ஆட்டுத்தாடி மாதிரி தொங்கவிடுவார்களாம். இந்தப் பழக்கவழக்கத்தைக் கேட்டதும், முட்ட முழுக்க மழிப்பானேன், செயற்கை தாடியை ஒட்டுவானேன்? என்ன நம்பிக்கையோ, என்ன பழக்கமோ! - என்று கேட்கத்தானே தோன்றுகிறது!

(தொடரும்)

நடிகை ரேவதி இமயமலையின் பனிமுகடுகளில் நடந்த கார் ரேலியில் கலந்து கொண்டு ஹாலிவுட் படங்களில் மட்டுமே பார்த்து பயந்த பனிப்புயலில் நிஜமாகவே சிக்கித் தவித்து, ராணுவத்தினரின் உதவியோடு தப்பி வந்திருக்கிறார்!

இந்த நடுங்கும் அனுபவத்தை விவரிக்க ஆரம்பித்தார்.

“கார் ராலிலேயே மிக கஷ்டமானது இமயமலையில் நடப்பதுதான். பந்தயப் போட்டி இது. ஐந்து நாட்களில் இரண்டாயிரத்து நானூறு கி.மீ. பயணம் செய்யணும் அதோடு பதினாலாயிரம் அடி உயரத்தில் ரொம்ப திரில்லிங்காகவும் நானும், எங்க டீமும் திகிலோடும் இப்போட்டியில கலந்துகிட்டோம்.

சிம்லாவிலிருந்து மணாலி, ஜிஸ்பா, லடாக் அருகிலுள்ள தக்லாங்கலா, பாங்... மீண்டும் மணாலி... இது தான் எங்க பயண ரூட்.

மூன்று நாள் பயணம் முடிந்து நான்காம் நாள் காலை மலைச் சாலையில் எங்க கார் பயணிக்குது. கூட வந்த விவேக் கார் ஓட்றாரு. மற்ற மூணு பேரும் மேப் பார்த்து கைட் பண்ணிக்கிட்டிருந்தோம். கார் மலையின் உச்சிக்கு போனபோதுதான் பனிப் புயல் கிளம்ப ஆரம்பிச்சிடுச்சு. அவ்வளவு தான். போட்டி நடத்துற ஆர்கனைசர்ஸ் பதற ஆரம்பிச்சுட்டாங்க.



பனிச்சாலைகளில் கார் போகணும்னா அதோட டயர்ல செயின் பொருத்தணும். ஆனா யாருமே பனிப் புயலை எதிர்பார்க்காததால இந்த ஏற்பாட்டோட யாரும் வரலை.

மழை தூறுகிற மாதிரி சடசடன்னு பனி பெய்ய ஆரம்பிச்சு புயலா உருவா

யிடுச்சு பனி. தா
சாலையை அப்படியே
மூட ஆரம்பிச்சிடுச்சு
தொடர்ந்து கார் பய
படர்ந்திருக்கிற பாதையில
போகணும்னா கா
டயர்ல செயின் பொருத்தி
யிருக்கணும். ஆனா பனிப்
புயலை எதிர்பார்க்க
வில்லை யாரும் இந்
ஏற்பாட்டோட வரலை.

முதன்முறையா பய
மலையில பயணிக்கி
அதோட எதிர்பாராத ட
எங்க பின்னாடி வந்த
ஒன் பை ஒன்னா அந்தந்
லேயே நின்னுச்சு.

இங்கிருந்து பத்திரமா
வோமான்னு உதறல் எடு
பிச்சிருச்சு.

ஆனா அங்கங்கே பாது
ஆர்கனைசர்ஸ் இருந்த
விக்கு ஓடோடி வந்தா
லாங்லா கேம்பிலிருந்து
வேனை வரச் சொல்லி
மூலமா தகவல் சொல்
வந்தது.


வேனோட இரு பக்க
போகிற அளவுக்கு பனிப்ப
வெட்ட வேண்டியதா போ

ஒவ்வொரு காரிலிரு
களையும் வெளியேத்தி
வேன்ல மளமளன்னு ஏத்
பாவம், எல்லோரும் அ
இஷ்ட தெய்வத்தை வேண்
பயத்துல இருந்தாங்க.

கார்களை அங்கேயே வ
மிலிட்டரி வேன் மூலமா
வந்தவுடன் தான் போ
திரும்பி வந்துச்சு. ஆனாலும்
முறை இதே சிம்லாவுக்கு போ
மறுபடியும் கார் பந்தயத்து
கிட்டு இதுமாதிரியான சவா
தைரியமா எதிர் கொள்ள
உத்வேகம் நிறையவே
என்கிறார் உற்சாகமாக.

- ச.ந.க





யம்
யல்.
ளும்
த்தி


நம்பு
ஆரம்

புக்கு
உத
தங்
ட்டரி
லெஸ்
ஜீவன்

களும்
தயை
.
றவர்
ட்டரி
ாங்க.
வங்க
யபடி

டுட்டு
புக்கு
உயிர்
புடுத்த
ணும்.
கலந்து
களை
ங்கிற
தக்கு''

ணன்



பனி மலையில் பதறிய ரேவதி!


'குறுந்'தொகை

அவரல்லவோ மாப்பிள்ளை!


உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநர் ச. கிருஷ்ணமூர்த்தி பழந்தமிழ் அறிஞர்கள் குறித்த நூல்கள் வெளியிடுவதில் ஆர்வம் காட்டுபவர். அவரால் மறக்கவே முடியாத சம்பவம்? "அறிவியல் அறிஞர் பெ.நா. அப்புசாமி அறக்கட்டளைக் கருத்தரங்கம் நடந்தது. அப்புசாமி குறித்து நூல் வெளியிட்டோம். விழாவில் பங்கேற்றார் அவரின் மருமகன் வழக்கறிஞர் சுப்பிரமணியம். உரையாற்றும்போது, மாமனார் தமக்குத் தந்தையைப் போன்றவர் எனக் கூறி உணர்ச்சிமயமாகப் பேசினார். இறுதியில் தம் மனம் நிறைந்திருக்கிறது என்று சொல்லியவாறே மேடையிலேயே சரிந்து காலமானார். மாமனார் மேல் அந்த மாப்பிள்ளை வைத்திருந்த பாசமும் இந்தச் சம்பவமும் மறக்க இயலாதவை" என நெகிழ்கிறார் கிருஷ்ணமூர்த்தி.



• வெங்கடாசலம்



• அ.ச.ஞானசம்பந்தம்



• வல்லிக்கண்ணன்



• கிருஷ்ணமூர்த்தி

தன்னைக் காதல் மணம் புரிந்த கணவர்...

பேராசிரியர் அமரர் அ.ச.ஞானசம்பந்தன் பற்றி முக்கியமான ஒரு தொகுப்பு நூல் வெளிவருகிறது. 'அ.ச.ஞா. பற்றிய நினைவலைகள்' என்பது தலைப்பு. நூலின் முக்கால் பகுதியை அ.ச.ஞா.வின் மனைவி திருமதி ராஜம்மாள் எழுதிய படைப்பு அலங்கரிக்கிறது. தம்மைக் காதல் திருமணம் செய்துகொண்டது உள்படப் பல சுவாரஸ்யமான குடும்ப நிகழ்ச்சிகளை நினைவு கூர்ந்துள்ளார் அவர். தவிர பேராசிரியை ஆ.ரா. இந்திரா, ரவி ஆறுமுகம், பாரதி பாஸ்கர், த.ராமலிங்கம், வெ. இறையன்பு, இலங்கை ஜெயராஜ், பிரசாந்தன் உள்படப் பல அ.ச.ஞா. அன்பர்களது கட்டுரைகளும் இடம் பெற்றுள்ளன.

இது தொகுப்புகளின் காலம்!

'தீபம் நா. பார்த்தசாரதி : எழுத்துலகின் நட்சத்திரம்' என்ற தலைப்பில் ஒரு தொகுப்பு நூல் உருவாகிறது. தொகுப்பாசிரியர் வல்லிக்கண்ணன். இந்நூலில் ஜெயகாந்தன், சின்னக்குத்தூசி உள்படப் பலரது கட்டுரைகள் இடம் பெறுகின்றன. 'தி.க.சி. என்ற மனிதன் : சில விமர்சனங்கள்' என்ற தலைப்பில் இன்னொரு நூலும் தயாராகிறது. இதன் தொகுப்பாசிரியர் அ.நா.பாலகிருஷ்ணன். இந்த இரு நூல்களையும் விரைவில் ஞானியாரடிகள் மன்றம் வெளியிடவுள்ளது.

நம்பியைப் பற்றித் தம்பி!

'மருமகள் வாக்கு' போன்ற உன்னதச் சிறுகதைகளை எழுதிய முன்னோடி எழுத்தாளர் கிருஷ்ணன் நம்பியைப் பற்றி சுந்தர ராமசாமி அண்மையில் ஒரு புத்தகம் எழுதியிருக்கிறார். இப்போது அவரைப் பற்றி இன்னொரு நூல் எழுதப்பட்டு வருகிறது. எழுதுபவர் கிருஷ்ணன் நம்பியின் தம்பி, கிருஷ்ணன் வெங்கடாசலம்.

சுட்டால் நூல் மலரும்!

சுடச்சுட, வீரப்பனைச் சுட்டவுடனேயே இதோ ஒரு புத்தகம் தயாராகிறது. நூலாசிரியர் : என்.சொக்கன். 'வீரப்பன் வாழ்வும் வதமும் - உணர்ச்சிகளும் உறுத்தல்களும்' என்ற தலைப்பிலான அந்தப் புத்தகத்தைக் கிழக்கு பதிப்பகம் வெளியிடுகிறது.

- திருப்பூர் கிருஷ்ணன்

அருள்வாக்கு



'நாம் எப்படி வாழ்கிறோமோ அப்படியே மற்றவர்களும் வாழ வேண்டும்' என்று நினைப்பது உத்தமமான எண்ணம். ஆனால் எண்ணம் உத்தமமாயிருந்து விட்டால் போதுமா? நாம் டாம்பீகமாக வாழ்க்கை நடத்திக் கொண்டு மற்றவர்களும் அப்படி இருக்க வேண்டும் என்று ஆசைப்பட்டால் அது நடக்குமா? அப்படியே நடந்து அமெரிக்கா மாதிரி எல்லாரும் 'லக்ஷுரியஸாக' வாழ முடிந்தால் அது நல்லதுதானா? லௌகிகமான ஸௌக்யங்கள் ஜாஸ்தியாக ஆக, ஆத்மாபிவிருத்திக்கே வழியில்லாமல்தானே ஆகியிருக்கிறது? எத்தனை போட்டாலும் திருப்தியில்லாமல் கபளீகரம் பண்ணுகிற நெருப்பு மாதிரித் தான் இந்த ஆசை என்பது. அது எவ்வளவு ஸௌகர்யம் இருந்தாலும் திருப்திப்படாமல் இன்னும் புதிசு புதிசாக ஸௌக்ய ஸாதனங்களைத் தேடிக் கொண்டுதான் இருக்கும். அதிருப்தி, குற்றங்கள் இத்யாதியைத்தான் அமெரிக்காவில் பார்க்கிறோம். ஸௌக்ய ஸாதனங்கள் என்று நினைக்கிறவைகளை விட்டால்தான் சாந்தி கிடைக்கும் என்று அங்கே புத்திசாலிகளாக இருக்கப்பட்டவர்கள் புரிந்துகொண்டு தான் தியானம், யோகம், பஜனை என்று கிளம்பியிருக்கிறார்கள்.

'நாம் எப்படி வாழ்கிறோமோ, அப்படியே பிறரும் வாழ வேண்டும்' என்று நினைப்பதற்கு முந்தி, நாம் எப்படி வாழ வேண்டும் என்பதையும் தீர்மானம் பண்ணிக் கொள்ள வேண்டும்.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராச்சார்ய சுவாமிகள்



கால் நனைக்க ஒரு கடல்...

கடற்கரையில்
என் மகன் கட்டிவைத்த
மணல் வீட்டை
கலைக்கவிரும்பவில்லை நான்
அலைகள் கலைத்துவிடக்
கூடாதேயென்று
கவலையுடன் அமர்ந்திருந்தேன்

குடியிருப்பதைப் பற்றிக்
கவலைப்படாமல்
கட்டிய வீடல்லவா அது?

சின்ன வயசில்
மணிக்கணக்கில்
ஏரி நீரில் கால்நனைத்தபடி
கவிதையெழுதிக் கொண்டிருந்த
நானேதான்
''இதுக்கு மேல அலையில நின்னா
ஜுரம் வரும். அவனை
இழுத்துக்கிட்டு வாங்க''
மனைவியின் வார்த்தைகளை
அமல்படுத்த ஆரம்பித்தேன்
''அப்பா... அப்பா...
இன்னும் கொஞ்ச நேரம்''
என்று கெஞ்சிய மகனை
அதட்டியும்
அடிகொடுத்தும்.

கடலை ஏன் அப்படி
முறைத்துப் பார்க்கிறாய்?
என்று கேட்டதும்
மகன் சொன்னான்,
''அலை அப்பிடியே
ஒறைஞ்சி நிக்குமாப்பா.''

கடற்கரையைவிட்டு வந்தபின்னும்
நெருடிக்கொண்டேயிருக்கும்,
இன்னும் கொஞ்சம் சுண்டலும்
முறுக்கும்
வாங்கியிருக்கலாமோ?
மகன் சொன்னான் :
''ஆமாம்பா... பாவம்.''

குழந்தையைப் பற்றி
சிறந்த கவிதையை
இதுவரை கவிதையே எழுதாத
என் மனைவி எழுதினாள் :
''குழந்தை''







கவிதை :

நா.வே.அருள்

காமிரா கவிதை :

புதுவை இளவேனில்



இனிது இனிது...

"சரசு, இன்னிக்குச் சாயந்திரம் அம்மாவைப் பார்த்துட்டு வரலாம்னு இருக்கேன்."

"போய்ட்டுவாங்க."

"ம்: சரசு... அம்மாவுக்கு ஸ்வீட்டுன்னா ரொம்பப் பிடிக்கும்... ஏதாவது ஸ்வீட் பண்ணிக் கொடேன்.."

பட்டாசு வெடித்தாள் சரசு.

"சர்த்தான்... மாசக்கடைசில செலவுக்குப் பணம் இல்லாம நான் திண்டாடிக்கிட்டு இருக்கேன். ஸ்வீட்டா... அதெல்லாம் ஒண்ணும் முடியாது!"

வாசு பதிலே பேசவில்லை. அவன் சாது. வாயில்லாப் பூச்சி. மனைவி பேச்சைக் கேட்டு ஆறு மாசம் முந்திதான் அம்மாவை முதியோர் இல்லத்தில் சேர்த்திருந்தான்.

மாலை. முதியோர் இல்லம். ஓடிவந்து மகனைக் கட்டிக் கொண்டு உச்சி மோந்தாள் அந்தத் தாய். "ராசா... உன்னைப் பாத்து எவ்வளவு நாளாச்சு... இரண்டு மாசமாச்சேடா உன்னைப் பார்த்து..."

கண்கள் கலங்கின. பிறகு அம்மாவும் பிள்ளையுமாக ரொம்ப நேரம் பேசிக் கொண்டிருந்தார்கள்.

வாசு கிளம்பினான்.

"ஒரு நிமிஷம்டா.."

கிழவி தன் மடியிலிருந்து ஒரு சின்ன பிளாஸ்டிக் கவரை எடுத்து பிள்ளையிடம் கொடுத்தாள்.

"ராசா, இதுக்குள்ள ஒரு ஜாங்கிரி இருக்கு. உனக்கு ஜாங்கிரின்னா ரொம்பப் பிடிக்குமே... சாப்பிடு.... இன்னிக்கு மத்தியானம் ஒரு பெரிய கார்ல ஒரு பணக்கார தம்பதி வந்தாங்க. இங்க இருக்கறவங்களுக்கு எல்லாம் ஆளுக்கு ஒரு ஜாங்கிரி கொடுத்துட்டுப் போனாங்க... இன்னிக்கு அவங்க கல்யாண நாளாம்... சாப்பிடு ராசா..."

அனிதா ராமச்சந்திரன்

ஆயிரம் உண்டிங்கு...

இரவின் அமைதியைக் கிழித்தபடி விரைந்து கொண்டிருந்தது பேருந்து. நான் உறக்கத்திற்குள் சென்று கொண்டிருந்தேன்.

அப்போதுதான் திடீரென முன் இருக்கையிலிருந்து காட்டுக்குரல் "ஏன்யா அறிவில்ல உனக்கு? மேலே சாயாதேனு எத்தனை முறை சொல்றது?"

"பஸ்ஸுன்னா அப்படித்தான். சுகமா போகணும்னா கார்ல போ!" - எதிர்க்குரல்.

இருவரையும் வார்த்தைகள் ஆட்சி செய்ய ஆரம்பிக்க எனக்கு எரிச்சலாக வந்தது.

ஏழு மணி நேரப் பயணம். விடிந்தால் யார் யாரோ? அனுசரித்துப் போகக் கூடாதா?

முன்னிருக்கை நண்பர்களின் கூச்சல் அதிகமாகி பலரது உறக்கத்தை கலைத்தது. ஒரு சிலர் சமாதானம் செய்தும் ஓயவில்லை.

எந்த விநாடியும் அடிதடி நிகழலாம். பலத்த மேகம் சூழ்ந்திருக்கிறது என்பார்களே... அப்படி ஒரு பதட்டமான நிலை.


நடுவில் ஒரு ஊரில் பேருந்து நின்றது. நானும் இறங்கி டீ குடித்து விட்டு வந்தேன். பத்து நிமிடத்தில் பேருந்து உறுமத் துவங்கியது. "எல்லாரும் வந்தாச்சா...?" குரல் கண்டக்டர் கொடுக்க... பேருந்து மெல்லக் கிளம்பியது.

"ஐயையோ! கண்டக்டர் நிறுத்துங்க. எம் பக்கத்துல உட்கார்ந்திருந்த ஆள் ஏறலை." பதற்றமானார் முன்சீட் சண்டைக்காரர்களில் ஒருவர்.

"அண்ணாச்சி. இங்கே ஒரு இடம் காலியாச்சு. இங்கே வந்துட்டேன்!" பின்னாலிருந்து வந்தது இன்னொரு சண்டைக்காரனின் குரல்!

என் மனதில் ஆச்சர்யமான சந்தோஷம்.

வாசுகி சோமு



தெம்புக்குப் படிங்க! 2

தென்கச்சி சுவாமிநாதன்

தைரியமா இருங்க!

ஒருத்தர் மருத்துவமனையில் படுத்திருந்தார். அவரைப் பார்த்து ஆறுதல் சொல்ல நண்பர் ஒருவர் வந்தார்.

"உங்களுக்கு இப்படி ஆயிடுச்சே" என்று வரும்போதே 'கோ'வென்று கதறிக் கொண்டே வந்தார்.

"எனக்கு ஒண்ணும் ஆகலே... நீங்க தைரியமா இருங்க!" என்றார் நோயாளி. ஆக, இவர் அவருக்கு ஆறுதல் சொல்லும்படி ஆகி விட்டது!



அடுத்தவருக்குத் தெம்பூட்ட நினைக்கிறவர்கள் முதலில் தனக்கு அந்த 'தெம்பு' இருக்கிறதா? என்பதைப் பார்க்க வேண்டும்.

ஒரு சமயம் புத்தரைத்தேடி ஒருவன் வந்தான். "இந்த உலகமே துயரத்தில் இருக்கிறது. மக்கள் மிகவும் துக்கம் நிறைந்தவர்களாக இருக்கிறார்கள். உங்களால் மட்டும் எப்படி அமைதியாகவும் மகிழ்ச்சியாகவும் இருக்க முடிகிறது?" என்று கேட்டான்.

புத்தர் சொன்னார்:

"ஒருத்தர் காய்ச்சலால் அவதிப்படுகிறபோது மருத்துவரும் அவர் அருகில் படுத்துக் கொண்டு அவதிப்படவா வேண்டும்?

"ஒரு நோயாளிக்கு உதவ வேண்டுமானால், அவரை கவனிக்கிற மருத்துவரும் நோயாளியாக வேண்டிய அவசியமில்லை.

காய்ச்சலில் கிடக்கிறவருக்கு உதவ, அவரைக் கவனித்துக் கொள்கிறவர் உடல் நலம் உள்ளவராக இருக்க வேண்டும்!"

ஒரு மருத்துவமனை.

ஒரு நோயாளி அலறி அடித்துக் கொண்டு வெளியே ஓடி வர, எதிரே வந்த ஒருவன் தடுத்து நிறுத்தி, "ஏம்ப்பா... எதுக்காக இப்படி ஓடி வர்றே?" என்றான்.

"எனக்கு ஆபரேஷன் செய்யப்போறாங்களாம்! பயமா இருக்கு... அதுதான் ஓடி வர்றேன்...!"

"இந்தக் காலத்துலே ஆபரேஷன்ங்கறது சர்வ சாதாரணம்... பயப்படாதே!"

"இது ஒரு சின்ன ஆபரேஷன்தான்... கவலைப்படாதீங்கன்னு நர்ஸ் சொன்னாங்க."

"அப்புறம் ஏன் பயப்படறே?"

"அவங்க சொன்னது என்கிட்டே இல்லே! ஆபரேஷன் செய்யப்போற டாக்டர்கிட்டே!"

ஏவி.எம்.சரவணன்



சின்ன வயதில் நான் ரொம்பவும் அரட்டை டைப். அம்மாவிடம் சண்டை போடுவது அடிக்கடி நடக்கும். எங்களுக்குள் சர்வசாதாரணமாகச் சண்டை வரும். அப்போதெல்லாம் நான் பேசும் வீர வசனம் ஒன்றுதான்: "உன்னை



அந்த நாள் ஞாபகம் 2

கவனிச்சுக்கிற மாதிரி கவனிச்சுக்கிறேன்."

இந்த வசனத்தைப் பேசி விட்டு நான் வீட்டிலிருந்து வெளியே ஓடி வருவேன். நான் அப்படி ஓடி வந்தாலே என் அம்மாவுக்கு வயிற்றில் புளியைக் கரைக்கும். நான் நேரே தோட்டத்துக்குப் போவேன். அங்கேயிருக்கும் செடிகளில் நிறையத் தண்ணீர் ஊற்றுவேன். தண்ணீர் கொஞ்சம் ஊறியதும் அவற்றைப் பிடுங்கி தலைகீழாக நடுவேன். கொஞ்ச நேரம் முன்பாக மேலே இருந்த இலைகள் பூமிக்குள் இருக்கும். இலையிருந்த இடத்தில் வேர் இருக்கும். இந்தக் குறும்பைப் பண்ணியதும், 'உன்னுடைய மரம் எல்லாம் சீக்கிரம் வளரும் பார்' என்று உரக்கக் கத்திக் கொண்டே ஓடி விடுவேன். என் அம்மாவுக்கு பூஞ்செடிகள், தோட்டம் என்றால் மிகவும் பிடிக்கும்.

இன்னொரு வகையாகவும் நான் அம்மாவை டீஸ் பண்ணியதுண்டு.

அம்மா உள்ளே இருக்கும்போது பாத்ரூம் கதவுக்கு வெளிப்புறமாகத் தாழ்ப்பாள் போட்டு விடுவேன். அதற்கு

முன்பு வீட்டில் என் சகோதரர்களும் இல்லை, வேலைக்காரர்களும் அருகில் இல்லை என்பதை உறுதிப்படுத்திக் கொள்வேன். உள்ளே இருந்து அம்மா கெஞ்சுவார்... கொஞ்சுவார்.

"இனிமே என்னை அடிப்பியா? அப்பச்சிகிட்டே போட்டுக் கொடுப்பியா?" என்று கேட்டு, 'மாட்டேண்டா கண்ணா' என்று உறுதி வாங்குவேன்.

கதவைத் திறக்கும் முன்பு இன்னொரு வாக்குறுதியையும் அம்மாவிடமிருந்து வாங்குவேன். "கதவைத் திறந்ததும் என்னை அடிக்க மாட்டியே?"

"இல்லை... அடிக்க மாட்டேன்."

இருந்தாலும் தாழ்ப்பாளைத் திறந்து விட்டு வேகமாக ஓடுவேன். அம்மா தன் வாக்குறுதியைக் காப்பாற்ற மாட்டார் என்று நன்றாகத் தெரியும். எப்படியாவது என்னைப் பிடித்து இரண்டு தட்டுத் தட்டாமல் ஓய மாட்டார். எனது இந்தக் குறும்பு தாங்காமல் அம்மா அப்பச்சியிடம் சொல்லி ஓர் அருமையான ஐடியாவைச் செயல்படுத்தினார். பாத்ரூமிலிருந்த வெளிப்புறத் தாழ்ப்பாளை எடுத்து விட்டார். அப்புறம் என் பாச்சா பலிக்கவில்லை.

நானும் என் சகோதரர்களும் வெளியே யார் வீட்டுக்கும் போக மாட்டோம். நண்பர்கள் எங்கள் வீட்டுக்கு வருவார்கள். சைக்கிள்கூட வீட்டுக்குள்ளேயே விடுவோம்.

அப்போது சினிமாவுக்குப் போவது என்பது பெரிய விஷயம். அதற்கென பிரத்யேக டெக்னிக் ஒன்றைக் கையாள்வோம்.

ஞாயிற்றுக் கிழமைகளில் அப்பச்சியின் 'மூட்' எப்படியிருக்கிறது என்பதை நோட்டம் விடுவோம். பிறகு நானும் என் சகோதரர்களும் சேர்ந்து அவரிடம் போவோம். எங்களைப் பார்த்ததுமே அவருக்கு மூக்கில் வியர்த்து விடும். ஆனாலும் வெளியே காட்டிக் கொள்ளாமல் 'என்னப்பா, என்ன மேட்டர்?' என்று கேட்பார்.

"ஒண்ணுமில்ல."

"அப்ப சரி... ஃப்ரீயாதானே இருக்கீங்க... கொஞ்சம் உடம்பை அமுக்கி விடறீங்களா?"

"சரி" என்போம்.

எங்களிடம் கொஞ்ச நேரம் வேலை வாங்கியதும் 'என்ன விஷயம்ப்பா?' என்று எங்கள் வாயாலேயே சொல்ல வைப்பார்.

"சினிமாவுக்கு போகலாம்னு!"

"சரி... ஹிண்டு பேப்பரைக் கொண்டா! அப்போதெல்லாம் எந்தப் படம் பார்ப்பது என்பது எங்கள் கையில் இல்லை. சில குறிப்பிட்ட படங்களுக்குதான் எங்களுக்கு அனுமதி.

லாரல் ஹார்டி, ஏர்ரான் ஃபிளின் டைரன் பவர் நடித்த ஆக்ஷன் படங்கள், த்ரீ மஸ்க்கிடீயர்ஸ், ஸ்டூஹஸ் பிளட் அண்ட் ஸாண்ட், கோவாடீஸ் போன்ற கிளாசிக் படங்கள், இன்விஸிபிள் மேன் போன்ற சயன்ஸ் ஃபிக்ஷன் படங்கள் போன்றவற்றுக்கு மட்டுமே அப்பச்சி பச்சைக் கொடி காட்டுவார்'. படங்களுக்கு 'ஏ' முத்திரை இல்லாமல் 'யு' முத்திரை மட்டுமே இருக்க வேண்டும் என்பது முக்கியமாகக் கவனிக்கப்பட்டது.

எம்.ஜி.ஆர். நடித்த படங்கள் என்றால் எந்தத் தடையும் இல்லை. அப்பச்சியே எங்களை அழைத்துக் கொண்டு போவார்.

நான் முதன் முதலில் சேர்ந்த பள்ளிக்கூடம் சில்ரன் கார்டன் பள்ளி.

• 'வாழ்க்கை' படத்தில் வைஜயந்திமாலா, டி.ஆர்.ராமச்சந்திரன்





• குடும்பத்தினருடன்...

அங்கே அப்போது என்னுடன் படித்தவர்களின் பட்டியல் பிரபலமான பட்டியல்.

தினத்தந்தி அதிபர் சிவந்தி ஆதித்தன், ஆனந்த விகடன் பால சுப்பிரமணியம், அவரது சகோதரி, இந்தியக் குடியரசுத் தலைவராக இருந்த ஆர். வெங்கட்ராமன், சஞ்சீவ ரெட்டி ஆகியோரின் பெண்கள், சிம்சன் சிவசைலத்தின் மனைவி மற்றும் அவரது சகோதரிகள் எல்லோரும் சில்ரன் கார்டன்தான்.

1937ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 7ம் தேதி ஏழு மாணவர்களுடன் தொடங்கிய அந்தப் பள்ளி இன்று அமோகமாக வளர்ந்திருக்கிறது.

இன்று நான் அப்பள்ளியின் நிர்வாகக் குழுவில் இடம் பெற்றிருக்கிறேன்.

நிர்வாகக் குழுவில் இருக்கும் அப் பள்ளியின் முன்னாள் மாண வன் நான் ஒருவன் தான் என்பதில் நான் மிகவும் பெரு மைப்படுகிறேன்.

அம்மா உள்ளே இருக்கும்போது பாத்ரூம் கதவுக்கு வெளிப்புறமாகத் தாழ்ப்பாள் போட்டு விடுவேன்.

என் தந்தை 'வாழ்க்கை' படத்தை எடுத்துக் கொண்டிருந்தபோது நாங்கள் மயிலாப்பூரில் வசித்து வந்தோம். ஸ்டுடியோ பக்கம் நாங்கள் அதிகம் போவதில்லை. வரக் கூடாது என்று தடையேதுமில்லை என்றாலும், அவ்வளவாக அப்போது ஆர்வம் இல்லை.

ஏவி.எம். ஸ்டுடியோவில் இப்போதுள்ள ஆர்.ஆர்.தியேட்டர் எனப் படும் ரீ-ரிக்கார்டிங் தியேட்டர் ஒன்று தான் அப்போது இருந்தது. டப்பிங், ரிகார்டிங், புரொஜெக்ஷன் எல்லாமே அங்கேதான்.

படமெடுத்து முடிந்ததும் குடும்பம் முழுவதற்கும் அந்தப் படத்தை ஆர்.ஆர். தியேட்டரில் போட்டுக் காட்டுவார் அப்பச்சி. எங்களுக்குத் தென்படும் குறைகளைச் சொல்ல வேண்டும்.

'வாழ்க்கை' படத்தைப் போட்டுக் காட்டினார். படம் முழுமையாக முடியவில்லை. முடியும் தருவாயில் இருந்தது. சின்னச் சின்ன வேலைகள் பாக்கியிருப்பதாகச் சொன்னார்கள். அன்று படம் பார்த்தவர்கள் ஒரு ஸீனில் சவுண்டு சரியாக இல்லை, இங்கே உதைக்கிறது, கதையமைப்பில் இந்த இடத்தில் தவறு என்றெல்லாம் சொல்லிக் கொண்டு வந்தார்கள். அதற்கெல்லாம் அப்பச்சி விளக்கமளித்து, இன்னும் என்னென்ன காட்சிகள் எடுக்கப்பட வேண்டும் என்றும் விவரித்தார். என் முறை வந்தது. என் கருத்தைச் சொல்ல வேண்டும். ''அவங்க சொன்னதெல்லாம் பெரிய தப்பில்லை. முழுசா படத்தை முடிக்காம அரை குறையாப் போட்டுக் காட்னீங்க, பாருங்க அதுதான் பெரிய தப்பு'' என்றேன். அப்பச்சி உட்பட அனைவரும் வாய்விட்டுச் சிரித்து விட்டார்கள்.

நான் அப்போது மயிலாப்பூர் பி.எஸ். உயர் நிலைப் பள்ளி மாணவன். எங்கள் வகுப்பு ஆசிரியர் ஜே. சந்தானகிருஷ்ணன், மாணவர்கள் மத்தியில் ஜே.எஸ்.கே. என்று பிரபலம்.

என்னுடனும், என் சகோதரர்களுடனும் ஒரு நண்பர் போலவே அவர் பழகி வந்தார்.

அவருடன் 'ராக் அரௌண்ட் த கிளாக்' என்ற திரைப்படத்தை பார்த்தது இன்னமும் மறக்க முடியாத சுவையான அனுபவம்.

(தொடரும்)

தீபாவளியும் அதுவுமாக, தலைவர் தங்கராசு இப்படி ஒரு தாறுமாறான போராட்ட அறிவிப்பைச் செய்வாரென்று அவருடைய தொண்டர்கள் எதிர்பார்க்கவில்லைதான். வறட்சி நிவாரண நிதி வேண்டி, தொப்பை நிரப்புப் போராட்டம், அவமரியாதையாகப் பேசிய எதிர்கட்சித் தலைவர் சிலைமீது கல் எறியும் போராட்டம் என, பல அருவெறுக்கத் தக்க போராட்டங்களையும், அதற்கெல்லாம் தமக்குத்தானே புகழ்ந்து அடித்துக் கொண்ட போஸ்டர்களையும் கண்ட தங்கராசுவுக்கே, இப்படி ஒரு போராட்ட அறிவிப்பை யார் சுவரொட்டியது என்று புரியவில்லை.

'சேது கால்வாய்த் திட்டம் தடையின்றி நிறைவேற, கால்வாய் கழிவுநீரில் கங்காஸ்நானம் போராட்டம் காணும் தங்கத்தலைவர் தங்கராசு அவர்களே' என்று தலைவருடைய அவலட்சணப் போஸ் ஒன்றைத் தாங்கிய போஸ்டர்கள் தீபாவளிக்கு முன்தினம் ஊர்ச் சுவரெங்கும் ஒட்டப்பட்டிருந்தன.



'எந்த பேமானி செஞ்சிருப்பான் இந்தச் சதியை?' என்று தன் கொஞ்சூண்டு மதியை தங்கராசு கசக்கி ஒரு பக்கம் ஆராய்ந்து கொண்டிருந்தாலும், இந்த சதி தன்னை எந்த கதிக்கு நாளை ஆளாக்கும் என்பதை அவர் நினைத்துப் பார்த்ததில் கதிகலங்கினார். தான் சுமோவில் வரும்போதே, மூடிய கண்ணாடிகளின் மயிரிழையில் ஊடுருவி தன் கழுகு நாசியைத் தாக்கி நடுங்க வைக்கும் தெரு சாக்கடைக் கழிவுநீரை, சற்றே மன மற்றும் மனத்திரையில் கொண்டு வந்தவருக்கு மயக்கமே வரும்போலாகியது. அந்தக் கழிவில் கங்காஸ்நான போராட்டமா?

போராட்டமென்றால் எங்கிருந்தோ பொதுபொதுவென்று தொண்டர்களும் பொது ஜனங்களும் கூடிவிடும். "தலைவா இந்தா மொதல் குடம். நீயே முதல்ல கங்காஸ்நானம் செஞ்சிட்டு ஆரம்பி" என்று விசுவாசத்துடன் ஒரு குடம் கழிவுநீரை எடுத்து தன்னிடம் பிரதான தொண்டன் கொடுப்பான். அதை தலையில் ஊற்றிக் கொண்டு... இப்படி எண்ண ஓட்டம் சென்றபோதே 'உவ்வே' என்று அவருக்குக் குமட்டியது... அடடா! இதை 'தின அசிங்கம்' பத்திரிகைக்காரன் வேறு

அகிலா கார்த்திகேயன்

பழியாக நின்று போட்டோ எடுத்து, தலைப்புச் செய்தியாகப் போட்டு மானத்தை வாங்குவான்... இப்படி தன் மரியாதை மட்டெல்லாம் நாளை சிரிப்பாய்ச் சிரிக்கப் போகிறதே! எப்படித் தப்பிக்கலாமென்று தங்கராஜ் தவிக்க, அவருடைய செல்போன் 'சிரிச்சி சிரிச்சி வந்தா சீனா தானா டோய்' என்றது. எதிர்முனையில் அவருடைய ஆப்த தொண்டன்தான்.

"தலைவா! எங்களுக்கெல்லாம் ஒரு வார்த்தைகூட சொல்லாம இப்படி திடீர்னு போராட்டம் அறிவிச்சிட்டீங்களே. நியாயமா? இந்த தபா எனக்கு தலை தீபாவளி தலைவா... திருச்சிலே என் மாமனார் வூட்லே நான் காவிரித் தண்ணியிலே கங்காஸ்நானம் செய்ய சொல்லோ, தலைவரு நீங்க காவா தண்ணிய ஊத்திகினு போராட்டம் பண்ணபோறத நினைச்சாக்க, ரொம்ப ஃபீலிங்ஸ்ஸாகீது தலைவா... என்ன பண்றது. கொஞ்சம் தண்ணி போட்டு தேத்திக்கறேன்... அப்பால திரும்பி வந்து வீடியோ காஸட்லே பாத்துகினா போவுது"

பல்லைக் கடித்தபடி செல்போனை அடக்கினார்.

சேதுபாக்கம் ஜனங்களுக்கு மற்ற ஊர் ஜனங்களுக்கெல்லாம் இருப்பது போல தண்ணீர் ஒரு பிரச்னையேயில்லை. சென்னைக்கே இங்கிருந்துதான் லாரி லாரியாக தண்ணீர் சப்ளை செய்யப்படுகிறது. ஏற்கெனவே சாராயத் தண்ணி பிஸினஸ் செய்து கொண்டிருந்த தங்கராசே, நாலைந்து லாரிகள் வாங்கி மெய்யாலுமான தண்ணீர் பிஸினஸில் இறங்கி,



தீபாவளிக்கே லேகியமா?

ஏகப்பட்ட சொத்துக்களையும் சேர்த்தாயிற்று. ஆக, சேதுபாக்கம் ஜனங்கள் தண்ணீரை தண்ணீராய்ப் புழங்க குளியல் நீர், துவையல் நீர், மாடு, வீடு கழுவல் நீர் இத்யாதி கழிவு நீர் சதுப்பு நிலத்தில் மிதப்பாகத் தேங்கி பிரச்னையாக்கின. சாக்கடை நீரை கால்வாய் வெட்டி ஊருக்கு வெளியே கொண்டுவிட, நிர்வாகம் எந்தவித ஏற்பாடும் செய்யவில்லை.


அப்போதெல்லாம் எத்திராஜ்தான் இதற்கெல்லாம் போராடினார். சென்னை வரை நடைப்பயணம் போனார். அப்படி தன் தொண்டர்களுடன் போகும்போது, வெறுமனே போகாமல் ஊரில் தேங்கியிருந்த கழிவு நீரை ஆளுக்கு ஒரு குடம் தலையில் சுமந்து கொண்டுபோய் சென்னை எல்லையில் கொட்டினார். இப்படி எத்திராஜ் செய்த போராட்டத்தினால், அவருக்கு ஒரு எஃபக்டிவ் இமேஜ் கிடைக்க ஆரம்பித்தது. இது தங்கராசுவுக்குப் பொறுக்கவில்லை. உடனே தன்பங்குக்கு நடைப் பயணம் போல, கடைப்பயணம் சென்றார். அதில் இவர் கடைகடையாக சென்று வசூல் செய்தது ஒரு புறமிருந்தாலும், ஜனங்கள் ஏதோ இவரும் போராட்டம் என்று எதையோ செய்கிறாரே என்று விட்டுவிட்டனர்.

கடைசியாக எத்திராஜ் சேதுபாக்கத்திலிருந்து சென்னைக்கு லாரியில் தண்ணீர் எடுப்பதைத் தடுத்துப் போராடியபோது தங்கராசு சற்றே தடுமாறிப்போனார். தன் பிஸினஸில் கை வைத்துவிட்டானே எத்திராஜ் என்று எழுந்த கோபத்தைவிட, இப்படி இமேஜ் டெவலப் பண்ணிக் கொள்கிறானே என்ற ஆதங்கம்தான் மேலோங்கியது.

ஒரு வழியாக சேதுபாக்கத்துக்கு சாக்கடை கால்வாய் திட்டம் வந்தேவிட்டது. இதனை அரசு அறிவிப்பதற்கு முன்பே, ஊர்ச் சுவரொட்டிகள் அறிவித்தன "கால்வாய் திட்டம் கண்ட தங்கராசு தலைவரே" என்று முழுவாய் சிரிப்போடு தங்கராசு போஸை தாங்கிய போஸ்டர்கள், எத்திராஜைப் பார்த்து ஏளனம் செய்தன. இப்படி ஊரான் உழைப்பில் போஸ்டரைக் கண்ட தங்கராசு, அந்த திட்டத்தை உருப்படியாகச் செய்யவும் விடவில்லை. இந்த பாதாள சாக்கடை காண்டிராக்டர் பூவாடை, தங்கராசு கையில் கடப்பாரையைக் கொடுத்து முதல்போடு போட வைத்து, மண் வேலையை ஆரம்பித்து, தான் முதல் போட்டு செய்யும் ஒப்பந்தப்பணியை தடபுடலாக விழா எடுத்து தொடங்கி விட்டார். ஆனால் தங்கராசு அந்த மண் வேலைக்கு பின், தன் வேலையைக் காட்டியதில் கட்டுமானப் பணியை பூவாடையால் செய்ய இயலவில்லை. தன்னால்தான் இந்த திட்டமே வந்ததென்றும், அதனால் தனக்கு ஒரு கணிசமான தொகையை வெட்டவேண்டுமென்றும் இவர் சதாய்த்ததில் பூவாடை கண்களில் கழிவு நீர் பெருக, வேலைகள் தடைப்பட்டன.

தெருவெல்லாம் தோண்டப்பட்ட பாதாள பள்ளங்களில் மழைநீரும், சாக்கடை நீரும் சங்கமமாகி, போக்கிடம் தெரியாமல் தேங்கி நின்றன.

எல்லார் வீட்டிற்கும் உள்ளே போக பாதாள பள்ளத்தின் குறுக்கே சவுக்குக் கட்டை பாலம் போடப்பட்டு, பாலகர்கள் முதல் பாட்டிகள் வரை பாலன்ஸ் செய்து கடக்க வேண்டிய சூழ்நிலை நிரந்தரமாயிற்று. தினமும் ஒரு ஆடோ, மாடோ, குழந்தையோ, கிழவியோ பள்ளங்களில்



''தமிழக சரித்திரத்தில் 'முப்பெருந்தேவியர்' என்று யாரைக் கூறுவர்?''

''செரீனா, ஜீவஜோதி, ஜெயலட்சுமி சார்!''

- சம்பத் குமாரி

விழுந்து மீட்பது சகஜமாகி போனது.

கால்வாய் வேண்டுமென்று போராடி விட்டு, இப்பொழுது சீக்கிரம் கட்டப்பட இன்னொரு முறை போராட வேண்டி யுள்ளதே என மக்கள் கவலையைப் போக்குவதுபோல, தான் இந்தக் கழிவு நீரில் கங்காஸ்நான போராட்ட போஸ்டர் இருந்தது.

ஆனால் அதே போஸ்டர் கவலை தங்கராசுவிடம் தாவி யிருந்தது.


"இத பாரு... உனுக்கு கிறுக்கு எதி னாச்சும் பிடிச்சுப் போச்சா... நாளும் கெழமை அதுவுமா சாக்கடைத் தண்ணிலே குளிக்கப் போறயாமே... ஏற் கெனவே உடம்பு சுப் அடிக்கும்... வாயிலே பழந்துணியை அடைச்சகினு குளி... பாழாப்போற தண்ணியைக் குடிச்சி கிடிச்சி வைக்கப் போற... ஏகப்பட்ட சாராயம் குடிச்சி வவுரு ஏற்கெனவே கெட்டுப்போய் கெடக்குது" தங்கராசுவின் மனைவி பீதியைக் கிளப்பினாள்.

திரும்பவும் போன் ஒலித்தது. எரிச் சலுடன் எடுத்தார்.

"தலைவா! உன் வூட்டு முன்னால சாமியானா பந்தல் போட்டுகிறோம். மைக் செட் எல்லாம் ரெடி பண்ணிட்டோம். நாளைக்கு நாலு மணிக்கெல்லாம் வந்துடு றோம். அண்ணிகிட்டே சொல்லி நாலைஞ்சு கொடத்தை புளிபோட்டு பளிச்சினு துலக்கி வைக்கச் சொல்லுங்க. ஜனங்க எல்லாம் வந்த பிறவு போராட் டத்தைத் தொடங்கலாம்" எதிர்முனையில் யாரோ விஷமிகள் இவருடைய தொண் டர்கள் போல எள்ளிநகையாடிவிட்டு வைத்தனர்.

தங்கராசு சற்று தடுமாறித்தான் போனார். அந்த நள்ளிரவில் வீட்டுக்கு வெளியே ஓடினார். தடபுடலாக சீரியல் செட்டோடு, கழிவு நீர் கங்கா ஸ்நான போராட்ட மேடை ஜொலித்தது. போதாத குறைக்கு அங்கங்கே ஏகப்பட்ட சோப்பு கம்பெனி விளம்பரங்கள்! படு பாவிகள் ஸ்பான்ஸர் செய்கிறார்களாம்.

தங்கராசுக்கு யாரோ எத்திராஜ் போன்ற எதிரிகளின் சதிதான் இது என்று தெரிந்தது. கூடவே அந்த ராத்திரி நேரத்தில், பாதாள தேக்க கழிவு நீரில் ஒரு கிழவன் 'ஒன் பாத்ரூம்' போய் கொண்டி ருந்ததும் தெரிந்தது. ஐயோ! தன்னை



'Englishல் எது கடைசி எழுத்து?"

"Z"

''இல்லை, H. இங்கிலீஷ் என்ற வார்த்தையில அதுதானே கடைசியா இருக்கு!"

- எம். அசோக்ராஜா

அபிஷேகம் செய்யப்போவது இந்த அசுத்த நீரா என்ற எண்ணமே குமட்டி எடுத்தது. 'இந்தச் சதியிலிருந்து தப்ப வேண்டுமே' தங்கராசுவின் சாக்கடை புத்திக்கு தெரியாததா?

உடனே பூவாடைக்கு 'கால்' போட்டு அவர் காலில் விழுந்தார். வந்தாயா வழிக்கு என்று அவரும் ஒரு சமாதான உடன்படிக்கை செய்து கொண்டார்.

தீபாவளி! எதற்கெல்லாம் கூடுவது என்ற விவஸ்தை தெரிந்திருந்தாலும் ஜனங்கள் என்னமோ தங்கராசுவின் தவிப்பைப் பார்ப்பதற்கென்றே திரண்டு வந்தாற்போலிருந்தது. கூடவே தொண் டர்கள் கட்டுக்கட்டாக பட்டாசுகளுடன் போராட்டத்தைக் கண்டுகளிக்க வந்திருந் தனர்.

அனைவரும் எதிர்பார்த்த தங்கராசு மேடைக்கு வர ''கழிவு நீரில் கங்கா ஸ்நானம் காணும் தலைவர் தங்கராசு' என்று ஒரு கூட்டம் எடுத்துக் கொடுக்க 'வாழ்க வாழ்க' என்று மற்றொரு கூட்டம் எசு கூப்பாடு போட்டது. அந்தச் சமயம் மாலையும் கையுமாக மேடை ஏறிய காண்டிராக்டர் பூவாடை, தங்கராசுவுக்கு மாலையிட்டு ஒரு பொன்னாடை போர்த்தினார். போராட்டத்தைதான் துவங்கி வைக்கிறாரோ என்று ஜனங்கள் கைதட்ட, பூவாடை மைக்கைப் பிடித்தார்.

"மகா ஜனங்களே! இந்தத் திட்டம் இடையில் தடைப் பட்டதற்கு நான்

மிகவும் வருந்துகிறேன். தலைவர் தங்கராசு இப்படி ஒரு போராட்டம் அறிவித்தது அவருடைய தியாக உள்ளத்தைக் காட்டு கிறது. நான் அவருடைய மக்கள் நலம் பேணும் ஆர்வத்தை மிகவும் பாராட்டு கிறேன். நேற்று இரவு நான் இவரைத் தொடர்பு கொண்டு பேசி இந்த சாக்கடை

கால் + கால் நடைகள்!

திருச்சி பகுதியில் கடந்த சில நாட்களாக ஒரு வித்தியாசமான அணிவகுப்பு நடந்து வருகிறது. சாம்ராவ் விட்டல் பாபர் என்ற பெரியவரும், அவர் குடும்பத்தாரும்



ஏழெட்டு மாடுகளை ஓட்டி வருகிறார்கள். வழியெங்கும் மக்கள் அந்த மாடுகளை பய பக்தியுடன் வணங்கி ஐந்தும் பத்துமாக கொடுக்கிறார்கள். காரணம், அந்த மாடுகளில் ஒன்றுக்கு ஏழு கால்கள். இன்னொன்றுக்கு ஆறு கால்கள். மற்றொன்றிற்கு ஐந்து கால்கள்!

அதோடு ஆணுமில்லாத, பெண்ணுமில்லாத மாடு ஒன்றும் இந்த அணிவகுப்பில் உண்டு!

மகாராஷ்டிர மாநிலத்திலுள்ள கோவர்த்தன கோசாலையிலுள்ள மாடுகளாம் இவை. சாம்ராவ் விட்டல், வழியெங்கும் கிடைக்கும் பணத்தை கோசாலைக்கு அனுப்பி வைக்கிறார்!

- இருள்நீக்கி

படம் : லோட்டஸ் சுரேஷ்

கட்டுமான வேலைகளை உடனே முடித்துத் தருவதாக உறுதியளித்தேன். அதன்படி இந்த போராட்டத்தை அவர் கைவிடுகிறார் என்பதை அறிவிக்கிறேன். மேலும் மக்கள் நலனில் இத்தனை அக்கறை கொண்ட தலைவருக்கு, உங்கள் எல்லார் முன்னும் மங்கல ஸ்நானம் செய்வித்து, இந்தப் பட்டாடையை அணிவித்து கௌரவிக்க ஆசைப் படுகிறேன்" என்று தனக்கு தங்கராசு ஏற்கெனவே சொல்லிக் கொடுத்திருந்த டயலாக்கை பூவாடை எடுத்துவிட்டார். அதன்படி வாசனை திரவியங்கள் மணக்க, வெதுவெது வெந்நீரில் மேடையிலேயே தங்கராசு குளிப்பாட்டப்பட்டு, பட்டு வேட்டி பட்டுச் சட்டை கட்டப்பட்டவராய் காட்சி தந்தார். 'ஏண்டா! எனக்கே சதி செய்றீங்களா' தீபாவளிக்கே லேகியம் கொடுக்கறீங்களா' என்று ஏகத்தாள புன்னகையோடு அவர் நின்றார்.

கூடியிருந்த பொது ஜனங்களின் நினைப்பு வேறுவிதமாக இருந்தது. திட்டமிட்டு தாங்களே அடித்து ஒட்டிய தீபாவளி போஸ்டரினால், நின்றுபோன கால்வாய் திட்டம் மறுபடியும் பிழைத்துக் கொண்டதில் அவர்களுக்கு மகிழ்ச்சியே! இருந்தாலும் தங்கராசு தங்கள் சதியிலிருந்து தப்பிப் பிழைத்ததில் சற்று ஏமாற்றமாகவே இருந்தது.

அபிமான நடிகரின் தீபாவளி ரிலீஸ் படம் சொதப்பலாகி ரசிகர்களுக்கு ஏற்படுத்தும் ஏக்கத்துடன், தங்கராசுவின் கழிவுநீர் ஸ்நானத்தைக் காணக் கொடுத்து வைக்காத ஆதங்கத்தோடு அங்கிருந்த ஜனங்களும் தொண்டர்களும் நகர்ந்து கொண்டிருந்தபோது, முதலில் 'மளுக்' கென்றும், தொடர்ந்து 'தொபகடீர்' என்றும் ஓசை கேட்க, திசை திரும்பிப் பார்த்தனர்.

மெகா தெனாவட்டாக தான் சதியை வென்ற மிதப்பில் தங்கராஜ் தாவித் தாவி சவுக்குக் கழி பாலத்தில் சென்றபோது, நோஞ்சானாக இருந்த அது மளுக்கென்று உடைய, இவர் தொபகடீரென்று குழியில் விழுந்திருந்தார்.

"தலைவா! சொன்ன வாக்கைக் காப்பாத்திட்டியே" என்று குரல் கொடுத்தபடி தொண்டர்கள் பட்டாசுக் கட்டுகளைக் கொளுத்த, சேரும் சகதியும் அப்பியபடி எழுந்து நின்ற தலைவரின் காதுகளில் வெடிச் சப்தம் விழவாய்ப்பில்லாமல் போனது.

இருந்தாலும் 'போஸ்டர் நின்று கொல்லும்' என்ற நீதி தங்கராசு மனதில் நிலைக்காமலில்லை. ●



மைக்ரோவேவ் மாமி

ஹாய்!

எல்லோருக்கும் இந்த மைக்ரோவேவ் மாமியோட ஸ்பெஷல் தீபாவளி வாழ்த்துகள்!

டைரக்டா மேட்டருக்கு வர்றேன். பொதுவா என் பையன் தன் ஃபிரெண்ட்ஸோட பீஸா ஹட், பேஸ்கின் ரோபின்ஸ்னு போயி நல்லா ரவுண்டு கட்டிட்டு வருவான். ஆனா போன வாரம் பூரா மழை பிச்சி எடுத்துச்சோன்னோ, அதனால அவன் வெளில போகவே இல்ல. வீட்டுக்குள்ளயே இருந்துகிட்டு எதுனா செஞ்சிக் கொடுத்தாத்தான் ஆச்சன்னு அடம்பிடிக்க ஆரம்பிச்சுட்டான். ஆனா பாருங்கோ! அவனுக்கு நம்ம வீட்டு பட்டாணி சுண்டல், வடை, பஜ்ஜின்னா வேப்பங்காயா கசக்கும். அதனால பீஸா ரேஞ்சுக்கு எதாவது செஞ்சி கொடுத்தாத்தான் திரும்பிப் பார்ப்பான். அதுக்காக யோசிக்கறப்போதான் ஞாபகத்துக்கு வந்தது, என்னோட பெசன்ட் நகர் ஓர்ப்படி சொன்ன ஐட்டம். அதுதான் சரியான சாய்ஸ்னு முடிவு பண்ணி, செய்து கொடுத்தேன். அவனுக்கு அது ரொம்பவும் பிடிச்சுப்போக - அம்மா! இனிமே பீஸா ஹட்டுக்கு போகவே அவசியமில்லம்மான்னு சொல்லிட்டான்னா பார்த்துக்கோங்களேன்.

சரி, சரி. பில்ட்-அப்பை நிறுத்திக்கறேன். அந்த ஐட்டம் பேரு 'பாஸ்தா'. இது ஒரு இட்டாலியன் டிஷ், தெரியுமோ. இப்போ பாஸ்தாவை பிரிப்பேர் பண்ற முறையை சொல்லப் போறேன். வெடிச்சத்தத்துல காதுல சரியா விழலேன்னு சொல்லிடாதீங்கோ! கவனமா கேட்டுக்கோங்கோ! ஆமாம்!

இந்த பாஸ்தாங்கறது மைதாவால செய்யப்பட்டது. இது நம்ப ஃபுட் வேர்ல்ட்லயோ, மெக்ரென்னட்லயோ ஈஸியா கிடைக்கிறதுதான். அதை வாங்கிண்டு வந்து, நல்லா தளதளன்னு கொதிக்கிற தண்ணீர்ல போட்டு, நன்னா வேக விட்டு எடுத்து, வடிகட்டி ஆறவைச்சிடுங்கோ.

அடுத்து பேன்ல ஒரு டீஸ்பூன் ஆலிவ் ஆயிலை விட்டு, அதுல ஏற்கெனவே நறுக்கிய பூண்டு, வெங்காயத்தைப் போட்டு நன்னா வதக்கணும். (இதுகள ஓட்டலுக்குப் போகாமத் தடுக்க ஒரு வேளைக்கு சகிச்சுக்கணும்தான்) அப்புறம் அதுல தக்களி விழுத டொமேட் போட்டு நன்னா வேகவைக்கணும்.

பத்து நிமிஷம் வெந்ததுக்கப்புறம் ஏற்கெனவே வேக வைச்சிருக்கோமே, அந்த பாஸ்தாவை அந்த 'பேன்'ல கலந்து நல்லா வேக வைக்கணும். நல்லா வெந்துடுத்தான்னு பார்த்து, அதுல நமக்குத் தேவையான டொமேட்டோ சாஸ், வெஜிடபிள்ஸ், 'சீஸ்' எதையாவது கலந்துக்கலாம். அவ்ளோதான், பாஸ்தா ரெடி! அப்படியே சாப்பிட வேண்டியதுதான்.

அப்புறம்தான் விசாரிச்சேன். அந்த பாஸ்தாவை என் ஓர்ப்படி பையன் பெசன்ட் நகர் ஈடன் ரெஸ்டாரெண்ட்ல சாப்பிட்டானாம். இன்னொரு விஷயம் தெரியுமோ! இந்த பாஸ்தாவுக்கு நம்ம ஃபைவ் ஸ்டார் கனிகா, கிரிக்கெட் பிளேயர் ராபின்சிங் எல்லோரும் பரம ரசிகாளாம்!

"மனோகரா" படம் அதைத் தயாரித்து வெளியிட்டவர்களுக்கும், திரைப்பட உலகத்தைச் சேர்ந்தவர்களுக்கும் வெற்றி அளித்திருப்பதாகச் சொன்னால் மட்டும் போதாது.

"மனோகரா" படம் பழைய பாரத நாட்டின் உயர்ந்த பண்புகள் எல்லாவற்றுக்கும் வெற்றி.

முக்கியமாக, "மனோகரா" பாரதப் பெண் குலத்தின் சிறப்பியல்பான கற்பு நெறிக்கு வெற்றி; பதிபக்திக்கு வெற்றி; "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்னும் மூதுரைக்கு வெற்றி; நேர்மைக்கு வெற்றி; நல்ல ஒழுக்கத்துக்கு வெற்றி; பொறுமைக்கு வெற்றி; சகிப்புத் தன்மைக்கு வெற்றி; தாய்மைக்கு வெற்றி; சத்தியத்துக்கும் தர்மத்துக்கும் வெற்றி.

சூதும் வாதும், நெறியற்ற நடத்தையும், வஞ்சகமும் வேஷமும் சில காலம் வெற்றியடைவது போல் காணப்படலாம்; திரும்பத் திரும்ப அவையே வெற்றி பெறுவது போல் தோன்றலாம், ஆனால் இறுதியில் அத்தீய சக்திகள் மடிந்து, தூய ஒழுக்கமும் நெறி தவறாத நேர்மையுமே வெற்றி பெறுதல் உறுதி என்பதை, "மனோகரா" படம் தெள்ளத் தெளிய எடுத்துக் காட்டுகிறது.

அது மட்டுமல்ல; மேற்கூறிய பாரத நாட்டுப் பழைமையான பண்புகளையே நம் மக்கள் பெரிதும் விரும்புகிறார்கள் என்பது, இப்படத்தின் அமோகமான வெற்றியிலிருந்து நிரூபணமாகிறது.

பாரத நாட்டுப் பண்புகளுக்குள்ளே அச்சு வேர் போன்ற பண்பு யாது?

பெண்குலத்தின் கற்பு நெறிதான்.

சீதை, சாவித்திரி, நளாயினி, தமயந்தி, கண்ணகி போன்ற பெண்ணரசிகளையே நமது பாரத நாட்டுப் பெண் குலத்துக்கு இலட்சியமாக எடுத்துக் காட்டுவது வழக்கம்.

ஆண் மக்கள் நெறி தவறி நடந்தாலும், பெண் குலத்துக்கு அநீதிகளும் கொடுமைகளும் இழைத்தாலும், அவற்றைப் பொறுமையுடன் சகித்துக் கொண்டு, கைப் பிடித்த கணவனிடம் பக்தி குன்றாமலிருப்பது தான், பாரத நாட்டுக் கற்பு நெறியின் தலை சிறந்த அம்சம்.


இத்தகைய கற்பரசிகளின் தெய்வீக பரம்பரையில் வந்தவள் புருஷோத்தம ராஜனின் தர்ம பத்தினியாகிய பத்மாவதி.

அம்மம்மா! அவளுடைய கற்பின் மகிமையைத்தான் என்னவென்று சொல்வது? பதி பக்தி என்னும் இமயப் பெரு மலையின் எவரெஸ்ட் சிகரத்தின் மேல் அவள் ஏறி நிற்கிறாள்!

அமரர் கல்கி



பட்ட மகிஷியாகிய பத்மாவதியை மூலையில் ஒதுக்கிவைத்துவிட்டு, மாயமோகினியாகிய



வஸந்த சேனையைப் புருஷோத்தம ராஜன் சிங்காதனத்தில் தன் அருகில் அமர்த்திக் கொள்கிறான். வஸந்த சேனையின் துர்ப் போதனையினால் பத்மாவதியை மிக மிகக் கேவலப்படுத்துகிறான்; கடைசியாக அவளைப் பாதாளச் சிறையிலேயும் தள்ளுகிறான்.

மனோகரன் தன்னுடைய அருமைத் தாய்க்கு இழைக்கப்படும் அநீதிகளைக் கண்டு, அடிக்கடி பொங்கி எழுகிறான். வஸந்த சேனையைத் தண்டிக்கவும், அவளுடைய மாய வலையில் விழுந்த தந்தைக்கு அறிவு புகட்டவும் விரும்புகிறான்.

ஒவ்வொரு தடவையும் பத்மாவதி தன் மகனைத் தடுத்து நிறுத்துகிறாள்; அவனுக்குப் பொறுமை

யைப் போதிக்கிறான்.

பத்மாவதியை 'வேசி' என்றும், மனோகரனை 'வேசிமகன்' என்றும் வஸந்தசேனை ஏசியபோது கூடப் பத்மாவதி பொறுமை என்னும் நகையணிந்து' விளங்குகிறாள்; மகனையும் கட்டுப்படுத்தி அடங்கியிருக்கச் செய்கிறாள்.



கடைசியாக, பத்மாவதியின் கணவனைச் சிறையிலே இட்ட பிறகுதான், அந்தப் பெண்ணரசி ''பொறுத்தது போதும்; பொங்கி எழு!'' என்று மகனுக்குக் கட்டளை இடுகிறாள்.

இத்தகைய அற்புதமான கற்பு நெறி, எவ்வளவு அரிய

மனோகரா'வின் வெற்றி!

சக்தி வாய்ந்தது என்பதே இப்படத்தின் சிகரமான சட்டமாக அமைந்திருக்கிறது.

கற்பரசியின் வாயிலிருந்து பிறக்கும் சொல், எவ்வளவு தெய்வீக சக்தி வாய்ந்தது என்பது அந்தக் கட்டத்தில் நிரூபிக்கப்படுகிறது.

தந்தையின் கட்டளையினால் மனோகரன் இரும்புச் சங்கிலிகளால் பிணைக்கப்பட்டு இராஜ சபைக்கு வரும் காட்சி, நாடக மேடையிலேயே மிகப் பிரசித்தி பெற்றதாகும்.

இந்தத் திரைப் படத்தில் வரும் மனோகரன் இராஜசபையில் நீண்டதொரு சொற்பொழிவு நிகழ்த்துகிறான். அதைச் 'சொற்பொழிவு' என்று சொன்னால் போதாது. ஏனெனில், சாதாரணப் பேச்சுக்களைக் கூட இந்தக் காலத்தில் 'சொற்பொழிவு' என்று குறிப்பிடுகிறோம்.

மனோகரன் இராஜ சபையில் பேசும் பேச்சைச் 'சொற் பிரவாக', 'சொல் வெள்ளம்', 'சொற்பிரளயம்', 'சொல் சண்டமாருதம்' என்றெல்லாம் சொன்னாலும் திருப்தி உண்டாகவில்லை.

'சொல் அம்பு மழை', 'சொல் குண்டு மழை', 'அணுகுண்டுச் சொல் மாரி', 'எரிமலைச் சொற் பொழிவு', என்றெல்லாம் சொல்லக் கூடிய விதமாக, மனோகரன் தீப்பொறி பறக்கும் காரசாரமான சொற்களைக் கொட்டித் தீர்க்கிறான்.

தமிழ் மொழியை எவ்வளவு வன்மையாகக் கையாள முடியும் என்பதற்கு, மனோகரனின் இராஜ சபைப் பேச்சு நல்ல எடுத்துக்காட்டு.

ஆனால் இவ்வளவு வன்மையான பேச்சும் காரியத்துக்கு உதவாமற் போகிறது.

அதனால் கேட்டவர்களின் மனமும் மாறவில்லை; வேறு பயனும் விளையவில்லை.

அடுத்தாற் போல், கற்பரசியாகிய பத்மாவதியோ ஒரு சில சொற்களைத்தான் சொல்கிறாள்.

"சங்கிலி அறுந்து விழட்டும்!"
"சங்கிலி அறுந்து விழட்டும்!"
"சங்கிலி அறுந்து விழட்டும்!"

என்று திரும்பத் திரும்ப மந்திரம் ஜபிப்பது போல் ஆவேசத்துடன் சொல்லுகிறாள்.

மனோகரனைப் பிணைத்திருந்த இரும்புச் சங்கிலிகள் அறுந்து விழுந்தே விடுகின்றன!

ஆகா! படம் பார்ப்பவர்கள் அச்சமயம் எவ்வளவு பரவசமடைந்து கொட்டகை அதிரும்படி கைதட்டி ஆர்ப்பரிக்கிறார்கள்!

- 'கல்கி களஞ்சியம்' தொகுப்பிலிருந்து, வானதி பதிப்பகம்

படம் உதவி : **ஃபிலிம் நியூஸ் ஆனந்தன்**

அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டியில் பிரசுரத்துக்குத் தேர்வான கதை



ஆசை ஆசையாய்...

"பாரத்வாஜ கோத்ரம், புனர்வசு நக்ஷத்திரம், மிதுன ராசியில் பிறந்த சிசுவிற்கு, 'ராம்பரத்' என்று நாமகரணம் செய்யப்படுகிறது." ஸாஸ்திரிகளின் குரல் கரகரப்பாய் ஸமஸ்கிருதத்தில் அறிவித்தது... "குழந்தைக்கு எல்லோரும் அக்ஷதையைப் போட்டு ஆசீர்வாதம் பண்ணுங்கோ" என்ற போது அனிச்சையாய் நீண்ட தனது கரங்களை சுஜாதா அப்படியே உள்ளிழுத்துக் கொண்டாள். அக்ஷதையோடு சேர்த்து என் துரதிருஷ்டத்தையும், குறையையும் குழந்தைக்குத் தூவ வேண்டாம். மனதிற்குள் குழந்தை, ஆயுசோடும் அதிருஷ்டத்தோடும் இருக்க பூரணமாய்ப் பிரார்த்தித்துக் கொண்டாள். அதைத் தொடர்ந்து, அனைவரும் குழந்தையின் காதில் அந்தப் பெயரை மூன்று முறை சொல்வதற்காகப் போக, சுஜாதா அதற்கும் சற்றே பின் வாங்கினாள்.

குழந்தை நல்ல சிவப்பு. தாய் கௌசல்யாவின் முகத்தில் புதுத் தாய்க்கே உரிய பூரிப்பும், மகிழ்ச்சியும் தாண்டவமாடியது.

சுஜாதாவிற்கு, கௌசல்யா இடத்தில் ஒரு நிமிடம் தன்னை வைத்துப் பார்க்க ஆவல் மிகுந்தது. கூடவே தனது கணவன் ஆனந்தின் பெருமித முகமும் சேர்ந்து கொண்டது. தனக்கு இல்லை என்று இறைவனால் துர்சாபம் பெற்று பூமிக்கு அனுப்பி, பதினாலு வருட இல்லற வாழ்க்கைக்குப் பிறகும், இந்த மாதிரி கற்பனைகள் ஏன் அவ்வப்போது குறுக்கிடுகின்றன என தலையை உலுக்கிக் கொண்டாள் சுஜாதா.

"என்ன சுஜா? மலைச்சிப் போய் நின்னுட்ட? என்ன பண்றது, மழை பெய்யறதும், மகன் பொறக்கறதும் மகேசனுக்குத்தான் தெரியும்பா. நோக்கும் இப்ப ஒரு கொழந்த இருந்திருந்தா 10 - 12 வயசாயிருக்கும்; பூணல் போட்டுருப்ப."

கூட்டத்தில் யாரோ போகிற போக்கில் கேட்க, சுஜாதா ஒரு கணம் நொறுங்கிப் போனாள். தலை சுற்றியது.

அதற்கு மேல் அங்கே நிற்க முடியவில்லை. ஆட்டோ பிடித்து வீட்டுக்கு வந்து விட்டாள்.

தலைசுற்றல் இன்னும் நின்றபாடில்லை. சாப்பிட ஆர்வமில்லை. ஃப்ரிட்ஜிலிருந்து லெமனேடை எடுத்துக் கொண்டு, முதுகுக்கு தலையணையைக் கொடுத்தபடி சாய்ந்து உட்கார்ந்தாள். இரண்டு வாய் லெமனேட் உள்ளே போனதும், சற்று அயர்ச்சி குறைந்தாற்போல இருந்தது.

நன்றாக நினைவிருக்கிறது. கல்யாணமான இரண்டாவது வருடத்தில் ஒரு முறை இதுமாதிரி தலை சுற்றல், வாந்தி என வந்தது. நாளும் ஒரு வாரம் தள்ளிப் போக, இவள் ஓரே வெட்கப் பார்வையும், ஆனந்த் விஷமச் சிரிப்புமாய் ஒரு வாரம் கண்ணா மூச்சி ஆடிவிட்டு ஐந்தாம் நாள் டாக்டரிடம் போனால், ''நோ மிஸஸ் சுஜாதா! இது வெறும் மிஸ்ட் பீரியட் அவ்வளவுதான். அசோஸியேட்டட் டைஜஷன் ப்ராப்ளம்ஸ்'' என்று குடும்ப டாக்டர் கிருஷ்ணகுமாரி நிதானமாய்ச் சொல்லி அனுப்பி விட்டாள். காற்றுப் போன பலூன் மாதிரி இவள் முகம்தான் ஆனதே தவிர, ஆனந்த் பெரிதாய்க் காட்டிக் கொள்ளவில்லை.

இவளது நிலையை உணர்ந்த குடும்ப டாக்டர் கிருஷ்ணகுமாரி ஒரு நாள் திடீரெனக் கூப்பிட்டாள்.

''சுஜா! கொஞ்சம்



க்ளினிக் வாயேன். என்கிட்ட ஒரு பத்து நாள் குழந்தை வந்து சேர்ந்திருக்கு. பிடிச்சிருந்தா தத்து எடுத்துக்கோ. ஆனந்த் இருக்காரா? அவரையும் கூட்டிக்கிட்டு உடனே வா. உனக்காக அதை யாருக்கும் தராமல் வெச்சிருக்கேன்."

ஆனந்தைக் கூட்டிக் கொண்டு உடனே ஓடோடினான். ஆனால் ஊரிலிருக்கும் மாமியார்காரிக்கு இந்த யோசனை பிடிக்காததால், குழந்தையைத் தத்தெடுக்க முடியவில்லை.

இலேசாய் பசிக்கிற மாதிரியும் இருந்தது. தலை சுற்றலும் குறையவில்லை. மெதுவாய் சுவரைப் பிடித்துக் கொண்டு நடந்து போய் ஃபிரிட்ஜிலிருந்து காரட் மட்டும் எடுத்து கட் பண்ணிக் கொண்டாள். நூடுல்ஸ் பண்ணினாள். மசாலா பாக்கெட்டைப் பிரித்த போது குமட்டிக் கொண்டு வந்தது. திரும்ப ஒரு மூடி எலுமிச்சையைப் பிழிந்து கொண்டாள். கப்பில் எடுத்துக் கொண்டு வந்து டி.வியை ஆன் செய்து, வால்யூம் குறைத்து வைத்துக் கொண்டு சாய்வு நாற்காலியில் சாய்ந்து கொண்டாள். ரெண்டு ஸ்பூன் உள்ளே போயிருக்கும். அப்படியே ஸிங்கில் லெமனேடையும் சேர்த்து வாந்தி எடுத்து விட்டாள்.

ஏழு மணி சுமாருக்கு ஆனந்த் வந்தபோது ரொம்ப பலவீனமாக உணர்ந்தாள். மோர் கரைத்துத் தரச் சொல்லி சாப்பிட்டாள்.

"டாக்டர்ட்ட போயிட்டு வந்துருவோம் சுஜா. எதாவது ஃபுட் பாய்ஸனாயிருக்கப் போறது" என்றான்.

க்ளினிக்கில் பெரிதாய்க் கூட்டமில்லை. ஆனாலும் டாக்டர் கிருஷ்ணகுமாரி ஆபரேஷன் தியேட்டரில் இருப்பதாய்ச் சொல்ல, அஸிஸ்டெண்டிடம் காண்பிக்க வேண்டியிருந்தது. அவள் சுஜாவிற்குப் பழக்கமில்லாதவள். எல்லாம் செக் செய்தாள்.

"பி.பி.நார்மல்! ஒண்ணும் ப்ராப்ளம் இருப்பதாகத் தெரியவில்லை. பீரியட்ஸ் ரெகுலரா இருக்கா."

"எப்பவும் ரெகுலர்தான். இப்ப பதினைந்து நாள் தள்ளியிருக்கு. பட் சில சமயம் இது மாதிரி மிஸ்ட் பீரியட் வரும், ஒத்தியும் போகும்."

சந்தேகங்களுக்கு இடமில்லாமல் தெளிவாய்ப் பேசியது அவளுக்கே ஆச்சர்யமாக இருந்தது.

"அப்ப ஒரு யூரின் ஸாம்பிள் காலயில கொண்டு வந்து குடுங்க ஸிஸ்டர்!"

வீட்டுக்கு வந்து அம்மாவுக்கு போன் செய்ய, உடனே கிளம்பி வந்துவிட்டாள்.

மறுநாள் காலை ஆறு மணிக்கு டாக்டர் கிருஷ்ண குமாரி கூப்பிட்டாள். ரிஸல்ட் பாஸிடிவ் என்றபோது, சுஜாதா சுத்தமாய் உணர்ச்சியே காட்டவில்லை. ஆனந்த் தான் இலேசாய் முறுவல் செய்தான். 'முப்பத்தைந்து வயதைத் தாண்டிய பிறகு உண்டாகி இருக்கிறாளே' என்று தோன்றியிருக்க வேண்டும்.

"பட் சுஜா! ஒரு மூணு மாசம் கேர்ஃபுல்லா இரு! ரொம்ப ஸ்ட்ரெயின் வேண்டாம். வாந்தி வந்தா கூட

விஜயலக்ஷ்மி ஸ்ரீதர்

நல்லா, ஹெல்தியா சாப்பிடு, சரியா? அடுத்த மாசம் செக்கப்புக்கு வா. ஆல் தி பெஸ்ட்" டாக்டர் கிருஷ்ணகுமாரி இப்போதும் அதே இதம்; அதே நிதானம். ஆனந்த் கையைப் பற்றிக் குலுக்கினாள்.

இரவு படுக்கையறையில் ஏ.ஸியை ஆன் செய்துவிட்டு, கொஞ்ச நேரம் அம்மாவின் மடியில் தலை வைத்துப் படுத்திருந்தாள். அம்மாவும் இவள் மனதை அறிந்தாற்போல ஒன்றுமே பேசவில்லை. தலையைத் தடவிய படி இருந்தாள்.

"முப்பத்தெட்டு வயசுலெல்லாம் பொறக்கறதுடி. நான்தான் சொன்னேனே" என்றாள்.

"நெறய ஸ்வாமிய வேண்டிக்கோ. ஸ்லோகம் படி, மனச சந்தோஷமா வெச்சுக்கோ, எதுக்கெடுத்தாலும் விழுந்து புரள்றத விடு."

மூன்றரை மாதங்கள் வரை முடிந்த வரையில் கர்ப்பத்தைப் பற்றி நினைக்காமல் மனதை அமைதியாய் வைத்துக் கொள்ள முயன்றாள் சுஜா. நிறைய பழங்கள் சாப்பிட்டாள். புத்தகங்கள் படித்தாள். ஸ்லோகம் சொன்னாள். எப்போதும் போல் நார்மலாக கர்ப்பம் தவிர்த்து, வேறு விஷயங்கள் மட்டும் ஆனந்திடம் பேசினாள். இயல்பாய் இருக்கச் சொல்லிவிட்டு, அம்மா தன் வீட்டுக்குப் போனாள். நான்கு மாதம் முடிவுற்ற போது ஆனந்தின் அம்மா வந்தாள். இலேசாய் மேடிட்ட வயிற்றைப் பார்த்து "பெண்தான் பிறக்கும்னு நெனக்கிறேன். சமத்தா பிள்ளையப் பெத்துக்கப் பாரு" என்றாள். அன்றிரவு ஆனந்திடம், "நமக்கு பிள்ளை பொறக்குமா, பொண்ணு பொறக்குமா ஆனந்த்?" என்று கேட்டுவிட்டு கண்களுக்குள் உற்றுப் பார்த்தாள். "எதா இருந்தாலும் ஓகேதான்" என்று இறுக்கமாய் அவளை அணைத்துக் கொண்டபோது



"பால்காரர்கள் சங்கம் வசூல் ராஜா படத்தை ரொம்பப் பாராட்டியிருக்காமே"

"ஆமா, 'கலக்கப் போவது யாரு'ங்கிற பாட்டுக் காகத்தான்!"

- எஸ். தங்கராஜ்

முதல் முதலாய் சிலிர்ப்பாய், அதிதமாய் ஒரு உணர்வு எழுந்தது. பிள்ளையா? பெண்ணா? யோசித்தால் இரண்டுமே வேண்டும்போல் தோன்றியது சுஜாவிற்கு. "ஆனந்த்! ட்வின்ஸ் பொறக்க சான்ஸ் இருக்கா நமக்கு?" "ம். பொறக்கும், ஒரே கல்லுல ரெண்டு மாங்காய் அடிச்சுடவா. கவலைப்படாத" என்றபோது அவள் பாஸிடிவ் எண்ணங்களை நினைத்து நிறைவாய் இருந்தது.

ஆறாம் மாதம் ஆரம்பத்திலேயே மறுபடி அம்மா வந்துவிட்டாள். இரண்டு பக்கமும் நெருக்கமான உறவுகளை மட்டும் கூப்பிட்டு வளைகாப்பு செய்தார்கள். வளையடுக்கிக் கொள்ளும்போது, ஆனந்தும் பக்கத்திலேயே இருந்தது சற்றே கூச்சமாக இருந்தது. அம்மா ஒரு ஜோடி சிவப்புக்கல் வளையல் போட்டாள்.

ஒன்பதாம் மாத செக்கப்பில் டாக்டர், "டு வீக்ஸ் பிஃபோர் டியூ, அட்மிட் ஆயிடு. அநேகமா ஸிஸேரியன்தான் இருக்கும். ரிஸ்க் வேண்டாம்." காலண்டர் பார்த்து, "அடுத்த பத்தாம் தேதி அட்மிட் ஆயிடு" என்றாள். அம்மா பஞ்சாங்கத்தைப் பார்த்து, "யோகம் நன்னாருக்கு, தேவலை" என்றாள்.

ஆனந்த் அவர் அம்மா, அப்பாவிற்கு சொல்லி மாதக்கடைசியில் வரச்சொன்னார்.

பன்னிரண்டாம் தேதி காலை, "ஹார்ட் பீட் குழந்தைக்கு குறைவாய் இருக்கிறது. கார்டியாக் டிஸ்ட்ரெஸ். நீ தயாரா இரு. அரை மணியில் தியேட்டருக்குப் போகணும்" என்றார் டாக்டர். அவசரம் அவசரமாய் வளையல்களை அவிழ்த்து, ஒருவாய் பால் மட்டும் சாப்பிட்டு விட்டு சுஜாதா கிளம்ப, அம்மா அழுதாள். விபூதி, குங்குமப் பிரஸாதம் இட்டு விட்டாள். ஆனந்த், தியேட்டர் வரை வந்தார்.

அடுத்த அரை மணியில் குழந்தை பிறந்தது. டாக்டர் வெளியில் வந்து ஆனந்தைத் தட்டிக் கொடுத்துவிட்டு, அவஸ்தையாய்ப் புன்னகைத்து, 'இட் இஸ் எ பாய்'' என்றார். ஆனந்த் எல்லாரிடமும் சொல்ல, "ரோகிணி நக்ஷத்திரம்" என்றாள் சுஜாதாவின் அம்மா. ஆனால் சுஜாவைத்தான் கொண்டு வந்து ரூமில் விட்டார்கள். மயக்கத்திற்கு நடுவே "ஆனந்த்! குழந்தை எங்கே" என்றாள். இதோ வரும்! என்றவுடன் கண்களை மூடிக் கொண்டாள். குழந்தை அடுத்த முக்கால் மணி நேரத்திற்கு வரவில்லை. உள்ளே நிறைய டாக்டர்களும், நர்ஸ்களும் போய்ப் போய் வந்தார்கள். யாருக்கும் ஒன்றும் புரியவில்லை. சற்று நேரம் கழித்து டாக்டர் கிருஷ்ணகுமாரி வந்து, "ஆனந்த் கொஞ்சம்



"அட! என்னப்பா, ஸ்கூட்டர்ல வந்து பிச்சை எடுக்கற அளவுக்கு வந்தாச்சா?"

"என்ன பண்றது தாயி. காரை என் மச்சான் எடுத்துக்கிட்டு போயிருக்கான்."

- அனுராதா ராஜப்பா

உள்ளே வா!" என்றான்.

"குழந்தை எங்கே?" என்றதற்கு, அது ரூமிற்குப் போயிருக்கும்" என்றான். அப்போதுதான் கவனித்தான். டாக்டருக்குப் பக்கத்தில் ஒல்லியாய் கண்ணாடி அணிந்த ஒரு பெண்மணியை. "ஷி இஸ் சித்ரா!" என்று டாக்டர் அறிமுகம் செய்ய, ஆனந்த் சின்னப் புன்னகையோடு நிறுத்திக் கொண்டான்.

"வெல் ஆனந்த்! குழந்தை ஒரு சின்னக் குறைபாட்டோட பிறந்திருக்கு. இன்னும் சொல்லப்போனா, அது குறைபாடில்ல. 80% நார்மலான குழந்தையா வளர்றதுக்கு வேண்டிய தெரபிஸ் மற்றும் மருந்துகள் இப்ப வந்தாச்சு. பட், நீங்க பொறுமையா இருக்கணும். நிதானமா இருக்கணும். இது உங்க குழந்தை. ரொம்ப நாள் கழிச்சுப் பிறந்த உங்க கனவுக் குழந்தை. அதுனால சுஜாதாவைவிட ஆஸ் எ ஃபாதர், உங்களிடம் நிறைய நிதானமும், பொறுப்புணர்வும் புரிந்து கொள்ளலையும் எதிர்பார்க்கிறேன்."

"வாட்ஸ் த ப்ராப்ளம் டாக்டர்?" என்றான் ஆனந்த். அவன் குரலே அவனுக்கு அன்னியமாய் இருந்தது. "இட் இஸ் டிஃபிகல்ட் ஃபார் மீ டு ஸே. பட் உங்க குழந்தை ஒரு Downs Syndrome குழந்தை."

எங்கேயோ மேகங்களுக்கு நடுவில் நடப்பது போல் இருந்தது. டாக்டர் சொல்வது அரைத்தூக்கத்தில் கேட்பது போல் இருந்தது.

"சித்ரா வில் எக்ஸ்ப்ளெயின். அவுங்க தான் இந்த மாதிரி ஸ்பெஷல் குழந்தைகளின் அசோஸியேஷன் ஹெட்."

அந்த சித்ரா என்கிற பெண்மணி ஆனந்தைப் பார்த்துச் சொல்ல ஆரம்பித்தாள். "ஜெனடிக் டிஸ்ஸார்டர்" என்றாள். "முப்பத்தைந்து வயதிற்கு மேற்பட்டு குழந்தை பிறக்கும் தாய்க்கு, இது மாதிரி குழந்தைகள் ஸாத்தியம்" என்றாள். "மூளை மற்றும் சில உடல் வளர்ச்சிகள் மெதுவாக இருக்கும்" என்றாள். "ஆனால் ஒரு சாதாரணக் குழந்தை போல் எல்லாமே முன்னேற்ற, வளர்க்க முடியும்" என்றாள். ஆனந்திற்கு சட்டென அந்த இடத்தைவிட்டு ஓடிவிட வேண்டும் போல் இருந்தது. காதை மூடிக் கொண்டு தலைதெறிக்க ஓடவேண்டும் போல் இருந்தது. கடைசியாகத் தன்னை தொடர்பு கொள்ளச் சொல்லி, கார்டை நீட்டினாள். அனிச்சையாய் வாங்கி சட்டைப் பாக்கெட்டிற்குள் அதை சொருகிக் கொண்டான் ஆனந்த்.

பின் மெதுவாய் ரூமுக்கு வந்தபோது அம்மாவும், சுஜா அம்மாவும் குழந்தையை மடியில் வைத்துப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். வியர்த்து, வெளுத்துப் போன அவன் முகத்தைப் பார்க்க, "அம்மா, மாமி! சுஜாவும், குழந்தையும் தூங்கும்போது நீங்க ரெண்டு பேரும் ஆத்துக்குப் போய் குளிச்சு சாப்பிட்டு வந்துடுங்கோ. அதுவரையில் நான் இருக்கேன்" என்று ஒருவாறு அவர்களை கழுத்தைப் பிடித்து தள்ளாக் குறையாக அனுப்பிவிட்டு, தொட்டில் அருகே உட்கார்ந்து கொண்டான்.

பொம்மை மாதிரி இருந்தது. பால் வெள்ளை, சற்றே சப்பையான மூக்கு. வரைந்தாற்போல் கண்கள். கருள் கருளாய் தலைமுடி. நீள நீளமாய் விரல்கள். இந்தக் குழந்தைக்கா ஏதோ ப்ராப்ளம்! கொஞ்சம் கூட நம்ப முடியவில்லை அவனால். "என் பையனுக்கா? நான் ஒரு குறையான குழந்தையையா உருவாக்கி இருக்கிறேன்" என்று விடாமல் அரற்றியது மனது. சுஜா திடுக்கென விழித்துக் கொண்டு, "ஃபீட் பண்ணேன் ஆனந்த்" என்றாள். "குழந்தையைத் தூக்கிக் காமி" என்றாள், "வலிக்கிறது. ரொம்ப" என்றாள். சற்று நேரம் கண்மூடி இருந்துவிட்டு, "அவனுக்குப் பேர் செலக்ட் பண்ணிட்டேன்! நிதின். நிதின் காஷ்யப். நம்ம காஷ்யப கோத்ரமோன்னோ, கஷ்யப மகரிஷி வம்சம். பெரிய ஸ்கலாரா வருவான் நம்ப பிள்ளை" என்று சிரித்தாள். சற்று நேரத்தில் நர்ஸ் வந்து ட்ரிப்ஸ் செக் பண்ணிவிட்டு பெயின் கில்லர்ஸ் கொடுக்க, தூங்கிப் போனாள்.

தொட்டிலருகே உட்கார்ந்து கொண்டு சற்று நேரம் குழந்தையையே பார்த்துக் கொண்டிருந்தான் ஆனந்த். பின் ஞாபகம் வந்தவனாய், தன் சட்டைப் பையைத் தொட்டு, சித்ரா கொடுத்த கார்ட் இருக்கிறதா என்று பார்த்துக் கொண்டான்.

சினிமா விமர்சனம்

உலகில் எப்போதும் மாறாதிருப்பவை 'மாற்றம்' என்ற சொல்லும், தமிழ் சினிமாவின் கதையும்தான்! அந்த நம்பிக்கையில் படங்கள் வெளியாகும் முன்பே விமர்சனம் எழுதிவிட்டோம். ஆனா சாமி சத்தியமா திருட்டு விசிடி பார்க்கலீங்கோ!

நெறஞ்ச மனசு

ரெயின்கோட், கூலிங்கிளாஸ் அணியாத, 'ஏய்' என்று பல் கடித்து பக்கம் பக்கமாக குளோஸப்பில் வசனம் பேசாத விஜயகாந்த்! இறுக்கிக் கட்டிய வேட்டியும், முறுக்கிவிட்ட மீசையுமாக வருகிறார்.

தன்னை விரட்டி விரட்டிக் காதலிக்கும் சூசனிடம்... "இங்கே பாரு! நான் காதலிப்பேன்னா காதலிப்பேன்... மாட்டேன்னா மாட்டேன். ஆனா காதலிப்பேனா, மாட்டேனாங்கிறதை இப்ப சொல்ல மாட்டேன்'' என்கிறபோது தியேட்டரில் ஆரவார அலை. ஊர் ஜனமே கூடிநின்று அவமானப்படுத்தும் போது, யாருக்கும் தெரியாமல் கண்கள் சிவக்க கைக்குள் ஆரஞ்சுப் பழத்தை வைத்து நசுக்கி சாறெடுத்து, தனது கோபத்தை அடக்கும் காட்சியில் கேப்டன், டன்!

மனோரமாவும் தனது வழக்கமான நடிப்பால் அசத்தியிருக்கிறார். ஆலமரத் தடியில் பஞ்சாயத்துக் கூடி விஜயகாந்தைக் குற்றஞ்சாட்ட... "எலேய்! யார் தெரியுமாலே இந்த அய்யனாரு? இந்த ஊரு காவல் தெய்வம்லே! இதையா குற்றம் சொல்றீங்க?" என்று எகிறுவதும், தனக்குக் கொண்டு வந்த சாப்பாட்டை விஜயகாந்த் ஊட்டிவிட "அய்யா...! இதே கையாலே இந்த ஆத்தாவுக்குக் கொள்ளி போடுவீகளா என் ராசா?" என்று தழுதழுப்பதுமாக நீண்ட நாட்களுக்குப் பிறகு படம் நெடுகிலும் ஆச்சி மனோரமாவின் ஆட்சி.

சூசன், மஹிமா என்று இரண்டு ஹீரோயின்ஸ். அவ்வப்போது விஜயகாந்த் இருவருடனும் மாறி, மாறி சண்டை போடுகின்றார்... ஸாரி! டான்ஸ் ஆடுகிறார். ஹீரோயின்ஸ்? பெட்டர் லக் நெக்ஸ்ட் டைம்!

மேக்கப்பில்லாத திரைக்கதை, பேக்கப் சொல்லாத அழகு லொகேஷன்கள் என்று, பார்த்துப் பார்த்து இழைத்திருக்கிறார் இயக்குநர்.

விஜயகாந்த் வண்டியில் ஒரு ஆடு மாட்டிக் கொண்டு அடிபட, பதறிப்போய் வேட்டியை அவிழ்த்து காயத்திற்குக் கட்டி விடுகிறார். அப்போது ஒரு பெருசு... "அய்யா! ஆட்டை மட்டுமில்லே... இந்த நாட்டையும் நீங்கதான் காப்பாத்தணும்" என்கையில் மந்தகாசமாகப் புன்னகை செய்கிறார் விஜயகாந்த். நச்சென்ற இன்டர்வெல் பிளாக் இது!

நெறஞ்ச மனசு - விஜயகாந்தின் ஆசை மனசு!

அட்டகாசம்

தூத்துக்குடி தாதா, கார் டிரைவிங் ஸ்கூல் ஓனர் என்று இரட்டை அஜித்குமார்கள்!



* நெறஞ்ச மனசு படத்தில் - விஜயகாந்த்

அஜித், பூஜா காதல் காட்சிகள் ஜாலி ஜமா!



* மன்மதன் படத்தில் - சிம்பு, ஜோதிகா



* அட்டகாசம் படத்தில் - அஜீத், பூஜா

கார் ஓட்டத் தெரிந்த பூஜா அஜித்தின் டிரைவிங் ஸ்கூலில் சேர்வதற்காக பொய் சொல்வதும், அஜித் அதை நம்பி கார் ஓட்டக் கற்றுத் தருவதும், தாமு, வையாபுரி அண்ட் கோ அதை பார்த்து ஜொள்ளுவதும்... கலகல!

காரையே அஜித்தின் வீடாக அசத்தல் செட்டமைத்திருக்கிற ஆர்ட் டைரக்டரைப் பாராட்டலாம். அந்த கார்+வீட்டு பைப்புகளில் அஜித் திறக்கும்போதெல்லாம் தண்ணீர் வருவது கொள்ளை அழகு!

இரண்டு அஜித்களும் முதன் முதலாக சந்தித்துக் கொள்கின்ற காட்சியில் 'நீ என்னை மாதிரியே இருக்கே... இல்லை! நீதான் என்னை மாதிரியே இருக்கே'' என்று ஒருவர் மாற்றி ஒருவர் கேட்டுக் கொள்வது, தமிழ் சினிமாவுக்குப் புதுசு. ஆனால் இருவரும் பிரிந்ததற்கான சிறு வயது பிளாஷ்பேக் புதுமையாக (!) இருக்கிறது. ரயில்வே ஸ்டேஷனில் அண்ணன் அஜித் தண்ணீர் பிடிக்கச் சென்று ரயிலையும், அம்மா சுஜாதாவையும், தம்பி அஜித்தையும் தவறவிட்டு, தாதா கோஷ்டியிடம் அடைக்கலமாவது 'இந்திய சினிமாக் காட்சிகளிலேயே' யாரும் பயன்படுத்தாத ட்விஸ்ட்! இதுபோல் தூத்துக்குடி தாதா அஜித் என்று நினைத்துக் கொண்டு, டிரைவிங் ஸ்கூல் ஓனர் அஜித்தை வில்லன் கோஷ்டி விரட்டுவதும், குறுக்கும் நெடுக்குமாக ஓடி அஜித் தப்பிப்பதும், கிளைமாக்ஸ் கார் ரேஸ் சீனும் விறுவிறு மிளகாய் பஜ்ஜி.

'வால் ஆடலாம். ஆனா தலை ஆடக் கூடாது. அப்படி ஆடினா வாலே இருக்காது!...' என்பதில் தொடங்கி ஏகப்பட்ட 'பஞ்ச்' டயலாக்குகள்! (போட்டி ஹீரோக்களுக்கு சவாலாம்... மற்ற கேரக்டர்கள்தான் பாவம்... தேமே என்று நிற்கிறார்கள்.

அட்டகாசம் - அஜித்துக்கு மட்டும்!

மன்மதன்

ஒவ்வொரு பெண்ணாக காதலித்துக் கழட்டி விடுகின்ற கெட்ட பையனான சிம்பு, கடைசியில் 'ஜோ'வால் (அதாங்க... ஜோதிகா) மனம் திருந்தி 'வெரிகுட்பாய்' ஆகின்ற இரண்டே வரிக்கதை. இதற்கு 'மந்த்ரா பேடி, யானா குப்தா, ஜோதிகா என்று வடக்கத்திய டிக்கெட்டுகளைக் கொண்டு வந்து, காரம், மணம், குணம் நிறைந்த மசாலா அரைத்திருக்கிறார்கள்.

சிம்புவின் அறிமுக சீனில் 'எங்கே அவர்? எங்கே அவர்?' என்று ஆயிரத் தெட்டு திக்குகளிலும் ஜூனியர் ஆர்டிஸ்டுகள் தேடியபடி இருக்க... திடீரென்று பிரபஞ்சம் வெடித்து வெளியில் வரும், சிம்பு குரூப் டான்சர்களுடன் எதற்காகவோ வியர்க்க, விறுவிறுக்க ஆடுவதும் பாடுவதும் எதிர்பாராத என்ட்ரி.

இந்த இடத்தில் விரலில் மட்டுமல்லாமல் நகத்திலும் வித்தை காட்டுகிறார்

சிம்பு. தன் நகத்தை வெட்டி அதை மூன்றாம் பிறை நிலவாக்கி அவர் காதலிக்கு பரிசளிப்பது, கலக்கலான காக்டெயில் கவிதை என்றால், மறுநாள் சிம்பு நகச்சுத்தியினால் தவிப்பதும், ஹீரோயின் பார்த்து கண்ணீர்விட்டு... "உன்னோட தான் நான் வாழுவேன். உனக்கு நகமில்லேன்னா என்ன? நல்ல அகமிருக்கே" என்பதும் சோகமாக சென்டிமென்ட் செய்யுள்.

ஜோதிகா படபட பட்டாம்பூச்சி. 'உன்னை எனக்குப் பிடிச்சிருக்கு... ஆனா ஏன்னு தெரியலை' என்கிற கடினமான வசனத்தின்போது, அவரின் எக்ஸ்பிரஷன்கள் அழகோ அழகு!

சிம்புவுடனே திரிகின்ற கவுண்டமணி நிறையக் கத்துகிறார் கொஞ்சமாக காமெடி பண்ணுகிறார். அதுல் குல்கர்னி கடைசியில் ஏதோ செய்யப் போகிறார் என்று நினைத்தால், சிம்புவிடம் அடிபட்டு உதடுகிழிந்து ரத்தம் வர, அதைத் தொட்டுப் பார்த்துவிட்டு எழுந்து போகிறார்.



• ட்ரீம்ஸ் படத்தில் - தனுஷ், தியா

"அந்த மன்மதனுக்கு கரும்பு வில்லு. இந்த மன்மதனுக்கு கட்டை விரலு" என்கிற போதும், "பாத்ரூம்லே வழுக்கி விழுந்தாலும், குளத்திலே வழுக்கி விழுந்தாலும்... நீ வழுக்கி விழுந்தது பாசியினாலேதான்! என் பாசத்தினாலே இல்லை" என்று காதலியிடம் கண் கலங்குகின்றபோதும், தான் விஜய டி.ராஜேந்தர் வாரிசு என்று நிரூபிக்கிறார் சிம்பு.

மன்மதன் - சன் ஆஃப் வீராசாமி!

ட்ரீம்ஸ்

'கல்லூரி மாணவர்கள் காதலிக்கலாம். தம், தண்ணியடிக்கலாம். ஊர் சுத்தலாம். அதுக்காக கண்டிச்சி அவங்க மனசைக் காயப்படுத்திடாதீங்க..!' என்று பெற்றோர்களுக்கான நல்லதொரு மெஸேஜோடு வந்திருக்கின்ற படம்.

கொடுமைக்கார அப்பாக்கள் பிள்ளைகளை படி, படி என்று படுத்தியெடுக்க... பிள்ளைகளான தனுஷ்-ம், தியாவும் எஸ்கேப் ஆகி உலகத்தில் மனித சஞ்சாரமே இல்லாத - குறிப்பாக அப்பாக்களும், வாத்தியார்களும் இல்லாத ஒரு இடத்திற்குப் போகிறார்கள். அருவியில் குளிக்கிறார்கள். குகையில் படுத்துத் தூங்குகிறார்கள். காதலிக்கிறார்கள். ஒரு கட்டத்தில் பெற்றோர்கள் தங்கள் தவறு உணர்ந்து இவர்களைத் தேடி வர பிள்ளைகள் பெருந்தன்மையாக மன்னித்து, தத்தம் வீடுகளுக்கு சென்று மறுநாளே பரீட்சை எழுதி டிஸ்டிங்ஷனில் பாஸாகிறார்கள்.


தனுஷ் இதுவரை நடிக்காத கேரக்டர். இருந்தாலும் கதையோடு ஒன்றியிருக்கிறார். "நமக்குள்ளே தப்பு நடந்து போச்சி. ஆனா அதை நான் தப்பா எடுத்துக்கலை. நீயும் தப்பா எடுத்துக்காதே" என்று காதலியிடம் படு அப்பாவியாக பேசுகையில் நடிப்பில் பின்னியெடுக்கிறார் தனுஷ். இதுமட்டுமல்லாமல் படம் முழுவதும் தியாவுடனும், வில்லன்களுடனும் மாறி மாறி சண்டை போடுகிறார்.

தனுஷ் லேட் நைட்டில் வீடு திரும்பும்போது சட்டென்று லைட் எரிகின்றது. பார்த்தால் அப்பா ராஜேஷ். வழக்கமான சினிமா அப்பா போல் கன்னாபின்னாவென்று திட்டப் போகிறார் என்று நாமும் தனுஷைப் போலவே நினைக்க.. "சாப்பிட்டுட்டு போய் ஊர் சுத்த வேண்டியதுதானேடா... உடம்பு என்னத்துக்கு ஆகும்?" என்பதும், அதற்கு பரத்வாஜின் பின்னணி இசையும் ரியல் அப்பாக்களைத் திருத்தும் என்பது நிஜம்.

தியா, தனுஷை செல்லமாக 'வாடா, போடா' என்பது, ஹீரோ அண்ட் கோவினர் பாரில் பீர் அடித்துவிட்டு, பாட்டுப் பாடுவது என்று அத்தனை காட்சிகளையும் 'புதுசு கண்ணா புதுசு' என்று ரொம்பவே மெனக்கெட்டு சிந்தித்திருக்கிறார் டைரக்டர் கஸ்தூரி ராஜா.

ட்ரீம்ஸ்-அப்பாக்கள் காண வேண்டியது!

கற்பனை : **சோமாஸ்**



• நெப்போலியன்

முன்னிறுத்தப்படும் நெப்போலியன்?

• ஏற்கெனவே பலமுறை அரசியலுக்கு வெள்ளோட்டம் பார்த்துவிட்ட விஜயகாந்த் மீண்டும் ஆரவாரமாகப் பேசி ரசிகர்களை உசுப்பேற்றியுள்ளார். 'ஆனால் இவை யெல்லாம் ரசிகர்களின் கைதட்டலை வாங்க மட்டுமே உதவும். அரசியலில் ஜெயிக்க உதவாது' என்று கேப்டனுக்கு நெருக்கமானவர்கள் ஓதி வருகிறார்களாம். ஆகவே கேப்டன் தீவிர யோசனையில் இருக்கிறார் என்கிறார்கள்.


• வரும் நடிகர் சங்கத் தேர்தலின் போது சரத்குமாரே தலைவராக (தி.மு.க. சார்பில்) முன்னிறுத்தப்படுவார் என ஆவலுடன் இருந்தனராம் அவரது ரசிகர்கள். ஆனால் அவர் சமீபத்தில் 'நான் பிஸியாக இருப்பதால் சங்கப் பணியை முழுமையாகச் செய்ய முடிய வில்லை' என்ற ரீதியில் பேசியதால் அவருக்கு வாய்ப்பில்லையாம். நெப்போலியனுக்குத்தான் வாய்ப்பாம். சரத்துக்கு மத்திய அமைச்சர் பதவி கேட்டு அவரது ரசிகர்களில் ஒருசிலர் அறிவாலயத்திற்கு முன் உண்ணாவிரதம் இருந்ததை ஞாபகப் படுத்துகிறார்கள்.

• கொச்சையாகப் பேசியே 'பேர்' வாங்கி வந்த எஸ்.எஸ்.சந்திரனுக்கு தலைமை கடுமையாக குட்டு வைத்தது தெரிந்ததுதான். ஆனால் அதையும் மீறி தான் பேச நினைத்ததையெல்லாம் பேசிவிட்டு, "அம்மா என்னைக் கட்டுப்படுத்தி வச்சிருக்காங்க. இல்லன்னா..." என்று சொல்லி வருகிறாராம். இதனால் அவருக்கு அழைப்பு விடுத்தால் எங்கே தங்கள் முதலுக்கே மோசம் வந்து விடுமோ என யோசிக்கிறார்களாம் கழகத்தினர்.


• தி.மு.க. தலைவரை ராதா ரவி கடுமையாகத் தாக்கிப் பேசி, தனது தலைமையின் மீதான விசுவாசத்தை வெளிப்படுத்தி வருகிறார். ஆனாலும் புதிதாக அவர் கரகர குரலில் பேச முற்படுவது தொண்டர்களுக்கு எரிச்சலை கிளப்பியுள்ளதாம். யாரையோ கேலி செய்வதாக எண்ணி ஆர்வக் கோளாறுடன் பேசுவதாக தொண்டர்கள் புலம்புகின்றனராம்.



• எஸ்.எஸ். சந்திரன்



• சரத்குமார்



• விஜயகாந்த்

குறையொன்றுமில்லை

முக்கூர் லக்ஷ்மிநரசிம்மாச்சார்யார்

ஊன் இடைச் சுவர் வைத்து,
என்பு தூண் நாட்டி,
உரோமம் வேய்ந்து, ஒன்பது
வாசல் -
தான் உடைக் குரம்பை
பிரியும்போது, உன்தன்
சரணமே சரணம் என்று
இருந்தேன்;
தேன் உடைக் கமலத் திருவினுக்கு
அரசே!
திரை கொள் மா நெடுங் கடல்
கிடந்தாய்!
நான் உடைத் தவத்தால் திருவடி
அடைந்தேன்
நைமிசாரண்யத்துள் எந்தாய்!

- மாமிச ரத்தத்தினால் அமையப் பெற்ற சுவர் இந்த உடலுக்கு! எலும்புகளால் தூண்கள் நாட்டப்பட்டிருக்கிறது. ரோமத்தினால் கூரை வேயப்பட்டிருக்கிறது. வாஸ்து சாஸ்திர ரீதியாக ஒன்பது வாசல்படிகள். க்ஷேத்ரக்ஞன் என்று சொல்லும்படியான ஜீவாத்மாவைக் குடிபுக வைத்து, அவனும் கூடவே இருக்கிறான். வீட்டையும் கட்டிக் கொடுத்து, அவனும் கூடவே வாஸம் பண்ணுகிறான்!

ஆனால் ஜீவாத்மா, கட்டிக் கொடுத்தவனையே மறந்து விடுகிறது! இது - இந்த வீடுதான் - உடல்தான் - சாச்வதம் (நிரந்தரம்) என்று நினைத்துக் கொண்டு, பக்கத்திலேயே அவன் இருந்தாலும், அவனை உணராமலே வாழ்ந்து கொண்டு, ஒரு நாள் சரீரம் தளர்ந்து, எழுந்திருக்க முடியாமல் ஆகிறது.

'உளவ தொளவ என்கிற சொல்லும்
சொல் போச்சே
அளவி நெடுமூச்சும் ஆச்சே
கண்ணும் பஞ்சாச்சே
... அரங்கா இரங்காயோ'

என்கிறார் பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் என்கிற மகான்.

தடதடவென்று நம் வாய் சொல்லும்படியான சொல்லெல்லாம் போச்சே! எதுவும் சொல்ல முடியவில்லையே! எழுந்து கொண்டால் - உட்கார்ந்தால் மூச்சு வாங்குகிறதே... ரங்கநாதா! கண்ணும் பஞ்சாயிற்றே... இன்னும் உனக்கு என் மேல் இரக்கம் இல்லையா?' என்று கேட்கிறார்.

அந்த மாதிரி ஒரு நிலை ஏற்படப் போகிறது நம் சரீரத்துக்கு. அப்படித் தளர்ந்து கீழே விழுகிறபோது, அவன் ஞாபகம் வருகிறது! எம்பெருமான் திருவடியை அடைய வேண்டும் என்று தோன்றுகிறது. பகவான், 'இந்த சமயத்திலாவது நம்மிடம் இவன் வந்தானே' என்று நம்மை ஏற்று அனுக்ரஹம் பண்ணுகிறான்.

'ஏன் நீ முன்னாலேயே வரவில்லை?' என்று அவன் கேட்டதில்லை. உடம்பு தளர்ந்த பிறகாவது, விழுந்து வணங்குகிறானே என்று அனுக்ரஹம் பண்ணுகிறான்.

அந்த மாதிரி திருமங்கை ஆழ்வார் நைமிசாரண்யத்தில் கதறி அழுகிறார்.

ஆகையினால், அப்படிப்பட்ட நைமிசாரண்யத்தை ஸ்மரித்தாலே, அந்த க்ஷேத்திரத்தை மனத்தால் நினைத்தாலே, பரம வைராக்கியம் நமக்கு வரும்.


அத்தகைய நைமிசாரண்யத்தின் பெயரைத் தாங்கி நிற்கிற மண்டபத்தில், ஸ்ரீ நரசிம்ஹ கடாக்ஷத்தினால், எம்பெருமான் திருநாமங்களைச் சொல்லும்படியான பாக்யம் நமக்கு ஏற்பட்டிருக்

ஏழாம் பாகம்

கிறது.* நாம் கேட்கக் கொடுத்து வைத் திருக்கிறோம்.

பகவானுடைய திருநாமம் எப்படிப்பட்டது? அவன் எப் படிப்பட்டவன்? என்பதைப் பார்க்கிறபோது... 'அவன் கட்டிப் பொன் போலே! அவன் திரு நாமம் இருக்கிறதே... அது ஆபரணம் போலே' என்கிறார்கள் ஆசார்யர்கள்.

பகவானை எடுத்து நாம் அணிய முடியாது - ஆள முடியாது! பகவானை எதிரே கொண்டு வந்து நிறுத்த முடியுமா?



அபீதி ஸத்வம் என்கிற ஸ்தோத்திரத்திலே, ஸ்வாமி தேசிகன் அழகாகக் கேட்கிறார்:

"பகவான் நாமங்களைச் சொல்பவர்

---

* 'குறையொன்றுமில்லை' என்ற தலைப்பில் வெளியாகும் தொடர். சென்னை, ஆழ்வார்பேட்டை, ஆஸ்திக சமாஜத்தில் முக்கூர் சுவாமிகள் ஆற்றிய உரைகளின் தொகுப்பு

களுக்கு நரகம் என்பது உண்டோ!'' என்கிறார்.

நரகமே இல்லையே!

'ரமா சகித ரங்க பூ ரமண கிருஷ்ண
விஷ்ணு ஹரே
திரிவிக்கிரமா, ஜனார்த்தனா, ஸ்ரீத
நாத நாராயணா'

என்று அவனுடைய திருநாமத்தைச் சொல்லக் கூடியவர்களுக்கு நரக பயமே கிடையாது என்கிறார்.

இவ்வாறு நரகம் கிடையாது என்கிற போதே, மனசை விட்டு பீதி போய்விடும்.

அப்படிப்பட்ட அவன் திருநாமங்களைச் சுலபமாக நாம் எடுத்தாளலாம். ஆபரணப் பொன்போலே எடுத்து அணிந்து கொண்டு, நம்மை அலங்காரம் பண்ணிக் கொள்ளலாம்.

வேதம் என்ன சொல்கிறது பாருங்கள்... கட்டிப் பொன் போன்ற அந்த பகவான் எங்கே வேண்டுமானாலும் இருக்கட்டும்... அந்தரிக்ஷத்தில் இருக்கட்டும்; அல்லது வைகுண்டத்திலேதான் இருக்கட்டுமே!... நாம் இங்கே உட்கார்ந்தபடியே ''ஹே விஷ்ணு!'' என்று கூப்பிட்டோமானால், அவன் எங்கேயிருந்தாலும் ஓடிவருவான்! அவன் திருநாமம் அவனை அழைத்துக் கொண்டு வந்துவிடும்! ஆபரணப் பொன் போன்ற அந்த திருநாமத்துக்கு அவ்வளவு மகிமை. திருநாமத்தினாலேதான் நாம் அவனைக் கட்டிப்பிடிக்கிறோம்.

விஷ்ணுவினுடைய பெருமையை வேதமானது எடுத்துச் சொல்கிறது. விஷ்ணு யக்ஞத்திலே சொல்லும்படியான மந்திரம் ஒன்று - ஹோம குண்டம் தயார் பண்ணுகிறபோது சொல்லப்படுகிற மந்திரம். அந்த மந்திரம் என்ன சொல்கிறது...?

'அந்த எம்பெருமான், எல்லாருக்குமே நண்பன்' என்று சொல்கிறது. 'ஓடி வந்து பக்கத்திலே நின்று உதவி பண்ணக்கூடியவன் அவன்?' என்கிறது :

'பவா மித்ரேன தேவ்யோ க்ருதாகுதி:'

அதிகாலையிலே சந்தியாவந்தனம் செய்யும் போது சொல்கிற மந்திரமானது, சூர்ய மண்டலத்திலே சூர்யநாராயணனை 'மித்ரன்' - நண்பன் என்று குறிப்பிடுகிறது. அப்படி நண்பனாக அழைத்துதான் தினமும் சூரியனை தியானம் பண்ணுகிறோம்.

ஆகையினாலே, மித்ர : என்றே பகவானுக்குப் பெயர். அவன் நமக்கு உயர்ந்த நண்பன். அப்படிப்பட்ட நண்பனாக அவன் நம் பக்கத்திலேயே இருந்து உபகாரம் பண்ணுகிறான்.

'பிரபூதத்யும்னன்' என்று வேதம் பகவானை அழைக்கிறது - பிரபூத தனயுக்த : என்கிறது.

பிரபூதத்யும்னன் என்றால் சிறந்த ஐச்வர்யத்தை உடையவன்.


சிறந்த ஐச்வர்யம் என்றால்...?

ஆண்டாள், 'நீங்காத செல்வம்' என்று சொல்கிறாள் பாருங்கள்... பரகதி ஐச்வர்யம் என்று அதற்குப் பெயர். குறையாத ஐச்வர்யம். என்றைக்கும் குறைவில்லாதது.

அதனால்தான் பகவான் 'கொள்ளக் குறைவிலன்' என்றார் ஆழ்வார். எடுக்க எடுக்கக் குறைவில்லாதவன்.

'உமதடிகள் அடைகின்றேன் என்று
ஒருக் கால் உரைத்தவரை
தமதனைத்தும் அவர் தமக்கும்
வழங்கியும் தான்மிக விளங்கும்
அணையுடைய அருளாளர்
இணையடிகள் அடைந்தேனே...'

என்று சுவாமி தேசிகன், காஞ்சியிலே இருக்கும்படியான தேவாதிராஜனை, விசேஷமான 'அடைக்கலப் பத்து' என்ற பிரபந்தத்திலே அழகாகச் சொல்கிறார்.



- பம்மல் நாகராஜன்

தமதனைத்தும் அவர் தமக்கும் - தன்னிடமிருக்கும்படியான அத்தனை ஐச்வர்யத்தையும் வாரி வழங்குகிறான் பகவான்!

'தன்னிடத்தில் இருப்பதையெல்லாம் கொடுத்துவிட்டால் அவனிடம் ஒன்றும் இருக்காதே' என்று நினைத்துவிடாதீர்கள். 'வழங்கியும் தான் மிக விளங்கும்' அருளாளன் அவன். எடுக்க எடுக்கக் குறைவில்லாதவன்.

அப்படிப்பட்ட ஏற்றமுடைய எம்பெருமான், உயர்ந்த குணக்குன்றாக, குணங்களுக்கெல்லாம் இருப்பிடமாக, ஐச்வர்யங்களுக்கெல்லாம் இருப்பிடமாக விளங்குகிறான். வாரி வாரி வழங்குகிறான் எல்லோருக்கும். அவனுக்குக் கொடுக்க கை உண்டே தவிர, வாங்கும் கை இல்லை.

வரம் ததாதீதி வரத :

கேட்கக் கூடியவர்கள், விரும்பி என்ன கேட்கிறார்களோ, அதை வாரி வழங்கக் கூடியவனானதனாலே, அவனுக்கு வரதன் என்று பெயர்.

வேதம் மேலும் சொல்கிறது : சிறந்து விளங்கக் கூடியவன். நமக்கெல்லாம் நண்பனாக இருக்கக் கூடியவன், ஐச்வர்யத்தைக் கொடுக்கும்படியான எம்பெருமான் விஷ்ணு என்று உணர்ந்து, அந்த எம்பெருமானை விசேஷமாக யக்ஞத்தினாலே யார் ஆராதிக்கிறார்களோ, அவர்கள் வேண்டியதையெல்லாம் பெறுவார்கள் என்கிறது.

எங்கு பார்த்தாலும், வேதமானது பகவான் விஷ்ணுவை 'யக்ஞம்' 'யக்ஞம்' என்றே அழைக்கிறது.

அந்த யக்ஞ ரூபியை யக்ஞத்தால் ஆராதித்தால், அவன் பரம திருப்தி அடைகிறான். அவனை இரண்டு விதமாகப் பாகுபடுத்திச் சொல்கிறது வேதம்.

பூர்விகமான பரமாத்மா; நவீனமான பரமாத்மா!

எப்படி மனிதர்களை நவீனகால மனிதர்கள், பூர்விக மனிதர்கள் என்கிறோமோ, அப்படியே வேதம், பூர்வகால பகவான், நவீன கால பகவான் என்கிறது.

பூர்வீகன் யார் என்றால்... அந்த வைகுண்ட லோகத்திலே விராஜமானனாக, பரவாசுதேவனாக இருக்கும்படியானவன். அவனுக்குப் பூர்வீகன் என்று பெயர். அதிலிருந்து - அந்தப் பூர்வீகனிடமிருந்துதானே எல்லாமே தோன்றியது!

வித்யாரண்ய சுவாமி, வேத பாஷ்யம் இயற்றிய மகான். 'அங்கிருந்து பகவான் நூதனனாய் உலகிலே வந்தான்' என்கிறார் இந்த வித்யாரண்ய சுவாமி.

உயர்ந்த ஸ்தானத்திலிருந்து இறங்கி வருகிறான் பரமாத்மா. தன்னுடைய பெருமையையெல்லாம் குறைத்துக் கொண்டு, சாமானியர்களுடன் கலந்து பழக, நம்மைப் போன்று இறங்கி வருகிறான் பரமாத்மா.

'நரசிம்ஹ ராம க்ருஷ்ணாத் அவதாரைஹி'

நரசிம்ஹனாக அவதாரம் பண்ணினான். ராம-க்ருஷ்ணர்களாக அவதாரம் பண்ணினான். இந்த அவதாரங்களிலே அத்யந்தம் நூதனனாகக் காட்சியளித்தான்.

வைகுண்டத்திலிருக்கும்படியான எம்பெருமான்தான் பூலோகத்திலேயும் வந்து அவதாரம் பண்ணி, தன்னுடைய புதுமையான ரூபத்தைக் காட்டி அருளினான். இப்படி இரண்டு இடத்திலும் இருக்கும்படியானவன்.

ஷோபனாக்யா மங்களப்ரதா மஹாலக்ஷ்ம்யாஸ : விராஜமான : சுமத்யானி :

என்று சொல்லப்பட்டிருக்கிறதே. அதற்கேற்ப, வைகுண்டத்தில் இருந்தாலும் பூலோகத்தில் வந்து அவதாரம் பண்ணினாலும், லக்ஷ்மியோடு சேர்ந்தே இருக்கிறான்.

(வளரும்)





வம்புக்கு...

வெயிட் போட்ட வெள்ளையம்மாள்!

ஐஸ்வர்யா ராய்க்கு எத்தனை பேர் பார்த்டே க்ரீட்டிங் அனுப்பிச்சிங்க? அவங்க வயசு முப்பத்தொண்ணுன்னு நம்ப விரும்பாதவங்க நம்ப வேண்டாம். இன்னொரு சிரஞ்சீவியான ஜாக்கி சானோட ஏஜ் என்ன தெரியுமா...? ஃபிஃப்டி!

"என்றும் இளமையாய் இருப்பது எப்படி'ன்னு ஒரு பத்துப் பன்னிரண்டு வருஷம் முன்னாடி கல்கில ஒரு சப்ளிமெண்ட் போட்டாங்க... இந்த இரண்டு பேரும் அதை வாங்கி டிரான்ஸ்லேட் பண்ணச் சொல்லி படிச்சிருப்பாங்கன்னு நினைக்கிறேன்.

'பன்னிரண்டு வருஷத்துக்கு முந்தின சப்ளிமெண்டை எப்படி ஞாபகம் வைச்சிக்கிட்டிருக்கே சுமி..? அப்படின்னா, உன் ஏஜ் என்ன?'ன்னு...' குடைய ஆரம்பிப்பீங்களே... ஸாரி, ராங் நம்பர்.

ஐஸ், ஜாக்கியோட போட்டி போடறவர் விகடன் தாத்தா. தீபாவளி மலர்ல அட்டைல சூப்பர் மேன் கெட் அப்ல துள்ளிட்டு வர்றாரேன்னு திறந்து பார்த்தா, கலக்கலா இருக்குப்பா கன்டென்ட்ஸ்! ஒரு விஷயம் தான் குறையா படுது... வெகுஜன ரசனைக்கான கதைகள் குறைவு; இலக்கியவாதப் படைப்புகளே அதிகம்.

இருக்கிற ஒன் ஆர் டூ வெகுஜன கதைகளுக்கும், நவீன ஸ்டைல் ஓவியம் போட்டு மிரட்டிருக்காங்க.


வீரப்பன் சமாதியில விழுந்து கும்பிட்டு, மண்ணைத் தொட்டு நெத்திக்கு வைச்சுக்கறாங்களாம் மக்கள்! கொஞ்ச நாள்ல வீரப்ப அய்யனார் கோயில் வந்தாலும் வரலாம். நம்ம எள்ளுப் பேரப்புள்ளைங்க காலத்துல, அந்த 'கிராம தேவதை' பத்தி இப்படி ஒரு கதை உருவாகி வளைய வந்தாலும் ஆச்சர்யமில்லை.

"வீரப்பன் வீரப்பன்னு ஒரு மகா வீரன் இருந்தான். யானைகளின் வாலைப் பிடித்து ஒற்றைக் கையால் தூக்கிச் சுழற்றி வீசற அளவுக்குப் பலசாலி... சுண்டு விரல் நகத்தால் மண்ணைச் சுரண்டி மரங்களைப் பெயர்த்துவிடுவான்... அவனோட பலமும் வீரமும் பக்கத்து நாட்டு ராஜாக்களுக்குப் பொறாமை ஏற்படுத்தியது... ரகசிய பிளான் போட்டு ஏமாத்தி, அவனைக் கொலை பண்ணிட்டாங்க... அவனைப் புதைச்ச இடத்துல இன்னைக்கும் யானைகள் வர பயப்படும்... அந்தப் பக்கம் போனாலே நல்ல ஸான்டல் வுட் மணம் வீசும்...!"

காட்டு யானைகள் வீரப்பனை மிஸ் பண்ற இந்தத் தருணத்துல, வீட்டு - அதாவது கோ-இல் யானைகள் திரும்பவும் ஆன்யுவல் லீவுக்குத் தயாராயாச்சு. முதுமலைல மாண்புமிகு முதல்வர் உத்தரவுப்படி, எல்லா கோயில் யானைகளையும் கம்பல்ஸரியா ரெஸ்ட் எடுக்க வைக்க, அதனோட பாகன்கள் ஓவர்டைம் உழைப்பாங்க.



• ஜாக்கி சான்



• ஐஸ்வர்யா ரா

தஞ்சாவூர் பெரிய கோயில் வெள்ளையம்மாள், போன வருஷ யானை முகாமுக்குப்புறம் நல்லா வெயிட் போட்டுத் திரும்பினாங்களாம். 'லாரியில ஏற மாட்டேன்'னு பயத்துல வெள்ளையம்மாள் செய்த ஸ்டிரைக் சில நாட்களுக்கு நீடிச்சது நினைவிருக்கா...?

எஸ்மா இன்னும் விலக்கப் படலைன்னு வெள்ளையம்மாள் அன்ட் கோவுக்கு பொறுப்பான பாகன்கள் சொல்லிவைச்சா சரி.

சுமி

நவம்பர் 10 முதல் 16 வரை

நடக்குமென்பார்; நடக்கும்!

மேஷம் : உங்க ராசிக்கான கிரகங்கள் கொஞ்சம் முட்டி மோதிக்கிறதால அப்பப்போ சில கோளாறுகள், பிரச்னைகள், குழப்பங்கள்னு வந்து போகும். அனாவசிய வாக்குவாதங்களுக்கு 'தடா' போட்டு கொஞ்சம் நிதானமா இருங்க. புதிய ஆட்களோட பழக நேரிடும்போது உஷாரா இருங்க. உத்தியோகத்தில கஷ்டமான வேலைகளையும் உங்க திறமையால முடிச்சு பாராட்டு பெறுவீங்க. எலக்ட்ரானிக்ஸ், கெமிக்கல்ஸ், டிராவல்ஸ் துறைகள் முன்னேறும். குடும்பத்தில கருத்து வேறுபாடுகளும், உடல் நலக் கோளாறுகளும் வரலாம், எச்சரிக்கையா இருங்க. பெண்களுக்கு பிரார்த்தனை, தெய்வ வழிபாடுன்னு ஈடுபாடு கூடும்.



ரிஷபம் : உங்க பூர்வ புண்ணியஸ்தானம் பலமா இருக்கறதால, சகல காரியங்களும் முன்னேறும். முக்கியஸ்தர் ஆதரவு, பண வரவு, ஆரோக்கிய மேன்மை, இப்படி அனுகூலங்கள் சேரும். உத்தியோகத்தில புதிய பொறுப்புகள் சேரும். புது முயற்சிகள் அனுகூலமாகும். ஓட்டல், லாட்ஜ், ஜவுளி, ஃபர்னீச்சர் துறைகள்ல இருக்கிறவங்களுக்கு ஆதாயம் கூடும். குடும்பத்தில பண நெருக்கடி தீர்ந்து மகிழ்ச்சி உண்டாகும். பெண்களுக்கு உடன் பிறந்தவர்களால் அனுகூலமும் மகிழ்ச்சியும் உண்டாகும்.

மிதுனம் : உங்க துணிவும், தன்னம்பிக்கையும் கூடி எதிர்ப்புகளை சமாளிச்சு ஜெயிக்கிற நேரங்க இது. உங்க பர்ஸ் கொஞ்சம் இளைச்சிப் போகும். அப்பப்போ டானிக் குடுங்க. புதியவர்கள் கிட்ட பழகும்போதும், பயணத்திலயும் எச்சரிக்கையா இருங்க. உத்தியோகத்தில் சிறு பிரச்னைகள் ஏற்பட்டு விலகும். எந்திரம், எலக்ட்ரானிக்ஸ், கமிஷன் தொழில்கள் அனுகூலம் தரும். அரசியல்வாதிகளுக்கு அதிக எச்சரிக்கை தேவை. குடும்பத்தில் சுபகாரிய முயற்சிகள் வெற்றி பெறும். பெண்களுக்கு சஞ்சலங்களும், உடல் உபாதைகளும் குறைந்து நிம்மதி கிட்டும்.

கடகம் : எந்தக் காரியமானாலும் ஆரம்பத்தடைகள் அதிகமிருக்கிறதைப் பார்த்து அசந்து போயிடாதீங்க. எல்லாம் வாரக் கடைசியில் செட்டிலாயிடும். எதிர்பாராத செலவுகள் வரப்போகுது, உஷாரா இருங்க. பயணங்கள்ல எச்சரிக்கை அவ



பரிகாரம்

குழந்தைப் பேறு என்று அரும்பேறுகளில் ஒன்றாகக் குறிப்பிட்டாலும், பெற்றெடுப்பது என்பது பெண்களுக்கு மறு பிறப்பு என்பார்கள். குழந்தைப் பேற்றை இனிதாக்க, எளிதாக்க, அச்சமும் துன்பமும் நீங்க, அப்பரும் சம்பந்தரும் பாடிய திருக்கருகாவூர் கரும்பனையாளம்மை அருள்கிறாள். ஆதரவற்ற ஏழைப் பெண்ணுக்கு மருத்துவம் பார்த்து குழந்தையைக் காத்தவள் இவள். இவளை வேண்டிச் சென்று வழிபட்டால் பிரசவம் எளிதாகும்.

குடந்தை - தஞ்சை பாதையில் 22 கி.மீ.ல் உள்ளது இத்திருத்தலம்.

- வி

சியம். உத்தியோகத்தில எல்லாம் அனுகூலமா இருந்தாலும் புதிய முயற்சிகள் ஏதும் இப்ப வேண்டாம். கம்ப்யூட்டர், கமிஷன், கெமிக்கல்ஸ், கலைத்துறை, ஏற்றுமதி, இறக்குமதி துறைகள்ல இருக்கிறவங்க முன்னேறுவாங்க. குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும், என்றாலும் ஆரோக்கியத்தில கவனமா இருங்க.

சிம்மம் : கூட இருப்பவர்களையும் தொற்றிக் கொள்கிற உற்சாக மனநிலை தான் இந்த வாரம் முழுக்க; ஜமாய்ங்க. பண நடமாட்டம் தீபாவளி ரங்கநாதன் தெருதான். உத்தியோகத்தில எதிர்ப்புகள் மறையும். இண்டஸ்ட்ரீஸ், டிராவல்ஸ், ரியல் எஸ்டேட் துறைகள்ல இருக்கிறவங்களுக்கு ஆதாயம் கூடும். ஏற்றுமதி இறக்குமதி தொழில் அதிக லாபம் பெறும். குடும்பத்தில குதூகலம் நிறைந்து சுபகாரிய முயற்சிகள் ஈடேறும். பெண்களுக்கு ஆடை, ஆபரணச் சேர்க்கையால மகிழ்ச்சி கூடும்.

கன்னி : கொஞ்சம் வேகத்தைக் குறைச்சு, விவேகத்தைக் கூட்டி நிதானமா செயல்பட்டா, இந்த வாரம் முழுக்க வெற்றி மேல் வெற்றிதான். கோயில், குளம்னு தெய்வீக ஈடுபாடு, வெளியூர்ப் பயணம் போக வைக்கும். உத்தியோகத்தில எல்லோரையும் அனுசரிச்சுப் போக முயற்சி பண்ணுங்க. இல்லைன்னா பிரச்னைதான். தாமதமாகி வந்த உங்க கோரிக்கை நிறைவேறும். கலைத்துறை, உலோக வகை, எண்ணெய் வகை, ரியல் எஸ்டேட் தொழில்கள்ல இருக்கிறவங்க முன்னேறுவாங்க. குடும்பத்தில வீண் வம்பு, கருத்து வேறுபாடுகளைத் தவிர்க்கப் பாருங்க. பெண்களுக்கு தெய்வீக ஈடுபாடு கூடும்.

துலாம் : உங்க ராசிக்கான கிரகங்கள் சாதகமான இடங்கள்ல சஞ்சாரம் பண்ணறதால, எடுத்த காரியங்கள் எல்லாம் முன்னேற்ற மடையும். புதிய அறிமுகங்கள் சில கிடைக்கும். உத்தியோகத்தில அனுகூலமான திருப்பம் காத்திருக்கு. புத்திசாலித்தனமா பயன்படுத்துங்க. உங்க கோரிக்கைகள் நிறைவேறும். இடமாற்றம் கிடைக்கலாம். இரும்பு, இண்டஸ்ட்ரீஸ், ஓட்டல், லாட்ஜ், டிராவல்ஸ் தொழில்கள் முன்னேறும். குடும்பத்தில் மருத்துவச் செலவு ஏற்படும், கவனமா இருங்க. உடன்பிறந்தவர்களால் பிரச்னைகள் சில வரலாம். பெண்களுக்கு புதிய பொருள் சேர்க்கை உண்டாகும்.

விருச்சிகம் : உங்க தெய்வபலம் கூடி எதிர்ப்புகளை அடக்கிவிடும். பயணங்களாலும், பிரபுதனவான்களாலும் அனுகூலங்கள் காத்திருக்கு. உத்தியோகத்தில் அதிர்ஷ்டம் காத்திருக்கு, சரியான சமயம் பார்த்து செயல்படுங்க. புது முயற்சிகள் வெற்றி தரும். கலைத்துறை, ஆபரணத் தொழில், சட்டம், காவல். ராணுவம் துறைகள்ல இருக்கறவங்களுக்கு அனுகூலமான நேரம். குடும்பத்தில குழப்பங்கள் விலகி மகிழ்ச்சி நிறையும். சுபமங்கள காரியங்கள் ஈடேறும். பெண்கள் நினைச்சதைச் சாதிப்பாங்க.

தனுசு : உங்க துணிவும் தன்னம்பிக்கையும் கூடி காரியங்களைச் சாதிக்கிற நேரம்க இது. செலவு கூடற வேகத்தில பண வரவும் கூடும். தெய்வபலத்தை அபிவிருத்தி செய்து கொள்வது நல்லது. உத்தியோகத்தில உழைப்பும் பொறுப்பும் கூடும். வாக்குவாதம், வீண் வம்புகளைத் தவிர்ப்பது நல்லது. எலக்ட்ரானிக்ஸ், காண்ட்ராக்ட்ஸ், கமிஷன், ரியல் எஸ்டேட்,

துறைகள்ல இருக்கிறவங்களுக்கு அனுகூல மான நேரம். குடும்பத்திலயிருந்து பிரிஞ்சு போனவங்க மீண்டும் வந்து சேர்வாங்க. மகிழ்ச்சியும், கொண்டாட்டமும் நிறை யும். பெண்கள் ஆரோக்கியத்தில கவன மாக இருப்பது அவசியம்.

மகரம் : குரு பகவான் உங்க ராசியில் ஒன்பதாம் இடத்தில் இருந்து பார்க்கிற பார்வை, உங்கள் யோகத்தைக் கூட்டி எதிர்ப்புகளை மறைய வைக்கும். பிரபு தனவான்கள், உதவுவாங்க. பண நட மாட்டம் டிராபிக் ஜாம் ஆகாம நடக்கும். உத்தியோக விஷயமா வெளியூர் / வெளி நாடு போய் வரும்படி நேரிடலாம். எந் திரம், எண்ணெய் வகை,தோல் பொருள் வியாபாரங்கள் நல்ல லாபத்தை கொண்டு வரும். குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் மறைந்து நிம்மதி நிலவும். பெண்களுக்கு உற்சாகமான வாரம்.

கும்பம் : 'தடைப்பட்ட காரியம்தான் மடை திறந்து ஓடும்'னு சொல்வாங்க. அதனால ஆரம்பத்தில பிரச்னைகள், குழப்பங்கள்னு இருக்கிறதைப் பார்த்து தளர்ந்துடாதீங்க. வாரக் கடைசிக்குள்ள எல்லாம் சரியாகி நிம்மதி தரும், கவலைப் படாதீங்க. உத்தியோகத்தில மறைமுக எதிர்ப்புகள் மறைந்து உங்களுக்கு அனு கூலமான திருப்பங்கள் நேரும். மருத்துவம், எலக்ட்ரானிக்ஸ், உலோக வகை, எண் ணெய் வகை தொழில்கள் லாபம் தரும். குடும்பத்தில குழப்பங்கள் மறைஞ்சு நிம் மதி கிட்டும். பெண்கள் ஆரோக்கியத்தில் கவனமாக இருக்க வேண்டும்.

மீனம் : உங்க தெய்வீக ஈடுபாடு குறைஞ்சிருக்கிறதால தெய்வபலமும் குறைஞ்சு போயிருக்கு - சிறு பிரச்னைகள், குழப்பங்கள். தடங்கல்கள்னு உங்களை அலைக்கழிக்கும். குருபகவான் துணை மட்டும் கொஞ்சம் கைகொடுத்து அப் பப்போ காப்பாற்றும். உத்தியோகத்தில் சுமுகமான போக்கிருப்பது நல்லது. பதவி உயர்வு காத்திருக்கு. இரும்பு, எந்திரம், தொழில் உபகரணங்கள், ரியல் எஸ்டேட் தொழில்கள் மேன்மை பெறும். குடும்பத் தில பொதுவாக மகிழ்ச்சி நிலவும் என்றா லும், மருத்துவச் செலவுகள் சில காத் திருக்கு. பெண்கள் ஆரோக்கியத்தில் கவனமாக இருப்பது நல்லது.

இது நல்ல வாரம்				
கிழமை	தேதி	நட்சத்திரம்	திதி	மற்றவை
புதன்	நவ. 10 (ஐப். 25)	ஹஸ்தம்	திரயோதசி	-
வியாழன்	நவ. 11 (ஐப். 26)	சித்திரை	சதுர்த்தசி	தீபாவளிப் பண்டிகை
வெள்ளி	நவ. 12 (ஐப். 27)	சுவாதி	அமாவாசை	கேதார கௌரி விரதம்
சனி	நவ. 13 (ஐப். 28)	விசாகம்	பிரதமை	-
ஞாயிறு	நவ. 14 (ஐப். 29)	அனுஷம்/ கேட்டை	துவிதியை	-
திங்கள்	நவ. 15 (ஐப். 30)	மூலம்	திருதியை	நாக சதுர்த்தி
செவ்வாய்	நவ. 16 (கார். 1)	பூராடம்	சதுர்த்தி	-

படகுராணி

"2006ம் ஆண்டு நடக்கவிருக்கும் ஆசிய விளையாட்டுப் போட்டிகளில், பாய்மரப் படகு போட்டியில் நிச்சயம் ஒரு தங்கம் வெல்







வேன்" என்று தன்னம்பிக்கையோடு சொல்லுகிறார் ரோகிணி ராவ். மும்பையில் பதினான்கு நாடுகள் கலந்து கொண்ட படகோட்டும் போட்டி நடைபெற்றது. அதில் கோவாவைச் சேர்ந்த பல்லவியுடன் ஜோடி சேர்ந்து தங்கப் பதக்கம் வென்றார். இதுதான், பாய்மரப் படகு ஓட்டும் போட்டியைப் பொறுத்தவரை இந்தியா பெற்ற முதல் தங்கப் பதக்கம்!

"தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டுக் கழகம் நடத்திய ஃபிட்னஸ் மற்றும் மோட்டிவேஷன் முகாம்களில் நான் பங்கேற்றிருக்கிறேன். உடல் ரீதியிலும், மனோ ரீதியிலும் என்னைத் தயார்ப்படுத்திக் கொள்ள அது உதவியது" என்கிறார் எம்.பி.பி.எஸ். மாணவியான ரோகிணி.

ரோகிணியின் அப்பா ஜெயராஜ் கர்நாடக மாநிலம் உடுப்பியைச் சேர்ந்தவர். விளம்பர நிறுவனம் ஒன்றில் முக்கியப் பொறுப்பில் இருக்கிறார். அம்மா ஆயிஷா, 'லிட்டில் தியேட்டர்' என்ற நாடகக் குழுவினை நடத்தி வருகிறார்.

"எத்தனையோ விளையாட்டுகள் இருக்க, பாய்மரப் படகு ஓட்டுவதை எப்படித் தேர்ந்தெடுத்தீர்கள்?"

"நான் சின்ன வயதிலேயே பரதநாட்டியம் கற்றுக் கொண்டேன். ஜிம்னாஸ்டிக்ஸ் பயின்றேன். த்ரோ பால், வாலிபால் விளையாடினேன். நீச்சல், கராத்தே கற்றுக் கொண்டேன். ஓட்டத்தைக் கூட விட்டு வைக்கவில்லை. என் பெற்றோர் இத்தனையையும் கற்றுக் கொடுத்ததற்குக் காரணம், பலவற்றைத் தெரிந்து கொண்டு, கடைசியில் எது எனக்கு இஷ்டமோ அதில் சாதிக்க வேண்டும் என்பதற்காகத்தான். நானோ, இவை எல்லாவற்றையும் விட்டு விட்டு, பாய்மரப் படகோட்ட ஆரம்பித்து விட்டேன்."

"அது எப்படி நிகழ்ந்தது?"



"என் அம்மா லண்டனில் படித்தவர். அங்கே பாய்மரப் படகு ஓட்டுவது மிகப் பிரபலமான பொழுதுபோக்கு. அதனால் அவருக்கு அதில் ஆர்வம் உண்டு. சென்னையில் அவர் ஒரு 'செய்லிங் கிளப்' ஆரம்பித்தார். நானும் அதில் சேர்ந்து பாய்மரப் படகு

எம்.பி.பி.எஸ்!

ஓட்டுவதற்குப் பயிற்சி பெற்றேன். சென்னை துறைமுகத்திலிருந்து ஐந்தாறு கிலோ மீட்டர் கடலுக்குள் சென்றால், அங்கே பாய்மரப் படகோட்டும் பயிற்சி பெறலாம்.'


"பாய் மரம் ஓட்டுவது சுலபமான காரியமா?"

"இல்லை. பாய்மரத்தை அதனோடு இணைக்கப்பட்ட கயிற்றையும் சக்கரத்தையும் கட்டுப்பாட்டில் வைத்து, படகு ஓட்டுவது என்பது மிகவும் கடினமான ஒரு காரியம். பாய்மரப் படகு ஓட்ட, ஒரு ஃபுட்பால் அல்லது வாலிபால் ஆடுவதற்கு வேண்டிய உடல் வலிமையும் தேவை. அதே சமயம் செஸ் ஆடுவதற்கு வேண்டிய புத்திசாலித்தனமும் வேண்டும். இரண்டும் இல்லாவிட்டால், உங்கள் பாய்மர ஆசை காற்றோடு போக வேண்டியதுதான்.

இன்னொரு விஷயம். ஒரு போட்டி என்றால், தொடர்ந்து நாலைந்து மணி நேரம் படகோட்டும்படி இருக்கும். தேசிய, அகில உலகப் போட்டிகள் என்றால், தொடர்ந்து ஐந்தாறு நாட்கள் நடக்கும். இதற்கெல்லாம் உடல் வலிமை, மன வலிமை தேவை" என்றவரிடம், "கடலில் போகிறபோது, எதிர்பாராதவிதமாய், படகு கவிழ்ந்து விட்டால் ஆபத்தில்லையா?" என்றோம்.

"ரோட்டில், சைக்கிளில் போகிறபோது, கீழே விழுந்து விட்டால் என்ன பண்ணுவோம்? சாய்ந்த சைக்கிளை எடுத்து நிறுத்தி, ஓட்டிச் செல்ல மாட்டோமா? அதே போலத்தான். கவிழ்ந்த படகை நிமிர்த்தி, ஓட்டிக் கொண்டு போக வேண்டியதுதான். ஒரு ரிஸ்க்கும் இல்லை" என்கிறார் கேஷுவலாக!

- எஸ். சந்திரமௌலி



வட்டமேஜை

எத்தனை பணமிருந்தாலும்...

சிலமலையிலிருந்து முத்து சுந்தரம்:

'பகுத்தறிவு ஆன்மிகத்தின் எதிரியா? நண்பனா?' என்ற கேள்விக்கு தராக பதில் அளித்த விதம், பகுத்தறிவிற்கும் ஆன்மிகத்திற்கும் உள்ள தொடர்பை கண்ணாடி போல் பிரதிபலிப்பதாக இருந்தது.

திருப்பரங்குன்றத்திலிருந்து டி.கே. சுப்பிரமணியன்:

மீரா ஜாஸ்மினின் பேட்டி படித்ததும் 'எத்தனைகோடி பணமிருந்தாலும் நிம்மதி வேண்டும் வீட்டிலே' என்ற அருமையானதொரு பழைய பாடல்தான் நினைவுக்கு வந்தது.

காமநாயக்கன் பாளையத்திலிருந்து, மா.மோகனராசன்:

''சுப்புனி மாமா'' சிறுகதை அருமையிலும் அருமை. தொடக்கம் முதல் இறுதிவரை ஒன்றிப் போனேன்.

வி.ஐ.பி. கமெண்ட்:

ஷோபனாவின் நேர்முகம் சிறப்பாக இருந்தது. இக்காலச் சினிமாவின் அற்பத்தைச் சுட்டிக்காட்டியது. திரைப்படம் முழுக் கலை வடிவமாகவும் இருக்க முடியும் என்பதை, அவர் நடித்த 'டான்ஸ் லைக் எ மேன்' என்ற திரைப்படம் காட்டுகிறது என்று உறுதி செய்கிறார். தாம் நடித்த திரைப்படத்தின் மூலமான நாடகத்தைப் பார்க்க மறுக்கிறார். காரணம்: அதன் பாதிப்பு தமக்கு வந்து விடக்கூடாது என்பதற்காக. ஆங்கில, இந்திப் படங்களின் சி.டிக்களுக்கு முன்பு தவம் கிடப்பதையே பெருமையாகப் பீற்றிக் கொள்ளும் தமிழ்ப் பெரிய திரை, சின்னத் திரை இயக்குநர்களும் நடிகர்களும் படிக்க வேண்டிய பகுதி இது.



க.ப.அறவாணன்

வேலூரிலிருந்து வே.ந. கதிர்வேல்:

''வீரப்பனைக் கொன்றது பற்றி எல்லோருமே கொண்டாடி மகிழ்கிறார்களே தவிர, அவனுடைய குழந்தைகளின் வாழ்க்கையைப் பற்றி யாருமே கவலைப்படவில்லையே' என்ற நல்ல மனங் கொண்டோர்களின் ஏக்கத்தை 'ஆசிரியர் பக்கத்தில்' தீர்த்து வைத்ததை எவ்வளவு பாராட்டினாலும் தகும்!

குமாரபாளையத்திலிருந்து 'காசி' சக்திவேலன்:

கிரிக்கெட்டில் சாதனை செய்தது மட்டுமின்றி நிஜ வாழ்விலும் கண்தானம், உடல் தானம் செய்திருக்கும் அனில் கும்ப்ளேவின் செயல் மகத்தானது!

மும்பையிலிருந்து கே.என். பால கிருஷ்ணன்:

மகாராஷ்டிர முதல்வர் பதவிக்காக 'பங்காளிகள்' போடும் சண்டையும், வாக்காளரின் ஆதங்கமும் கார்ட்டூனில் முகத்தில் அறைந்தாற்போல் சித்திரிக்கப் பட்டுள்ளன!

சிதம்பரத்திலிருந்து ஸ்ரீவித்யா காளிதாஸ்:

இந்த வாரம் பேட்டி ஸ்பெஷலா? அட்டை To அட்டை ஏகப்பட்ட பேட்டிகளை வழங்கி அசத்தி விட்டீரே!

திருச்சியிலிருந்து அ. ஃபாத்திமா:

'கருணை இல்லம்' கட்டுரை கண்களைக் குளமாக்கியது. யாழிஸ்ரீ மறைந்தும் தனது கண்களால் இன்னும் உயிரோட்டத்துடன் இருக்கக் காரணமாய் இருக்கும் பெற்றோரை என்னவென்று பாராட்டுவது?

ஆலங்குளத்திலிருந்து ரா.சால மோன்:

எவருமே தன் தோல்விக்குத் தானே



பொறுப்பு என்பதை ஒத்துக் கொள்வதில்லை! அதற்கு இல.கணேசனும் விதி விலக்கல்ல என்பதைத்தான் அவரது பேட்டி சுட்டிக் காட்டுகிறது.

மதுரையிலிருந்து

சி.இரமேசு:

31.10.04 கல்கி இதழில் ஆசிரியர் பக்கத்தில் முன் வைத்த கருத்துகளை இதுவரை யாரும் முன் வைக்கவில்லை.

பெரணமல்லூரிலிருந்து

சேகரன்:

சுஜாதா - கனிமொழி கலந்துரையாடல் பயனுள்ள பல தகவல்களைத் தந்தது. பத்திரிகை ஊடகத்தை நச்சுக் கலாசாரத்திலிருந்து காப்பது என்பது பத்திரிகை, வாசகர்கள் என அனைவரும் சேர்ந்து செயல்பட வேண்டியதாகும்.

மயிலாப்பூரிலிருந்து

டாக்டர் ஆர்.ஸ்ரீதரன்:

புதிய ஹெர்பல் டயாலிசிஸ் இயந்திரம் பற்றிய கட்டுரை மிகவும் பயன் அளிப்பது. ஒரு திருத்தம். ஹெபடைடிஸ் ஏ வைரஸ் தடுப்பூசி பல வருடங்களாக உள்ளது. ஆறு மாத இடைவெளியில் இரண்டு ஊசிகள் தேவை. ஒரு ஊசியின் விலை கிட்டத்தட்ட 1000 ரூபாய். ஒரு வயதுக்குப்பின் குழந்தைகளுக்கு இது அவசியம். (அனைத்து வயதினருக்குமே இது உபயோகம் உள்ள பாதுகாப்பான தடுப்பூசி). சமீப காலமாக ஹெபடைடிஸ் ஏ,பி இரண்டுக்குமே சேர்த்து ஒரே மருந்தும் தடுப்பூசியாகக் கிடைக்கிறது.

நாங்கள் திருமலையில் லட்டு மற்றும் அன்னப்பிரசாதங்கள் தயாரிக்கும் ஸ்ரீ வாரி போட்டு (மடைப் பள்ளி)க்கு பரம்பரை மிராசுதாரர்கள். நாங்கள் நான்கு குடும்பங்களைச் சேர்ந்தவர்கள். எங்களால் பிரசாதமோ, லட்டோ செய்ய முடியவில்லை என்று அந்த பொறுப்பை யாரிடமும் ஒப்படைக்கவில்லை. 17.10.04 இதழில் 'லட்டு ஐயங்கார்' கட்டுரையில் குறிப்பிட்டுள்ள கல்யாணம் ஐயங்கார், எங்களால் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டு செயல்பட்டு வந்தவர் தான் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

– பி. ஸ்ரீநிவாசன், செயலாளர்,
எம்.பத்மநாப ஐயங்கார், பிரசிடெண்ட்,
திருமலா ஜெமிகார் அஸோசியேஷன்,
திருப்பதி

மும்பையிலிருந்து வெங்கட்ராமன்:

'வீரப்பன் சகாப்தம்' தலையங்கம் மிகுந்த தெளிவாக, நடு நிலையுடன் எழுதப்பட்டிருந்தது. டி.ஜி.பி. விஜயகுமாரைப் பாராட்டும் பொழுதே, வீரப்பன் மரணத்தால் புதைபட்டிருக்கும் சில கேள்விகளையும், மற்றும் பின்தங்கிய மாவட்டங்களுக்கு ஆவன செய்ய வேண்டிய அவசியத்தையும் கோடிட்டுக் காட்டியுள்ளீர்கள். வீரப்பனின் சமூக விரோதச் செயல்களை மறைத்து, அவனது மரணத்தில் அரசியல் ஆதாயம் தேட நினைக்கும் ராபின் ஹூட்களையும் மக்கள் அடையாளம் கண்டுகொள்ள வேண்டியது அவசியம்.

ஹம் ப்ரேம கரோமி!



மச்சான், மாமூ, மாப்ளே, சகலை போன்ற 'மரியாதைக்குரிய' வார்த்தைகள் எங்கு அதிகமாக ஒலிக்கும்? ம்... கல்யாண மண்டபம், கூட்டுக் குடும்பங்களை விட கல்லூரிகளில்தானே!

ஆனால் இது போன்ற அடையாளம் எதுவுமின்றி, ஒரு கல்லூரி இருக்கிறது! மைலாப்பூரில் அமைந்துள்ள சென்னை சமஸ்கிருதக் கல்லூரிதான் அது!

விஸ்தாரமான வெட்டவெளி, உள்ளே அடங்கியிருக்கும் வகுப்பறைகள், பாழடைந்த கிணறு! வகுப்பு முடிந்ததை அறிவிக்கும் கோயில் மணி, பக்கத்தில் ஒரு கரும்பலகையில் சமஸ்கிருதத்தில் எழுதப் பட்ட சிந்தனை வாக்கியங்கள், என வித்தியாசமாக இருக்கிறது இந்தக் கல்லூரி. தத்தம் வகுப்பறைகளில் மாணவர்கள் அமைதியாகப் பாடம் கற்கிறார்கள். ஒரு கட்டுக்கோப்பான குருகுலம் போலவே தோன்றுகிறது.

"பத்தாவது முடிச்சவுடனே இங்கு 'சிரோமணி' பட்டம் வாங்குவதற்கான ஏழு வருட கோர்ஸ் ஒண்ணு இருக்கு. வேத சாஸ்திரங்களான பீமாட்சா, வேதாந்தம், அலங்காரம், வியாகரணம், ஜோதிஷம், நியாயம் போன்ற ஆறில் ஒன்றைத் தேர்ந்தெடுத்துப் படிக்கும்போது நம் பாரத தேசத்தின் வரலாற்றையும், அதன் மகிமைகளையும் அடிவேர்வரை சென்று பார்க்க முடிகிறது" என்று

சேர்க்கை விண்ணப்ப படிவத்திலிருக்கும் அத்தனை தகவல்களையும் நம்மிடம் கொட்டிய அம்ரித் அதிகாரி எனும் மாணவர், நேபாளத்திலிருந்து வந்து படித்துக் கொண்டிருக்கிறார்.

ஸ்ரீலங்காவிலிருந்து வந்த பிரசன்னா, "இங்குள்ளவர்களுக்கு யு.எஸ். சென்று படிப்பது பெருமையாக இருக்கும். ஆனால் இந்தியப் பாரம்பரியத்தைப் படிப்பதற்காக நான் இங்கு வந்து படிப்பதை, இலங்கையில் உயர்வாகக் கருதுகிறார்கள்" என்றார்.

"கம்ப்யூட்டர், இண்டர்நெட், நுனி நாக்கில் அமெரிக்கன் இங்கிலீஷ் என, உலகமே மேற்கத்திய கலாசாரத்திற்கும் நவீனத்திற்கும் மாறும்போது... பயமாக இல்லையா உங்களுக்கெல்லாம்?" என்று கேட்டால், "யாருக்குமே தெரியாததை உங்களுக்கு இப்போ சொல்றோம். சமஸ்கிருதம் படிக்கிற எல்லோருமே அரசாங்க வேலையும், ஃபாரினில் வேலை வாய்ப்பும் என, க்ஷேமமா வாழ்க்கையை நடத்தறாங்க. பள்ளி, கல்லூரிகள்ல சமஸ்கிருத ஆசிரியர், ராணுவத்தில் இதிகாசத்தின் நீதிக் கதைகளைச் சொல்லும் ரிலிஜியஸ் டீச்சர்... என வேலைவாய்ப்புகள் எக்கச்சக்கமா இருக்கு" என்று ஆச்சர்யம் தருகின்றனர். இது தவிர, ஐரோப்பிய நாடுகளிலுள்ள மொழிகளுக்கும் சமஸ்கிருதத்திற்கும் உள்ள வேறுபாடுகளை ஆராயச்சி செய்யும் பணியிலும், ஏராளமான வேலை வாய்ப்புகள் உள்ளதாம்.

எந்தக் கல்லூரியிலுமே பார்க்க முடியாத காட்சி, இங்கு வேத சாஸ்திரம் படிக்கும் மாணவர்கள், சட்டை அணியாமல் அங்கவஸ்திரம், வேஷ்டி அணிந்துதான் வகுப்புகளுக்குள் செல்கிறார்கள். இதோடு காலணிகளை வகுப்புக்கு வெளியே தான் விட்டு உள்ளே நுழைகின்றனர்.

"காலேஜுக்கு வெளியே போயிட்டா லீ ஜீன்ஸ், டி-ஷர்ட்டில் எங்களைப் பார்க்கலாம்" என்று இளமைத்துள்ள லோடும் பேசுகின்றனர்.

வெளியே தமிழ் பேசினாலும், வகுப் பறைகளில் சமஸ்கிருதம் தான்.

"சமஸ்கிருதம் ஒன்றும் அழிந்து விட வில்லை. சமஸ்கிருதமும் உருமாறி ஹிந்தி, பெங்காலி, கன்னடம் என்று பல மொழி வடிவங்களில் உயிர் வாழ்ந்து கொண்டி ருக்கிறது. பேச்சு வழக்கில் அதிகமாகப் பயன்படுத்தப்படுவது சமஸ்கிருதம் தான். ஆனால், இதை இறந்து போன மொழி களில் சேர்ப்பது எந்தவிதத்திலும் நியாய மில்லை" என்று மீண்டும் சீரியஸுக்குத் தாவியவர்களைப் பிடித்து நிறுத்தினோம்.

"என்ன, எந்த ஸ்த்ரீகளின் வாடையும் காணோமே!" என்றதற்கு, "ஆமாங்க. இதுக்கு முன்னாடி ஒன்றிரண்டு பேர் படிச்சிட்டிருந்தாங்க. இப்போ அதுவு மில்லை" என்று ஸ்ருதி குறைந்து சொன் னார். "ஓ.கே. பாஸ், ஐ லவ் யூக்கு சமஸ்கிருதத்தில் எப்படிச் சொல்வது?" என்றதுதான் தாமதம். 'ஹம் ப்ரேம கரோமி' என்று உற்சாகமாக கோரஸ் பாடினார். அதானே, இவர்களும் இக்கால இளைஞர்கள்தானே!

- கண்

படங்கள்: **ஸ்ரீஹரி**





'அடங்க மறு! அத்து மீறு!' என்று அதிரடியாக புத்தகங்களையெல்லாம் வெளியிட்டு, அரசியலில் சூட்டைக் கிளப்பிக் கொண்டிருப்பவர் விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பாளர் தொல். திருமாவளவன். அவரது அரசியல் நடவடிக்கைகளில் சமீபத்தில் ஏற்பட்ட திடீர் மாற்றம் - அதன் பின்னணி, தமிழ், தலித் பிரதிநிதித்துவம் ஆகியவை பற்றி கேள்விக் கணைகள் தொடுத்தோம்.

"பா.ம.கவுடன் சிக்கலு

நீங்களும் ராமதாசும் திடீரெனக் கைகோத்ததற்கு ஏற்கெனவே காரணம் சொல்லியிருந்தாலும், நிஜப் பின்னணி என்ன?

விடுதலைச் சிறுத்தைகளுக்கும் பா.ம.க.வுக்கும் பல்வேறு விஷயங்களில் என்றைக்குமே ஒத்த கருத்து உண்டு. குறிப்பாக தமிழ் வளர்ச்சி, தமிழர் நலன், தமிழ்ப் படங்களுக்குத் தமிழில் பெயர் சூட்டுவது ஆகியவற்றைச் சொல்லலாம். அதே போன்று ரஜினிகாந்த், விஜயகாந்த் எதிர்ப்பிலும் எதிரெதிர் முகாமில் இருந்த போதும், ஒத்த கருத்து இருந்தது. ஒ கருத்துடைய நாங்கள் ஏன் இணை செயல்படக் கூடாது என்றெண்ண தமிழறிஞர்களின் முயற்சிதான் இதற் காரணம். அதன் பின்னரே பரஸ் காட்டமான விமர்சனங்களை மறந் என்னைத் தலைவராகக் கொண்ட தமி பாதுகாப்பு இயக்கத்தில் ராமதாஸ் இணைந்து கொண்டார். அதே சம எங்களுக்கும் பா.ம.க.வுக்கும் சாதிச் சிக்க கள் இன்றைக்கும் உண்டு. அதன் கார மாக சமூக நீதிப்பேரவையில் இன்னு எனக்கு உடன்பாடு கிடையாது. இரு பினும் தமிழுக்காக ஒன்று சேர்ந்தோ இதில் நிஜப் பின்னணி, வேறு பின்னண என்று தனித்தனியே கிடையாது.

இப்படிச் சொன்னாலும் உண்மையில் இருவரும் இணைந்தது அரசிய காரணத்துக்காகத்தான். அதற் தமிழைக் கேடயமாக்கி விட்டீர்க என்கிறார்களே...

தமிழைச் சொல்லி இரு சமூகங்களு ஒன்று சேர்ந்து, பின்னர் அரசிய தளத்திலும் ஒன்று சேர்ந்தால் அது வ வேற்கக் கூடியதுதானே? ஆனால் அ மையமாக வைத்தே நாங்கள் இணை வில்லை.

தமிழ்த் தொலைக்காட்சிகள் எல்லா தமிழ்ப் பெயர் வைத்துக் கொள் ளவில்லையே?

தமிழைச் செம்மொழியாக்க பெ முயற்சி எடுத்த கலைஞரின் குடும்ப தொலைக்காட்சிக்கு, கேரளாவிலு கர்நாடகத்திலும் அந்தந்த மொழிகளி பெயர் வைத்துவிட்டு, இங்கு மாத்திர 'சன்'என்று வைத்திருப்பது வயிற்றெரிச்ச லாக உள்ளது. அப்படி என்றால், தமிழன் என்ன இளிச்சவாயனா? மற்ற தமிழ்த் தொலைக்காட்சிகளும் தமிழுக்கு மா



திருமாவளவன்

வேண்டும்.

பலர் சிரமப்பட்டு வாங்கிய உரிமை தலித் பிரதிநிதித்துவம். ஆனால் இன்று கிருஷ்ணசாமிக்கோ, திருமாவளவனுக்கோ சீட்டு கொடுத்தால்தான் அது உண்மையான பிரதிநிதித்துவம் என்று சொல்வது போல உங்களது நடவடிக்கைகள் இருக்கிறதே?



உண்டு!"

இருபத்தி நான்கு மணி நேரமும் தாழ்த்தப்பட்டவர்களுக்காக நாங்கள் குரல் கொடுக்கிறோம். அந்த அமைப்பை கூட்டணியில் சேர்க்கவில்லை என்றால் எப்படி ஏற்றுக் கொள்ள முடியும்? எங்களைப் போன்ற இயக்கங்களால்தான் தலித் மக்களின் உண்மையான பிரதிநிதியாகச் செயல்பட முடியும். அதனால் எங்களை ஓர் அரசியல் கட்சியாக அங்கீகரியுங்கள் என்று கேட்கிறோம்.

அப்படி உங்கள் கொள்கையைச் சொல்லி வாக்குக் கேட்டும், நீங்கள் ராஜினாமா செய்த மங்களூர் தொகுதியில் திரும்பப் போட்டியிட்டபோது தோற்றுத்தானே போனீர்கள்...?

தி.மு.க.வும்-அ.தி.மு.க.வும் பலமுறை தோற்று விட்டதால் அவர்களது கொள்கைகள் தோற்றுவிட்டனவா, இல்லையே. அ.தி.மு.க.வுக்கு எதிரான அலையில்தான் தோற்றுப் போனோமே தவிர, வேறு ஒற்றும் காரணமில்லை. சங்கரமட ஆதரவுடன் போட்டியிட்டவர்களும் டெபாசிட் இழக்கும்போது, நாங்கள் கணிசமாக வாக்குகளை வாங்கியுள்ளோமே.

அரசியலுக்கு வருவதற்குமுன் திருவரங்கம் கோவிலில் கருவறை நுழையும் போராட்டத்திற்கு ஆதரவளித்தீர்கள். பின்னர் சிதம்பரம் கோவில் சன்னதியில், மாலை மரியாதைகளை ஏற்றுக் கொண்டீர்கள். அது எதற்காக, இது எதற்காக?

வரக் கூடாது என்ற இடத்தில் மனிதன் என்ற உரிமை கோரி நுழைய முற்பட்டோம். வாருங்கள் என்று சொன்ன இடத்துக்குச் சென்றோம். மாலை மரியாதைகளை ஏற்றுக் கொண்டோம்.

அடுத்து உங்கள் பாதை எப்படி இருக்கும்?

தி.மு.க.-அ.தி.மு.க. தலைமையிலுள்ள அணிகளுக்கு மாற்றாக ஒரு அணி உருவாக்கப்பட வேண்டும். ஆனால் அப்படியொரு வலுகொண்ட ஒரு பெரிய கட்சி தமிழகத்திலே இல்லை என்பதுதான் துரதிருஷ்டம்.

ஏன் காங்கிரஸ் இருக்கிறதே?

தவறு. தி.மு.க.-அ.தி.மு.க.வை எதிர்த்து மாற்றாக ஒரு அணிக்குத் தலைமை தாங்கக் கூடிய அளவுக்கு, காங்கிரஸுக்கு வலுவோ, துணிவோ இல்லை என்பதுதான் யதார்த்தம். ஆகவே வேறு பல கட்சிகள் இணைந்து மாற்று அணி அமைப்போம்.

சீட் கொடுக்கவில்லை என்பதற்காக கலைஞரைக் கண்டித்து போஸ்டர் எல்லாம் ஒட்டப்பட்டது. இப்பொழுது கலைஞர் பற்றிய மதிப்பீடு எப்படி உள்ளது?

போஸ்டர் எல்லாம் எங்கள் சார்பில் ஒட்டவில்லை. ஒட்டியிருந்தால் அது எங்கள் இயக்கத்தில் உள்ள ஒரு சிலர் உணர்ச்சி வேகத்தில் செய்திருப்பர். எப்படி இருப்பினும் கலைஞர் மீது எனக்குத் தனிமதிப்பு உண்டு. அதே சமயம் அவரை மதிப்பீடு செய்வதற்கு எனக்கு வயதில்லை. அனுபவமுமில்லை.

- இரா. முத்துக்குமார்

படங்கள் : **அதிரை சுதர்ஜி**

இந்த முறையும் கண்டனங்களுக்கு ஆளாகியிருக்கிறார் இயக்குனர் செல்வராகவன். இவரது சமீபத்திய திரைப்படமான '7G ரெயின்போ காலனி' பரவலான எதிர்ப்புகளைச் சந்தித்திருக்கிறது. இவரது படத்தைக் காணும் பொழுது உங்கள் ஒவ்வொருவருக்கும் ஏற்பட்ட அதிர்வுகள் அனைத்தையும் இவர்முன் கேள்விகளாய் எதிரொலித்தோம்.

பாலியல் ரீதியான கதைகளையும் காட்சிகளையும் வைத்துப் படம் எடுத்தால் தான் பரபரப்பாகப் பேசப் படலாம் என்று நினைக்கிறீர்களா?

செக்ஸ் காட்சிகளை வைத்துதான் புகழ்பெற வேண்டும் என்று நினைத்தால் வேறுமாதிரியான படங்களை எடுத்து விட்டுப் போகலாம். ஹீரோயின் உடை கம்மியாக அணிந்தால், அது அந்த கேரக்டரின் தன்மை. உங்களுக்கெல்லாம் ஏதாவது குறை சொல்ல வேண்டும். அவ்வளவு தான்.

உங்களது ஒவ்வொரு படத்திலும் திருமணத்திற்கு முன்பே ஹீரோ - ஹீரோயின் முறைகேடாகப் பழகு கிறார்களே...

ஒரு ஹீரோவும் ஹீரோயினும் திருமணத்துக்கு முன்பு இணைந்தால் என்ன, பின்பு இணைந்தால் என்ன. அதுவொரு வாழ்க்கையின் அங்கம். மற்றபடி என் படங்களில் செக்ஸ் காட்சிகளுக்கு அவ்வளவு முக்கியத்துவம் கொடுக்க மாட்டேன்.

'துள்ளுவதோ இளமை'யில் பள்ளியில் படிப்பவர்கள் தவறு செய்வதாகக் காட்டுகிறீர்கள். இது படம் பார்ப்பவர்களை பாதிக்கும் என்று உங்களுக்குத் தெரியாதா?

டி.வியில் கொலைகளைக் காண்பிக்கிறார்கள். அதனால் யாராவது பாதிப் படைகிறார்களா? பிறகு ஏன் சினிமாவை மட்டும் குத்திக் காட்டுகிறீர்கள்? சினிமாவைப் பார்ப்பதோடு மறந்துவிட வேண்டும். பக்க விளைவுகள் எதுவும் இல்லாத இன்பம்தான் சினிமா.

நடிகர்களின் ஸ்டைல்களையும் நடிகைகளின் காஸ்ட்யூம்களையும் யோசிக்காமல் பின்பற்றும் சமூகம் நம்முடையது...

சரி, ஒரு லட்சம் பேர் இப்படி இருப்பார்களா? தமிழ்நாட்டின் மக்கள் தொகையில் இது சிறிய எண்ணிக்கை தானே? மெஜாரிட்டியைத்தான் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும். சினிமாவை ஃபாலோ செய்பவர்களை நாம் என்ன செய்ய முடியும்?

சினிமாவை குறைவானவர்கள் மட்டுமே பொழுதுபோக்காகப் பார்த்தால், நமக்கு இதிலிருந்து முதலமைச்சர்கள் கிடைத்திருக்க மாட்டார்கள்.. இதில் உங்களுக்கென்று ஒரு பொறுப்பு இருக்கிறதல்லவா?

எப்படி பொறுப்பில்லாமல் படம் எடுத்து விட்டேன் என்று சொல்கிறீர்கள்? புரியலை! நம் சமுதாயத்திலுள்ள இளைஞர்களின் கலாசாரத்தை, மன நிலையை நான் படங்களில் பிரதிபலிக்கிறேன். அவ்வளவுதான். தவிர, தவறு செய்தவர்கள் நன்றாக வாழுவதாக நான் காட்டவில்லையே. 'துள்ளுவதோ இளமை'யில் ஷெரின் என்ன ஆனாள் என்றே காட்டவில்லை. தனுஷ் குற்ற உணர்ச்சியோடு வாழ்கிறான். 'காதல்

என் படத்தைப்

கொண்டேன்'னில் வித்யாவைக் கடத்திட்டுப் போனவன் செத்தே போய்விட்டான். ' '7G'யில் சோனியா அகர்வாலும்

செல்வராகவன் ஆதங்கப் பேட்டி

செத்து விடுவார். எந்த இடத்திலும் ஒரு தவறைக் காட்டித்தான் சினிமாவில் மெசேஜ் சொல்ல முடியும்.

தவறுகளைப் பதிமூன்று ரீல்களிலும் காண்பித்து விட்டு, மெஸேஜைக் கடைசி ரீலில் காண்பிக்கும்பொழுது, ஒரு ரசிகனின் மனத்தில் எது பதியும்?

உங்கள் கேள்வி ஒரு படைப்பாளியை சிதறடிக்கிறது. பாலியல் பலாத்காரம், வன்முறை போன்ற நிகழ்வுகளை டி.வியிலும் செய்தித்தாள்களிலும் முதன்மைப்படுத்திச் சொல்வதில்லையா? உங்களுக்கு இருக்கும் அதே உரிமையும் சுதந்திரமும் எங்களுக்கும் உண்டு.

அதற்காக இந்தியப் பண்பாட்டின் பெருமைக்குரிய அம்சங்களைக் காற்றில் பறக்கவிட்டுவிட்டு, உங்கள் இஷ்டத்துக்குப் படம் பண்ணுவதா?

ஓ மை காட்! உலக அளவில் என் படம் பேசப்பட வேண்டும் என்று நினைக்கிறேன். லாஸ் ஏஞ்சல்ஸ், சிங்கப்பூரில் ரிலீஸ் செய்திருக்கிறோம்.



ார்க்காதீர்கள்!



தமிழ்நாட்டிலும் '7G'க்கு அமோக வரவேற்பு கிடைத்திருக்கிறது. மாணவர்கள், பெற்றோர்கள், ஐ.ஏ.எஸ். ஆபீஸர்கள், டாக்டர்கள்... என எல்லோருமே தங்கள் கருத்துகளைக் கடிதம் மூலமாகத் தெரிவித்துள்ளனர். யாருமே 'கற்பு' என்கிற விஷயத்தைப் பொருட்படுத்தவே யில்லை. தவிர, படத்துக்கு 'A'சான்றிதழ் தான் கொடுத்திருக்கிறார்கள். உங்களுக்குப் பிடிக்காவிட்டால் என் படத்தைப் பார்க்காதீர்கள்.

நீதான் என் புருஷன் என ஒரு பெண் நினைத்த பிறகு, கற்பு ஒரு பொருட்டே அல்ல. திருமணம் என்பது ஒரு சடங்கு தான். பழைய காலத்தில் தாலி கட்டிக் கொண்டா இருந்தார்கள்? காந்தர்வத் திருமணங்கள் நடைபெற்றதே. இரு மனதும் சங்கமிப்பதுதான் திருமணமே தவிர, சடங்கு அல்ல.

மிடில்கிளாஸ் இளைஞனின் இன்ஃபேச்சுவேஷனையும் சிற்றின்பங்களையும் தாண்டி மற்ற பிரச்னைகளையும் காண்பிக்கலாமே?

ரோடு சரியில்லை, லைட் எரியலை என்று சொன்னால்தான் அது சமுதாயப் படமா? இதுவரை தமிழ் சினிமாவில் சரியாகக் காண்பிக்கப்படாத தந்தை - மகன் உறவைக் காண்பித்திருக்கிறேன்.

களிமண்ணைக் கூட சிலையாக்கலாம் என்று தாழ்வு மனப்பான்மை கொண்ட என் ஹீரோக்கள் மூலம் வெளிப்படுத்தியுள்ளேன். மூன்று படங்களில் திருப்தியே இல்லை. சர்வதேச விழாக்களில் இடம் பெறத் தகுதியுள்ள படங்களை எடுக்க நினைக்கிறேன். சர்வைவலுக்காக இப்படியெல்லாம் எடுக்க வேண்டியுள்ளது. அமெரிக்க அதிபரையே 9/11 எனும் ஹாலிவுட் படத்தில் கிண்டல் செய்தது போல் நானும் இங்கு எடுத்தால், அந்தப் படத்தை நானே வைத்துக் கொள்ள வேண்டியதுதான்.

'யூ' சான்றிதழ் கொண்ட ஒரு படத்தை உங்களால் தர முடியுமா?

'7G'க்கு 'யூ' சான்றிதழ் கிடைத்திருக்க வேண்டியது. ஆனால் திருமணத்திற்கு முன்பு உறவு என்னும் கான்சப்டில் படம் எடுத்ததால், இதற்காகவே 'A'சர்டிபிகேட் தரவேண்டியிருக்கிறது என்று சென்சாரில் சொன்னார்கள். 'யூ'வுக்காக குழந்தைகள் படம் எடுத்தால், எந்த டிஸ்ட்ரிபியூட்டரும் படம் வாங்க மாட்டார்கள்.



''நீ பரீட்சையில் நூற்றுக்கு நூறு வாங்குவேன்னு நான் கொஞ்சம்கூட எதிர்பார்க்கவே இல்லை.''

''நீங்க இவ்வளவு சந்தோஷப் படுவீங்கன்னு தெரிஞ்சிருந்தா, கூட இன்னொரு சைபரும் சேர்த்துப் போட்டிருப்பேனே அப்பா!''

- எஸ்.எம். ஷாஜஹான்

'துள்ளுவதோ இளமை'க்குப் பிறகு புற்றீசல் போல் கிளம்பிய அதே மாதிரியான படங்களுக்கு நீங்கள் தானே முழு முதற் காரணம்?

நான் எடுத்த படத்தை நீங்களும் எடுக்கிறீர்கள் என்றால், உங்களை அடகு வைத்து பண்ணுவதாகத்தான் அர்த்தம். சினிமாவின் அடிப்படையான திரைக்கதையை முதலில் கற்றுக் கொள்ளுங்கள். அதேபோல் என் சக இயக்குனர்களுக்கும் ஒரு வேண்டுகோள். ஒரே பார்முலாவை பின்பற்றாதீர்கள். வித்தியாசமான கதை, திரைக்கதைகளோடு ரசிகர்களைச் சந்தியுங்கள்.

உங்கள் படத்திற்கு திரைக்கதை அமைக்கும்பொழுது நம் கலாசாரத்தை மீறி காட்சிகள் வைப்பதில் அச்சம் ஏதும் இருப்பதில்லையா?


நானே நம் கலாசாரத்தைத் தாண்டாத போது, என் படம் மட்டும் எப்படித் தாண்டி விடும்? 'துள்ளுவதோ இளமையில்' காட்டியது இருவர் வாழ்க்கையின் ஒரு கட்டத்தில் ஏற்படும் ஒரு விபத்து தான். பல வருடங்களுக்கு முன்பு 'விதி' என்கிற படத்தில் கூட மோகனுக்கும் பூர்ணிமாவுக்கும் ஓர் இரவில் ஏற்படும் விபத்தைக் காட்டினார்களே. அது போலத்தான் இதுவும்.

ஆபாசமாகப் படமெடுக்கிறீர்கள் என உங்கள் தந்தை, சகோதரர் என உங்கள் ஒட்டுமொத்த குடும்பத்தையும் மீடியா விமர்சிப்பதை எப்படி எடுத்துக் கொள்கிறீர்கள்!

புதிதான ஒரு விஷயத்துக்கு எப்பொழுதும் கண்டனங்கள் இருக்கத்தான் செய்யும். பத்திரிகைகளால் ஆட்சேபணை தெரிவிக்கத் தான் முடியும். சோறு போட முடியாதே, அதனால் இயல்பாக ஒரு பத்து நிமிடம் ஏற்படும் வருத்தத்தை அப்படியே துடைத்து விட்டு, எங்கள் வேலையைப் பார்க்கக் கிளம்பி விடுவோம்'' என்று முடித்த செல்வராகவன், ''இப்படி கேள்விகணைகளை வீசுவீர்கள் என்று தெரிந்திருந்தால், பேட்டிக்கு ஒப்புக் கொண்டிருக்கவே மாட்டேன்'' என்றார் இறுதியாக.

- ச.ந. கண்ணன்

படங்கள் : ஸ்ரீஹரி



* புஷ்
* கெர்ரி

தோற்றார் புஷ்!

காலை ஆறு ணிக்கே வாக்காளர் ள் நாலு பேர் வந்து ாத்துக் கொண்டிருந் ார்கள். வாக்குப் பதிவு றுவிறுப்பாக நடந்து டிந்தது. மொத்தம் திவானவை 161 வோட்டுகள். அடுத்த சில மிடங்களில் வாக்கு ண்ணிக்கை துவங்கியது. எல்லோரும் டென்ஷ னுடன் ரிசல்டை எதிர் பார்த்துக் காத்திருக்க. இறுதி யில் முடிவு அறிவிக்கப் பட்டது. ஜார்ஜ் புஷ் பெற்றவை வெறும் 56 வோட்டுக்கள்தான். கெர்ரி பெற்றவை 99. சுயேச்சை வேட்பாள ருக்கு நாலு வோட்டு கள். செல்லாத ஓட்டுகள் இரண்டு. ஜான் கெர்ரி தேர்தலில் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டார்.

இதென்ன கலாட்டா? என்று குழம்பு கிறீர்களா? ஆம், ஜெயித்தவர் கெர்ரிதான். அமெரிக்காவில் நடந்த தேர்தலில் இல்லை. சென்னையில், அமெரிக்கத் தூதரகமும், இந்தோ-அமெரிக்கன் சேம் பர் ஆஃப் காமர்ஸ¬ம் இணைந்து, அமெரிக்காவில் ஜனாதிபதித் தேர்தல் நடந்த அதே தினத்தில் இங்கு, மாதிரி வாக்குப் பதிவு நடத்தியது.

சென்னையைப் போலவே, டெல்லி யில்கூட ஒரு 'மாதிரி வாக்கெடுப்பு' நடத்தப்பட்டது. அங்கேயும் ஜெயித்தவர் கெர்ரிதான்.

சரி! லோக்கல் விஷயம் இருக்கட் டும். அமெரிக்காவில் என்ன ஆச்சு பார்க்கலாமா?


அமெரிக்காவில் மொத்தம் பத்துக் கோடி வாக்காளர்கள் தங்கள் வாக்கு களைப் பதிவு செய்து, ஜனாதிபதியைத் தேர்ந்தெடுத்தார்கள். இந்தத் தேர் தலுக்காக அமெரிக்க அரசாங்கம் நாலு பில்லியன் டாலர்களை செலவழித்துள் ளது. அமெரிக்கத் தேர்தல் சரித்திரத்தி லேயே எந்தத் தேர்தலுக்கும் இவ்வளவு செலவு ஆனதில்லை. 2000ம் ஆண்டு தேர்தலுக்கு, சுமார் மூன்று பில்லியன் டாலர்கள்தான் செலவானதாம்.

நல்ல காலம்! சென்ற முறை புஷ், அல்கோரே இருவரில் யார் ஜனாதிபதி என்பதை, இறுதியாக கோர்ட் முடிவு செய்யும்படி ஆனதுபோல, இந்த முறை நடக்கவில்லை. வாக்குப் பெட்டி மூலமாகவே ஜனாதிபதி தேர்ந்தெடுக்கப் பட்டுவிட்டார்.

நம் ஊரில் ஜாதி ஓட்டுகள் இருப் பதுபோல அங்கேயும் உண்டு. ஆனால் இது கொஞ்சம் வேறு மாதிரி. மத உட்பிரிவுக்கு அங்கே தேர்தல் முக் கியத்துவம் உண்டு. புஷ்ஷ¬க்கு பெரும் பான்மை புராட்டஸ்டன்ட் பிரிவு கிருஸ்தவர்களின் ஆதரவு கிடைத்தது என்றால், கெர்ரிக்கு கத்தோலிக்கர்களின் ஆதரவே அதிகம். இந்தத் தேர்தலிலும் இது நிரூபணமாகியிருக்கிறது.

- கௌதம் ராம்

'சு ~~ச~~மை'யல் கேஸ்!



கல்கி வழங்கும்
சென்னை ஸ்கேன்
கல்கி ஜன்னலில் ஒரு பின்னல்!
(சென்னை பதிப்பிற்கு மட்டும்)

8 பக்கங்கள்

14 நவம்பர் 2004 இதழுடன் இலவச இணைப்பு

ராக்கெட்டுகள் எழுதிய கவிதை!



பூமியிலிருந்து ஒரு நெருப்பு நட்சத்திரம் 'விஷ்க்' என விண்ணுக்குக் கிளம்புகிறது. சில நூறு அடிகள் உயரத்திலேயே அந்த ஒற்றை நட்சத்திரம், பல வண்ண நட்சத்திரங்களாக 'டமார்' என வெடித்துச் சிதறுகிறது. இதே மனிதர்களின் கண்களில் ஆச்சர்ய நட்சத்திரங்களும், உதடுகளில் புன்னகை நட்சத்திரங்களும் உதிக்கின்றன.

தமிழ்நாடு பட்டாசு மற்றும் கேப் உற்பத்தியாளர் சங்கம் (TANFAMA) சென்னை எம்ஜிஎம்மில் சென்ற வாரம் மேற்சொன்ன வார்த்தைகளை அரங்கேற்றினர்.


"ஒவ்வொரு குழந்தையும் எங்கள் வாடிக்கையாளர். எங்களின் தொழிலாளர் அல்ல. குழந்தைகளுக்காக நாங்கள் பட்டாசு தயாரிக்கிறோம். குழந்தைகளை வைத்து அல்ல." சரவெடியாகப் பேசினார் அவ்வமைப்பின் உறுப்பினர் தமிழ்ச் செல்வன்.

"15 வருடங்களுக்கு முன்பு தான் குழந்தைத் தொழிலாளர்கள் சிவகாசியில் இருந்தனர். தற்போது எங்கள் தொழிற்சாலைகளில் குழந்தைகள் வேலையில் இல்லை. பழைய கதையைப் பேசி, சிவகாசி என்றால் குழந்தைத் தொழிலாளர்கள் என்ற மாலையைக் கொண்டுவந்துவிட்டனர். குழந்தைகள் வீட்டிலிருந்தபடியே மாலை நேரங்களில் காகிதக் குழல்களை மட்டும் செய்து தந்து, வாரம் 300 ரூபாய் வரை சம்பாதிக்கின்றனர். வேண்டுமென்றால் எங்கள் தொழிற்சாலைகளை தாராளமாக வந்து பாருங்கள்" என்றார். (உண்மை என்றால் வரவேற்போம்)

"தற்போது வெடிகளின் சத்த அளவைக் குறைத்துவிட்டோம்" என்றவரை "காற்று மாசுபடுகிறதே" என மறித்துக் கேள்வி கேட்டு பாடாய்ப்படுத்தினார் ஒரு பொறுப்புள்ள ஃப்ரீ பத்திரிகையாளர். அந்தப் பத்திரிகையாளர், சந்திப்பு முடித்ததும் வெளியே வந்து ஸ்டைலாக பற்ற வைத்தார் சிகரெட் ஒன்றை.

வானம் கறுப்புச் சேலையை, நட்சத்திரப் புள்ளிகளோடு அணிந்திருந்தது.

அந்த சிவகாசி விஞ்ஞானிகள் பற்ற வைத்த ராக்கெட்டுகள் மீதிருந்து கிளம்பிய வானவில்களைச் சுமந்து கொண்டு! அடுத்த நொடிகளில் பேலே வண்ணப் புள்ளிகளும், அதற்கேற்ற ஒளிக்கோலங்களும் தோன்றின, மறைந்தன. வானத்தின் கறுப்புச் சேலையில் இப்போது அந்த ராக்கெட்டுகள் எழுதிவிட்டுப்போன ஒரு கவிதை தெரிந்தது:



"வாழ்க்கை சிறியது. சிரித்து வாழ்வதே பெரியது."

ஜி ராஜன் முகில்



எழுத்தாணி

ஈசாப்பின் தவளைகள்!



முன்பொரு சமயம் இரண்டு தவளைகள் ஒரு குட்டையில் வாழ்ந்து வந்தன. அந்தக் குட்டை ஒரு நாள் வற்றிப் போனது. வேறு ஒரு இடத்தைத் தேடி நகர்ந்து சென்றன தவளைகள். அப்பொழுது ஆழமான ஒரு கிணறு தென்பட்டது. ஒரு தவளை சொன்னது. "வா. இதற்குள் சென்று கவலையில்லாமல் வாழலாம். தண்ணீரும் நிறைய இருக்கிறது'' எட்டிப் பார்த்த இரண்டாவது தவளை சொன்னது. "இதுவும் வற்றி விட்டால் எப்படி வெளியே வருவது?". அந்த இரண்டாவது தவளையுடன் சேர்ந்து கொண்டு மனிதர்களும் யோசிக்கத் தொடங்கினார்கள்.

உலகம் முழுவதும் உள்ள குழந்தைகள் பலருக்கு மிருகங்களும், பட்சிகளும் அறிமுகமானது ஈசாப் கதைகளின் மூலம் தான். தவளை, யானை, கழுதை, சிங்கம், காகம் எல்லாம் குழந்தைகளின் நண்பர்களாக மாறிப் போயின. இந்த நண்பர்கள் முடிவற்ற பல கதைகளை குழந்தைகளுக்கு சொல்லி வந்தார்கள். ஒவ்வொரு கதையின் முடிவிலும் ஒவ்வொரு நீதி.

ஈசாப் யார்? அவர் எப்படி இருந்தார்? அவர் பிறந்த இடம் எது போன்ற விவரங்கள் தெளிவாக சொல்லப்படவில்லை. பல கதைகளைச் சொல்லிய ஈசாப்பைப் பற்றியே பல கதைகள் பின்னப்பட்டிருக்கின்றன.

இருப்பினும் பரவலாக நம்பப்படும் அவரது வாழ்க்கைக் குறிப்பு இதுதான். கி.மு. 620ம் வருடம், ஈசாப் ஒரு அடிமையாகப் பிறந்தார். பின்பு சுயமாக முயன்று ஒரு உயர்ந்த நிலையை அடைந்தார். கற்றுக் கொள்வதற்கும், கற்றுக் கொடுப்பதற்கும் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்த ஈசாப், பல நாடுகளுக்கும், ஊர்களுக்கும் பிரயாணம் செய்தார். வழி நெடுக எல்லோருக்கும் சிறிய சிறிய கதைகளை இவர் கூறலானார். குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை, பலர் இவரது கதைகளால் கவரப்பட்டனர். பல முக்கியப் பொறுப்புகள் இவரைத் தேடி வந்தன.

ஒரு சமயம் டெல்ஃபி எனும் நகரத்திற்கு ஓர் அலுவல் காரணமாக இவர் சென்றிருந்தார். இவரது பணி, அங்குள்ள மக்களுக்கு இவரது எஜமான் அளித்த தங்க காசுகளை பகிர்ந்து கொடுப்பது. ஆனால் தங்கம் பெறுவதற்காகத் திரண்டு வந்த மக்களின் பேராசை, இவரை வேதனைக்குள்ளாக்கியது. இதனால் அவர் யாருக்கும் எதுவும் தராமல், கொண்டு வந்த பரிசுப் பொருள்களை திரும்பவும் தனது எஜமானுக்கு அனுப்பி வைத்தார். பெரிதும் கோபம் கொண்ட அவர் எஜமான், தமது கடமையை சரிவர நிறைவேற்றாத ஈசாப்புக்கு மரண தண்டனை விதித்தார்.

ஈசாப்பின் மரணத்திற்கு பின்பு புகழும் பெருமையும் அவரை நாடி வந்தன. ஏதென்ஸ் நகரில் இவருக்கு சிலைகள் அமைக்கப்பட்டன. அவரது கதைகள் வேகமாக உலகெங்கும் பரவத் தொடங்கி, பரவலாக வாசிக்கப்பட்டன. இன்றைய கணினி யுகத்திலும் ஈசாபின் தவளைகள் கதை, ஓயாமல் ஒலித்துக் கொண்டுதான் இருக்கின்றன.

✍ மருதன்

யோக(ா) குழந்தைகள்!

இப்போதெல்லாம் டென்ஷன் பெரியவங்களுக்கு மட்டும் வர்றதில்லைங்க. மூணு வயசு குழந்தைகளும் டென்ஷன் வந்துடுதாம். இந்த வயசுல இதுகளுக்கு என்ன டென்ஷன்? - நிறைய டென்ஷன் இருக்கிறது என்கிறது வடசென்னையில் உள்ள பாக்கியம் சென்னையா மெட்ரிகுலேஷன் பள்ளி நிர்வாகம். அதாவது காலையில் சீக்கிரம் கண் விழிப்பது, வாசலுக்கு ஆட்டோ வருவதற்கு முன் பள்ளிக்குக் கிளம்புவது, நேரம் தவறாமல் ஒழுங்காகச் செய்வது என்று ஒவ்வொரு செயலுமே டென்ஷனாகின்றனர்.

இப்படிப்பட்ட 'பெரிய' வசிதர்களது பதற்றத்தைக் குறைக்க யோகாதான் ஒரே வழி. இதனைத் தங்கள் பள்ளியில் பயிலும் மாணவ - மாணவியர்க்கு இலவசமாக சொல்லித் தந்து, அவர்களது மூளையையும், மனதையும் ரெஃப்ரெஷ் செய்து அனுப்புவதுதான் இவர்களது நோக்கம். இதற்கென யோகக் கலையை முறையாகக் கற்றுத் தர, நான்கு ஆசிரியர்களை நியமித்துள்ளனராம். தினமும் காலையில் மட்டும் ஒரு மணி நேரம் அதாவது 7.00 to 8.00 வரை யோகாவிற்காக ஒதுக்கினால் போதும். தினசரி பாடங்களையும் ஒழுங்காகக் கற்றுக் கொள்ளலாம், மனதையும் ஒருமுகப்படுத்தலாம். உடல் ஆரோக்கியத்தையும் மேம்படுத்தலாம் என்கிறார் இப்பள்ளியின் நிர்வாகி அப்பாத்துரை. குழந்தைகளும் மிகுந்த ஆர்வத்துடன் வந்து யோகா பழகிக் கொண்டிருக்கிறார்கள். மற்ற பள்ளிகளும் இந்த டெக்னிக்கைப் பின்பற்றலாமே!

📷 ரிச்சர்ட் ✍ முத்து



எலக்ட்ரானிக் தக திமி தோம்!



இன்ஃபோ ட்ரைல் நிறுவனம் பரதநாட்டியத்தை டிவிடியில் கொண்டு வந்திருக்கிறது. என்ன ஆச்சரியமாக இருக்கிறதா? நீண்ட பாரம்பரியம் மிக்க பரதநாட்டிய நடனத்தின், நளினங்களையும், அற்புத அபிநயங்களையும், தேர்ந்த கலைஞர்களைக் கொண்டு சிறப்பாக டிவிடியில் பதிவு செய்திருக்கிறார்கள். மொத்தம் 8 டிவிடி கேஸட்டுகள் அடங்கிய தொகுப்பு இது. இன்றைய கணினி யுகத்தில் தேவைக்கும் வசதிக்கும் ஈடு செய்யும் வகையில், இந்தப் பதிவு அமைந்திருக்கிறது. கூடிய விரைவில் விற்பனைக்காக வெளியிட்டிருக்கிறார்கள். நடனத்தில் ஆர்வம் உள்ள அனைவருக்கும், இந்த டிவிடிகள் பாதநாட்டியக் கலையைக் கற்பிக்க கூடியது என்பதில் சந்தேகமில்லை.

இன்ஃபோ ட்ரைல் லைட்வேர்
New NO.203, Old No.91, V.M. Street, Mylapore,
Chennai - 600 004.
Tel:24983244 / 24980616, Fax:24985704

ஸ்வீட் மேட்டர்!

'நம்மூர் ஸ்வீட்டை இனி மறந்துட வேண்டியதுதான்' என்று ஏக்கத்துடன் பேசி வரும் சென்னை வாழ் தென்மாவட்டக்காரர்களே - இனி ஏங்க வேண்டாம். எங்கிட்டம் வாருங்கள். சுத்தமான நெய், பிஸ்தா, முந்திரி, பாதாம் ஆகியவற்றுடன் கூடிய உங்களுக்குப் பிடித்தமான ஸ்வீட்டுகளை வாங்கி ஏக்கத்தைத் தீர்த்துக் கொள்ளுங்கள் என்கிறது சென்னை பாரிமுனையில் உள்ள ராமகிருஷ்ணா பவன் ஸ்வீட் ஷாப். இத்துறையில் கிட்டத்தட்ட 50 ஆண்டுகள் அனுபவம்பெற்ற ஆரியபவன் நிறுவனத்தைச் சார்ந்த இந்த ராம்கிருஷ்ணா பவனில், ஆயுதபூஜை, தீபாவளி, பொங்கல், புத்தாண்டு போன்ற சமயங்களில் புத்தம் புதிய வகைகளை அறிமுகப்படுத்துவார்களாம். ஒருவேளை நீங்கள் நேரில் வந்து அங்கிருக்கும் ஸ்வீட்டுகளை பார்த்தவுடன் சாப்பிட வேண்டும் என்று தோன்றினால் அதனை குடும்பத்துடன் அமர்ந்து சாப்பிடவும் வசதிகள் செய்யப்பட்டுள்ளதாம். ஆர்டர் கொடுக்கப் போறீங்களா இல்ல நேர்லயே வரப் போறீங்களா. எதுவாக இருந்தாலும் இந்த முகவரியை அணுகுங்க.

ராம்கிருஷ்ணா பவன் ஸ்வீட் ஷாப்,
223, N.S.C போஸ் சாலை,
Y.M.C.A பில்டிங்,
சென்னை - 1.
போன்: 25382154





• பாட்ஷா

அலறும் ஆலந்தூர்!



• ஆர்.எஸ். பாரதி



• சுரங்கப் பாதைக்காக தோண்டப்பட்ட பகுதி...



• இரும்புவேலியையும் தாண்டி...

ஃபோக்கஸ்

ஆலந்தூர் - சென்னை மாநகரை ஒட்டியுள்ள முக்கியமான நகராட்சி. எதிர்கட்சியின் வசமிருக்கும் இந்நகராட்சியின் தலைவர், சமீபத்தில் டெல்லிக்குச் சென்று நலத்திட்டங்கள் தொடர்பாக மத்திய அமைச்சர்களைச் சந்தித்து விட்டு வந்தார். 'தமிழக அமைச்சர் ஒருவரின் சொந்தத் தொகுதியான ஆலந்தூரின் நகராட்சித் தலைவர், டெல்லி வரை செல்ல என்ன அவசியமாக இருக்கும்! அப்படியென்ன பிரச்னைகள்?' என்று ஆராய, ஆலந்தூர் நகராட்சியின் முக்கியப் பகுதிகளான மீனம்பாக்கம், பழவந்தாங்கல், ஆதம்பாக்கம், நங்கநல்லூர் பகுதிகளில் ஒரு ரவுண்ட் வந்தோம்.

தண்ணீர் வசதி, பஸ் வசதி, சாலை வசதி என்று பல்வேறு குறைகள் இங்கும் இருக்கவே செய்கின்றன. பெரும்பாலான சாலைகள் குண்டும் குழியுமாகவே இருக்கின்றன. ஒரு வேளை சமீபத்திய மழையினால்தான் இப்படி ஆகிவிட்டனவோ என்றால், அதை அவசரமாக மறுக்கின்றனர் அப்பகுதி மக்கள்.

"மழைக்கு முன்னாலேயிருந்தே இப்படித்தான் இருக்கு. இந்த ஏரியாவுல சின்னச் சின்ன ரோடுகளை மட்டும் ஒழுங்கா போட்டுருப்பாங்க. ஆனா மெயின் ரோடு படு மோசமா இருக்கும். அதுவும் உள்ளடங்கிய பகுதிகள்ல, சின்ன ரோடுகளும் ஒழுங்காகவே இருக்காது. தண்ணிப் பிரச்னை இங்க அதிகமாகவே இருக்கு. போன வருஷம், தண்ணிக்காக ஆலந்தூர் தவிச்ச தவிப்பு கொஞ்ச நஞ்சமில்லை" என்கிறார் அப்பகுதிவாசி ஒருவர்.

பொதுமக்கள் கொட்டும் குப்பைகளை, நகராட்சித் துப்புரவுப் பணியாளர்கள் அப்புறப்படுத்த வருவதே இல்லை என்றும், இதனால் குப்பைகள் ஆங்காங்கே குவியல் குவியலாகத் தேங்கிக் கிடப்பதாகவும், இவற்றிற்கெல்லாம் சிகரம் வைக்கும் விதமாக, 'குப்பைகளின் சரணாலயம்' ஒன்றும் மீனம்பாக்கம் பகுதியில் இருப்பதாகவும், இவைதான் இப்பகுதியின் சுகாதாரச் சீர்கேட்டின் மூலகாரணிகள் என்றும் வருத்தத்துடன் கூறுகின்றனர் அப்பகுதி மக்கள்.

இவற்றையெல்லாமாவது சகித்துக் கொள்ளலாம். ஆனால் திரிசூலம், மூவரசன் பேட்டை பகுதிகளின் வழியே மலையிலிருந்து கற்களை ஏற்றிக் கொண்டு வரும் லாரிகள் தான் இப்பகுதி மக்களுக்கு மிகப் பெரிய இடையூறாக இருக்கின்றனவாம். இதற்கு முன்னர் இத்தகைய லாரிகள் மீனம்பாக்கம் ரயில்வே கேட் வழியாக, நேராக ஜிஎஸ்டி சாலைக்கு வந்து கொண்டிருந்தன. இப்பகுதியில் சுரங்கப்பாதை அமைக்கும் பணி நடப்பதால், கடந்த 8 மாதங்களுக்கு முன்பு இந்த ரயில்வே கேட் ஒரு பக்கம் மூடப்பட்டு விட்டதாலும், மறுபக்கம் தடுப்புச் சுவர் எழுப்பப்பட்டு விட்டதாலும் இப்பகுதிகள் வழியே லாரிகள் உள்ளிட்ட எந்த வாகனங்களும் செல்ல இயலாத சூழ்நிலை உள்ளது.

இது குறித்து அப்பகுதி ஆட்டோ ஓட்டுனர் பாட்ஷா கூறுகையில், "இந்த சுரங்கப் பாதைக்கு ஒரு பக்கம் வேலை முடிஞ்சிடுச்சு. ஆனா மறுபக்கம் ரோட்டை தோண்டிப் போட்டதோட சரி, இன்னும் வேலையே ஆரம்பிக்கல. கேட்டா, இது ராணுவ ஏரியான்னு சொல்றாங்க. உண்மையில இந்த ரயில்வே கேட் இப்பகுதி மக்களுக்கு ரொம்பவும் அத்தியாவசியமான ஒண்ணு. சீக்கிரம் இத மூடிட்டு, வேலையையும் முடிக்காம இருக்கறதால, இப்பகுதி மக்கள் ஜி.எஸ்.டி. சாலைக்குப் போறதுக்கு திணறுறாங்க. பக்கத்துலயே காலேஜ் வேற இருக்கு. காலேஜ் பசங்களும், பொது மக்களும் கேட்டுக்குள்ள புகுந்து, ரயில்வே டிராக்கை கிராஸ் பண்ண வேண்டியிருக்கு. இது ரொம்பவும் ஆபத்தானது. அதனால சீக்கிரமா நடவடிக்கை எடுத்தா பெரிய பெரிய ஆபத்துக்களை தடுக்க முடியும்" என பீறிட்டு முடித்துக் கொண்டார்.

இதற்கெல்லாம் பதில் தேடி ஆலந்தூர் நகராட்சியின் தலைவர் ஆர்.எஸ்.பாரதியைச் சந்தித்தோம்.

"பழவந்தாங்கல் - மீனம்பாக்கம் இடையே ஒரு ரயில்வே சுரங்கப் பாதை அமைக்கப்பட்டுள்ளது. இதற்கான இணைப்புச் சாலைக்கு அனுமதி பெறவே மத்திய அமைச்சர் ஜெயண்ட்ஸைச் சந்தித்து மனு கொடுத்தேன். இந்த சாலை அமைக்கப்பட்டால், மூவரசன் பேட்டையிலிருந்து கல் லாரிகள் தேவையற்ற முறையில் நங்கநல்லூர் உள்ளிட்ட பகுதிகளைச் சுற்றி நேரத்தை விரயமாக்காமல், நேரடியாக ஜிஎஸ்டி சாலைக்கு வந்துவிட முடியும். இதனால் அப்பகுதி வாழ் மக்கள் லாரி பீதியிலிருந்து தப்பிப்பார்கள். அது மட்டுமில்லாமல் ஆலந்தூருக்கென்று தனியே ஒரு தபால் அலுவலகம் இருந்தது. ஆனால் தற்போது அதனை எடுத்துவிட்டு, செயின்ட் தாமஸ் மவுண்ட்டுடன் இணைத்து விட்டார்கள். இதற்காக மத்திய அமைச்சர் தயாநிதி மாறனிடம் மனு கொடுத்துள்ளோம்.

அதேபோன்று ஆதம்பாக்கம் ரயில்வே கேட் மூடப்பட்டுவிட்டதால் ஆலந்தூருக்கும் ஆதம்பாக்கத்திற்கும் இருந்த தொடர்பு துண்டிக்கப்பட்டுவிட்டது. இதற்காக ஒரு இணைப்புச் சாலை வேண்டுமென்று மத்திய அமைச்சர் வேலு அவர்களிடம் மனு கொடுத்துவிட்டு வந்துள்ளேன்" என்றவரிடம் சாலைகளின் தரம் குறித்துக் கேட்டதற்கு, ஆலந்தூர் நகராட்சிக்குட்பட்ட 759 சாலைகளில் 150 சாலைகள் மட்டுமே போடப்படாமல் இருப்பதாகவும், மற்றவை நன்றாகவே இருக்கிறதாகவும் பதிலளித்தார். குப்பைகள் அள்ளப்படாமல் குவிந்து கிடப்பதற்கு, பணியாளர்கள் பற்றாக் குறையையே காரணமாகச் சுட்டிக் காட்டுகிறார்.

எப்படியோ, டெல்லி வரை சென்று போராட முன் வந்தாச்சு.. நல்லது நடந்தால் சரி!

✍ இரா. முத்துக்குமார்

📷 முரளி

பூமராங்



✉ இந்திய விளையாட்டுத் துறையில் சர்வசாதாரணமாக நடக்கும் "போதை" செய்திகளை சிறிது கூட பதற்றமின்றி விவரித்து அதிர்ச்சியடைய வைத்து விட்டாள் ஜெயந்தி.

பழைய பல்லாவரம், நாகராஜன்

✉ 'குடைக்குள் ஷாப்பிங்' நடையிலும் வித்தியாசம். டிப்ஸ்களும் வித்தியாசம். மொத்தில் வித்தியாசமான கட்டுரை.

சைதாப்பேட்டை, சந்துரு

✉ சிறுமி. தீபாவளி டக்கர் தீபாவளியா இருந்துச்சு. கலக்குங்க.

திருவான்மியூர், மதிவாணன்

உங்கள் கருத்துக்களை chennaiscan@kalkiweekly.com ல் மெயிலலாம்.





இவர்களைக் காணவில்லை!

பொதுவாக ஒருவர் பத்திரிகையில் இடம் பெறுகிறார் என்றால், அவர் ஏதாவது சாதித்திருக்க வேண்டும் என்பது எழுதப்படாத விதி. ஆனால் இதில் நடிகைகள் மட்டும் விதிவிலக்கானவர்கள். ஒரு தயாரிப்பாளர் சொற்பத் தொகையை அட்வான்ஸ் கொடுத்த உடனே (அல்லது கொடுக்காமல் போனாலும்) உடனடியாக அடுத்த வாரம் அனைத்து பத்திரிகைகளின் அட்டைப் படங்களிலும் அவர்கள் சிரித்துக் கொண்டிருப்பார்கள்.

இப்படித்தான் இவர்களும் தமிழ் மக்களுக்கு அறிமுகமானார்கள். ஆனால் இன்று என்ன ஆனார்கள்?

ஸ்ரீதேவி : சினிமாவின் தொழில்நுட்பம் முதல் ... செக்யூரிட்டி வரை அனைவரையும் தெரிந்து வைத்திருக்கும் செல்வாக்கு மிக்க விஜயகுமாரின் புத்ரி. காதல் இயக்குநராய் போற்றப்பட்ட கதிரின் 'காதல் வைரஸ்' படத்தில், ரஹ்மானின் இசையில் டாப்பிலோக அறிமுகப்படுத்தப்பட்டவர். அதற்குப் பிறகு விக்ரமனின் 'ப்ரியமான தோழி', மூன்றாவதாக சூப்பர்குட் பிலிம்ஸின் 'தித்திக்குதே'. இப்படி எந்த அறிமுக நடிகைக்கும் வாய்க்காத வாய்ப்புகள் அமைந்தும் ஒரு பிரயோஜனமுமில்லை. சென்ற இடமெல்லாம் தோல்வி இவரைத் துரத்த தலையில் இன்னொரு இடியும் விழுந்தது. தனுஷுடன் இணைந்த 'தேவதையைக் கண்டேன்' துன்பத்தைத்தான் இன்று வரை கண்டு கொண்டிருக்கிறது. சாதிக்க வயது ஏராளமாய் இருப்பதால், வீட்டில் உட்கார்ந்து கொண்டு மீராவின் படங்கள் பார்த்துக் கொண்டிருக்கிறார். ஒருமுறை முன்னாள் ஸ்ரீதேவி இவருக்கு போன் செய்து 'என் பேரைக் காப்பாத்திடும்மா' என்றாராம்.

காயத்ரி ரகுராம் : கமலின் ஆஸ்தான நடன இயக்குநரான ரகுராமின் மகள். இளைஞர்களைக் கவரும் வசீகரத்தன்மையும் நடனத் திறமையும் இவரிடம் கொட்டிக் கிடந்தாலும், எந்த அதிர்ஷ்ட தேவதையும் இவர் கதவைத் தட்டவில்லை. இடையில் இயக்குனர் செல்வராகவன் அழைத்து 'ஒரு நாள் ஒரு கனவு' வாய்ப்புக் கொடுக்க, உடனே ஹாப்பியாகத் துள்ளிக் குதித்து உடல் எடையைக் குறைத்து மெல்லிடையாளாக மாறினார். ஆனால் இப்பொழுது வேறொரு நடிகை தேர்வு செய்யப்பட, படத்தின் தலைப்பையே தன் விதியாக மாற்றிக் கொண்டு விட்டார். இதுவரைக்கும் பிரபுதேவாவின் தோளில் தன் காலை எடுத்து வைத்து போஸ் கொடுத்ததுதான் இவரது உச்சக்கட்ட சாதனை.

காயத்ரி ஜெயராம் : ரகுராம், ஜெயராம் என்பதற்கிடையேயுள்ள பெயர்க் குழப்பத்தில் படவாய்ப்புகள் மாறிப் போனதாகவும் கேள்வி. கிட்டத்தட்ட ஆறுஅடிக்கு உயர்ந்து நிற்கும் இவருக்கு இவரது உயரமே பெருங்குறையாகிப் போனது. தங்களால் ஸ்டூல் மேல் ஏறி டூயட் பாட முடியாது என்று 'உயர்ந்த' ஹீரோக்கள் மறுத்துவிட்டார்களாம். மும்பை அறிமுகம் என்று விளம்பரமாக அறிமுகப்படுத்தப்பட்டாலும், முகத்திலுள்ள தமிழ்க் களை இவரைக் காட்டிக் கொடுத்துவிட்டது. அன்று 'மஞ்சக் காட்டு மைனா' என்று குதூகலமாக ஆடிப்பாடியவர், இன்றும் தமிழ் சினிமாவை ஒரு கை பார்க்காமல் விடமாட்டேன் என்று சபதம் எடுத்திருக்கிறாராம். பார்க்கலாம்.

தீக்ஷா பலோட் : 'அல்லி அர்ஜுனா'வுக்காக இயக்குனர் சரண் பார்த்துப் பார்த்து தேர்வு செய்த நடிகை. ஆனால் அதற்கு முன்பே ஷாஜஹான் ஹீரோயினாக நடித்தும் பெரிதாகப் பேசப்படவில்லை. இந்தக் காயத்தில் பட்டாக கொளுத்தும் விதமாக, 'அல்லி அர்ஜுனா' முதல் வாரத்திலேயே அனைத்து தியேட்டர்களிலும் காலியாக, 'துரதிர்ஷ்ட நடிகை' என்று பலமாக முத்திரை குத்தப்பட்டார். சமீபத்தில் பார்த்திபனுடன் நடித்த 'காதல் கிறுக்கன்' அட்டர் ப்ளாப் ஆக, மூன்றே படத்தில் இவரது தமிழ் சினிமா பயணத்திற்கு முற்றுப் புள்ளி வைக்கப்பட்டுவிட்டது.

ரதி : தொட்டால் விழுந்துவிடும் தேகம், கவர்ச்சிக்கு நோ சொல்வது, முகத்தில் தமிழ்ப் பால் வடிவது என்று ரதிக்கு நிறைய ப்ளஸ் பாயிண்ட்ஸ். சரி, ஸ்நேகாவுடனாவது போட்டி போடலாம் என்றால் அவர் ரேஞ்ச் எங்கேயோ போய்க் கொண்டிருக்கிறது. தங்கர்பச்சான் படத்தை தவிர சொல்லிக் கொள்ற மாதிரி எதுவுமே சாதிக்கவில்லை, பாவம்.

குஷ்புவுக்கு ஒரு சின்னதம்பி, சிம்ரனுக்கு ஒரு வாலி, ஜோதிகாவுக்கு ஒரு குஷி, த்ரிஷாவுக்கு ஒரு சாமி என அமைந்தது போலொரு தங்க மீன் இவர்களுக்கெல்லாம் சிக்காததுதான் இப்படியொரு தலைப்பில், கட்டுரையில் இடம் பெற வேண்டியதாகிவிட்டது. வாழ்க்கைச் சுழற்சியில் இவர்களுக்கென்று ஒரு விண்மீன் நட்சத்திர வானில் முளைக்காதா என்ன?

✍ **ச.ந.கண்ணன்**

அட்வான்ஸ் தீபாவளி

சென்னையிலுள்ள அனைத்து திரையரங்குகளிலும் வசூல் மழை கொட்டோ கொட்டோவென்று கொட்டிக் கொண்டிருக்கிறது. படம் வெளிவந்து 25 நாட்களாகியும் தேவி, சங்கம், உதயம், அபிராமி திரையரங்குகளில் தொடர்ந்து ஹவுஸ்புல்லாக ஓடிக் கொண்டிருக்கிறது '7ஜி ரெயின்போ காலனி'. ஆச்சர்யமாக 'சுமார்' என்று விமர்சிக்கப்பட்ட 'எம். குமரன்' வசூலில் அள்ளி வருகிறதாம். தீபாவளிக்கு முன்பு பொதுவாகத் திரையரங்குகளில் காற்று மட்டுமே நுழையும். ஆனால் தற்போதைய நிலவரத்தைக் கண்டு, ஒட்டுமொத்தத் திரையுலகமே அட்வான்ஸாக தீபாவளியைக் கொண்டாடிக் கொண்டிருக்கிறது.

சமீபத்தில் நடந்த ரெய்டைத் தொடர்ந்து பரங்கிமலை ஜோதியை பினாயில் ஊற்றி, கழுவி சுத்தப் படுத்தியிருப்பார்கள் போலும். 'இனி மேல் நல்ல படங்களையே போடுவோம்' என்று சபதம் எடுத்து, முதல் முயற்சியாக 'வசூல்ராஜா எம்பி பிஎஸ்' படத்தைத் திரையிட்டிருக்கிறார்கள்.

தல போல வருமா!



'நீ பாயும் புலி, உறுமும் சிங்கம்' என்று ஹீரோக்களை விலங்குகளாய் வர்ணித்து வந்த கவிஞர்கள், தற்பொழுது யதார்த்தவாதிகளாக மாறியிருக்கின்றனர். வசூல் ராஜாவில் 'ஆழ்வார்பேட்டை ஆண்டவா' என்று ரசிகர்களின் அலைவரிசையோடு கவிதை பாடிய வைரமுத்து அடுத்தது 'அட்டகாசம்' படத்தில் 'தல போல வருமா' என்று பல்லவி எழுதியிருக்கிறார். இனி இதே ட்ரெண்டில் ஹீரோவின் பாடல்களை எதிர்பார்க்கலாமா?

✍ **எழில்**

டாக்கீஸ் டாக்





டேஸ்ட்.காம்

கம்பங்கஞ்சியும், கருப்பட்டி மிட்டாயும்!

நான் ஏழாப்பு படிக்கறச்சே, திருநெல்வேலி சைடுல ஒரு கிராமத்துக்குப் போயிருக்கேன். ஒரு வாரம் டேரா. கிராமத்து மண்பானைச் சாப்பாடு. வெளுத்துக்கட்டியிருக்கேன். அதே அனுபவத்தை, அதே டேஸ்ட்டை திரும்ப அனுபவிக்க வாய்ப்புக் கொடுத்தாங்க, நம்ம வடபழனி வசந்தபவன் 'நம்ம வீட்டில்!'. 'கிராமத்து உணவுத் திருவிழா'ன்னு (நவம்பர் 10 வரைக்கும்) மணக்க மணக்க வில்லேஜ் அயிட்டமா சமைச்சு அசத்துறாங்க.

எந்த ஹோட்டல்லயாவது 'நீராகாரம்' கிடைக்குமா? வீட்டு இட்லி' கிடைக்குமா? இங்கே கிடைக்குதுப்பா! அதுவும் வீட்டு இட்லிக்கு, மண் குவளையில ஒரு வெள்ளைச் சட்டினி கொடுக்கறாங்களே. அதுக்குள்ளே தொபுக்கடீர்னு, கிராமத்து கிணத்துல குதிக்கற மாதிரி குதிக்கலாம்னு தோணுது! அவ்ளோ டேஸ்ட் தெரியுமா!

வாழைப்பூ சூப், தூதுவளை சூப், கீரை சூப், நவதானியக் கஞ்சி, கம்புக் கஞ்சி, உளுத்தங் கஞ்சி... கூட்டாஞ்சோறு, கேப்பைகளி, இட்லி உப்புமா, மரவள்ளிக் கிழங்கு பொரியல், கொள்ளுப் பொரியல், சிறுகிழங்குப் பொரியல், சுக்குமல்லிக் காபி, பனங்கல்கண்டு பால், கசியம், சீனி மிட்டாய், பால் கொழுக்கட்டை, கருப்பட்டி மிட்டாய்... இன்னும் நிறைய... சாப்பிடறப்ப வாய் வலிக்கல. ஆனா எழுதக் கை வலிக்குதுப்பா!) இப்படி ஒவ்வொரு நாளும் விதவிதமா மெனுவை மாத்தி, தாளிக்கிறாங்க!

பல்லு மேல நாக்கைப் போட்டுச் சொல்றேன். மல்லு வேட்டிய இறுக்கிக் கட்டிக்கிட்டு, கண்டாங்கிச் சேலையைப் பவுசா கட்டிக்கிட்டு சாதி சனங்களோட கிளம்புங்க! ஏவ்...

லஜ்ஜாவதி அம்மாள்

குட்(டீஸ்) புக்ஸ்!

இப்போதெல்லாம் நம் குட்டீஸ் பாடப் புத்தகங்களில் உள்ள செய்திகளை அப்படியே மனப்பாடம் செய்து, தேர்வு எழுத அதிக ஆர்வம் காட்டுவதில்லை. அவர்கள் விரும்புவது ஆரோக்கியமான, அதே சமயம் விளையாட்டு முறையிலான கல்வி. ஆனால் இங்குள்ள பாடத்திட்டம் இதற்குத் தகுந்தவாறு இல்லை என்பதுதான் வருத்தம். இந்த வருத்தத்தைக் களைய வேண்டுமானால், குட்டீஸ்களுக்குத் தெரிவிக்க வேண்டிய நல்ல செய்திகளை, நல்ல முறையில், அதிகம் போரடிக்காமல் ஆர்வமூட்டும் வகையில் தொகுத்து அவர்களிடம் தர வேண்டும். இப்படிப்பட்ட புத்தகங்களும் இங்கு இருக்கின்றனவா என்ன!

'இதோ, எங்களிடம் இருக்கிறது' என்கிறது அபிராமபுரத்தில் உள்ள 'Good books' நிறுவனம். இவர்களிடம் குழந்தைகளுக்குத் தெரிவிக்க வேண்டிய செய்திகளை, அவர்களுக்குப் பிடித்தமான கார்ட்டூன் கேரக்டர்கள் சொல்வது போலவோ, விளையாட்டு முறையிலோ, கதை சொல்வது போலவோ, ஜோக்ஸ் சொல்வது போலவோ தொகுத்துள்ளார்கள். இதனைப் படிக்கும் குழந்தைகளுக்கு இது நல்ல மாற்றத்தை ஏற்படுத்தும், என்கிறார் இதன் உரிமையாளர்.




நேஷனல் புக் டிரஸ்ட், சில்ட்ரன் புக் டிரஸ்ட், இஸ்பிரேஷர், வேர்டு பேர்ட் உள்ளிட்ட பிரபல நிறுவனங்களின் தயாரிப்புகளனைத்தும் இவர்களிடம் உள்ளன. தமிழ், ஆங்கிலத்தில் கதைகள் சொல்ல, புத்திக் கூர்மையை வலுப்படுத்த, ஓவியம் தீட்ட என்று பல்வேறு பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. இந்நிறுவனம் குட்டீஸ்களுக்கான ரெஃபரன்ஸ் லைப்ரரி போன்றே செயல்பட்டு வருகிறது. தேவைப்பட்டால் புத்தகங்களை வாங்கியும் செல்லலாம். தற்போது அங்குள்ள புத்தகங்கள் ஸ்பெஷல் சலுகையுடன் (25% to 40% Discount) விற்பனை செய்யப்பட்டு வருகிறது. அதுமட்டுமன்றி, இவர்களது சார்பில் 'முதலை' என்ற திரைப்படம் குழந்தைகளுக்காக பிரத்யேகமாகத் திரையிடப்படுகிறது (டிசம்பர் - 31 மொத்தத்தில் 'குட் புக்ஸ்' நம் குழந்தைகள் சென்று வர வேண்டிய 'குட் ஸ்பாட்'!

ராஜன் முரளி

இன்னிக்கு ஜாக்கிரதையா இருங்க!

ஹலோ சென்னை! நீங்க இன்னிக்கு (10.11.2004) ரொம்பவும் ஜாக்கிரதையா இருக்கணும். ஜோஸ்யமெல்லாம் சொல்லலீங்க. உண்மைதான். அதாவது இன்றைக்கு வழிப்பறி, பிக்பாக்கெட், ஸ்நாட்சிங் ஆசாமிகள் முழு வீச்சில் தங்களது கைவரிசையைக் காட்டத் தயாராக உள்ளார்களாம். அதனால மக்கள் நடமாட்டம் அதிகமாக இருக்குற தி.நகர் ரங்கநாதன் தெரு, பாரிமுனை பந்தர் தெரு, புரசைவாக்கம், பாண்டி பஜார் ஆகிய ஏரியாக்களுக்கு போயி பர்சேஸ் பண்றவங்க, அந்த வழியா போறவங்க ரொம்ப எச்சரிக்கையா இருங்க. அதே சமயம் இதுபோன்ற விஷமிகளுக்காகவும் நம் போலீஸ் பெரிய வலை ஒன்னையும் விரிச்சு வச்சிருக்காங்க. ஜாக்கிரதை!

ஸ்வரா



தோள்களின் கவனத்திற்கு!

எண் 10-பி, 4வது அவென்யூ, சேத்துப்பட்டு ஹாரிங்டன் ரோட்டிலுள்ள 'தி சில்க் ரூட்'டுக்கு கைய வீசிட்டுப் போனா (பையில பணத்தோட) கை நிறைய, வகை வகையா பெண்கள் கைப் பைகளை அள்ளிட்டு வரலாம். பேட்ச் ஒர்க், எம்ப்ராய்டரி, கருக்கு வேலைகள், மணி வேலைகள் நிறைந்த மற்றும் babbled, tassled (இதையெல்லாம் எப்படி தமிழ்ப்படுத்த?) பைகள் பளபளக்கின்றன. (ரூ.50 முதல் ரூ.700 வரை) குட்டி தலையணைகள், சால்வைகள், துப்பட்டாக்கள் கூட காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. டியர் வாசகிகளே... பையப் போகலாம்னு நினைக்காதீங்க... நவம்பர் 10 வரைதான் கண்காட்சி. விரைவாப் போங்க!

ராஜன் ஷிவ்

வரி விளம்பரம்

ஜோதிடர்

ஜாதகம் கணிக்க, முகூர்த்தம் பார்க்க, கல்யாணப் பொருத்தம் நிர்ணயிக்க, ப்ரச்னம் சொல்ல, பொதுப்பலன் அறிய, யோக காலம் தெரிந்து கொள்ள, வார நாட்களில் மட்டும் பகல் 10 முதல் 1 மணி வரை அணுகவும்.

கோமாண்டூர் ஸ்ரீநிவாசன், அஸ்ட்ரோ ஸ்கொயர், சாஸ்திரி நகர் முதல் மெயின் ரோடு, (வாட்டர் டேங்க் எதிரில், முதல் மாடி), அடையார், சென்னை - 20. தொலைபேசி : 24469160.

சி. ஐ. பி



“எதற்கு இத்தனை மேம்பாலங்கள்?”

பிறந்து வளர்ந்தது, படித்தது எல்லாமே சென்னையில்தான். ஆனால் தன் சொந்த மண்ணில் கால் வைக்க நேரமில்லாமல், தமது மனைவி பாடகி கவிதாவுடன் உலகம் முழுக்க சுற்றிக் கொண்டிருக்கிறார், **வயலின் இசைமேதை எல். சுப்ரமணியன்**. சென்னை பல்கலைக் கழகம் இவருக்கு டாக்டர் பட்டம் வழங்க முடிவெடுக்க, இதற்கான விழாவிற்காக சென்னைக்கு வந்தவரை 'தி பார்க்' ஓட்டலின் 7வது மாடியில் சந்தித்தோம்.

“எனக்கு மூன்றாவது முறையாக டாக்டர் பட்டம் கொடுக்கப்படுகிறது. அதாவது 1972ல் சென்னை மருத்துவக் கல்லூரியில் படித்து முடித்து டாக்டரானேன். ஆனாலும் என்னால் பட்டமளிப்பு விழாவில் கலந்து கொள்ள முடியவில்லை. அதேபோல் சில வருடங்களுக்கு முன்பு, பெங்களூரில் டாக்டர் பட்டம் கொடுத்தார்கள். அதற்கும் போக முடியவில்லை. சென்னையில்தான் வாங்க வேண்டும் என்று விதியிருக்கிறது போல...” என சிரிக்கிறார்.

பொதுவாக தமிழ்நாட்டிலிருந்து ஓர் இசைக்கலைஞன் வட இந்தியா வரைக்கும் செல்வதற்கே பல அரசியல் மிகுந்த தடைகளைத் தாண்ட வேண்டியிருக்கும்பொழுது, இவரால் மட்டும் எப்படி அகில உலகப் புகழ் பெற முடிந்தது?”

“கடவுள் கருணையில் நீங்கள் சொல்கிற எந்தத் தடைகளும் என்னைப் பாதித்ததில்லை. ஆனாலும் தென்னிந்தியர் என்றாலே வேப்பங்காயாய்க் கசக்கும் நிலைமை, இன்னமும் தொடரவே செய்கிறது. சக கலைஞர்களின் குமுறல்களை வைத்து இப்படிச் சொல்கிறேன்” என்கிறார்.

“சென்னை எப்படியெல்லாம் மாறிவிட்டது! நகரம் முழுவதும் கட்டப்பட்டிருக்கும் மேம்பாலங்களைப் பார்க்கும்பொழுது, பல இடங்களில் அவை தேவையில்லாமலேயே கட்டப்பட்டிருக்கின்றன. இந்நகரம் பலமடங்கு விரிவடைந்திருக்கிறது. முன்பெல்லாம் கோட்டூர்புரம் போவதற்கே “ஐய்யோ, அவ்வளவு தூரம் யார் போவது?” என்பார்கள், என்று சிரித்துக் கொள்கிறார்.

மீரா நாயரின் 'சலாம் பாம்பே' படத்துக்கு இசையமைத்தவர். பெரும்பாலும் திரை இசையில் அதிக கவனம் செலுத்தாமலேயே ஒதுங்கிவிட்டார். இவர் இசையமைத்த மலையாளப் படம் சமீபத்தில் வெளியாகியிருக்கிறது. தமிழில் மட்டுமல்ல, பொதுவாக சினிமாவில் இசையமைக்காததற்கு இரு காரணங்கள். ஒன்று, எனக்கு பல மாதங்கள் வேறு எதிலுமே கவனம் செலுத்தாமல் வெறும் ஒரு படத்திற்காக மட்டுமே எனது நேரங்களைச் செலவழிக்க முடியாது. அடுத்தது, நான் இருக்கும் இடத்தை இளைஞர்களுக்கு விட்டால் என்ன என்று யோசிப்பேன்.”

எழுபதுகளில் சென்னையில் டாக்டர் பட்டம் முடித்தவர். அதன் பின் அண்ணாமலையில் இசைப் பாடத்தில் டிகிரி வாங்க முனைந்த பொழுது, டிப்ளமோ படித்துவிட்டுத்தான் டிகிரி வாங்க முடியும் என்று விசித்திரமாக அதன் நிர்வாகம் தகவல் சொல்ல...“அதுதான் விதி என்பேன். பிறகு கலிஃபோர்னியாவில் மேற்கத்திய இசையில் மாஸ்டர் டிகிரி முடித்தேன். அதன்பிறகு என் வாழ்க்கை வானுக்கும் பூமிக்கும் இடையே பறந்து கொண்டிருக்கிறது” என்கிறார் எல்எஸ். ஒரு தமிழனாய்ப் பிறந்து இன்று உலகம் முழுக்கவுள்ள அனைத்து கிரேட்டஸ்ட் இசைக் கலைஞர்களுடன் இணைந்து பணியாற்றிய பெருமைக்கும், கர்நாடக சங்கீதத்தில் அவரது வியத்தகு சாதனைகளுக்குமே சென்னை பல்கலைக்கழகம் டாக்டர் பட்டம் வழங்கி கௌரவித்திருக்கிறது.

ச.ந.கண்ணன்



(போரூர் வாசகர் ராஜாவின் குறும்பு - கலைஞரின் காதல் கடிதம்)


கண்ணே! என்னை நீ சிந்தித்தும் மறந்திருக்க மாட்டாய் என்று நம்புகிறேன். இப்பொழுதெல்லாம் கணிப்பொறிகள் தானாகவே காதல் கடிதங்கள் எழுதி விடுகின்றனவாமே! கழக வரலாற்றில் இல்லாத புதுமை அல்லவா இது!

நானும் ஒன்று வாங்கி வந்திருக்கிறேன். நீ அறிவாயா? உன் பச்சைப் பற்களைப்போல சீரான சிறு பொத்தான்கள் கொண்டது விசைப் பலகை. இதோ தட்டித்தட்டி உனக்கொரு சிறு கடிதம்! இதென்ன எழுத்துக்கள் ஆங்கிலத்தில் இருக்கிறதே என்ற கவலை வேண்டாம். உன் கண்ணை கொண்டு இதை அழித்து விடலாம். பறந்து வா என் பாவையே! இந்த மடலைத்திட்ட பற்றொப்ப நான்கு மணித்துளிகள் பிடித்தது. வியப்பாக இல்லையா உனக்கு! உன் பதிலை எதிர்நோக்கும்

செம்மொழிக் காதலன்.

(வாசகர்களே! உங்களின் குறும்பு காதல் கடிதங்களும் வரவேற்கப்படுகின்றன)

நாடோடி தீபாவளி!



ஒவ்வொரு வீட்டிலும் ஒவ்வொரு முறையில் புத்தாடை அணிந்து, கலர் கலராய் வெடி வெடித்து இனிப்புகளை சாப்பிட்டு ஜெகஜோதியாக தீபாவளிப் பண்டிகையைக் கொண்டாடி மகிழ்வர். ஆனால் நிரந்தரமாக வீடே இல்லாதவர்கள் எப்படிக் கொண்டாடுவார்கள். இதுபற்றி வசிப்பதற்கு வீடின்றி நாடோடியாய் வாழ்ந்து வரும் கழைக்கூத்தாடி ஜீவன்ஜி குடும்பத்தினரிடம் கேட்டபோது,

“நமக்கு நித்யப் பிழைப்பு பத்திதான் கவலையே. அதனால தீபாவளி பத்தி ரொம்பவும் யோசிக்கறது இல்ல. எங்களோட யோசனையெல்லாம் எங்கலாம் மழை பெய்யலன்னு தெரிஞ்சிக்கிறது. அங்கே போயி வித்தை காட்டுறது அவ்ளோதான். அதே மாதிரி தீபாவளிக்கு முன்னால நல்லா காசு சம்பாதிச்சி அன்னிக்கு எங்கேயாவது ஒரு இடத்துல இருந்து குடும்பத்தோட சிரிச்சி விளையாடுவோம். அதுவே தீபாவளிதான். மத்தபடி தீபாவளிக்காக புதுசா துணியெல்லாம் எடுக்கறதில்ல. பணம் இருந்துச்சின்னா புள்ளைங்களுக்கு வெடி வாங்கித் தருவேன்” என்று கூறி விட்டு அவர்கள் வந்த வண்டியை ஓட்ட ஆரம்பித்தனர். அடுத்த தீபாவளியாவது நல்ல தீபாவளியாக அமையட்டும்.

முத்து

ஸ்வாமி

யூத் கடலை!

நோபல் பரிசிலும் அரசியலா?



ஆல்பிரட் நோபல் அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட நோபல் பரிசு தற்பொழுது தனது நூற்றாண்டு விழாக் கொண்டாட்டங்களை உலகம் முழுக்கக் கொண்டாடிக் கொண்டிருக்கிறது. இந்தியாவில், அதுவும் நம் சென்னையில் DADD அமைப்பு மூலமாக, ஐ.ஐ.டி. வளாகத்தில் இதன் கண்காட்சி வைக்கப்பட்டதை பி.டெக் கெமிகல் இன்ஜினியரிங் கல்லூரி மாணவர்களான ஐயப்பா, ஜீவன் இருவரும் கண்டுகளித்து, அங்கேயே இதுபற்றி 'சாட்' செய்தபோது.

"ஹாய் ஜீவன், இங்க சும்மா வேடிக்கை பார்க்க வந்த நமக்கு இங்கேயிருக்கிற தகவல்களும் நோபல் பரிசு வாங்கினவங்களோட வீடியோ பேட்டிகளும் ஆச்சரியமா இருக்கில்லே?"

"பின்லே சைனாவைச் சேர்ந்த சாமுவேல் சாம் ஆன்டிங் தனது 12 வயது வரைக்கும் ஸ்கூல் பக்கமே போனதில்லையாம். ஆனா அதுக்கப்புறமா படிக்க ஆரம்பிச்சு, பின்னால நோபல் பரிசு வாங்கினது பிரமிப்பைத் தருது. நோபல்னா சின்ன வயசிலேயே லேபிலேயே தூங்கி எந்திரிச்சு, ரிசர்ச் பண்ணணும்ங்கிற மாயை இவரைப் பார்க்கும்போது தெளியுது!"

"உலகத்தையே அழிக்கக் கூடிய டைனமைட்டைக் கண்டுபிடிச்ச ஆல்பிரட் நோபல் தனது ஆத்ம திருப்திக்காக நோபல் பரிசு ஆரம்பிச்சு கொடுத்து, உலகத்திலுள்ள திறமைகளை ஊக்குவிச்சு தனக்குத்தானே திருப்திபட்டுக்கிட்டாராம்."

"ஆனா ஐயப்பா, ஒண்ணு கவனிச்சியா, இரண்டாம் உலகப் போருக்கு முன்னாடி வழங்கப்பட்ட பரிசுகளை வாங்கினவங்க பெரும்பாலானவங்க ஜெர்மன்காரங்க. ஆனா போர் முடிஞ்ச பின்னாடி வாங்கினவங்களைப் பார்த்தால் முக்கால்வாசி யூ.எஸ். காரங்கதான். இதெல்லாம் பார்க்கும்போது நம்ம ஊர் விருதுகள் மாதிரியே, நோபலிலும் அரசியல் கலந்திருக்கோன்னு சந்தேகமா இருக்கு."

"ஹா நோவ்! இன்னொரு சுவாரஸ்யமான விஷயம், ரேடியம் கண்டு புடிச்சதுக்காக மேரி க்யூரி நோபல் பரிசு வாங்கினதைத் தவிர்த்துப் பார்த்தால் அமைதி, இலக்கியம் தவிர அறிவியல் கண்டுபிடிப்புகள் எதிலுமே பெண்களுக்கு நோபல் பரிசு வழங்கப்படலை."

"ஒருவேளை நம்ம ஊர் மாதிரி வெளிநாட்டுப் பெண்களுக்கும் டீ.வி சீரியல் பார்த்து புத்தி மழுங்கிப் போச்சா என்ன? ஹேய், எனக்கு இந்த எக்ஸிபிஷன்ல ஒரே வருத்தம், என் ஃபேவரிட் சயின்டிஸ்டான ஐன்ஸ்டீன் வீடியோ பேட்டி இல்லாததுதான்."

"அதுக்கு சான்ஸே இல்லையே, தெரியுமா, இங்க வந்த காலேஜ், ஸ்கூல் ஸ்டூடன்ஸ் எல்லோருமே இந்த வீடியோ இன்டர்வியூக்களை சிடியில பதிவு பண்ணித்தாங்கனு ஆர்கனைசரை நச்சரிக்க ஆரம்பிச்சிட்டாங்க. ஆனா இதெல்லாம் காபிரைட் வாங்கப்பட்டது. வேண்டுமானால் நோபல் பரிசு பற்றிய தகவல்களை www.noftsti. bel.comங்கிற வெப்சைட்ல பார்க்கலாம்னு தகவல் சொல்லியிருக்காங்க."

"ஓகேப்பா, இங்க வந்த பிறகுதான் சமூகத்துல சும்மா வாழ்ந்தோமோ மறைந்தோமான்னு இல்லாம, புதிய கண்டுபிடிப்புகளால உலகத்துக்கு நம் சார்பா ஏதாவது செஞ்சிட்டுப் போகணும்னு தோணியிருக்கு" என்றபடி விடைபெற்றனர். உங்களைப் போல நமக்கும் ஆச்சர்யம்தான். இரு மாணவர்கள் உருப்படியாக அதுவும் 'யூத் கடலை'யில் பேசினார்களே!

✍ ச.ந.கண்ணன்
📷 ராஜன்

பொலிட் பீரோ!



● சென்னையில் தற்போது மிகுந்த அதிருப்தியில் உள்ளவர்கள், பாரிமுனையில் உள்ள பட்டாசு மொத்த வியாபாரிகள்தானாம். 'கும்பகோணம் தீ' விபத்தைக் காரணம் காட்டி சிறு வியாபாரிகளுக்குக் கடை வைப்பதற்குக் காவல்துறை அனுமதி தர இழுத்தடிப்பு செய்து விட்டதாம். இதனால் மொத்த வியாபாரிகளிடமிருந்த சரக்குகள் பெருமளவில் தேங்கி விட்டனவாம். அனுமதி தர ஏதோ பெரிய அளவில் 'எதிர்பார்க்கிறார்கள்' என்ற தகவல் கசிய, அதற்கும் தயாராக இருந்த வியாபாரிகள், அதற்கும் இதுவரை எவ்வித சிக்னலும் தரப்படாததால் ரொம்பவும் விரக்தியடைந்துள்ளனராம்.

● சென்னையில் இருக்கும் 'பசைக் கடைகளில்' தீபாவளி முடிந்ததும் ஒரு பிரச்னை தலையெடுக்க உள்ளதாம். அதாவது அங்கு தேங்கிக்கிடக்கும் காலி பாட்டில்கள், யாரால் எடுத்துச் செல்லப்படுகின்றன - அதன் மூலம் அவர்கள் அடிக்கும் லாபம் எவ்வளவு என்பதெல்லாம் பற்றி, யாரோ ஒருவருக்குப் பொறி தட்ட, இப்போது விஷயம் விஸ்வரூபம் எடுத்துள்ளதாம். தற்போது இதில் தொடர்புடைய 'புள்ளிகள்' வயிற்றில் புளியைக் கரைக்கிறதாம்.

● தற்போது தீபாவளிக்கு வெளியிடப்படும் படங்களுக்கான திருட்டு வீசிடிகள், அவற்றின் ஆஸ்தான வர்த்தக ஸ்தலமான பர்மா பஜாரில் விற்பதற்குப் பெரும் சிக்கல் எழுந்துள்ளதால், அதனை சென்னையின் புறநகர்ப் பகுதிகளில் விற்பனை செய்யத் திட்டம் தீட்டியுள்ளனராம். இதன்படி வியாபாரமும் சூடாகவும் இருக்கும், பாதுகாப்பாகவும் இருக்கும் என்று நம்புகின்றனராம் அந்தக் கில்லாடிப் பேர்வழிகள். (போலீஸ் உஷார்!)

● சென்னை மக்கள் சென்ற வாரம் இரண்டு அதிர்ச்சிகளைத் தாங்கிக் கொள்ள வேண்டியிருந்தது. சென்னை டிரேட்சென்டரில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள மாநாட்டு மையக் கட்டடத்தை மத்திய அமைச்சர் தயாநிதி மாறன் திறந்து வைத்த விழாவில், தமிழக அமைச்சர் நயினார் நாகேந்திரன் கலந்து கொண்டதும், எழும்பூர் - தாம்பரம் இடையிலான ரயில் போக்குவரத்தைத் துவக்கி வைக்கும் விழாவில், தயாநிதி மாறனும் தமிழக அமைச்சர் விஸ்வநாதன் கலந்து கொண்டதும்தான் சென்னை மக்களை, நாம் இங்குதான் இருக்கிறோமா என்ற சந்தேகத்தில் ஆழ்த்தி விட்டதாம். (நல்ல மேட்டருதானுங்க!)

● தற்போது சென்னை திமுகவினரின் அஜெண்டா என்ன தெரியுமா? திமுகவினரால் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்ட திட்டங்களை நடைமுறைக்குக் கொண்டுவந்து அதனை மக்களுக்கு அழுத்தமாகத் தெரிவிப்பதுதானாம். ஆனால் இதற்கு ஆளும் தரப்பு எந்த அளவுக்கு ஆதரவளிக்கும் என்பதுதான் கேள்விக்குறியாம்.

✍ கலை

ஆடுகளம்



"விளையாட்டிலிருந்து விலகுகிறேன்!"

விளையாட்டுப் பக்கம் பெண்களே அரிதாக நுழைகிற இந்த நிறைய காலத்திலும் நேஷனல், ஸ்டேட், யுனிவர்சிட்டி லெவலில் பூ நாக்கி, கூடைப்பந்து, ஹேண்ட் பால், நெட் பால், த்ரோபால் என சஃபீரா ஜெயத்தின் ஆர்வப்பசி எல்லாவற்றிலும் விரிந்து இருப்பது. ஆச்சர்யத்தைக் கொடுத்து என்ன பிரயோஜனம்! அடுத்த வருடத்தோடு அத்தனை விளையாட்டுகளுக்கும், சாதனைகளுக்கும் 'டாட்டா', 'பை' 'ஸீயூ' என கண்ணீர்மல்க விடைகொடுக்க விருக்கிறார்.

"என்ன சார் பண்ணச் சொல்றீங்க? ஸ்போர்ட்ஸை நம்பி எத்தனையோ பேர் வாழ்க்கையைத் தொலைத்த மாதிரி, என்னையும் வீணாக்கச் சொல்றீங்களா?

நான் ஊட்டியில் ஐ.என்.சி என்கிற இந்தியாவிலேயே மிக உயர்ந்த சிலபஸ் கொண்ட படிப்பு முறையில் படித்தவள். ஸ்கூல் டேஸில் அதலடிக்ஸில் தொடர்ந்து ஆறு வருடம் சாம்பியனா இருந்தேன். ஆனா இதுல போதை மருந்து அதிகமானதைப் பார்த்து நொந்து, அதிலிருந்து வெறுத்துப் போய் விலகிட்டேன்.

சென்னையில் கல்லூரியில் சேர்ந்த பிறகு, கூடைப்பந்து விளையாட்டுல அகில இந்திய அளவிலான கல்லூரிகளுக்கான போட்டிகளில் கலந்திருக்கேன். ஆனா அதுல பாலிடிக்ஸ் நிறைய இருந்ததால தொடர்ந்து நீடிக்கப் பிடிக்கலை. அப்போதான் ஹேண்ட்பால், கேமை கேஷுவலா விளையாட ஆரம்பிச்சேன். அப்படியே நெட்பால், த்ரோபால்னு புதுசா ஆர்வம் வந்து விளையாட, இதுல ஹேண்ட்பால் என்னை நேஷனல் லெவல் வரைக்கும் கொண்டு போச்சு. நெட்பால் எனக்கு தமிழ்நாட்டின் சிறந்த ப்ளேயர் அவார்ட் வாங்கிக் கொடுத்தது.

ஏற்கெனவே தினமும் பிராக்டிஸ், மேட்ச்னு என்னை நிறைய வேஸ்ட் பண்ணிட்டேன். நம் நாட்டுல ஸ்போர்ட்ஸ்ல நிறைய தவறுகள், குளறுபடிகள், பாலிடிக்ஸ் இருக்கு. அதுவும் பெண்களுக்கு ஸ்பான்சர் பண்ண யாருமே கிடையாது. காலேஜ்ல ஸ்போர்ட்ஸ் கோட்டாவுல சேர்ந்தா வேற வழியில்லை. படிப்பு முடிகிற வரைக்கும் கேம்ஸ் ஆடி படிப்பைப் பாழாக்கத்தான் வேணும். பி.ஏ. எகனாமிக்ஸ் படிக்கிற எனக்கு அடுத்த வருஷம் ஃபைனல் இயர். இதனால எல்லாத்தையும் மூட்டை கட்டி வைச்சு, இனி படிப்புல மட்டும் கவனம் செலுத்தப் போறேன்.

டிகிரி முடிச்சு அடுத்ததா அகமதாபாத்திலுள்ள ஐ.ஐ.எம், அல்லது லண்டன் ஸ்கூல் ஆஃப் எகனாமிக்ஸ் எதிலாவது பி.ஜி பண்ண ஐடியா. ஆனா இதிலுள்ள கவாரன்டியே, இந்த நெ.1 இதுவரை வாங்கின ஸ்போர்ட்ஸ் சான்றிதழ்கள் தான் பெரிதும் கைகொடுக்கப் போகுது. லண்டன் காலேஜுல படிப்புக்கு ஸ்காலர்ஷிப் கிடையாது. ஆனா ஸ்போர்ட்ஸுக்கு உண்டு. இதுக்காவது என் இத்தனை வருஷ உழைப்பு உதவட்டும்" என்று வருத்தம் கலந்து சிரிக்கிறார் சஃபீரா.

செந்தில்

ரிச்சர்ட்

ஹாய் சென்னை!

ஃபோக்கஸ் பிரச்னைகள், காலேஜ் புரோகிராம்ஸ், டேஸ்ட், காம்ஸ், உச்சாணி, ஸ்பெஷல் விழாக்கள் என சென்னை ஸ்கேனுக்கு பொருத்தமான விஷயங்களை எங்க போஸ்ட் பாக்ஸ், இன்பாக்ஸ், ஃபோன் ரிசீவர் என எதுக்கும் அனுப்பலாம். வந்துராவதி போடு எங்க டீமும் ரெடி. உங்கள் கற்பனை காதல் கடிதங்களை 'லப்-டப் லவ் லெட்டர்' என்று தலைப்பிட்டு அனுப்புங்கள். எங்களின் இளமையான தீபாவளி நல்வாழ்த்துக்கள்!

முகவரி :
சென்னை ஸ்கேன்,
47NP, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல்,
சென்னை - 600 032.
ஃபோன்: 22345622, 23, 24
E-mail:chennaiscan@kalkiweekly.com

அனிமேஷன் படங்கள் என்றதும் டாம் அண்டு ஜெரி, ஜாக் அண்டு ஜில் போன்ற "ஜுமான்ஜி" படங்களைப் போடுவார்கள் என்று எதிர்பார்த்து, கடந்த வாரம் தங்கள் குழந்தைகளோடு பிரிட்டிஷ் கவுன்சிலுக்கு வந்திருந்தவர்களுக்கு ஆச்சரியம்! திரையிடப்பட்ட அனைத்துப் படங்களும், விருதுகள் வாங்கிய அல்லது விருதுக்காக பரிந்துரைக்கப்பட்ட சீனியர் குழந்தைகளுக்கான கார்ட்டூன் படங்கள்.

உதாரணத்துக்கு இதை கவனியுங்கள். ஒரு சிறுமி (கோடுகளால் உருவானவள்) காலை உணவு சாப்பிட மேஜைக்கு வருகிறாள். அவளுக்காக ஒரு தட்டும், குடிக்கத் தண்ணீரும் வைக்கப்படுகின்றன. அவற்றைப் பார்த்தவுடன் அந்தச் சிறுமி சிணுங்குகிறாள். காரணம் தட்டில் இருந்தது உணவு அல்ல. சிறியதும் பெரியதுமாய் பல ஆங்கில எழுத்துகள். தண்ணீரும் எழுத்துகளே மிதந்து கொண்டிருக்கின்றன, தண்ணீருக்குப் பதிலாக!

பள்ளிக்குச் சென்றால் அங்கும் எழுத்துகள். புத்தகத்தைத் திறந்தால் அதிலும் எழுத்துகள். அவளைச் சுற்றிலும் எங்கும் எழுத்துகளே நெளிந்து கொண்டிருக்கின்றன. அவளுடைய தோழிகள் மிகத் திறமையுடன், சில எழுத்துகளை தூக்கிப் பிடித்து புத்தகத்தில் ஒட்டி புதிய புதிய வார்த்தைகளை உருவாக்குகிறார்கள். ஆனால் இவளுக்கு மட்டும் அது முடியவில்லை. எவ்வளவு சிரமப்பட்டு ஒட்டினாலும் இவளிடமிருந்து அவை பிரிந்து சென்று விடுகின்றன. அல்லது தப்பாகி விடுகின்றன.

"உனக்கு ஒன்னுமே தெரியலே" என்று ஆசிரியர் கோபமாக வந்து காச் மூச்சென்று சத்தம் போடுகிறார். வருத்தத்துடன் அந்தச் சிறுமி எழுந்து சென்று, ஒரு புத்தகத்தைப் பிரித்து அதிலிருந்து பக்கங்களைக் கிழித்துப் பறக்க விட, கிழிபட்ட பக்கங்கள் பறவைகளைப் போல காற்றில் அசைந்து அசைந்து செல்கின்றன.

கார்ட்டூன் நெட்வொர்க் போம் மைகளைக் காண ஓடி வந்திருந்த குழந்தைகள், சாக்லெட் கனவுகளுடன் தூங்கிப் போயிருக்க, அவர்களுக்காக கொண்டு வந்த பிஸ்கட் பாக்கெட்டை சத்தம் போடாமல் பிரித்துச் சாப்பிட்டபடி, சுவாரசியமாக பொம்மைப் படம் பார்த்துக் கொண்டிருந்தார்கள் பெற்றோர்கள்.

மருதன்

கார்ட்டூன் குழந்தைகள்!



மழைக்கு மயங்கிய மரம்



இடைவிடாமல் என்று வைடெக்காக இருக்கும் திருப்போரூர் சாலை எப்பொழுதுமே கல்லூரிப் பேருந்துகளாலும், மேக்ஸிகேப் வேன்களாலும் இடையிடையே மாநகரப் பேருந்துகளாலும் நிரம்பியிருக்கும். இச்சாலையில் இருந்த மரமொன்று சென்ற வாரம் பெய்த மழையில் ஒரு பிஸியான நேரத்தில் திடீரென ரோட்டில் சாய்ந்து விட்டது. இதனால் அப்பகுதியில் மூன்று மணி நேரத்திற்கு போக்குவரத்தும் சிக்கல் நீடித்தது.

+ கலை

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN/PMG (CCR) 572/03-05* Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 358/03-05*
Registered as a Newspaper in Sri Lanka Supplement to the Kalki Issue Dated 14.11.2004


காவேரிக் கரை ஓரம்
கடல் போலக் கூட்டம்
காரணமே சாரதாஸ் தான்
விலையை மீறித் தரமே
சாரதாஸ் தருமே..!
சாரதா'ஸ்
சுப முகூர்த்த பட்டு புடவைகளுக்கு அதிர்ஷ்டமான இடம்
45,என்.எஸ்.பி. ரோடு, திருச்சி-2. போன்:2702077.
தன்பில்டிங்,827,மவுண்ட்ரோடு,சென்னை-2,போன்:2852177.



தீபாவளி நல்வாழ்த்துக்கள்
பட்டாம் பூச்சியும்
கட்டிப்பார்க்க ஆசைப்படும்
சாரதா'ஸ் பட்டுப்புடவை..!
சாரதா'ஸ்
சுப முகூர்த்த பட்டு புடவைகளுக்கு அதிர்ஷ்டமான இடம்
45,என்.எஸ்.பி. ரோடு. திருச்சி-2. போன்:2702077.
தன்பில்டிங்,827,மவுண்ட்ரோடு,சென்னை-2,போன்:28521177.